- அசுவகோஷரை கீழைநாட்டின் அரிஸ்டாடில் என்று கூறுவர்.
- மிகச் சிறந்த அறிவியல் தத்துவ ஞானி நாகார்ஜீனா

**இந்தியாவின் "ஐன்ஸ்டீன்" என்பர்**

- சரகா என்ற மருத்துவ அறிஞர். சுஸ்ருதா மற்றும் சரக சம்ஹிதை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.
- கனிஷ்கரை இரண்டாம் அசோகர் என்று கூறுவர்.
- சீனாவில் புத்த மதத்தை அறிமுகப்படுத்தியவர் காச்சியப்ப மாதங்கர்
- கனிஷ்கர் புத்த வரலாறு. சூத்திர அலங்காரம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்

**நாகார்ஜீனர்:**

- கனிஷ்கரை புத்த மதத்திற்கு மாற்றியவர் நாகார்ஜீனர் (காஞ்சி), இவர் மகாயானத்திற்கு ஆதரவு அளித்து சமஸ்கிருத மொழிக்கு ஆதரவு அளித்தார்.
- இதனால் நாகாத்ஜீனர் புத்த சமயத்தின் மார்டின்லுதர் என்பவர். இவர் எழுதிய நூல் மத்திய மிக சூத்திரம்.
- யுவான் சுவாங் நாகார்ஜீனரை உலக மாமேதை எனக் குறிப்பிடுகின்றார்.

**வாசு மித்ரா**: மகா விபேஷ சூத்திரம் என்ற நூலை எழுதினார். இந்நூல் மகாயானத்திற்கு விளக்கம் அளித்தது. மேலும் சௌந்தர நந்தம் என்ற நூலையும் சாரிபுத்திர பிரகர்ணம் என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார்.

**காந்தாரக்கலை:**

- கனிஷ்கர் காலத்தில் மதுரா மற்றும் காந்தாரக் கலை மிகவும் சிறப்பாக வளர்ச்சியுற்றது. இந்திய கிரேக்கம் சேர்ந்த சிற்ப கலையே காந்தாரக் கலை.
- மகாயான புத்த சமயத்தின் வளர்ச்சியே காந்தாரக் கலை வளரக் காரணமாகும்
- இது கனிஷ்கர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது

**புத்தர் சிலையும் காந்தாரக் கலையும்:**

- புத்தருக்கு பின்னால் ஞான வட்டம் காணப்பட்டது. நிற்கும் வடிவத்தில் போதிசத்துவத்தை விளக்கும் கிரேக்க பாணியில் உடை, புத்தருக்கு மீசை ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

**சகா சகாப்தம்**

- கி.பி. 78-ம் ஆண்டு சகா சகாப்தம் அல்லது சாலிவாகன சகாப்தம் எனப்படும்
- முதல் பொற்காசுகளை வெளியிட்டவர்கள் குஷானர்களே

**குஷானர்களின் வீழ்ச்சி**

- கனிஷகரின் வழித் தோன்றல்களில் முக்கியமானவர் முதலாம் வாசுதேவர் ஆவார்.
- வடமேற்கில் பாரசீக சசானியரின் ஆட்சி குஷானர்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்

**குப்தர்கள் காலம் கி.பி. 270 முதல் 570 வரை சான்றுகள்:**

இலக்கிய சான்று

1. வாயு புராணம்
2. மச்ச புராணம்
3. பிரம்மாண்ட புராணம்
4. சிகநார் எழுதிய காமந்தகீய சாரம்
5. விசாகதத்தர் எழுதிய தேவி சந்திரகுப்தம் மற்றும் முத்திரா ராட்சசம்
6. பிரவர சேனர் எழுதிய சேது பந்தன காவியம்
7. பாணர் எழுதிய அர்ஷ சரிதம்
8. காளிதாசர் எழுதிய ருது சம்காரம், மாளவிகாக்னி மித்திரம், குமார சம்பவம் சாகுந்தலம், மேகதூதம், ரகுவம்சம்
9. கிசோரிகரா மற்றும் விஜ்ஜிகரா எழுதிய கௌமுதி மகோத்வசம்
10. நாரதர், பிரகஸ்பதி ஆகியோர் எழுதிய ஸ்மிதிகள்
11. சேம தேவர் எழுதிய காத்தசரித சாகர்
12. சுதாகரா எழுதிய மிருச்சகடிதம்
13. வியாசர், ஹரிதர் மற்றும் பிதாமகர் எழுதிய

நூல்கள்

14. இலங்கை நூல்கள் தீப வம்சம் மற்றும் மகா வம்சம்

தேவி சந்திரகுப்தம்: இராம குப்தர் மற்றும் இரண்டாம் சந்திரகுப்தர் ஆகியோருக்கிடையே நடைபெற்ற அரசியல் போராட்டத்தை விளக்குகிறது.

**அயல் நாட்டவர் குறிப்புகள்:**

**சீன பயணிகளின் குறிப்புகள்:**

1. புாகியான் எழுதிய போ-குயோ-கி (Fo-Kuo-Ki)
2. இட் சிங்
3. யுவான் சுவாங்
4. வாங்-யுயின்-சே

**கல்வெட்டுகள்:**

1. சமுத்திர குப்தரின் அலகாபாத் கல்வெட்டுகள்.
2. இரண்டாம் சந்திரகுப்தரின் உதயகிரி மற்றும் காஞ்சிக் கல்வெட்டுகள்
3. முதலாம் குமார குப்தரின் ஆட்சியை விளக்கும் பில்சாட் கல்தூண் கல்வெட்டு, கத்வா கல்தூண் கல்வெட்டு மங்குவார் கல்வெட்டு, பீதார் தூண் கல்வெட்டு, இந்தூர் தாமிர சாசனம் மற்றும் மெஹரௌளி இரும்புத்தூண் கல்வெட்டு

**நாணயங்கள்**

- சந்திர குப்தர் மற்றும் சமுத்திர குப்தரின் நாணயங்கள். சந்திர குப்தர் வீணை வாசிப்பது போன்ற நாணயங்கள்

**உருவச்சிலைகள் மற்றும் ஓவியங்கள்**

- குப்தர் காலத்தைச் சார்ந்த அஜந்தா ஓவியங்கள்

**குப்த அரசு: கி.ஃபி. 270**

- குப்த வம்சத்தின் முதல் அரசர் : ஸ்ரீகுப்தர்
- இவர் வடக்கு வங்காளம் மற்றும் தெற்கு பீகார் பகுதியை ஆண்டதாக தெரியவருகிறது.
- பின் இவரது மகன் கடோதகஜ குப்தா ஆட்சி செய்தார்
- இவருக்குப்பின் இவரது மகன் முதலாம் சந்திர குப்தர் ஆட்சி செய்தார்
- தலைநகரம்: பாடலிபுத்திரம்

**முதலாம் சந்திரகுப்தர்:**

- மகாராஜாதிராஜா என்ற பட்டம் முதன் முதலாக பெற்றவர்
- குப்த சகாப்தத்தை கி. பி. 320ல் தோற்றுவித்தவர்.
- மனைவ: சைவாலியைச் சார்ந்த லிச்சாவி இளவரசியான குமாரதேவி
- மனைவியுடன் இணைந்து தங்க நாணயங்களை வெளியிட்டார்

**சமுத்திர குப்தர்**

- கி. பி. 330 முதல் 380 வரை ஆட்சி செய்தார்.
- **சான்றுகள்:**

1. ஏரான் செப்பேடு, கயைச் செப்பேடு, நாளந்தா செப்பேடு
2. தந்திரிகா மண்டகம் என்ற நூல்
3. வாங் - ஹியூன் - சே என்ற சீன பயணி குறிப்புகள்
4. ஹரி சேனரின் அலகாபாத் தூண் கல்வெட்டு

- இவரது படைப்பு 5 வகைகளாக பிரிக்கலாம்

1. ஆரிய வர்த்தத்தின் இருந்த 5 அரசுகளை கைப்பற்றுதல்
2. 5 எல்லைப்புற மாகாணங்கள்

3. மத்திய இந்தியாவின் பழங்குடிகள்
4. தக்காணம் மற்றும் தெற்கு இந்தியாவில் அரசுகள்
5. ஆப்கானிஸ்தானின் ஒரு சிலப் பகுதிகள்

- **தோற்ற அரசர்கள்:**

தோற்ற 9 வட இந்திய அரசுகள்:

1. வுாகாட – உருத்திரசேனன் 2. மதுராபுரி – கணபதி நாதர் 3. நாகதத்தார் 4. நாகசேனர்

5. அச்சுதர் 6. பலவர்மன் 7. முதிலர் 8. சந்திவர்மன் 9. நந்தினி

**கைப்பற்றி 5 எல்லைப்புற அரசுகள்**

1. சாமதாதா 2. தாவகா 3. குாமரூபா 4. நேபாளம் 5. கர்த்திபுரா

**மத்திய இந்தியாவின் 9 பழங்குடிகள்:**

1. அபிராஸ் 2. காகாஸ் 3. கரபரிகாஸ்

5. அர்சுனநாயகஸ் 5. மார்வாஸ் 6. மாட்ரகாஸ்

7. பிரார்ஜீனாஸ் 8. சுானகனிகாஸ் 9. யௌதேயாஸ்

**தக்காணத்தில் தோற்ற 12 அரசர்கள்:**

1. கோசல நாடு – மகேந்திரன்
2. காந்தார நாடு – வியாக்கிரகராஜன்
3. கௌராலா - மாந்த ராஜா
4. காஞ்சி - விஷ்ணு கோப்பர்
5. வெஞ்சி - அஸ்திவர்மர்
6. பித்தாபுரம் - மகேந்திரகிரி
7. குஷ்ந்தலபுரம் - தனஞ்செயன்
8. பல்லக்க நாடு – உக்கிரசேனன்
9. கோட்டூரா - சுவாமித்தர்
10. ஏரண்டபல்லவம் - தாமனர்
11. அவமுத்தம் - நீலராஜா
12. தேவராஷ்டிரம் - குபேரம்

- அலகாபாத் தூண் கல்வெட்டு – அரிசேகர்
- அசுவ மேத யாகம் செய்தார்
- நாணயங்களில் இவர் ஆயுதங்களுடனும், புலியுடனும் போராடுவது போன்று வெளியிட்டார்.
- இவர் போர்புரிவதில் திறமையுடையவர். எனவே டாக்டர் வின்செண்ட ஸ்மித் இவரை இந்திய நெப்போலியன் என்று கூறியுள்ளார்.
- தங்க நாணயங்களை வெளியிட்டார்
- விக்கிரமாங்கா என்ற பட்டத்தினை பெற்றார்
- ஈழ மன்ன் மேகவர்ணன் கேட்டவாறு கயையில் புத்த மடாலயம் கட்டினார். இதனால் அனுகம்பவன் என்று அழைக்கப்பட்டார்.
- கவிராசா என்று அழைக்கப்பட்டார்
- இவரது சபையினை அரிசேனர் மற்றும் வசுபந்து அலங்கரித்தனர்
- வசுபந்து இவரின் ஆசிரியர் ஆவார்
- குப்தர் கால இலக்கியம் இந்தியாவின் எலிசபெத் காலம் என்று கூறுவர். குப்தர்களின் காலம் பிராமணர்களின் காலம் என்றும் கூறுவர். குப்தர்களின் காலம் பிராமணர்களின் காலம் என்றும் இந்து மத மறுமலர்ச்சி காலம் என்றும் இந்து மத மறுமலர்ச்சி காலம் என்பதால் இதனை பொற்காலம் என்று கூறுவர்.

**இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி.380-413)**

- இவர் விக்கிரமாதித்தியன் என்ற பெயருடன் அரியணை ஏறினார்
- ஐரோப்பிய வரலாற்றில் Bourbous மற்றும் Hapsburqs போன்று திருமணங்கள் மூலம் உறவை வளர்த்துக் கொண்டார்
- லிச்சாவி குலத்தில் கொண்ட தொடர்பு, நாகர்களின் மகள் குபேர் நாகையுடன்

திருமணம், தனது மகள் பிரபாவதியை இரண்டாம் உருத்திரசேனனுக்கு திருமணம் செய்து வைத்தல் ஆகியவை முக்கிய நிகழ்ச்சியாகும்

- சீன யாத்திரியர் பாகியான் இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார்
- உஜ்ஜயினியை இரண்டாவது தலைநகராக மாற்றினார்
- குதுப்மினாருக்கு அருகில் உள்ள இரும்புத் தூண் இவர் நிறுவியது ஆகும்
- சகர்களை வென்றதால் சாகாரிஈ சசாங்கன் என்ற பெயர்கள் இவருக்கு உண்டு
- சிங்கத்தை வீழ்த்துவது, குதிரையில் சவாரி செய்வது, கருடன் பறப்பது, கொற்றக் குகையின் கீழ் நிற்வது, திருமால் வாழ்த்துவது போன்ற நாணயங்களை வெளியிட்டார்.
- இவர் காலத்தில் நவரத்தினங்கள் எனப்படும் அவை இருந்தது. அதன் விவரங்கள் பின்வருமாறு.

1. தன்வந்திரி: மருத்துவ நிபுணர்
2. Kshapanaka
3. அமரகோஷம் எழுதிய அமர சிம்மர்
4. சாங்க பட்டர் 5. வேதல்ல பட்டர். 6. குதகபாரா 7. வராகமிகிரா

- இவர் சிறந்த வானவியல் அறிஞர், கணிதவியல் மற்றும் சோதிட வல்லுநர், நவரத்தினங்களில் ஒருவர், பிரகத்சம்கிதா, பஞ்ச சித்தாந்திகா, லங்குஜாடகா ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் காலத்தில் 5 சித்தாந்தங்கள் இருந்தன. அவை
- சூரிய சித்தாந்தா: பெருங்கரடி எனப்படும் நட்சத்திரக் கூட்டத்தை பற்றியதாகும். இதனை தொகுத்தவர் லிமா
- வைசோஷித சித்தாந்தா: பெருங்கரடி எனப்படும் நட்சத்திரக் கூட்டத்தை பற்றியதாகும். இதனை தொகுத்தவர் விஷ்ணுகாந்தா
- புலிச சித்தாந்தா: இது கிரேக்க நாட்டில் உள்ளது. இதனை தொகுத்தவர் புலிச
- ரேமகா சித்தாந்தா: ரோமனிய அரசைப் பற்றியது இதனைத் தொகுத்தவர் ஷர்ஷிகா.
- பிரம்ம சித்தாந்தா: பிரம்ம குப்தர் என்பவரால் தொகுக்கப்பட்டது.
- இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் அவைப் புலவராக காளிதாசர் இருந்தார்

**காளிதாசர் எழுதிய நாடகங்கள்:**

1. மாளவிகாக்கினி மித்திரம் - சுங்க அரசர் வரலாறு
2. சாகுந்தலம் - நாடகம்
3. விக்ரம ஊர்வசி – நாடகம்

**காளிதாசர் எழுதிய காப்பியங்கள்:**

1. ரகுவம்சம் - ராமர் வரலாறு
2. குமாரசம்பவம் - முருகன் வரலாறு

**காளிதாசர் எழுதிய பாடல்கள்:**

1. மேக தூதம்
2. ரிது சம்சாரம் - பருவ கால மாற்றம்

- இவர் இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என்று அழைக்கப்பட்டார்
- அஜந்தா ஓவியம், தமிழ்நாட்டில் உள்ள சித்தன்ன வாசல் ஓவியம் குப்ர் காலத்தை சேர்ந்தவை

**பாகியான்**

- புத்த நூல்களை சேகரிக்கவும், புத்த விகாரங்களை பார்வையிடவும் இந்தியாவிற்கு வந்தார்.

**ஆரியப்பட்டா**

- குப்தர்களின் ஆட்சி முடிவுற்ற பொழுது வாழ்ந்தார்
- சிறந்த கணித மேதை
- சிறந்த வான நூலறிஞர்
- சூரிய சித்தாந்தா என்ற நூலை எழுதினார்
- பூமி தன்னைத்தானே சுற்றிக கொள்கிறது என்று கண்டுபிடித்தவர்

**அரிசேனா** – சிறந்த கவிஞர்

**குமார குப்தர்**

- நாலந்தா பல்கலைக் கழகத்தை தோற்றுவித்தவர்.

**முக்கிய நூல்கள்:**

- விசாக தத்தர்: முத்ரா ராக்டியம் (மௌரியர், நந்தர்கள், போர்கள்) தேவி சந்திர குப்தம் (சந்திர குப்தர் - II துரவ தேவி) வரலாறு
- சூத்திரகர்: மிருச்சிக கடிதம் (சாருதத்தன் + வசந்த சேனை)
- பாரவி: கார்த்தார்ஜீனியம்
- வாத்ஸ்யானர்: காமசூத்திரம்
- வாகப்பட்டர்: அஷ்டாங்க சங்கிரதம், அஷ்டாங்க கிருதயசம்ஹிதை
- பஞ்சதந்திர கதைகள் விஷ்ணு சர்மாவினால் தொகுக்கப்பட்டது
- டெல்லியில் மெஹ்ருலி என்னுமிடத்தில் இரும்புத் தூண் கட்டப்பட்டது

**ஸ்கந்த குப்தர்: கி.பி.455 முதல் கி.பி.467 வரை**

- இவர் முதலாம் குமார குப்தரின் மகன்
- ஹீனர்கள் எனப்படும் முரட்டு இனத்தை வென்று விக்கிரமாதித்யன் என்ற பெயரை சூட்டிக்கொண்டார். இவரைப் பற்றிய தகவல்கள் கதாசரிசாகரம் என்ற நூலில் காணப்படுகிறது.
- புஷ்யமித்திரர்களை தோற்கடித்தார்
- வைணவர்

**பின் தோன்றல்கள்:**

- கி. பி. 467 கி. பி. 477

1. புருகுப்தர்
2. நரசிம்மகுப்தர்
3. இரண்டாம் குமார குப்தர்

**கி.பி. 477 – 496 புத குப்தர்**

**கி.பி. 446 – 550 ததாகத குப்தர்**

**பாலாத்தியர் - நரசிம்மகுப்தர்**

- பாலாத்தியர் மீண்டும் ஹீணர்களை தோற்கடித்தார்.
- பாலாத்தியர் மற்றும் விஷ்ணு குப்தர்கள் இவருவரும் குப்தர்களின் கடைசிமன்னர்கள்
- கட்டிட கலையில் முதன்மையாக கருதப்படும் நாகரப் பாணியை அறிமுகப்படுத்தியவர்கள் குப்தர்கள் ஆவார்கள்.
- அரசரே இராணுவத் தலைவர்
- அவரின் கீழ் மகாசேனாதிபதி
- மகா சேனாதிபதியின் கீழ் மகா தண்டநாயர்
- குதிரைப் படையின் தளபதி – அஸ்வபதி
- யானைப்படையின் தளபதி – பீலுபதி
- போர்காலத்தில் இராணுவ செலவுகளை கவனிக்க ரணபண்டாரகர்
- தண்ட பாசிகர் என்பவர் உயர் காவல் அலுவலர்

- காவல்துறை பணியாளர்கள் பட்டர், சட்டர் எனப்பட்டனர்.
- வெளியுறவுத் துறை அமைச்சர் மகா சாந்தி விக்கிரதிகர்.
- வெளிநாடுகளுடன் 16 வகையான உடன்பாடுகள் காணப்பட்டதாக காமந்தகீய நீதி சாரம் என்ற நூல் குறிப்பிடுகிறது.
- விக்ரமசிலா பல்கலைக்கழகம் தர்மபாலர் என்ற பால அரசரின் ஆதரவுடன் கட்டப்பட்டது. இப் பல்கலைக் கழகம் தாந்ரிக் புத்தமதத்துடன் தொடர்புடையது. இங்கு புகழ் பெற்ற ஆசிரியர்களாக நாகர்ஜீனர் மற்றும் அதிசா தீபங்கர் ஆகியோர் இருந்தனர்.

**சகா குலம்:**

- சகா அரசர்களில் முதலாம் ருத்ர தாமன் சுதர்சன் ஏரியின் மராமத்து பணியை மேற்கொண்டார்.
- அலகாபாத் தூண் கல்வெட்டடை செதுக்கியவர் ஹரிசேனர்
- அதிகும்பா கல்வெட்டு – காரவேலர்

**வர்த்தன குலம்**

- வர்த்தன குலத்தை தோற்றுவித்தவர் புஷ்யபூதி

**இக்குலத்தின் பிற முக்கிய அரசர்கள்**

1. நரவர்த்தனர்
2. ராஜ்ய வர்த்தனர்
3. ஆதித்திய வர்த்தனர்
4. பிபாகர வர்த்தனர் கி.பி. 583-605

**இராஜ்ய வர்த்தனர்: கி.பி. 605 - 606**

- தங்கையின் கணவன் கிரக வர்மன் மாளவ மன்னன் தேவ குப்தனால் கொல்லப்பட்டார். கௌட அரசன் சாசங்கனால் தங்கை இராஜ்யஸ்ரீ சிறைப்பிடிக்கப்பட்டார்.
- தேவசர்மனுடன் போரிட்டு வென்றாலும் கௌட அரசனால் இவர் கொல்லப்பட்டார். இவருக்கு பின் இவரது சகோதார் ஷர்ஷவர்த்னர் பதவியேற்றார்.

**ஹர்ஷவர்த்தனர்**

**சான்றுகள்**

1. அய்ஹோலே கல்வெட்டு
2. மதுபன் கல்வெட்டுக்கள் ஹர்ஷர்க்கு பின் உள்ள 4 தலைமுறைகளை பற்றி கூறுகிறது. சோனப்பட்டயங்கள் தலைமுறை குழப்பங்களை தீர்த்து வைக்கிறது
3. ஹர்ஷரின் கையெழுத்துப் பிரதியை பான்சேகரா கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகிறது
4. புாணரின் ஹர்ஷ் சரிதம்
5. யுவான் சுவாங்கின் சியுக்கி
6. ஹர்ஷரின் நாகானந்தா, ரத்தினாவளி, பிரியதர்சிகா

- ஹர்ஷரின் நாகானந்தா, ரத்தினாவளி, பிரியதர்சிகா
- தமையன்: ராஜவர்த்தனர்
- தங்கை: ராஜ்யஸ்ரீ
- மைத்துனர்: கிரகவர்மன்
- தலைநர்: கன்னோசி என்ற தானேஷ்வர்
- குப்த பேரரசு வீழ்ச்சிக்கு பின் தோன்றிய பல சிற்றரசுகளில் வர்த்தன குல சிற்றழசம் ஒன்று
- இவ்வம்சத்தின் தலைசிறந்த மன்னர் ஹர்ஷர்.
- இவர் வட இந்தியாவின் ஒரு பகுதியை ஆட்சி செய்தார்.

- தென் இந்தியாவில் சாளுக்கிய நாட்டு மன்னன் இரண்டாம் புலிகேசி மறைவிற்கு பின்னர் கஞ்சன் பகுதியை வென்றார். இதுவே அவரின் கடைசி வெற்றியாகும்.
- இவர் காலத்தில் அனைத்து சமயங்களின் மாநாடு கன்னோசியில் நடைபெற்றது
- அலகாபாத் நகரில் சமய மாநாட்டை மீண்டும் நடத்தினார்

**நாளந்தாப் பல்கலைக்கழகம்**

- இதன் தலைவர் தர்மபாலர்
- இதனை நிறுவியவர்கள் முகாரி அரசர்கள்
- காஞ்சி தர்மபாலர் தத்துவ பேராசிரியர்
- அசாம் சீலபத்திரர் துணை வேந்தர்
- 1500 ஆசிரியர்கள்: 10000 மாணவர்கள்
- பதஞ்சலி – மகாபாஷ்யம்
- பல்கலைக்கழக தலைவர் - சில்பதாரா
- மதச்சண்டையில் இப்பல்கலைக்கழகம் அழிந்தது
- ஹர்ஷர் தனது நாட்டை புக்தி – விஷயம் - பத்ம என பிரித்தார்.
- ஊதரங்கம் என்ற நிலவரி வசூலிக்கப்பட்டது

**ஹர்ஷர் எழுதிய நூல்கள்**

1. ரத்தினாவளி 2. பிரியதர்சிகா 3. நாகா நந்தம் 4. சாந்தி சதகம் 5. பார்வரி பரிணயம்

**பாணபட்டர்:**

- இவர் ஹர்ஷ சரிதம், காதம்பரி மற்றும் பார்வதி பரிணாம் ஆகிய நூர்களை எழுதியுள்ளார்

பிற நூல்கள் - பர்த்ரு ஹரி – வாக்கியபாடியம்

- **ஜெயதேவர் எழுதிய கீதாகோவிந்தம்**

**லலித விஸ்தாரம்:**

- இந்நூல் நீட்டல் அளவைப் பற்றி குறிப்பிடுகிறது
- நீட்டளவையின் மிக பெரிய பகுதி யோனை ஆகும்
- யோசனை என்பது அரசரின் இராணுவம் ஒரு நாளில் கடக்கும் தூரம் ஆகும்

**யுவான் சுவாங்:**

- யுவான் சுவாங் சீன பயணி இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார்
- இவர் காலத்தில் சீனர்கள் இந்தியாவை டின் - சுஇன்- டு, ஷென்-டு, சீன்-டவ் என்றும் சீன இலக்கியங்கள் இந்த்வர்னா என்றும் அழைத்தனர்
- யுவான் சுவாங் எழுதிய குறிப்புகள் Si-Yu-Ki (சியுகி) எனப்படும்
- இவர் புத்த ஆலயங்களை பார்வையிடவும் புத்த நூல்களை திரட்டவும் இந்தியாவிற்கு வந்தார்
- இவர் இந்தியாவில் இருந்த காலம் கி.பி. 630 முதல் 644 வரை ஆகும்
- ஹர்ஷா இவரை ராஜ் மகாலுக்கு அருகே உள்ள கஜன்கலா கூடாரத்தில் சந்தித்தார்
- யுவான் சுவாங் இந்திய எழுத்துக்களை பிரம்மதேவரால் எழுதப்பட்டவை என குறிப்பிடுகின்றார். அதன்படி மொத்த எழுத்துக்கள் 47 ஆகும்.
- இவர் காலத்தில் ரிக் வேதத்தைப் பற்றி குறிப்பிடப்படவில்லை
- இவர் யஜீர், சாம, அதர்வண வேதத்தைப் பற்றி குறிப்புகள் தந்துள்ளார்.
- புத்த மதம் Sthaviras மற்றும் Mahasanghikas என இரு பெரும் பிரிவாக

பிரிக்கப்பட்டது என்றும் Sthavirasல் 16 பிரிவுகளும் Mahasanghikas 4 பிரிவுகளும் ஆக 20 பிரிவுகள் தோன்றியது. இவற்றில் பிரிவுகள் மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட்டது.

**வட இந்திய அரசுகள் (கி.பி. 800-1200)**

**இராஜபுத்திரர்கள்**

- ஹர்ஷரின் மறைவுக்குப் பின்பு வட இந்தியாவில் பல சிறு அரசுகள் தோன்றியது
- எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் ராஜபுத்திரர்கள் ஆட்சி செய்தனர்
- இராஜபுத்திரர்கள் தீயிலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர்
- அவர்களுக்கிடையே 36 அரசு பிரிவுகள் இருந்தமையால் ஒற்றுமையில்லாமல் தங்களுக்கடையே எப்போதும் போரிட்டுக்கொண்டே இருந்தனர்.

Gahadwals: புகழ் பெற்ற மன்னர் ஜெய சந்திரன் ஆவார். இவர் முகமது கோரியால் 1193ல் நடைபெற்ற போரில் (Battle of Chanda) தோற்கடிக்கப்பட்டார்.

Parmars: ஸ்ரீ வர்ஷா என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

**பிரதிஹாரர்கள்:**

- முதலாம் அரசர் - நாக பட்டர்
- தலைநகரம் - கன்னோசி
- புகழ்பெற்ற அரசர் - போஜ அரசன்
- கடைசி மன்னர் - ராஜ்ய பால்
- ராஜ்ய பால் முகமது கஜினியால் தோற்கடிகப்பட்டார்

**சவ்ஹான்கள்:**

தலைநகர் - அஜ்மீர்

- விசால தேவா டில்லியை கைப்பற்றினார்
- 1191ல் நடைபெற்ற முதல் தெரயின் போரில் பிரிதிவிராஜன் முகமது கோரியை தோற்கடித்தார்
- 1192ல் நடைபெற்ற இடம் தெரயின் போரில் கன்னோசி அரசரான ஜெயசந்திரரைத் தவிர ஏனைய இராஜபுத்திர அரசரான ஜெயசந்திரரைத் தவிர ஏனைய இராஜபுத்திர அரசர்கள் அனைவரும் முகமது கோரியால் தோற்கடிக்கப்பட்டு பிரிதிவிராஜன் கொல்லப்பட்டார்.
- இத்தோல்வி இராசபுத்திரர்களை நிலைகுலையச் செய்தது

**சாண்டலர்கள்:** பண்டல்கண்டை ஆண்ட இவர்கள் புகழ் பெற்ற கஜீராஹோ கோயிலைக் கட்டியவர்கள். டூாங் என்ற மன்னர் கிஜீராஹோ நகரில் விசுவநாதர் ஆலயத்தை கட்டினார்.

**கங்கர்கள்:**

- தற்போது ஒரிசப என்ற பகுதியை ஆண்டவர்கள் கங்கர்கள் ஆவர்
- அனந்தவர்ம சூடன் என்ற மன்னன் காலத்தில் பூரி ஜெகனாதர் ஆலயம் துவங்கப்பட்டது. இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த முதலாம் நரசிம்மம் முஸ்லீம்களின் படையெடுப்பை முறியடித்து ஜெகனாதர் ஆலயம் மற்றும் கொனார்க்கில் உள்ள சூரிய கடவுள் ஆலயத்தை கட்டினார். முதலாம் நரசிம்மருக்குப்பின் சூரிய வம்சத்தைச் சார்ந்த கபிலேந்திரா என்பவர் ஆட்சி செய்தார். 1568ல் வங்காளத்தைச் சார்ந்த காரராணி சூல்தான்களால் ஒரிசா

கைப்பற்றப்பட்டது.

இராஜ தரங்கிணி (The River of Kings):

- இந்நூலை எழுதியவர் கல்ஹாணர் ஆவார்
- காஷ்மிர் அரசர்களை பற்றி கூறும் முக்கிய (காஷ்மீரைப் பற்றி கிடைக்கப்பெற்ற நூல்களில் முதல் நூல்) நூல் இது ஆகும்.

**சூ.ஃ.பிசம்**

- சூ.ஃ.பிசம் என்பது அரபுச் சொல்
- சூ.ஃ.என்றால் கருப்பு நிறத்துணி என்பது பொருள்
- கருப்பு நிறத்துணியை கொண்டு நீளமான மேலங்கிகளைத் தயாரித்துக் கொண்டதால் இத்துறவிகள் சூ.ஃ.பிகள் எனப்பட்டனர்.
- இவர்கள் பாரசீகத்தில் இருந்து வந்த இசுலாமிய துறவிகள் ஆவார். இவர்கள் இந்தியாவிற்கு வந்த காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு
- இவர்கள் குராணை தீவிரமாக பின்பற்றினர்
- இவர்களிடம் இந்து புத்த சமணமதத்தின் தாக்கம் காணப்பட்டது

**இவர்கள் கொள்கைகள்:**

- இறைவன் ஒருவனே
- உண்மையான இறை அர்ப்பணிப்பே தொழுகை நோன்பு, சடங்குகள் ஏற்கவில்லை
- இவர்கள் இந்துக்களை இசுலாமியர்களாக மாற்ற முயலவில்லை
- ஆனால் இந்து மதத்தில் உள்ள சடங்குகள் மற்றும் சாதிகளை கைவிடுமாறு உபதேசித்தனர்
- இவர்கள் இறைவனை பண்ணிசைத்து பாடிய பாடல்கள் காவலிகள் எனப்பட்டது

சூ.ஃ.பித் இயக்கத்தின் முக்கிய இரு பிரிவுகள்:

1. சிஷ்டி 2) சுகர் வார்டி

முக்கிய சிஷ்டி சூ.ஃ.பித் துறவிகள்

1. முயினுதீனு சிஷ்டி – அஜ்மீர்
2. நிசாமுதீன் அவுலியா – தில்லி
3. பாபாபரீத்

முக்கிய சுகர்வார்டித் துறவிகள்

1. ஷேக் சகாபுதீன் சுகர்வாடி
2. அமிதுதீன் நகோரி

- சூ.ஃ.பிசம் தோன்றியதால் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது

**இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி**

- இந்தியாவின் மீது முதல் முதல் படையெடுத்தவர் முகமது பின் காசிம்
- சிந்து பிரதேசத்தின் மீது கி.பி. 711-712ல் அவர் படையெடுத்தார். இந்து மன்னன் தாபீர் என்பவரை வென்றார்.

**முகமது கஜினி**

- இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்தார். முதல் படையெடுப்பு கி.பி. 1001ஆம் ஆண்டு ஆகும்
- 15வது முறை சோமநாதபுர ஆலயத்தின் மீது 1025 – 1026ல் படையெடுத்து பெரும் செல்வத்தை கவர்ந்தார். இவரின் படையெடுப்புக்கு காரணம் செல்வத்தை கொள்ளையடிப்பதாகும்
- 1030ல் இறந்தார். பிர்தௌசி எழுதிய ஷாநாமாவிலும் அல்பெரூனி எழுதிய கிட்டபுல் ஹிந்த் என்ற நூலிலும் முகமது கஜினி பற்றிய விவரங்கள் காணப்படுகிறது

**இவரின் படையெடுப்பு விவரங்கள்:**

1000 – எல்லைப்புற கோட்டை மற்றும் கிராமங்களைக் கைப்பற்றுதல்

1001 – பெஷாவரில் இந்து சாதி அரசர் ஜெயபாலை தோற்கடித்தார். ஜெயபால் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இவரது மகன் அனந்தபாலன் மன்னரானார்

1006 – பேராவின் மன்னர் பிஜராவுடன் போரிட்டு கைப்பானூரில் உள்ள பாட்டியாவை கைப்பற்றினார்

1006 - மூலதான் வென்றார். வழிவிட மறுத்த அனந்தபாலன் தோற்கடிக்கப்பட்டார். இவரது மகன் சுகபாலர் கஜினியின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்தார். சுகபாலர் நவாஷா என்ற பெயருடன் இசுலாமியத்திற்கு மாறினார்

1007 – நவாஷா தன்னிச்சையாக ஆட்சி புரிய தொடங்கியதால் தோற்கடிக்கப்பட்டார்

1009 – அனந்தபாலனுடன் போரிட்டு லாகூர் அருகில் உள்ள நாகர்காட்டை கைப்பற்றினார். பெருஞ்செல்வம் கொள்ளையடிக்கப்பட்டது

1010 – அவரது கவர்னர் அபுல்பாத் லோடி என்பவர் தன்னிச்சையாக அறிவித்தால் அவரை அடக்கினார்

1013 – அனந்தபாலருக்கு பின் வந்த திரிலோசன பாலர் மீது படையெழுத்து வென்றார்

1014 – தானேஸ்வர் ஆலயம் கைப்பற்றப்பட்டு சூறையாடப்பட்டது

1015 – காஷ்மீரத்திற்குள் நுழைய முயற்சித்தார். லாகூர் வரை சென்றார்

1017 – கன்னோஜ்விற்கு எதிராகப் படையெடுத்ததார். மதுராவிற்கெதிரான படையெடுப்பு மேற்கொண்டார். கோயில் கொள்ளையடிக்கப்பட்டது.

**முகமது கோரி:**

- இவரின் முழுப்பெயர் முசதீன் முகமது பின் சாம் என்கின்ற சாபூதீன் முகமது ஆகும். இவரின் படையெடுப்பிற்கு காரணம் இஸ்லாமிய அரசு அமைத்தல் ஆகும். இதில் இவர் வெற்றி பெற்றார்.
- இவர் 1175ல் மூலதான் உச் பகுதிகளை கோமதிகணவாய் வழியே நுழைந்து கைப்பற்றினார்
- 1178-ல் சோலங்கி மன்னர் இரண்டாம் பீமா என்பவரிடம் குஜராத்தை கைப்பற்ற போரிட்டு தோற்றார். இதுவே இவரின் முதல் தோல்வி ஆகும்.
- 1179ல் பெஷாவர் கைப்பற்றப்பட்டது.

**முதலாம் தரெயின் போர்:**

- 1191ல் அஜ்மீரை ஆண்ட பிரிதிவிராஜ் சௌகான் என்பவரை முகம்மது கோரி தோற்றார்.

**இரண்டாம் தரெயின் போர்:**

- 1192ல் பிரிதிவிராஜ் சௌகானை வென்றார். முகமது கோரிக்கு கனோஜ் அரசர் செயச்சந்திரன் உதவி செய்தார்
- 1193ல் முகமது கோரியின் அடிமை குத்பூதீன் ஐபெக் தில்லி, மீரட் ரத்தன்சார்பூர் ஆகியவற்றை கைப்பற்றினார்.

**சந்தவார் போர்:**

- 1194ல் கனோஜ் அரசர் செயச்சந்திரனை தோற்கடித்தார்
- 1196ல் குவாலியர் கைப்பற்றப்பட்டது
- 1197ல் குஜராத் கைப்பற்றப்பட்டது.
- 1206ல் இந்தியாவில் இருந்து திரும்பும்போது கொல்லப்பட்டார்

**டில்லி சுல்தான்கள் வரலாறு**

**அடிமை வம்சம் 1206 – 1290**

**குத்புதீன் ஐ பெக் 24.6.1206 முதல் 1210 வரை**

- 1205ல் கோரி முகமது மரணமான பின் சுதந்திரமான முதல் முஸ்லீம் டில்லி சுல்தான் ஆக இருந்தார்.
- இவரின் வழித் தோன்றலே அடிமை வம்சம் (அல்லது) இல்பாரி துருக்கி வம்சம் (அல்லது) மாம்மூத் வம்சம் எனப்படுகிறது
- இவரால் தோற்றுவிக்கப்பட்டது அடிமை வம்சம்
- நிசாசர் காசி என்பவரால் விலைக்கு வாங்கப்பட்டடு பின் கோரி முகமதுவிற்கு விற்கப்பட்ட அடிமை
- 1192ல் தரெயின் போரில் ந்னகு போரிட்டதால் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். பின் இந்துஸ்தான் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார்.
- இவரின் படையெடுப்புகள்:
- 1192ல் பரான், மீரட் கைப்பற்றுதல்
- 1193ல் தில்லி கைப்பற்றுதல்
- 1194ல் அஜ்மீர் கைப்பற்றுதல்
- 1197ல் சந்த்வார், கனோஜ் கைப்பற்றுதல்
- 1210ல் போலோ (சவ்கன்) விளையாடும் போது குதிரை மேல் இருந்து வீழ்ந்து இறந்தார்.
- ஹாசன நிகாமி, பக்ரே முஜிர் கலைஞர்களை ஆதரித்தார்.
- அஜ்மீரில் இந்து கோவில்களை இடித்து குவ்வதும் இஸ்லாம் என்ற பள்ளியை கட்டினார்.
- லாக் பக்ஷி என்று அழைக்கப்பட்டார்
- குதுப்மினரை 5 அடுக்குகள் வரை (29.5 மீட்டர்) கட்டி முடித்தார்.

**இல்தூத்மிஷ் (சம்சுதீன் அல்ட்டமிஷ்) 1211-1236**

- அடிமைகளின் கவர்னர்
- பதோதனின் கவர்னர்
- குத்புதினின் மருமகன்
- இனம்: இல்பாரி (துருக்கி)
- குத்புதீன் இறந்தவுடன் அவரது மகன் அராம் என்பவரிடமிருந்து 1211ல் போரிட்டு ஆட்சியை கைப்பற்றினார்
- பதவி ஏற்கும்போது அரசியல் நிலைமை
- இந்துஸ்தான் பிளவுபட்டு இருந்தது

வங்காளம் - அலிமர் கில்ஜி
தில்லி - இல்தூமிஷ்
முல்தான் - குபாச்சா
அஜ்மீர் - இராசபுத்திரர்கள் கைகளில் இருந்தது

- 1215ல் தரைன் போரில் பெற்றி பெற்று கஜினி இணைப்பு. இல்தீஸ் கொல்லப்பட்டார்.
- 1217ல் லாகூர் கைப்பற்றுதல்
- 1211ல் செங்கிஸ்கான் இந்தியா மீது படையெடுப்பு.
- 1223ல் இராசபுத்திரர்களை வென்று ராந்தம்பூர் குவாலியர், அஜ்மீர் பகுதிகளை கைப்பற்றுதல்
- 1228ல் லாகூர், முல்தான் சிந்து கைப்பற்றுதல்
- 1229ல் வங்கம் கைப்பற்றுதல்
- 1234-35ல் மாளவப்படையெடுப்பு
- இக்தா என்ற ஆட்சிமுறை உருவாக்கினார். இதன்படி சம்பளத்திற்கு பதிலாக நிலம் தரப்பட்டது
- Tanka என்ற வெள்ளி நாணயமும் Jitals என்ற செம்பு நாணயமும் வெளியிட்டார்.
- குவாஜா குத்புதீன் பக்தியார் நினைவாக குதுப்மினாரை மேலும் 5 அடுக்குகள் வரை கி.பி. 1232ல் கட்டினார்.

- இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி உருவாக காரணமாக இருந்தார்
- இந்தியாவின் தலைநகர் தில்லி என்பதை அறிவித்தார்
- 1236ல் இறந்தார்

**செங்கிஸ்கான் படையெடுப்பு:**

- 1221ல் (முதல் மங்கோலியர்) செங்கிஸ்கான் தனது அரசியல் எதிரியான ஜலாலுதீன் மங்பரணி என்பவரை தேடி மேற்கு எல்லை மாகாணங்களுக்கு வந்ததர். பிறகு இந்துகுஷ் மலைவழியாக 1222ல் திரும்ப சென்றுவிட்டார்.

**ரசியா 1236 - 1240**

- டில்லியின் முதல் மற்றும் ஒரே பெண் பேரரசி
- இல்தூமிஷின் மகள்
- ரசியாவை முதன் முதலில் எதிர்த்தவர். இக்தியாருதீன் அல்ருனியா: பின் திருமணம் செய்து கொண்டார்
- ரசியாவின் சகோதரன் முயிசுதீன் பகராம். இவரால் ரசியா 1240ல் தோற்கடிக்கப்பட்டு பின் கொலை செய்யப்பட்டார்.
- ரசியா காலத்து வரலாற்று ஆசிரியர்: மின்ஹாஜ்-உஸ்-சிராஜ்
- **பகராம் ஷா 1240-42**
- 1241ல் மங்கோலியர் பஞ்சாப்பை கைப்பற்றினார்

**மசூத் ஷா 1242 – 1246**

**நசுரூதீன் முகமது 1246-1266**

- இவர் இல்தூமிஷ் என்பவரின் கடைசி மகன்
- மின்ஹாஜ்-உஸ்-சிராஜ் என்பவர் எழுதிய புத்தகம் தபாவொட் -இ-நசிரி ஆகும்
- இவரின் அமைச்சர் பால்பன் உல்லாகான். நசுருதீன் இறந்த பிறகு பால்பன் ஆட்சியை பிடித்தார்.

**கியாஸ் உதீன் பால்பன் 1266 - 1286**

- இரும்பு மனதிர்
- அடிமை வம்சத்தின் சிறந்த மன்னன்
- துருக்கி இல்பாரி இனத்தைச் சார்ந்தவர்
- நாற்பதின்மரில் ஒருவர்
- பிற்காலத்தில் நாற்பதின்மர் குழுவை கலைத்தார்
- அப்ராசியால் வழித் தோன்றல் எனக் கூறிக்கொண்டார்
- பாரசீக கவிஞர் அமீத் குஸ்ருக்கு ஆதரவு
- சிஜ்தா எனும் காலை முத்தமிடும் முறையை மேற்கொண்டார்
- Naib-i-Khudai என கடவுளின் உதவியாளர் எனக் கூறிக்கொண்டார்
- திவானி ஆர்ஸ் எனப்படும் தனி இராணுவ இலக்காவை உருவாக்கினார்

**சைகுபாத் 1286 - 1290**

- அடிமை வம்சத்தின் கடைசி மன்னன்
- 1288-ல் மார்க்கோ போலோ இந்தியாவிற்கு வந்தார்.

**கில்ஜி வம்சம் 1290-1320**

- ஜவாலுதீன் பிரோஸ் கில்ஜி (1290-1296) கில்ஜி வம்சத்தை உருவாக்கினார். இவர் அலவூதின் கில்ஜியை (மருமகன்) ஆதரித்தார். பின் அவரால் கொல்லப்பட்டார்.
- தக்காணத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய முதல் சுல்தான் அரசர்

**அலாவுதீன் கில்ஜி 1296 - 1316**

- 1299ல் குஜராத் போரின் போது மாலக்காபூர் என்ற அடிமையை வாங்கினார். பின் அவரை

படைத்தளபதியாக நியமித்தார்.

- 1303-ல் மேவாரைக் கைப்பற்றினார். ராணி பதம்னி தீக்குளித்தார்.
- மூாலிக்காபூர் வாரங்கால் மீது 1309ல் படையெடுத்தார்.
- பாண்டிய நாட்டை 1311ல் வென்றார்
- மதுரை மீது படையெடுத்து மதுரையை வென்றார்
- இராமேஸ்வரம் ஆலயம் சென்று கொள்ளையடித்தார்.
- குதிரைகளுக்கு சூடு போடும் Dagh எனப்படும் முறை உருவாக்கினார்.
- எடை குறைவுக்கு கடும் தண்டனை விதிக்கப்பட்டது.
- வணிகர்கள் ஷாநா - இ - மண்டி என்ற அலுவலரிடம் பெயர் பதிவு செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- விலை கட்டுக்கப்பாட்டிற்காக திவானி ரியாசத் என்ற அலுவலர் நியமிக்கப்பட்டார்.
- அமீர் குஸ்ரு என்ற பாரசீக கவிஞர் அவரது அரசவையில் இருந்தார்.
- சிதறுண்டு கிடந்த இராசபுத்திர அரசுகள் மால்வா, தியோகிர், தேவகிரி, ரத்தம்பூர் ஆகியவற்றை வென்றார்
- விவசாயிகளிடம் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்கள் கட்டும் வரியினை தெரிந்து கொண்டார்.
- அங்காடி சீர்திருத்தம் செய்யப்பட்டது. இதற்காக இரகசிய காவல்படை உருவாக்கப்பட்டது
- தானியங்கள், துணிகள், குதிரைகள் போன்றவற்றிற்கு தனித்தனி சந்தை உருவாக்கியவர்.
- இனாம், வாக்ப் போன்ற நிலத்தானங்கள் முறையை நிறுத்தினார்
- நிலவரிகளில் ஏற்படும் நிலுவைகளை வசூலிக்க திவானி முஷ்டாக்ராஜ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

**குத்புதீன் முராரக்: 1316 - 1320**

- தன்னை கலியா என்று அழைத்துக் கொண்டார்

**நசுருதீன் குஸ்ரு ஷா 1320**

- கில்ஜி வம்சத்தின் கடைசி மன்னன்

**துக்ளக் வம்சம் 1320 – 1414**

**கியாஸ் உதீன் துக்ளக் 1320 - 1325**

- இயற்பெயர் - காஜிமாலிக்
- துக்ளக் வம்சத்தை துவக்கியவர்
- துகளாதாபாத் நகரை கட்டினார்

**முகமது பின் துக்ளக் 1325 - 1351**

- 1327ல் தலைநகர் டெல்லியில் இருந்து தேவகிரிக்கு மாற்றம் செய்யப்பட்டது
- புது தலைநகர் மத்தியில் இருந்ததாலும் போருக்கு ஏற்ற பகுதியாக இருந்ததாலும் தேவகிரிக்கு தலைநகர் மாற்றப்பட்டது
- பின் மீண்டும் தலைநகர் டில்லிக்கு 1330ல் மாற்றப்பட்டது
- தேவகிரி தௌலதாபாக் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது
- 1330ல் செப்பு நாணயங்களை வெளியிட்டார். கள்ள நாணயம் தயாரிக்கப்பட்டது. எனவே செப்பு நாணயங்களை மீண்டும் பெற்றுக் கொண்டார்.
- திவானி கோசி என புதிய வேளாண்மை துறையை உருவாக்கினார்.

- இவர் வெளியிட்ட நாணயங்களில் கலிபாவின் பெயரை நீக்கினார்.
- 1333-ல் இபான் பதுதா இந்தியாவிற்கு வந்தார்.
- 1336ல் விஜயநகர பேரரசு துவக்கப்பட்டது.
- 1351ல் சிந்து மீது படையெடுத்து கலகக்காரர்களை வென்றார்
- 1351ல் இறந்தார்.

**பெரோஸ் ஷா துக்ளக் 1351 - 1388**

- பொதுப்பணித்துறை உருவாக்கப்பட்டு யமுனை நதிக் கால்வாய், சட்லெஜ் நதிக்கால்வாய்கள் வெட்டப்பட்டன
- Sasugani – நாணயங்கள் வெளியிடப் பட்டது
- முகமது பின் துக்ளக் நினைவாக (Juna Khan) ஜான்பூரை நிர்ணயித்தார்
- இவர் வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்தினார்.
- பெரோஸ் ஷா துக்ளக்கின் வரலாற்றை எழுதியவர். ஷாம்சி-சிராஜ்-அபிப்
- குதுப்மினாரை மேலும் உயரமாக்கி கட்டினார். மொத்த உயரம் 71.24 மீட்டர்

**இரண்டாம் கியாசுதீன் 1388-89**

**அபுபக்கர் - 1389 – 1390**

**முகமது பின் பிரோஸ் 1390 – 1394**

**நசுருதீன் முகமது துக்ளக் 1394 - 1414**

- 1398-99ல் தைமூர் டெல்லியை தாக்கி பெருஞ்சல்வத்தை கொள்ளையடித்தார்

**சையது வம்சம் 1414 - 1451**

- துக்ளக் அரசின் கடைசி மன்னர் நசுருதீன் மாமூது 1413ல் இறந்தபின் தௌத்கான் லோடி அரியணையில் அமர்ந்தார்.
- லோடி 1414ல் கிசர்கானிடம் அடி பணிந்தார்.
- சையது வம்சத்தை கிசர்கான் தோற்றுவித்தார். 1421-ல் இறந்தார்.

**முபராக் 1421 - 1434**

- கிசர்கானின் மகன்
- கோக்கர்களை அடக்கினார்
- ஷா என்ற பட்டப்பெயரை இட்டுக்கொண்டார். சர்வர் உல்முக் என்பவரின் தூண்டுதலால் கொலை செய்யப்பட்டார்.

**முகமது ஷா 1434 - 1445**

- முபராக்கின் மருமகன்

**அலாவுதீன் ஷா ஆலம்: 1451**

- இவர் சையது வம்சத்தின் கடைசி மன்னர்
- இவரிடமிருந்து பகலூல் லோடி ஆட்சியை கைப்பற்றினார்

**லோடி வம்சம் 1451 – 1526**

**பகலூல் லோடி: 1451 - 1489**

- இவர் ஆப்கான் பிரிவு ஆவார்
- லோடி வம்சத்தை துவக்கியவர்

**சிக்கந்தர் லோடி: 1489-1517**

- இவரின் இயற்பெயர் : நிஜாம் கான்
- 1494ல் பீகார் கைப்பற்றினார்
- 1504ல் ஆக்ரா உருவாக்கினார்
- 1506ல் தமது தலைநகரை டில்லியில் இருந்து ஆக்ராவிற்கு மாற்றினார்

**இப்ராகிம் லோடி: 1517-1526**

- சிக்கிந்தர் லோடியின் மூத்தமகன்
- 21.11.1517ல் பதவியேற்றார்
- ஆட்சி இரண்டாக பிரிக்கப்பட்டு கான்பூர் சம்மாசனத்தில் இளைய – மகன் ஜாலால்கான், தில்லி மன்னராக இப்ராகிம்

லோடியும் பதவியேற்றனர்.

- பின் ஜலால் கான் கொலை செய்யப்பட்டார்.

**சுல்தான்களின் ஆட்சிமுறை**

- மொத்தம் 6 அமைச்சர்கள்
- வசீர் - முக்கிய பொறுப்பு: நிதி சிவில் நிருசாகத் துறையின் தலைவர்
- திவான் - இ - ரிஷாலத் அயலுறவு அமைச்சர்
- திவான் - இ - இன்ஷா – கடிதப் போக்குவரத்து
- திவான் - இ - ஆரிஸ் இராணுவ நிர்வாகம்
- சர்தர் - உஸ் சமயம் மற்றும் அறக்கொடை
- திவான் - இ - காசா – நீதித்துறை

**பிற முக்கியமானவர்கள்**

- சதர் - உஸ் சதர் - தலைமைக் காசி
- பரீத் - இ - மாலிக் - ஒற்றர் துறை மற்றும் அஞ்சல்துறை
- திவான் - இ - அமிர்கோசி – வேளாண்மைத்துறை
- வக்கீல் - இ - தார் - அரண்மைப் பராமரிப்பு
- மஜிலிஸ் - இ - கால்வத் - ஆலோசணைக்குழு

**முக்கியவரிகள்:**

- சாகத் - முஸ்லீம்களின் சமயப்பணி வரி
- ஜசியா – முஸ்லீம் அல்லாதவர்ளிடம் இருந்து சமயப்பணி வசூலிக்கப்படும் சயமப்பணி வரி
- காம்ஸ்-போர்க் காலத்தில் கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்கள் மீதான வரி
- உஷர் - முஸ்லீம் நிலத்தில் பெறப்பட்ட விளைச்சல் வரி


- உஷர் - முஸ்லீம் நிலத்தில் பெறப்பட்ட விளைச்சல் வரி


- காரஜ் - முஸ்லீம் அல்லாதவர்கள் நிலத்தில் பெறப்பட்ட விளைச்சல் வரி

| **முகலாயர் நூல்** | **ஆட்சி பற்றி எழுதியவர்** | **இலக்கிய சான்றுகள் விளக்கும் காலங்கள்** |
|---|---|---|
| தாரீக்கி ஜஹான் | ..ாலீக் ஜீவைனி | தென்மேற்கு இந்தியாவில் மங்கோலியருடன் படையெடுப்பு |
| ..தாரீக்கி குஸிதா | ..ம்துல்லா முஸ்தாபி காஸ்வினி | கஜினி அரசர்கள் |
| ..பஹத்தி நசீரி | ..ன்ஹாஜ்-உஸ் சிராஜ் | டெல்லி சுல்தான்கள் |
| ..தாரீக்கி முகம்மது | முகம்மது பிஹாமத்கானி | தைமூர் |
| ..தாரீக்கி பிரூஸ் ஷாஹி | ..யாவுதீன் பரணி | துக்ளக் |
| ..டாவா-இ-ஜஹாந்திரி | ..யாவுதீன் பரணி | |
| ..ல்வத்-இ-கபீர சனாய் முகம்மதி | | |
| அஸ்ரத் நாமா தாஜ்-உல்-மாசீர் | ..ஸன் நிகாமி | குத்புத்தீன் அய்பெக் |
| ..தாரீக்கி சிந்து (ம) தாரீக்கி மருமி | .. முகமது மருமி | அரபியர் படையெடுப்பு |

| | | |
|---|---|---|
| ..காஜைன் - உல்-புட்டு | மிர் குஸ்ரு | அலாவுதீன் கில்ஜி |
| துக்ளக் நாமா கம்சா | மிர் குஸ்ரு | கியாசுதீன் துக்ளக் |
| ..மிப்தால் உல் புட்டு | மிர் குஸ்ரு | ஜலாவுதீன் கில்ஜி |
| ..கிதாப் - இ- இந்த் சவகீர் - பில் - சவகீர் | ..ல்பெருணி | தாதுப் பொருட்கள் |
| ..தூஹுத்தே ஆலம்கிரி | முகமது மஅசூம் | அவுரங்கசீப் |
| ..ஸ்கிராட் - உல் - ஜெளநார் வாகியாட் | | ஹீமாயூன் |
| .. தாரிக் - இ - அக்பர் ஷாஹி | முகமது அரிப் | |
| துசுக்-இ- ஜஹாங்கிரி | ஜஹாங்கீர் | |
| ..தாரீக்கி முபாரக் சாகி | அகமது சர் அண்டி | பிரோஸ்ஷா |
| ..ட:ட அல் சலாடின் | குவாஜா அபு மாலிக் | முகமது பின் துக்ளக் |
| ..துபாத் உன் நுமார்-பி- கரைப்-இல் அம்சார் | இபின் பதுதா | முகமது பின் துக்ளக் |
| ..தாரீக்கி சலாட்டினி ஆப்கன் | அகமது யாட்கர் | லோடி மரப |
| ஹீமாயூன் நாமா | குல்பதான் பேகத் | பாபர்-அக்பர் |

| | | |
|---|---|---|
| ..தாரீக்கி ரஷிதி | ..மீர்சா ஹைதர் முகமது | பாபர் |
| ..ஸபர் நாமா | ..முல்லா ஷெரிப் | பாபர் |
| ஆலம்கீர் நாமா | ..மீர்சா முகமது காசிம் | அவுரங்கசீப் |
| ..யாத்ஷா நாமா | முகமது அமீன் கஜ்வினி | ஷாஜகான் |
| அமலெ சாலிஜ் | முகமது சாலிக் கம்பு | ஷாஜகான் |
| ..தாரீக்கி மு.்.பஸ்ஸலி | ஐசயத் மு.பஸ் சல்கான் | அவுரங்கசீப் |
| ..லுப்பூத் தவாரிக் இந்த் | ..ாய் பிந்த்ராபன்மால் | அவுரங்கசீப் |
| .. ஆசீரெ ஆலம்கிரி | முகமது சகீ முஸ்தயித்கான் | அவுரங்கசீப் |

**பாபர் கி.பி.1526 – கி.பி.1530**

- இயற்பெயர் - ஜாஹீருதீன் முகமது பாபர்
- பாபர் என்ற சொல்லுக்கு சிங்கம் என்று பொருள்
- தந்தை வழி – தைமூர் (துருக்கி)
- தாய் வழி – செங்கிஸ்கான் (மங்கோலியர்)
- தந்தை – உமர் ஷேக் மிர்சா
- பிறந்த இடம் - பர்கானா

**முதல் பானிப்பட் போர்**

- 1525ல் பாபர் பஞ்சாப் மீது படையெடுத்து அதன் கவர்னர் தெளலத்கான் லோடியை தோற்கடித்தார்.
- தெளலத்கான் லோடி மற்றும் அவரது மகன் திலவர் கான், மேவார் அரசர் ராணாசங்கராம் சிங் ஆகியோர் பாபருக்கு இந்தியா மீது படையெடுக்க வழிகாட்டினார்.

- பாபரின் படைகளுக்கும். இப்ராஹிம் லோடியின் படைகளுக்கும் 1526 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் பான்பபட் என்ற இடத்தில் போர் நடைபெற்றது (தற்போது ஹரியானாவில்)
- இப்போரில் பாபர் வெற்றி பெற்றார். பாபரின் தளபதிகள் உஸ்தாத் அலி மற்றும் முஸ்தபா ஆகியோர் ஆவார். பாபர் துல்குமா எனப்படும் போர் முறையை பின்பற்றினார். பாபர் இப்போரில் ரூமி எனப்படும் பீரங்கி படைகளை முதன் முதலில் பயன்படுத்தினார். முதல் பானிபட் போர் இந்தியாவை ஆண்ட ஆப்கானியர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது

**கனுவாப்போர் 1527 மார்ச் 17ம் நாள்**

- பாபர் அரசபுத்திரர்களுடன் செய்த முதல் போர் இதுவே. இப்போர் ராணாசங்காவிற்கும் பாபருக்கும் கி.பி. 1527ம் ஆண்டு மார்ச் 14-17ம் நாள் வரை நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றி பெற்றார்.

**சந்தேரிப்போர் 1528**

- 1528 சனவரி 20ம் தேதி சந்தேரிப் போர் நடைபெற்றது. சந்தேரியை ஆண்ட மாளவ அரசர் மேதினாராய் தோல்வி
- இராணா சங்கா இறந்ததாகவும், மேதினிராய் தோல்வியுற்றதாலும் இராசபுத்திரர்கள் வலிமையிழந்தனர்.

**கோக்ராப் போர் - 1529 மே 6ம் நாள்**

- இப்போர் பாபருக்கும் ஆப்கானியர்களுக்கும் இடையே நடைபெற்றது. இப்போரில் படையை நடத்திச் சென்றவர் பாபரின் மகன் ஹஸ்காரி என்பவர் ஆவார். இப்போரில் ஆப்கானியர்கள் (முகமது லோடி + நசரத் ஷா) தோல்வியுற்றனர். பாபர் 3 போர்களில் இந்துஸ்தானத்தை வெற்றி கொண்டார்
- பாபர் ஹீமாயூனுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக தம்மை அர்பணித்துக் கொண்டதால் இறந்தார் என்றும் சிலர் இப்ராகிம் லோடியின் தாயார் பாபருக்கு நஞ்சு வைத்த உணவை வழங்கியதால் நோய்வாய் பட்டு இறந்தார். அவரது உடல் முதலில் ஆக்ராவில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் காபூலில் அடக்கம் செய்யப்பட்டது
- பாபர் துருக்கிய மொழியில் துசுக் - இபாபரி வக்கியாத் - இ - பாபரி (பாபர் நாமா) என பாபர் குறிப்புகளை எழுதியுள்ளார்
- இந்த நூலில் இந்தியாவின் நிலை, தனது வெற்றித் தோல்விகள் ஆகியவற்றை குறிப்பிட்டுளார்.
- புாபரின் மகள் குல்பதான்பேகம்

**ஹீமாயூன் கி.பி. 1530 – கி.பி. 1556**

- ஹீமாயூன் நாமா என்ற நூலை எழுதியவர் குல்பதன் பேகம். இந்நூல் ஹீமாயூன் மற்றும் அவரது சகோதரர்கள் காம்ரான், அஸ்காரி, இந்தால் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட மோதல்களை பற்றி குறிப்பிடுகிறது
- ஹீமாயூன் என்றால் அதிர்ஷ்டம் என்று பொருள்
- 1531 – கலிஞ்சர் முற்றுகை – சமாதானம்
- 1532 – தாத்ரா போர் - முகமது லோடி தோல்வி
- 1533 - சூனார் முற்றுகை – ஷெர்ஷா தோல்வி
- 1535-ல் குஜராத் மீது படையெடுத்து அதனை ஆண்ட பகதூர் ஷாவை தோற்கடித்தார்

- 1539 – சௌசா போர் - ஷெர்ஷா வெற்றி
- 1540 – கன்னோசி போர் - ஷெர்ஷா வெற்றி
- உடன் பிறந்த சகோதரர்கள் உதவி செய்ய மறுத்து விட்டனர். இந்நிலையில் அமர்க் கோட்டை அரசர் அவருக்கு உதவி செய்தார்
- 1542 – அக்பர் அமரக் கோட்டையில் பிறத்தல்
- 1555 – டில்லியை மீண்டும கைப்பற்றுதல்
- 1556 - இறப்பு
- ஆக்ரா, குவாலியர் மீது போர் தொடுக்கும் போது, குவாலியர் ராசா விக்ரமஜித் கோகினூர் வைரத்தை ஹீமாயூனுக்கு அளித்து சமாதானம் வேண்டினர்.
- இவரின் மிக பெரிய எதிரி இவரின் குண இயல்புகள் ஆகும்
- இவரின் பணியாளர் ஜௌஹார் எழுதிய நூல் தாஸ்கிராட் உல் - வாகியாட்

**ஷெர்ஷா கி.பி. 1540 – கி.பி. 1545**

- பாபரிடம் தோல்வியடைந்த ஆப்கான் தலைவர்கள் ஷெர்கான் சூர் எனப்வரை தேர்நதெடுத்தார்
- இவர் சூர் வம்சத்தை சேர்ந்தவர்
- இயற்பெயர் : பரீத்கான்
- ஜான்பூர் மன்னர் பாகர்கானை கொல்ல வந்த புலியை கொன்றதால் ஷெர்ஷா என அழைக்கப்பட்டார்
- இவர் சுமார் 1 ஆண்டு காலம் பாபர் படையில் இருந்தார்
- ஷெர்ஷா ராஜஸ்தானின் பெரும்பகுதியை கைப்பற்றினார்
- 1530 – சுனார் கோட்டை முற்றுகை
- 1535 – ஜலால்கானுடன் சுராஜ்கார் போர்
- 1536ல் வங்காளத்தின் மீது படையெடுத்து பெரும் செல்வத்தை பெற்றார்
- 1538ல் கௌர் கைப்பற்றப்பட்டது
- 1539ல் சௌசாவில் முகலாயப் பேரரசர் ஹீமாயூனுடன் போரிட்டு வென்றார். ஹீமாயூன் தப்பி ஓடிவிட்டார்.
- 1540 கன்னோசி போரில் வெற்றி
- 1542 – மாளவத்தைக் கைப்பற்றினார்
- 1543ல் ரெய்சின் மீது படையெடுப்பு : பூரான் மாலை
- 1545ல் கலிஞ்சார் (பண்டல்கண்ட) போரில் வெற்றி பெற்றார். 1545ல் ஒரு துப்பாக்கி குண்டு வெடித்து இறந்தார். இவருக்குப் பின் இஸ்லாம் ஷா ஆட்சிக்கு வந்தார்.
- 1553-ல் இவர் இறந்தார்
- ஷெர்ஷா இறந்தவுடன் சூர் அரசு 5 பிரிவுகளாக பிரிந்தது.

1. பஞ்சாப் - சிக்கந்தர்
2. வங்காளம் - முகமது கான்
3. மால்வா – பாஸ் பகதூர்
4. சாம்பல் மற்றும் தோப் - இப்ராகிம் சூர்
5. சூனார் - அடில் ஷா

**ஷெர்ஷாவின் ஆட்சிமுறை**

- நாடு 47 சர்கார்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சர்கார் பங்கானாக்களாகப் பிரிக்கப்பட்டன

| பர்கனா அலுவலர்கள் | துறை |
|---|---|
| • சிக்தார் | சட்டம் |
| • அமீன் | வருவாய்த்துறை |
| • முன்சீப் | நீதி |

- கார்கூன்கள் - பாரசீக இந்தி மொழி பெயர்ப்பாளர்

- பொதாதா் கருவூலம்
- பா்கனாவின் வேலையைக் கண்காணிக்க சா்க்காரில் ஷிக்தாா் - இ - ஷிக்தாரான் மற்றும் முன்சீப் - இ - முன்சிபான் என்ற அலுவலா்கள் நியமிக்கப்பட்டனா்.
- அலுவலா்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்பட்டனா்.

அமைச்சா்கள் துறை

- திவானி விசாரத் வருவாய் நிதி அமைச்சா்
- திவானி அரிஸ் பாதுகாப்பு
- திவானி விசாலத் வெளி விவகாரம்
- திவானி இன்ஷா தகவல் தொடா்புத்துறை
- திவானி காஜி ஒற்றா் துறை
- திவானி பரீத் நீதித்துறை
- டாம் - புதிய நாணயம்
- நிலவரிச் சீா்திருத்தம்
- தக் முறைப்படி குதிரைக்கு சூடு போடப்பட்டது.
- 'ரூபியா' என்ற நாணயங்களை வெளியிட்டாா்
- Grand Trunk Road, கல்கத்தா – பெஷாவருக்கிடையே போடப்பட்டது
- அக்பரின் முன்னோடி
- படைமுறைக் கொள்கையில் அலாவுதீன் கில்ஜியை பின்பற்றினாா்
- கோட்டையை காப்பாற்ற பௌஜ் (Fauj) என்ற நிலையான தனிப்படையை வைத்து இருந்தாா்.
- இந்துக்களை மரியாதையுடன் நடத்தினாா்
- அவருடைய சிறந்த தளபதிகளில் ஒருவா் பிரமஜித் கௌா்
- தாரிக் - இ - ஷொ்ஷாகி நூலை ஆப்கானிய உயா்குடிச் சாா்ந்த அப்பாஸ்கான் என்பவா் எழுதியுள்ளாா்.

**இஸ்லாம் ஷா**

- இவரின் இயற்பெயா் ஜலால் கான். ஷோ்ஷாவின் இரண்டாவது மகன். சூா் வம்சத்தின் இரண்டாவது மன்னா்
- இவா் இந்திய முஸ்லீம் மறுமலா்ச்சியின் தந்தை எனப்பட்டாா்

**முகமது அதில் ஷா**

- இஸ்லாம் ஷாவின் மகன் பிரோஷ் எனப்வரை கொலை செய்து ஆட்சிக்கு வந்தாா். இவா் பிரோஷ் தாய்மாமன் ஆவா். இவா் உப்பு வணிகம் செய்த ஹெமு என்பவரை முதலமைச்சராக நியமித்தாா்
- சூா் வம்சத்தின் கடைசி மன்னா் சிக்கந்தா் ஷா ஆவாா்

**அக்பா் கி.பி. 1556 கி.பி. 1605**

- தேசிய பேரரசா்
- தந்தை - ஹீமாயூன்
- தாய் - அமீதா பேகம்
- பிறந்த இடம் - அமா்கோட்
- பாதுகாப்பாளா் - பைராம்கான்
- ஹீமாயூன் இறந்ததும் பட்டம் சூட்டிக் கொண்டு சுமாா் 49 ஆண்டுகாலம் ஆட்சி செய்தாா்

**இரண்டாம் பானிபட் போா் 1556**

- நுவம்பா் 5ம் தேரி டில்லியை ஆட்சி செய்த ஹெமுவிற்கும் அக்பருக்கும் நடந்தது. இதுவே பானிபட் பேராட எனப்படும். இதில் அக்பா் வெற்றி பெற்றாா்.

- பைராம்கான் இவ்வெற்றிக்கு காரணமாவார்
- 1560ல் பைராம்கான் விடுவிக்கப்பட்டார். 1561ல் ஆப்கானியர்களால் இவர் கொல்லப்பட்டார்.
- பைராம்கான் மகன் அப்துர்ரகீம்
- பைராம்கானிற்கு பிறகு தனது தாய் அமீதா பானுபேகம் மாற்றாந்தாய் மாகம் அனாகா மற்றும் அனாகனவின் மகன் ஆதாம்கான் ஆகியோரின் கைப்பாவையில் அக்பர் இருந்தார். இவர்கள் தலைமையில் நடந்த ஆட்சி பாவாடை ஆட்சி எனப்பட்டது. ஆதாம்கான் 1562ல் கொல்லப்பட்டார்.
- 1561ல் மாளவம் கைப்பற்றப்பட்டது. மன்னர் பாஜ் பகதூர் சரணடைந்தார்
- 1562ல் ஆம்பர் (ஜெய்பூர்) ராசா பிகாரிமால் தோல்வியடைந்தார். அவரது மகள் ஜோத் பாயை அக்பர் திருமணம் செய்து கொண்டார். பிகாரி மால் மகன் பகவான் தாஸ் ஆவார். அவருடைய பேரன் மான் சிங் ஆவார்
- 1564ல் கோண்டுவானா போர். சாந்தலா அரசி துர்காவதி தோற்கடிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டார்
- 1567 சித்தூர் படையெடுப்பு. மன்னர் ரானா உதயசிங் தப்பி ஓடினார். இப்போர் முகலாயப் பேரரசு இந்தியாவில் பரவ வித்திட்டது
- 1569ல் இராத்தம்பூர் மற்றும் கலிஞ்சி கைப்பற்றப்பட்டது.
- 1572ல் குஜராத்தை வென்றார். குஜராத்தை வென்றதன் நினைவாக பதேபூா சிக்ரி என்ற இடத்தில் பூலான் தார்வாசவை கட்டினார்
- 1572ல் அக்பர் ஷேக் சலீம் சிஸ்தி என்ற சுபி துறவியின் மீது பற்றுக்கொண்ட காரணத்தால் அவரது நினைவாக பதேபூர் சிக்ரி (ஆக்ரா அருகில்) எனற் இடத்தை கட்டினார்
- 18.6.1576ல் ஹல்திகாட் சண்டை அக்பருக்கும் இராணா பிரதாப் சிங்கிற்கும் நடைபெற்றது. அக்பரின் சார்பாக இராஜா மான்சிங் போரிட்டார். அதில் இராணா பிரதாப் சிங் மரணமடைந்தார்.
- இராஜா மான்சிங் பீகார். ஓரிசா மற்றும் வங்காளத்தை கைப்பற்றினார்
- 1586ல் காஷ்மீரை கைப்பற்றினார்
- 1593ல் சிந்து மற்றும் காண்டேகர் பகுதியை கைப்பற்றினார்
- அகமது நகரை ஆண்ட சந்த்பீவி உடன் உடன்படிக்கை 1596ல் ஏற்படுத்தப்பட்டது. அகமது நகர் கைப்பற்றப்பட்டது
- அக்பரின் கடைசி படையெடுப்பு தக்காணத்தில் உள் அசிகார் கோட்டையை கைப்பற்றியது ஆகும். தக்காணத்தின் விலைமையான கோட்டை அசீர்கார்க் ஆகும். இதை அக்பர் வஞ்சகமான முறையில் கைப்பற்றினார்.
- அக்பர் இராசபுத்திரர்களின் திருமண உறவின் மூலம் பெரும் பலன் அடைந்தார். 1584ல் தமது மகன் சலீமுக்கு இராஜா பகவான் தாஸ் மகளை திருமணம் செய்து வைத்தார்.

**அக்பரின் நிர்வாகம்**

- முகலாயர்களின் வருவாய் நிருவாகத்தை தோற்றுவித்தவர் அக்பர் ஆவார்
- சுராசரி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு வரி விதிக்கப்பட்டது.

- அக்பரின் வருவாய்த் திட்டம் ராசா தோடர்மாலின் தலைமையின் கீழ் இருந்தது.
- மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் கல்சா நிலங்கள் எனப்பட்டது
- நிலங்கள் 4 வகையாக பிரிக்கப்பட்டது
- ரயத்துவாரி முறை பராமரிக்கும் அதிகாரி பட்வாரி எனப்பட்டார்
- அக்பரின் வரி வசூல் முறைக்கு சப்தி முறை என்று பெயர்
- அக்பரின் இராணுவ முறைக்கு மன்சப்தாரி முறை என்று பெயர்
- 1577ல் இது அறிமுகப்படுத்தப்பட்டது
- மன்சப்தாரிகள் குறைந்தது 400 படை வீரர்களை வைத்து இருந்தார்கள்.
- மான்ச்தாரி வரிசை முறைக்கு ZAT என்று பெயர் குதிரைக்கு சூடு போடும் முறை உண்டு
- 1563ல் அக்பர் ஜஸியா வரியை நீக்கினார்
- அக்பர் விதவை மறுமணத்தை ஆதரித்தார்
- அக்பர் சதி என்னும் உடன்கட்டை ஏறுவதை தடுத்து நிறுத்தினார்
- அரசவை கூட்டத்திற்கு திவானி ஆம் என்று பொய்
- சிறப்பு திட்டத்திற்கு திவானி காஸ் என்று பெயர்
- சீக்கியர்கள் பொற்கோவில் கட்டிய நிலம் அக்பர் அளித்தது. (குரு ராமதாஸ் காலம்)
- அக்பரின் சமாதி சிக்கந்தாராவில் உள்ளது
- அக்பரின் அவை கவிஞர் - அப்துல் வமது
- அக்பரின் நிலவரித் திட்டம் ஷெர்ஷாவின் நிலவரித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

**அக்பர் அவையை அலங்கரித்த நவரத்தினங்கள்**

1. **அபுல் பாசல்:**

- இவரது தந்தை பெயர் ஷேக்முபராக்
- அக்பரின் அவையை அலங்கரித்தவர்களில் ஒருவர். இவர் எழுதிய நூல்கள் அய்-னி-அக்பரி மற்றும் அக்பர் நாமா
- அக்பரின் மகன் சலீம் தூண்டுதலால் பாண்டா இனத் தலைவரான பீர் சிங் என்பவரால் கொல்லப்பட்டார்

2. **பைஸி:**

- இவர் அபுல் பாசலின் தம்பி ஆவார். மிகச் சிறந்த கவிஞரான இவரை தனது மகனுக்கு ஆசிரியராக நியமித்தார்.

3. **மியான் தான்சேன்:**

- இவர் மிகச் சிறந்த இசையமைப்பாளர் ஆவார். முகமது கலுஸ் என்று சூ.ஃ.பி துறவி மூலம் இஸ்லாமிய மதத்தை தழுவினார். வட இந்திய இசையை கிளாஸ்சிகல் ஸ்டைல் எனப்பட்ட முறையில் இவர் இசை அமைத்துள்ளது. இம்முறை இன்றும் பின்பற்றப்படுகிறது. அக்பர் இவருக்கு மியான் என்ற பட்டத்தை வழங்கினார்

4. **பீர்பால்:**

- அக்பரின் அவையில் பீர்பால் என்ற சிறந்த அறிஞர் இருந்தார். இவரின் இயற்பெயர் மகேஷ் தாஸ் ஆகும். இவர் மலந்தேரி கணவாய் போரில் கொல்லப்பட்டார். மதி நுட்பம் வாய்ந்த இவர் இராணுவம் மற்றும் நிர்வாகத்தை கவனித்துக் கொண்டார். அக்பரின் அரசவையை அலங்கரித்த நவரத்தினங்களில் இவரும் ஒருவர்

5. **இராஜா தோடார்மால்:**

- அக்பரின் நிதி அமைச்சர் இராஜா தோடர்மால். இவரின் நிலச் சீர்திருத்த முறை பந்தோபஸ்ட் சிஸ்டம் எனப்பட்டது

6. **இராஜா மான் சிங்:**

- அக்பரின் மான் சாப்தாரி தலைவர்களின் மிகச் சிறந்தவர். ஆம்பர் (ஜெய்பூர்) நர்டின் மிகச் சிறந்த அரசரான இவர் பின் நாளில் அக்பரின் தளபதியாக மாறினார். ஹால்டிகாட் போரை திறம்பட நடத்தியவர்

7. **அப்துல் ரகீம் கான்:**

- அக்பரின் அவையை அலங்கரித்த புலவர்

8. **பக்கீர் ஆசிய தீன்:** அக்பரின் ஆலோசகர்
9. **முல்லா தௌ பியாசா:** அக்பரின் ஆலோசகர்

**தீன் இலாகி:**

- அக்பரின் மதக் கொள்கை தீன் இலாகி, அக்பர் இந்து, இஸ்லாம், கிருத்துவம், சமணம் (பௌத்தம் தவிர) ஆகிய சமயங்களில் உள்ள நல்ல கொள்கைகளை ஒன்றிணைத்து **தீன் இலாகி என்ற மதத்தை 1581ல் உருவாக்கினார்.**
- அக்பர் சந்தித்த சமண மத தலைவர்கள்: ஹிர விஜய சூரி, விஜய சேன சூரி மற்றும் பானு சந்திர உபாத்தியாயர் ஆவார்
- அக்பர் சந்தித்த கிருத்துவர்கள்: ரிடால்போ, அருவாவிவா, மான்செர்ட் ஆவார்
- அக்பர் சந்தித்த பார்சி மதத்தைச் சார்ந்தவர் தஸ்தூர் மெகர்ஜிராணா ஆவார்
- அக்பரிக் தீக் இலாகியை மொத்தம் 29 நபர்கள் ஏற்றக் கொண்டனர். அவர்களின் முக்கியமானவர் அபுல் பாசல், அரசவைக் கவிஞர் பைசி, ஷேக் முபாரக் ஆவார்
- தீன் இலாகியை ஏற்க மறுத்தவர்கள் பகவான் தாஸ் மற்றும் மான்சிங் ஆவார்
- அக்பர் 26.6.1579ல் தலைமை மதக் குருவை நீக்கிவிட்டு தாமே குத்பா வாசித்தார். மேலும் செப்டம்பர் 1579ல் தவறுபடா ஆணையை பிகடனப்படுத்தினார்.
- துளசி தாசர் அக்பர் காலத்தில் வாழ்ந்தார்
- அக்பருக்குப் பின் அவரது மகன் சலீம் 1605ல் வாரிசாக நியமிக்கப்பட்டார்.

**ஜஹாங்கீர் (1605 – 1622)**

- அக்பர் இறந்தவுடன் அவரது மகன் சலீம் நூர்உத்ன் முகம்மது ஜஹாங்கீர் பாதுஷா காசி என்ற பெயருடன் பதவி ஏற்றார்.
- இவரின் படைத் தலைவர் முகபத்கான்
- ஆக்ரா கோட்டையில் உள்ள ஷாபுர்திக்கும் யமுனைகரையில் உள்ள ஒரு கல்தூணுக்கும் இடையில் நீதிச் சங்கிலி கட்டினார்
- இவர் காலத்தில் காந்தஹார் இழக்கப்பட்டது
- இவரது ஆட்சியை எதிர்த்து இவரது மகன் குஸ்ரு கலகம் செய்தார். குஸ்ருவிற்கு சீக்கியர்களின் குரு இர்ஷீன் தேவ் உதவி செய்ததால் இவர் குரு அர்ஜீன் தேவிற்று மரண தண்டனை வழங்கினார். இதனால் சீக்கியர்கள் முகலாயர்களுக்கு எதிராக மாறினார்கள்.
- இவர் மெஹ்ருன்னிசா என்ற விதவையை மணந்தார். இவர் மாளிகை ஒளி என்ற பொருள் படும்படி நூர் மகால் என்று அழைக்கப்பட்டார். பின்னர் உலகின் ஒளி என்று பொருள்படும்படி நூர்ஜகான் என்று அழைக்கப்பட்டார். இவரைப் பற்றிய

குறிப்புகள் நாமா கி ஜஹாங்கீரி என்ற நூலில் காணப்படுகின்றன.

- தமது காதலியான அனார்கலிக்கு லாகூரில் சலவைக் கல்லாலான கல்லறையைக் கட்டினார்
- கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதி வில்லியம் ஹாக்கின்ஸ் 1608-11 ஆண்டுகளில் சில வரிணக உரிமைகயை பெற்றார்.
- 1616-1619ல் தாமஸ் ரோ சில உரிமைகளை பெற்றார்
- இவர் காலத்தில் புகையிலையை போர்ச்சுகீசியர்கள் அறிமுகம் செய்தனர்
- 1620ல் காங்ரா கோட்டையைக் கைப்பற்றினார்.
- காஷ்மீரில் உள்ள ஷாலிமர் தோட்டம் மற்றும் நிஷாத் தோட்டம் ஆகியவற்றை இவர் அமைத்தார்.
- இவரது காலத்தில் பஞ்சம் மற்றும் பிளேக் நோய் ஏற்பட்டது
- 1627ல் இவர் மரணமடைந்தார். இவரது உடல் ராவி நதிக்கரையில் உள்ள ஷாதாராவில் அடக்கம் செய்யப்பட்டது

**ஷஹாபுதீன் முகமது ஷாஜஹான் 1627 - 1658**

- 1627ல் ஜஹாங்கீர் இறந்தார்
- நூர்ஜஹான் தனது மருமகன் ஷாரியரை அரசராக்க முயற்சி செய்தார்
- நூர்ஜஹானின் சகோதரர் ஆசப்கான் தன்னுடைய மருமகன் ஷாஜகானை ஆதரித்தார்
- 1628ல் ஷாரியரை வென்றார். குத்பா இவரது பெயரால் படிக்கப்பட்டது
- இவரது இயற்பெயர் : குர்ரம்
- இவரது தாயார்: மர்வார் அரசர், மகன் ஜகத்கோசை
- இவரது மனைவி: அஞ்சுமன் பானுபேகம் (மும்தாஜ் மஹால்)
- 1626ல் அகமது நகர் அரசர் மாலிக் ஆம்பர் இறந்தவுடன் சில குழப்பங்களுக்குப்பின் அகமதுநகர் முகலாயப் பேரரசுடன் இணைந்தது
- 1635ல் பீஜப்பூர் சுல்தான் அடிபணிந்தார். கப்பம் கட்ட ஒப்புக்கொண்டார்
- கோல்கொண்டா அரசர் முகலாயப் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார்
- 1629ல் பண்டேல் கண்டின் ஆளுநர் ஜஜ்ஹர்சிங் அடக்கப்பட்டார்
- 1635ல் மீண்டும் ஜஜ்ஹர்சிங் அடக்கப்பட்டார்
- 1632ல் ஷாஜஹான், உத்திரவுப்படி வங்காள ஆளுநர் குசிம்கான் போர்ச்சுக்கீசியரை அடக்கினார்.
- 7 ஆண்டுகாலமாக தயார் செய்யப்பட்ட மயிலாசனம் மற்றும் கோகினூர் வைரத்தை பாரசீக மன்னர் ‘நாதர்ஷா’ கொள்ளையடித்துச் சென்றார். தற்பொழுது இங்கிலாந்து மியூசத்தில் உள்ளது
- மயிலாசனத்தில் கடைசியான அமர்ந்த முகலாய மன்னர் முகமது ஷா
- 1650ல் Great Mughal எனப்படும் கோகினூர் வைரம் கிடைக்கப்பட்டது.
- 1639ல் பாரசீகர்கள் காந்தாரத்தை கைப்பற்றினார்
- 1666ல் ஷாஜகான் இறந்தார்
- ஷாஜகான் காலத்தில் இந்தியாவிற்கு வந்த அயல் நாட்டினர்கள்:

ஆங்கிலேயர்கள்:

1. வில்லியம் ஹாக்கீன்ஸ் 2. தாமஸ்ரோ

பிரெஞ்சுக்காரர்கள்:

1. பர்னியர் 2. டவர்னியர் 3. தேவ்னாட்

ஹாலந்து நாட்டினர்கள்:

1. பிரான்சிஸ்கோ 2. பெல்சார்ட்டு

இத்தாலியர்கள்:

1. மனூக்சி 2. மாண்டல்ஸ்லோ

**ஆலம்கீர் அவுரங்கசீப் (1658 – 1707)**

- 1658ல் ஆக்ராவை கைப்பற்றியவுடன் 1659ல் காஜாஈ தியோரை வென்றபின்னும் இருமுறை முடிசூடப்பட்டார். இவர் சுமார் 49 ஆண்டு காலம் ஆட்சி செய்தார்.

ஷாஜகானின் மகன்கள்: 1. தாராசுக்காவ் 2. முராத் 3. ஷாஷீஜா 4. அவுரங்கசீப்

மகள்கள்: 5. ரோஷளாரா 6. ஷாகனாரா

- ஷாஜகான் உயிருடன் இருந்த போதே வாரிசுரிமைப்போர் துவங்கியது
- மேற்கண்ட 5 நபர்களும் மும்தாஜ்மகாலுக்குப் பிறந்தவர்கள்.
- வாரிசுரிமைப் போரைத் தவிர்க்க ஷாஜகானால் நியமிக்கப்பட்டவர் தாராசுக்காவ் ஆவார்
- இவர் சாமுகார் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார்.
- ஷர்ஷீஜா காஜ்வா என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார்.
- முராத் மதுராவில் வஞ்சகமாக அவுரங்கசீப்பால் கொலை செய்யப்பட்டார்.
- இவ்வாறு 1658ĺ அவுரங்கசீப் ஆலத்கீர் என்ற பட்டப் பெயருடன் முகலாயப் பேரரசின் மன்னரானார். ஆலம் கீர் என்றால் உலகின் வெற்றியாளர் எனப் பொருள்படும்

**வரலாற்றுச் சான்றுகள்:**

1. ஆலம்கிரி - இ - நாமா – முகமது காசிம்
2. புட்டு ஹாட்-இ-ஆலம்கிரி - ஈஸ்வர் தாஸ்
3. நூஷாக்கை டில் குஷா
4. ஸவாப்தி ஆலம்கிரி
5. முந்தாக்கப் உல் லூபாப்
6. தஸ்தூர் உல் அகாகி

**சிவாஜியுடன் நடைபெற்ற நிகழ்வுகள்:**

- சிவாஜியை அடக்க செயிஷ்டகானை அனுப்பியது – 1663
- சிவாஜி சூரத்தை தாக்கியது – 1664
- 1665ஆம் ஆண்டு சிவாஜிக்கும் அவுரங்கசீப் சார்பாக மன்னர் ஜெய்சிங் என்பவருக்கும் நடைபெற்றது

**எல்லைப்புற போர்கள்:**

- 1661ல் யூசூப் சாய் இனத்தவர்கள் தாக்குதல்கள் முறியடிப்பு
- 1672ல் ஆப்ரிடிகள் அக்மல்கான் தலைமையில் நடைபெற்ற கிளர்ச்சி முறியடிப்பு
- குஷல்கான் கட்டாக் தலைமையில் கட்டாக்குகள் நடத்திய கிளர்ச்சி முறியடிப்பு

**கோல்கொண்டா வெற்றிகள்:**

- மராட்டியர்களுக்கு போர்களில் உதவி செய்த கோல்கொண்டா மீது 1687ல் அவுரங்கசீப் போரிட்டார்
- சுல்தான் அபூல்ஹாசன் தோல்வியுற்றார்

**பீஜப்பூர் வெற்றி:**

- பீஜப்பூர் சுல்தானின் படைகளை நவீனமாக்கிய தளபதி சார்ஜகானை நீக்குமாறு அவுரங்கசீப் பீஜப்பூர் சுல்தானைக்

கேட்டுக்கொண்டார்

- பீஜப்பூர் சுல்தான் மறுத்துவிட்டார் எனவே 1685ல் பீஜப்பூரின் மீது அவுரங்கசீப் படையெடுத்தார்
- 1685ல் பீஜப்பூர் கைப்பற்றப்பட்டது
- சுல்தான் சிக்கந்தர் அடில்ஷா கைது செய்யப்பட்டார்

**இராசபுத்திரர்களுடன் போர்:**

- 1678ல் மகாராஜா ஜஸ்வந்த்சிங் இறந்தவுடன் அவுரங்கசீப் ஜோத்பூரை கைப்பற்றினார்
- உதய்பூர் இரானாவை தோல்வியுறச் செய்து உதய்பூரை கைப்பற்றினார்
- 1662ல் அகோம்கள் முகலாயருடன் உடன்பாடு செய்து கொண்டார்
- தன்னுடைய ஆட்சியில் புதியதாக கட்டப்பட்ட இந்துக் கோவில்களை அவுரங்கசீப் இடித்து தள்ளினார்
- இதனால் கத்தியவாரில் உள்ள சோமநாதபுரக் கோவில், காசி விசுவநாகக் கோவில், மதுரவாயில் உள்ள கேசவராய் கோவில்கள் அழிந்தன
- மேகலாயப் பேரரசு அவுரங்கசீப் காலத்தில் மிகப் பரந்திருந்தது
- ரதாரி என்ற படகுத் துறை வரியை நீக்கினார்
- பண்டாரி என்ற நிலத் தீர்வையை இரத்து செய்தார்.
- சாராய் என்ற மேய்ச்சல் வரியை இரத்து செய்தார்
- துவான்னா என்ற இந்து மத பண்டிகைகள் கொண்டாட்ட வரியை நீக்கினார்
- ஆடுகளுக்கான ஸார் ஷீமாரி மற்றும் பஸ் ஷீமாரி ஆகிய வரிகளை இரத்து செய்தார்.
- 12.4.1679ல் ஜசியா என்ற வரியை விதித்தார்
- மஹ்சூல் என்ற வரி விதித்ததர்
- சுங்கவரி முஸ்லீம்களுக்கு 2 ½ விழுக்காடும் இந்துக்களுக்கு 5 விழுக்காடும் விதிக்கப்பட்டன.
- 1665ல் முஸ்லீம் வணிகர்களுக்கு முழுமையான சுங்கவரி விலக்கு அளிக்கப்பட்டது.
- 1671ல் வரி வசூல்செய்யும் பணிகளுக்கு கொண்டாட தடைச் செய்தார்.
- எஸ.ஆர்.சர்மா என்ற அறிஞர் இந்துக்களை ஒறுத்தல் என்பது அவுரங்கசீப்பின் கொள்கை எனக் குறிப்பிட்டார்
- பருக்கி என்ற வரலாற்று ஆசிரியர் இந்துக்கள் முகலாய பேரரசுக்கு விசுவாசிகளாக இல்லாததால் 1670ல் இருந்து அவுரங்கசீப் தனது கொள்கைகளை மாற்றிக்கொண்டார் எனக் குறிப்பிடுகிறார்.
- பாரசீக ஷாவின் தூதுவரான புடாக் பெக் அவுரங்கசீப்பின் அவையில் கலந்து கொண்டார்

**முக்கிய குறிப்புகள்:**

- 1658ல் தந்தை ஷாஜஹகானை சிறையில் அடைத்தார்
- பால்கனி வழியே மன்னர் குடிமக்களுக்கு காட்சி தரும் ஜரோக்கா தர்ஷன் என்ற முறையை நீக்கினார்.
- அரண்மனையில் இசை, நடனம் ஆகியவற்றை தடைச் செய்தார்
- முதாசிப்புகள் எனப்படும் பொது ஒழுக்கம் அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்
- மது அபின் தடை செய்யப்பட்டது

- விபச்சாரம் தடை செய்யப்பட்டது
- சோதிடம் இழிவுபடுத்தப்பட்டது
- முகரம் ஊர்வலம், சதி ஆகியவை தடை செய்யப்பட்டது. சந்தேக குணம் உடையவர் எனவே அனைத்துப் பணிகளையும் தாமே சுமந்து கொண்டவர்
- காசுகளில் கலீமா பொறிக்கப்படுவதை தடை செய்தார்
- பாரசீக வழக்கமான நௌரோசு கொண்டாட்டம் தடைசெய்யப்பட்டது
- சீக்கியர்களின் 9வது குரு குரு தேஜ்பகதூர் கொலை செய்யப்பட்டார்.
- அவுரங்கசீப்பிற்கு பின் முகலாய பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதற்கான காரணங்கள்

1. அவுரங்கசீப்பின் சமயக் கொள்கை
2. முகலாய பேரரசின் மிகப் பரந்த பரப்பளவு
3. மராத்தியர்களின் எழுச்சி
4. திறமையற்ற அரசு வாரிசுகள்
5. வாரிசுரிமைப் போர்
6. மான்சப்தாரி முறை
7. தக்காண கொள்கை
8. ஆங்கிலேயர் வருகை
9. ஆப்கானியர்களின் படையெடுப்புகள்

**பிற்கால முகலாய அரசர்கள்:**

- முதலாம் பகதூர் ஷா: இவர் முதலாம் ஷா ஆலம் என்றும் அழைக்கப்படுகின்றார். 1707 முதல் 1712 வரை ஆட்சி செய்தார். இவரது ஆட்சியில் முகலாய அரசு வீழ்ச்சியடைய தொடங்கியது
- ஜகந்தர் ஷா: இவர் 1712 முதல் 1713 வரை ஆட்சி செய்தனர். இவர் ஜசியா வரியை நீக்கினார்.
- பருக்ஷியர்: சீக்கியர்களின் தலைவர் பண்டா பகதூருக்கு மரண தண்டனை விதித்தார். கிழக்கிந்திய கம்பெனிக்கு வங்காளத்தில் பரியில்லாமல் வணிகம் செய்ய பிர்மென் அளித்த ஆங்கிலேயர் இந்தியாவில் இருக்க இவவே காரணமானவர். இவர் 1713 முதல் 1719 வரை ஆட்சி செய்தார்.
- ரபி உல் டார்ஜட்: 1719ல் ஆட்சி செய்தார்
- ரபி உல் தௌலத் எனப்படும் இரண்டாம் ஷாஹுகான்: 1719ல் ஆட்சி செய்தார்
- நிகுசியர்: 1719ல் ஆட்சி செய்தார்

**முகமது இப்ராகிம்:**

- முகமது இப்ராகிம்: 1720 முால் 1748 வரை ஆட்சி செய்தார். இவர் மகிழ்ச்சியை விரும்பும் அரசர் என்பதால் இரங்கீகலா என்று அழைக்கப்பட்டார். இவர் காலத்தில் பாரசீகத்தைச் சார்ந்த நாதர் ஷா படையெடுத்தார்.

**நாதர்ஷாவின் படையெடுப்பு:**

- 1739ம் வருடம் மார்ச் மாதம் 9 ஆம் தேதி நாதர்ஷா டில்லியில் நுழைந்தார். முகலாய அரசர் முகமதுஷாவின் இராணுவத்தை தோற்கடித்த அவர் டில்லியை சூறையாடி மே மாதம் டில்லியில் இருந்து சென்றார்
- அவர் புகழ் பெற்ற மயிலாசனத்தையம் கோகினூர் வைரத்தையும் டில்லியில் இருந்து கொண்டு சென்றார். கோகினூர் என்றால் “mountain of light” எனப் பொருள்படும்.
- அகமது ஷா பகதூர்: 1748 முதல் 1754 வரை ஆட்சி செய்தார்.
- அகமது ஷா ஆப்தாலி இந்தியாவின் மீது
- ஆங்கிலேயர் வசமிருந்த சென்னையை டியூப்ளே மீண்டும் கைப்பற்றினார். சென்னையை இழந்த ஆங்கிலேயர்கள் அன்வாருத்தீனிடம் நியாயம் கேட்டனர். மேலும் டியூப்ளே சென்னையைக் கைப்பற்றியவுடன் அன்வாருத்தீனிடம் தருவதாக வாக்களித்தார். வாக்களித்தபடி அவர் செய்யவில்லை. எனவே அன்வாருத்தீன் பெரும் படையை பிரெஞ்சுகாகரர்களுக்கு எதிராக அனுப்பி வைத்தார். அப்படை தோல்வியுற்றது. இப்போர் அடையார் போர் எனப்பட்டது. வெற்றி பெற்ற பிரெஞ்சுப் படைகள் ஆங்கிலேயர் பாண்டிச்சேரி மீது போர் தொடுத்தனர். பிரெஞ்சுக்காரர்கள் நன்கு பாதுகாத்தமையால் பாண்டிச்சேரியை வெல்ல இயலவில்லை.

**அய்லாஷாபெல் உடன்பாடு 1748**

- ஆஸ்தீரிய வாரிசு உரிமைப்போர் அய்லாஷபெல் உடன்பாட்டுடன் முடிவடைந்தது. அதன்படி சென்னையை மீண்டும் ஆங்கிலேயருக்கு தர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு பதிலாக வட அமெரிக்காவில் இருந்த லூயிஸ்பார்க்கை பிரான்சிற்கு தந்தனர்.

**இரண்டாம் கர்நாடகப் போர்கள் 1749 – 54**

**குாரணம்: தக்காணம் - கர்நாடகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்**

**ஆம்பூர் போர் 1749**

**பிரெஞ்சு அணி:** டியூப்ளே, கர்நாடக நவாப் சந்தாசாகிப், ஹைதராபாத் முசாபர் ஜங்.

**ஆங்கிலேயர் அணி:** ஆங்கிலேயர், ஹைதராபாத் நிஜாம் மகன் நாசிர் ஜங்

**நிகழ்வுகள்:** இப்போது தக்காணத்திலும், கர்நாடகத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளால் ஏற்பட்டது. 1748ல் ஐதராபாத் நிஜாம் உல்முல்க் மரணமடைந்தார். அவரது இரண்டாம் மகன் நாசிர் சங்கும், பெயரன் முசாப் சங்கும் நிசாமின் வாரிசாக போட்டியிட்டனர்.

- ஆற்காட்டிலும் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. நவாப் அன்வாருதீனுக்கு எதிராக அவர் மருமகன் சந்தாசாகிப் போட்டியிட்டார். ஐதராபாத்திலும், ஆற்காட்டிலும் ஏற்பட்ட பதவிப் போட்டிகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள டியூப்ளே விரும்பினார். எனவே மராட்டியரால் சிறை செய்யப்பட்ட சந்தா சாகிப்பைப் பெருந்தொகையைப் பணயமாகக் கொழுத்து விடுவித்தார். அவரை ஆற்காட்டின் நவாப் ஆக்க விரும்பினார். ஐதராபாத்தில் முசாபர் சங்கை நிசாமாக்க முயன்றார். மாறாக ஆங்கிலேயர் நாசிர் சங்கையும், அன்வாருதீனையும் ஆதரித்தனர்.
- 1749ல் அன்வாருதீன் படைகளைப் பிரெஞ்சு படைகள் தோல்வியுறச் செய்தன. அன்வாருதீன் போரில் மரணமடைந்தார். அவரது மகன் முகமது அலி தப்பிச் சென்று திருச்சிராப்பள்ளி கோட்டையுள் தஞ்சம் அடைந்தார். இதனால் கர்நாடகம் முழுமையும் சந்தாசாகிப் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- ஐதராபாத்தில் நடைபெற்ற போரில் நாசரி சங், முசாபர் சங்கைத் தோல்வியுறச் செய்தார். நாசிரின் படைகள் நாசிரை விட்டு விலகி அவரைக் கொன்றன. இதனால் முசாபர் சங் 50,000 பவுன்களை ஆங்கிலேயருக்கு அளித்து நிசாமானார். அவரும் இறந்துவிட்டதால் நிசாமின் மூன்றாவது மகனான சலபத்சங் நிசாமானார். பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி நிசாமின் படைகளை நவீனமாக்கினார்.
- சந்தாசாகிப், கர்நாடக நவாப் ஆக்கப்பட்டார். டியூப்ளே முகமது அலியைத் தோற்கடித்து திருச்சிராப்பள்ளி கோட்டையை முற்றுகையிட்டார். முகமது அலிக்கு ஆங்கிலேயர் உதவிபுரிய தவிர்க்க 1751ல் ஆங்கிலேயத் தளபதி இராபர்ட் கிளைவ், ஆற்காட்டைத் தாக்கினார். இதனால் இரண்டாம் கர்நாடகப் போரில் ஏற்பட்டது

**போர் நிகழ்ச்சிகள்: ஆற்காடு போர்: 1752 - 53**

- கிளைவ் ஆற்காட்டைத் தாக்கி சந்தாசாகிபின் படைகளை வென்றார். அவர்

ஆற்காட்டு வீரர் என்றழைக்கப்பட்டார். மேலும் ஆரணி, காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களிலும் சந்தாசாகிப் தப்பி ஓடித் திருவரங்கத்தில் தஞ்சம் புகுந்தார். பிரெஞ்சுப் படைகள் திருச்சிசராப்பள்ளி முற்றுகையைக் கைவிட்டனர். அதனால் முகமது அலி கர்நாடக நவாப் ஆக்கப்பட்டார். 1753ல் கர்நாடகம் முழுமையும் ஆங்கிலேயர் வசமாயிற்று பிரெஞ்சு அரசு அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டு கொதேஹியூ என்பவரை ஆளுநராக அனுப்பியது. அவர் பாண்டிச்சேரி உடன்படிக்கையைச் செய்து கொண்டார்.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை : 1754**

- இரு நாடுகளும் இந்திய உள்நாட்டு அரசியலில் தலையிடுவதில்லை என உடன்பட்டன. ஆவர்கள் வசம் உள்ள பகுதிகளைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும் ஒப்புக் கொண்டன

**மூன்றாம் கர்நாடகப் போர் (1756-63)**

**காரணம்: ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர்**

- ஐரோப்பாவில் 1756ல் ஏழாண்டுப் போர் தொடங்கிற்று. இந்தியாவுக்கு வலிமை வாய்ந்த கடற்படையை கவுண்ட டிலாலி என்பவரின் தலைமையில் பிரெஞ்சு அரசு அனுப்பியது. ஆங்கிலேயப் படையும் சர் அயர்கூட் என்பவரின் தலைமையில் பிரெஞ்சு அரசு அனுப்பியது. ஆங்கிலேயப் படையும் சர் அயர்கூட் என்பவரின் தலைமையில் மிகச் சிறந்து விளங்கியது. கடலூரில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படைகள் புனித டேவிட் கோட்டையில் தோற்றன. லூலி ஐதராபாத்தில் உள்ள புஸ்ஸியைத் துணைக்கழைத்தார். புஸ்ஸி படைகள் கர்நாடகம் வந்தடைந்தன. அந்த நிலையை ஆங்கிலேயர் பயன்படுத்திக் கொண்டு நிசாமின் பகுதிகளான மசூலிப் பட்டினத்தையும், வடசர்க்கார் பகுதியையும் கைப்பற்றின.

**வந்தவாசிப் போர் - 1760**

- 1760ல் சாஅயர் கூட், லாலியின் படைகளை வந்தவாசி என்ற இடத்தில் தோற்கடித்தார். பின்னர் செஞ்சியும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பிரெஞ்சுப் பகுதிகள் அனைத்து ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டன.
- புஸ்ஸி, ஆங்கிலேயரால் கைதியானார். லூலியின் படைகள் பாண்டிச்சேரியில் சரணடைந்தன. போரின் இறுதியில் பாரிசு உடன்படிக்கை இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டது

**பாரிசு உடனப்டிக்கை: 1763**

- பாண்டிச்சேரி உட்படச் சில பகுதிகள் மட்டும் பிரெஞ்சுக்காரர் வசம் விடப்பட்டன

**இருட்டறை நிகழ்ச்சி 20-06-1756**

- ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சொந்தமான கல்கத்தா வில்லியம் கோட்டையை புதுப்பிக்க செய்த முயற்சியை சிராஜ் உத்தெளலா வங்காள நவாப் தடுத்தார்
- வங்காளத்தில் வரி இல்லாமல் வாணிபம் செய்ய முகலாய மன்னர் பருக்கியரால் கொடுக்கப்பட்ட ஆணைகளை ஆங்கிலேயர்கள் தவறாகப் பயன்படுத்தினார்கள்.
- சிராஜ் உத்தெளலாவிடம் பெரும் செல்வத்தை எடுத்துக் கொண்டு ஓடிய

ஒருவர் ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தார்

- அவரை ஒப்படைக்க கோரிய சிராஜ் உத்தெளலாவின் கோரிக்கையை ஆங்கிலேயர்கள் நிராகரித்தனர்
- எனவே சிராஜ் உத்தெளலா வில்லியம் கோட்டையை தாக்கி அங்கு இருந்த 145 பேர்களை ஒரு சிறு அறையில் அடைத்தார்
- இதில் 125 பேர் இறந்து விட்டனர். இதுவே இருட்டறை சம்பவம் எனப்படும்
- சிலர் ஆங்கிலேயர் இட்ட கற்பனைக் கதை இது இருட்டறை சம்பவம் எனப்படும்
- இந்த இருட்டறைத் துயரச் செய்தி சென்னையை எட்டியவுடன் இராபர்ட் கிளைவ் கடற்படைத்தளபதி வாட்சன் ஆகியோர் தலைமையில் ஆங்கிலேயர் படை வங்காளத்திற்கு விரைந்து கி. பி. 1757ல் கல்கத்தாவை மீண்டும் கைப்பற்றியது
- இரு பிரிவினரும் நேரடியாக மோதுவதற்கு அப்போது ஆயத்த நிலையில் இல்லாததால் கி. பி. 1757ல் ஓர் உடன்படிக்கையினைச் செய்து கொண்டனர்.
- நுவாபின் நிலையை வலுக்குன்றச் செய்ய எண்ணிய கிளைவ் அவருடைய தலைமைத் தளபதி மீர் ஜாபரோடு, அமீன் சந்த் என்பவர் மூலமாக ஒரு உடன்படிக்கையினைச் செய்து கொண்டார்.
- நவாபின் நிலையை வலுக்குன்றச் செய்ய எண்ணிய கிளைவ் அவருடைய தலைமைத் தளபதி மீர் ஜாபரோடு, அமீன் சந்த் என்பவர் மூலமாக ஒரு உடன்படிக்கையினைச் செய்து கொண்டார்.
- வேண்டுமென்றே திட்டமிட்டு நவாப் பிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவதாகக் கிளைவ் குற்றம் சாட்டினார்.

**பிளாசிப் போர் 1757**

- வங்காள நவாப் சிராஜ் உத்தெளலாவிற்கும் இராபர்ட் கிளைவிற்கும் இடையே நடைபெற்றது.
- இந்த யுத்தம் 23.06.1757ல் பிளாசி என்னுமிடத்தில் நடைபெற்றது
- இராபர்ட் கிளைவ் 1757ல் சந்திர நகரை முதலில் கைப்பற்றினார்
- பிறகு நடைபெற்ற போரில் சிராஜ் உத்தெளலா தோல்வி அடைந்தார்.
- கிளைவ், தனக்கு உதவி செய்த சிராஜ் உத்தெளலாவின் தளபதி மீர் ஜாபரை நவாப் ஆக நியமித்தார்.
- இதனால் கிளைவ் 1765ல் வங்காள ஆளுனர் ஆனார்.

**பக்ஸார் போர் 1764:**

- பிளாசிப் போரில் சிராஜ் உத்தெளலா தோல்வி அடைந்தவுடன் அவரின் தளபதி, கிளைவிற்கு உதவி செய்த மீர் ஜாபர் நவாப் ஆக்கப்பட்டார்.
- மீர்ஜபார் டச்சுக்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். எனவே ஆங்கிலேயர்கள் மீர்ஜபார் மருமகனை நவாப் ஆக்கினார்
- மீர்ஜபார் மருமகன் மீர் காசிம் நவாப் ஆனவுடன் ஆங்கிலேயரை சுங்கக் கட்டணம் கட்டுமாறு கூறினார்
- இதனை எதிர்த்த ஆங்கிலேயரை சிறையிலடைத்தார். எனவே 1763ல் போர் துவங்கியது

- வங்காள நவாப் மீர்காசிம், அயோத்தி நவாப், ஷீஜா-உத்-தெளலா, முகலாயப் பேரரசர் ஷா ஆலம் ஆகியோர் கூட்டணிக்கும் ஆங்கிலேயருக்கும் எதிராக போர் ஏற்பட்டது
- 1764ல் பக்சார் என்னுமிடத்தில் நடந்த போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்று, மீண்டும் மீர்ஜபாரை வங்காள நவாப் ஆக்கப்பட்டார்.
- பக்சார் போர் கி.பி. 1765ம் ஆண்டு ஏற்பட்ட அலகாபாத் உடனபடிக்கையினால் முடிவுற்றது.
- பக்சார் போரில் இந்திய மன்னர்களைத் தோற்கடித்த ஆங்கில ஆளுநர் மேஜர் மன்றோ

**இராபர்ட் கிளைவ்**

- 1765ல் ஆண்டிலிருந்து வங்காள ஆளுநராக நியமிக்கப்பட்டார்
- இவரே வங்காளத்தின் முதல் ஆளுநர் ஆவார்

**இரட்டையாட்சி**

- வங்காளத்தில் கிளைவ் ஒரு புதுமுறையான நிருவாகத்தைப் புகத்தினார். இது இரட்டையாட்சி என்று அழைக்கப்பட்டது. கி.பி. 1765ஆம் ஆண்டிலிருந்து 1772-ஆம் ஆண்டு வரை வங்காளத்தில் நிருவாகம் வங்காள நவாபிடமும் கிழக்கிந்திய நிறுவனத்திடமும் இருந்தது. நவாப் நாட்டின் அரசர், அவர் நாட்டின் நிருவாகத்திற்கு பொறுப்புள்ளவர். ஆனால் உண்மையான அதிகாரம் ஆங்கிலேயரிடம் தான் இருந்தது. இதே முறை வருவாய் நிருவாகத்திலும் பின்பற்றப்பட்டது. வரி தண்டிட இந்திய முகவர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் உண்மையான அதிகாரம் அவர்களுக்குப் பின் இருந்த நிறுவனத்திடமே இருந்தது.
- கி.பி. 1765ல் பேரரசர் ஷா ஆலம் ஓர் ஆணையின் மூலம் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வரித்தண்டல் செய்யும் உரிமையை கிழக்கிந்திய நிறுவனத்திற்கு அளித்திருந்தார். பின்னர் வங்காளத்தில் மீர்ஜாபரின் மைந்தன் நிஜாம் உத்-தெளலா கிழக்கிந்திய நிறுவனத்திற்கு நிசாமத் அலுவல்களையும் நாட்டின் படைப் பாதுகாப்பு, அயல் விவகாரங்கள் ஆகியவகைளை கொடுத்துவிட்டார்
- கிழக்கிந்திய நிறுவனம் திவானி என்னும் வரி தண்டும் வேலைகளையும் நிசாமத் என்னும் படைப்பணிகளையும் மேற்கொள்ளலாயிற்று

**முதலாம் ஆங்கிலோ மைசூர் போர் 1767 - 1769**

- ஹைதர் அலி தமக்கு உதவிய பிரெஞ்சு அரசுடன் நட்புறவு கொண்டு இருந்தார்.
- இதனால் ஆங்கிலேயரும் மராத்தியரும் கவலைக்கொண்டனர்
- ஆங்கிலேயர், ஹைதராபாத் நிஜாம், மராத்தியருக்கிடையே நட்புறவு இருந்தது
- கர்நாடகா நவாப் முகமது அலி இந்த நட்புறவை பயன்படுத்திக் கொண்டு ஹைதர் அலியை 1767ல் தாக்கினார். ஆனால் ஹைதர் அலி திறமையுடன் நிசாமை ஆங்கிலேயருக்கு எதிராக ஈடுபடுத்தினார். ஆங்கில தளபதி சுமித் ஹைதரைத் தாக்கத் தொடங்கினார். ஹைதர்படையும், நிசாம் படையும் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தன. சுமித், அவர்கள் படைகளை திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இடங்களில் தோற்கடித்தார். தோற்ற

அணியில் இருந்த நிசாம் ஹைதரை விட்டு விலகினார்.

- பம்பாயில் இருந்து அனுப்பப்பட்ட படை மங்களுரையும், அதன் அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளையும் கைப்பற்றியது. அப்பகுதியில் ஹைதர் அலி தாக்குதல் நிகழ்த்தி அவற்றைத் தன் வசப்படுத்தினார். மேலும் பாரமகால், கரூர் ஆகிய இங்களைக் கைப்பற்றினார். தளபதி நிச்சனை தோல்வியுறச் செய்து ஈரோட்டை வென்றார். அப்போது ஹைதரிடம் ஆங்கிலேயர் சமாதானம் கோரினார்.

**சென்னை உடன்படிக்கை:**

- 1769ல் முதல் மைசூர்ப்போரின் முடிவில் சென்னை உடன்படிக்கை கையெழுத் தாகியது. அதன்படி கரூர் மாவட்டம் ஹைதரிடம் விடப்பட்டது. நெருக்கடிக் காலத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள உடன்பட்டனர்.
- இதுவே முதல் மைசூர் போர்

**வாரன் ஹேஸ்டிங்சு (1772-1785)**

- கி.பி. 1772 முதல் 1774 வரை வங்காளத்தில் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்சு நியமிக்கப்பட்டார்.
- 1774யில் இந்தியாவின் முதல் தலைமை ஆளுனராக பதவியேற்றார்.

**முக்கிய போர்கள் ரோகில்லர் போர் 1774**

- 1774ல் அடியாத்தி நவாப் ரோகில் கண்டைத்தாக்கினார். வாரன் ஹேஸ்டிங்சு படைகளை அனுப்பி நவாப்பிற்கு உதவி புரிந்தார். நவாப், ஹேஸ்டிங்சு செய்த உதவிக்காக 40 இலட்ச ரூபாயை அவருக்கு வழங்கினார். வாரன் ஹேஸ்டிங்சின் இச்செயல் கண்டனத்திற்குள்ளாக்கியது.
- ஒழுங்கு முறைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், வாரன் ஹேஸ்டிங்சு முதல் தலைமை ஆளுநராக 1774ல் பதவியேற்றார். அவருக்கும் அவரது ஆலோசனை அவை உறுப்பினர்களுக்கும் இடையே ரோக்கில்லர் போர் தொடர்பாகக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது

**இரண்டாம் மைசூர் போர் 1780-84**

- இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் ஏற்பட்ட போரில், இந்தியாவில் மாஹே என்ற பிரெஞ்சு இடத்தை ஆங்கிலேயர்கள் தாக்கினார்கள்.
- ஹைதர் இதனைத் தடுத்தார்
- இதன் விளைவாக நிசாம், மராத்தியர், ஹைதர் ஒன்று சேர்ந்து போர் செய்தனர்.
- போரின் நடுவே ஆங்கிலேயர், நிஜாம், மராத்தியர் ஆகியோருடன் நட்புறவு கொண்டு ஹைதரை தனி மரமாக்கினார்.
- பரங்கிப்பேட்டையில் 1781ல் சர் அயர் கூட், ஹைதர் அலியைத் தோற்கடித்தார். ஹைதரின் மகன் திப்பு வந்தவாசியை முற்றுகையிட்டார். 1781-82ல் போர் முடிவின்றி நீண்டு கொண்டிருந்தது.
- போர் தொடர்ந்து நடைபெற்றது. ஹைதர் இறந்தார்.
- பிரெஞ்சுக்காரர்கள் 1783ல் திப்புவிற்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொண்டனர். இரு பிரிவினரும் இறுதியில் களைப்படைந்து மார்ச் 7, 1783ல் மங்களுர் உடன்படிக்கையினைச் செய்தனர். இதன் வாயிலாக இரு பிரிவினரும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளையும், கைதிகளையும்

திருப்பிக்கொடுக்க உடன்பட்டனர்.

- ஹைதர் அலி புற்றுநோயால் மரணமடைந்தார்.

**ஒழுங்குமுறைச் சட்டம் (1773)**

- வங்காளத்தின் ஆளுநர் (Governor) இச்சட்டத்தின்படி, வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநர் (Governor – General) ஆனார். இதன்படி வாரன் ஹேஸ்டிங்சு 1774 முதல் தலைமைய ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவருக்குச் சென்னை, மும்பை ஆளுநர்கள் கட்டுப்பட்டவர்கள்.
- கிழக்கிந்திய கம்பெனிக்கு 20 ஆண்டுக்காலம் வணிக செய்யும் உரிமை நீட்டிக்கப்பட்டிருந்தது.
- நிர்வாகத்தில் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துப்படி அரசியல் நடவடிக்கைகள் அமைய வேண்டும். சமமான கருத்து ஏற்பட்டால் தலைமை ஆளுநர் தனது முடிவு செய்யும் வாக்குரிமை (Casting Vote) பயன்படுத்தலாம்.
- துலைமை ஆளுநரும், குழுவும் இணைந்து மும்பை, சென்னை மாநிலங்களை நிர்வகிக்கும் அதிகாரம் பெற்றனர்.
- வில்லியம் கோட்டையில் ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது
- இதன்படி ஒரு தலைமை நீதிபதி மற்றும் 3 நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர்.
- முதல் நீதிபதி: இம்பேய்
- வுாணிகக் குழுவை நிருவகிக்க 24 பேர் கொண்ட இயக்குநர்கள் அவை ஒன்று அமைக்கப்பட்டது.

**பிட் இந்திய சட்டம் 1784:**

- ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைபாடுகளைக் களைய, 1784ல் இங்கிலாந்தில் பிட் தலைமை அமைச்சராகப் பதவியேற்றவுடன் பிட் இந்தியச் சட்டம் இயற்றப்பட்டது
- இச்சட்டத்தின்படி கிழக்கிந்திய நிறுவனத்தை மேற்பார்வையிட ஆளு உறுப்பினர்கள் கொண்ட கட்டுப்பாட்டுக் குழு (Board of Control) இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது.
- இவர்கள் ஆணையர்கள் எனப்பட்டனர்
- வணிகம் தொடர்பான கடிதப் போக்குவரத்து தவிர, பிற நிர்வாக, படை நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுக் குழுவின் அனுமதியின் பேரில் தான் நடைபெற வேண்டும்.
- இந்தியாவில் தலைமை ஆளுநரின் சபையில் நான்கு உறுப்பினர்களில் ஒருவர் உடைத்தலைவராக இருந்தல் வேண்டும்.
- சென்னை, மும்பை மாநிலங்களின் மீது போர், அமைதி ஏற்பாடுகள், இந்திய அரசர்களின் விவகாரங்கள், வரித்தண்டல், படை அமைப்பு முதலியவைகளில் மேலதிகாரம் செய்யும் உரிமை தலைமை ஆளுநருக்கு வழங்கப்பட்டது. “பொது நிர்வாக முறையின் அடித்தளத்தை” வாரன் ஹேஸ்டிங் அமைக்க, அதன் மீது “மேற் கட்டுமானம் காரன்வாலிசால் எழுப்பப்பட்டத” என்று சர் வில்லியம் ஹண்டர் குறிப்பிட்டுள்ளார்.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள்:**

- வங்காளத்தில் நிலவிய இரட்டை ஆட்சிமுறையை நீக்கினார்
- துணை நவாபுகளான முகமது இராசாக்கான்,

இராஜா சித்தாப் ராய் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்தார்.

- 1772ல் அரசுக்கு கருவூலத்தை மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு மாற்றினார்.
- கல்கத்தா ஆங்கிலேய இந்தியாவின் (ஆங்கில ஆட்சிக்கு) தலைநகராயிற்று
- கல்கத்தாவில் ஒரு வருவாய் வாரியம் (Board of Revenue) அமைக்கப்பட்டது.
- ஒரு வாணிக வாரியம் (Board of Trade) அமைக்கப்பட்டது
- ஒவ்வொரு மாவட்டத்திலும் உரிமையியல் (Diwani adalats) (Civil) குற்றவியல் (Favjdari adalats) (Criminal) ஆகிய இரண்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- ஊரிமையியல் மேல் முறையீட்டு மன்றம் (Sadr diwani Adalat) என்றும் அழைக்கப்பட்டன.
- இவர் ஆசியாட்டிக் சொசைட்டியின் கௌரவ தலைவர் ஆவார்
- இந்து மற்றும் முஸ்லிம் சட்டங்கள் மறு சீரமைக்கப்பட்டது
- சர் ஜோன்ஸ் மற்றும் கேல்புரோக் ஆகியோர் Digest of Hindu law வெளியிட்டனர்.
- சமஸ்கிருத வரைமுறைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இதற்கு Gentoo Law எனப்பட்டது.
- பத்வா-தீ ஆலம்கீர் என்ற நூல் மொழி பெயர்க்கப்பட்டது
- சர்லஸ் வில்கின்ஸ் என்பவர் பகவத் கீதையை மொழி பெயர்த்தார்

**நந்தகுமார் வழக்கு விசாரணை (1775)**

- நந்தகுமார் என்பவர் வங்காள பிராமணர் இவர் உயர் அரசியலில் ஈடுபாடு கொண்டவர்
- வங்காளத்தில் புதிய நவாப்பிற்கு பாதுகாவலராக இறந்த மீர்ஜாபரின் மனைவியை நியமிக்க வாரன் ஹேஸ்டிங்சு அதிக இலஞ்சம் பெற்றார் என நந்தகுமார் என்பவர் கூறியதன் அடிப்படையில் இலஞ்ச விசாரணை நடைபெற்ற போது மோகன் பிரசாத் என்பவர் நந்தகுமார் கள்ளக் கையெழுத்திட்டார் என்ற குற்றச்சாட்டை வெளியிட்டார். அதனால் நந்தகுமாரைக் கைது செய்து அவருக்குத் தூக்குத் தண்டனையை விதித்தனர். அவருக்கு இந்தியச் சட்டப்படி தண்டனை வழங்காமல் இங்கிலாந்து நாட்டுச் சட்ட அடிப்படையில் வழங்கப்பட்டது. இது ஒரு அரசியல் கொலையாகும்.

**செயித் சிங் விவகாரம்:**

- வாரணாசி, அயோத்தி நவாபின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பெயிசாபாத் உடன்படிக்கை (1775)-ன் படி அயோத்தி நவாப் வாரணாசியை ஆங்கிலேய நிறுவனத்திற்கு விட்டக்கொடுத்தார். ஆண்டுக் கப்பமான 22½ லட்சம் ரூபாயைத் தர வாரணாசி மன்னர் செயித்சிங் ஒப்புக்கொண்டு அதைச் செலுத்தி வந்தார்.
- போரினால் எற்பட்ட நிதி நெருக்கடியைச் சமாளிக்க 1778ல் ஹேஸ்டிங்சு 5 லட்ச ரூபாய் கூடுதலாகத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதனையும் மன்னர் நிறைவேற்றினார். ஆனால் அடுத்த ஆண்டும் கோரிக்கை புதுப்பிக்கப்பட்ட போது அரசர்

நிராகரித்தார். ஆதனால் அவருக்குக் கூடுதல் தொகையுடன், வாரணாசி மன்னர் இறுதியில் தப்பி ஓடிவிட்டார்.

**அயோத்தி பேகம்களின் வழக்கு (1782)**

- அயோத்தி நவாப் சுஜா-உன்-தௌலா 1775ல் இறந்தவுடன், அவரது மகன் ஆசப் - உத் - தௌலா பதவியேற்றார். நிறுவனத்திற்குக் கட்ட வேண்டிய கப்பத் தொகையை ஒழுங்காகச் செலுத்த இயலாமல் அதிகத் தொகை நிலுவையாக இருந்தது. நிலுவையைச் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபோது, தந்தையிடமிருந்து பெருவாரியான சொத்துக்களை மரபுரிமையாகப் பெற உரிமையிருந்தும் அவரது பாட்டிமார்கள் பேகம்கள் என்போர் அவருக்கு வந்து சேரவிடாமல் தடுக்கின்றனர் என்று நிறுவனத்திற்கு எடுத்துக் கூறினார். அயோத்தியிலிருந்து ஆங்கிலப் பிரதிநிதி கேட்டுக் கொண்டதன் பேரில் அயோத்தி பேகம்கள் பெரும் தொகையை மகனுக்கு அளித்தனர். மேற்கொண்டு அவர்களிடம் தொகைகள் கேட்கப்படமாட்டாது என்று கல்கத்தா அவையும். ஆங்கிலப் பிரதிநிதியும் பேகம்களுக்கு உறுதி அளித்தனர். ஆனால் நவாபிற்கு மீண்டும் கப்பத் தொகை நிலுவை ஏற்பட்டபோது, பேகம்களிடமிருந்து சொத்துக்களைப் பறிக்க, ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க முதலில் நவாப் உடன்பட்டார். பின்னர் அவர்மனம் மாறி பின்னடைந்த போது ஹேஸ்டிங்சு அவரைத் தூண்டினார். ஆங்கிலேயப் படை பேகம்களின் மாளிகையில் புகுந்து, செல்வக் குவியலைக் கைப்பற்றியது. உடமைகளைப் பறிமுதல் செய்தனர். அயோத்தி பேகம்களின் மீது ஹேஸ்டிங்சு மேற்கொண்ட நடவடிக்கை நியாயமானதல்ல என்ற அல்பிரட் லையால் என்ற ஆங்கிலேயர் கூறியுள்ளார்.
- வாரன் ஹேஸ்டிங்சு 1785ல் இங்கிலாந்து திரும்பினார். பின் அவர் மீது Impeachment தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பர்க் பிரபு, எல்லியட்பிரபு மற்றும் பாகிஸ் பிரபு ஆகியோர் அவரை விசாரித்தனர்.

**சர் ஜான் பேக்பர்சன் (1785 – 1786)**

**காரன் வாலிசு 1786 - 1793**

- இந்தியாவிற்கு சிவில் சர்வீசை அறிமுகப்படுத்தியவர்.
- காவல் துறையை உருவாக்கினார்

**மூன்றாம் மைசூர் போர் 1790 - 1792**

- காரன்வாலிசு இந்தியாவிற்குத் தலைமை ஆளுநராக வந்த வேளையில் மூன்றாவது மைசூர் போர் நடைபெற்றது
- திருவாங்கூர் ஆங்கிலேயருடன் மங்களூர் உடன்படிக்கை செய்து கொண்ட பின் நட்புறவுடன் இருந்த நிலையில், திப்பு சுல்தான் திருவாங்கூரை தாக்கியதால், காரன்வாலீஸ் தலைமையில் திப்புசுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நடந்தது.
- இதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். இதனால் ஸ்ரீரங்கப்பட்டடினம் ஒப்பந்தம் ஏற்பட்டது.

**சர் ஜான் ஷோர் 1793 – 1798**

- லாகூர் கைப்பற்றப்பட்டது.
- 1793 Permanent Settlement ஏற்பட்டது. வேல்லலெசுலிப் பிரவு (1798 – 1805)

- சர் ஜான் ஷோருக்குப் பின்னர் 1798ல் இந்தியத் தலைமை ஆளுநராக வெல்லெசுலிப் பிரபு பதவி ஏற்றார்
- நெப்போலியனின் எழுச்சி வெல்லெசுலிக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது. எனவே பிரெஞ்சுப்பயத்தைப் போக்கவும், இந்தியா அரசுகளுக்கிடையே உள்ள பேரரசாக மாற்றவும் முன்னேற்றக் கொள்கை (Forward Policy)யைக் கடைப்பிடிக்கலானார். அக்கொள்கை, போர், மேலும் போர், போரிடுதலைத் தவிர வேறு எதுவுமில்லை என்பதாகும்.

**துணைப் படைத்திட்டம்**

- துணைப் படைத்திட்டத்தில் சேரும் எந்த அரசும் தனக்கென்று சுயேட்சையான வெளியுறவுக் கொள்கையினை வைத்துக் கொள்ளுதல் கூடாது. ஆங்கிலேயப் பிரதிநிதியான நிலையர் (Resident) இசைவின்றி இந்தியாவில் உள்ள வேறு எந்த அரசுடனோ அல்லது ஐரோப்பி அரசுடனோ உடன்பாடு எதையும் மேற்கொள்ளுதல் கூடாது.
- துணைப்படைத்திட்டத்தில் சேரும் அரசின் தலைநகரில் ஆங்கிலேயரின் படை பாதுகாப்பிற்காக நிறுத்தப்படும். படைக்கு ஆகும் செலவினை, இந்திய அரசர் பணமாகவோ, தம்முடைய அரசின் ஒரு பகுதியை மானியமாகவோ அளித்து வழங்கலாம்.
- இதனால் இந்திய அரசர்கள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டினுள் சிக்கிக் கொண்டார்கள்.

**ஹைதராபாத் நிஜாமுடன் உடன்பாடு:**

- 1798ல் ஹைதராபாத் நிஜாம், மராத்தியர்களின் எதிர்ப்பிற்கு அஞ்சித் துணைப்படைத் திட்டத்தை முதலில் ஏற்றுக்கொண்டார்.1800ல் ஆங்கிலேயருக்கு பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பா ஆகிய பகுதிகளை அளித்தார்
- இதுவே கொடை மாவட்டங்கள் எனப்படும்

**அயோத்தி**

- 1801ல் அயோத்தி நவாப் துணைப்படை உடன்படிக்கை செய்து கொண்டு, ரோகில்கண்டு, கோரக்பூர், கங்கை, யமுனாவிற்கு இடைப்படு நாடாக உள்ள தோ ஆப் உள்ளிட்டஅரசின் பாதியைக் கொடுத்தார்.

**மராத்தியர்களுடன் உடன்பாடு**

1. 1799ல் தஞ்சைம ன்னர் சரபோஜி
2. 1800ல் சூரத் நவாப்
3. 1801ல் கர்நாடக நவாப் மறைந்தவுடன் அவருடைய மகன்

**நான்காம் மைசூர்ப் போர்: 1799**

- நான்காம் மைசூர் போருக்கான தலையாயா காரணம் வெல்லெசுலி பிரபுவின் பேராதிக்கக் கொள்கைகளே.
- வெல்லெசுலி பிரபு, நிசாமையும், மராத்தியர்களையும் நடுநிலை வகிக்கச் செய்தபின், 1799ல் திப்புவிகு எதிராகப் போர் தொடுத்தார்.
- 1799ல் ஆங்கிலேயர் ஸ்ரீரங்கப்பட்டினத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். திப்பு போரிட்டு மடிந்தார்.
- மைசூரை இப்போர் சீரழித்தது.

- திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களை விரட்ட காபூல், அரேபியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு தனது தூதுவர்களை அனுப்பினர்
- திப்புசுல்தான் இறந்தபிறகு மைசூர் அரசு கிருஷ்ணராஜ மன்னருக்கு அளிக்கப்பட்டது.

**உள்நாட்டுக் கொள்கை:**

- 1800ல் கல்கத்தாவில் கிழக்கிந்திய நிறுவன பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இதனால் இந்திய ஆட்சிப் பணியின் தந்தை என்றழைக்கப்பட்டார்
- தஞ்சை, கர்நாடகம் ஆகிய பகுதிகள் ஆங்கிலேயருக்கு கிடைத்ததன் அடிப்படையில் 'சென்னை ராஜதானி' உருவாக்கப்பட்டது.

**மதிப்பீடு:**

- வெல்லெசுலி காலத்தில் "இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசு" என்னும் நிலை "ஆங்கிலேயரின் இந்தியப் பேரரசு" என்று மாறியது.
- இதனால் இவர் வணிகக் குழுவின் அக்பர் என புகழப்படுகிறார்.

**முதலாம் மிண்டோ பிரபு (1807-1813)**

- ரஞ்சித் சிங்குடன் 1809ல் அமிர்தசரஸ் உடன்படிக்கை ஏற்பட்டது
- 1813 பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- மெக்காலேவின் பரிந்துரை பேரில் ஆங்கிலம் நடைமுறைப்படுத்தப்பட்டது

**பட்டயச் சட்டம் 1813**

- கல்விக்காக ரூ.1 லட்சம் ஒதுக்கப்பட்டது
- கம்பெனி பணியாளர்கள் பணியில் சேருமுன் இங்கிலாந்தில் பயிற்சி அளித்தனர்

**ஹேஸ்டிங் பிரபு (1813 – 1823)**

- 1813ல் ஹேஸ்டிங் பிரபு வங்காளத் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

**நேபாளப் போர்: (1814 – 1816)**

- ஆங்கிலேயருக்கும் கூர்க்கப்களுக்குமிடையே அடிக்கடி எல்லைத் தகராறுகள் ஏற்படலாயின
- பார்லோவினுடைய ஆட்சி காலத்தில் பட்வால், சியோராஜ் ஆகிய பகுதிகளைக் கூர்க்கர்கள் கைப்பற்றினர். எனவே 1814ல் ஹேஸ்டிங் நேபாளத்தின் மீது படையெடுத்தார். முடிவில் கூர்க்கர் தலைவரான அமர்சிங்கை ஆங்கிலேய தளபதி ஆக்டர்லோனை அல்மாரவில் தோற்கடித்தார். 1816ல் சகாலி (Sagauli) உடன்படிக்கையால் போர் முடிவுற்றது.
- கூர்க்கர்களிடமிருந்து வாணிக நிறுவனம் பெற்றக்கொண்ட நிலப்பகுதிகளில் சிம்லா, முசௌரி,அல்மோரா, நைனிடால், ராணிகட் முதலிய முக்கியமான மலைவாழ் பகுதிகள் அமைந்திருந்தன.

**பிண்டாரிப்போர் (1816 – 1818)**

- பிண்டாரிகள் என்பவர்கள் முரட்டுக் கூட்டத்தினர் ஆவார். இவர்கள் மத்திய இந்தியவரில் சூறையாடியதோடு ஆங்கிலேயரின் நிலப்பகுதிகளையும் சூறையாடவே ஆங்கிலேயரின் பெரிய படைப்பிரிவுகளைப் பிண்டாரிகளை அடக்க அனுப்பினார்.
- தென்திசைப் படைகளுக்கு சர்தாமஸ் வாஸ்லாப் தலைமை தாங்கிப் படை நடத்திச் சென்றார். ஹேஸ்டிங் மற்றொரு பிரிவிற்குத்

தலைமை தாங்கிச் சென்றார். பிண்டாரிகளின் தலைவர்களில் ஒருவரான கரீம்கான் சரணடைந்தார். மற்றொரு தலைவரான வாசில் முகமதுகொலை செய்து கொண்டார். சிட்டு என்ற மற்றொரு தலைவர் புலியால் கொல்லப்பட்டார்.

**உள்நாட்டுக் கொள்கை:**

- 1814ல் ஒவ்வொரு தாணாவிலும் முன்சிப் தலைமையில் நீதிமன்றங்களைத் திறக்கச் செய்தார். முன்சிப்கள் 64ரூபாய் வரை உள்ள வழக்குகளை விசாரித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் சாதர் அமின் என்பவரின் தலைமையில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆவர்கள் 150 ரூபாய் வரையுள்ள வழக்குகளை விசாரித்தனர்.
- 1822ல் சென்னையின் ஆளுநரன சர்தாமசு மன்ரோ என்பவரால் இரயத்வாரி முறை சென்னையில் கொண்டு வரப்பட்டது. 1822ல் நிலவரிச் சட்டம் இயற்றப்பட்டது
- கல்கத்தாவில் ஆங்கிலம் கற்பிக்கக் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது
- வங்கத்தில் சமாச்சார் பத்திரிக்கை என்னும் நாட்டு மொழிச் செய்தித்தாள் முதன்முறையாக வெளியிடப்பட்டது.

**வில்லியம் பெண்டிங் பிரபு (1828 – 1835)**

- 1831ல் பெண்டிங், மூன்றாம் கிருஸ்ணராஜரைப் பதவியினின்று நீக்கிவிட்டு, அவருக்கு ஓய்வூதியம் கொடுத்துவிட்டு. மைசூரை இணைத்துக்கொண்டார்
- 1832ல் கச்சார் பகுதி ஆங்கில ஆட்சியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கச்சார் தேயிலை பயிரிடுவதற்கேற்ற இடமாக இருந்ததால், ஆங்கிலேயரின் தேயிலை வாணிகம் பெருகியது.

கூர்க் (Coorg)

- 1834 வீரராஜாவுக்கு ஓய்வூதியம் கொடுத்துவிட்டு கூர்க் பகுதியை ஆங்கில ஆட்சியுடன் இணைத்தார்.
- 1831ல் பஞ்சாபில் நடைபெற்ற தர்பாரில் மகாராஜா இரஞ்சித்சிங்கை சந்தித்து உடன்படிக்கையைச் செய்து கொண்டார்.

**உள்நாட்டுக்கொள்கை:**

- வடமேற்கு மாநிலத்திற்கான வருவாய் கழகம் ஒன்றினை அலகாபாத்தில்ஏற்படுத்தினார்.
- 1832ல் அலகாபாத்தில் சதர் திவானி அதலாத், சகர் நிசாமத் அதாலத் ஆகிய நீதிமன்றங்களை உருவாக்கினார்.
- 1832ல் ஜீரி முறையைக் கொண்டு வந்தார்.
- நீதிமன்ற மொழியான பாரசீகத்தை ஒழித்து அந்தந்த மாநிலங்களின் மொழியை நீதிமன்ற மொழியாக்கினார்.
- துலைமை ஆளுநர் குழுவில் சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார். முதல் சட்ட உறுப்பினர் மெக்காலேபிரபு ஆவார்.
- 1835 மார்ச் 17ஆம் நாள் முதல் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் மாறியது.
- 1835ல் மருத்துவக் கல்லூரி கல்கத்தாவில் திறக்கப்பட்டது
- 1829ல் சதி ஒழிப்பு சட்டத்தை இயற்றி சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தார்.
- சதி ஒழிக்கப்பட முழு அளவில் ஆதரவு தெரிவித்தவர் வங்காள மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணகர்த்தாவான இராசாராம்

மோகன்ராய் ஆவார்

- இவர் சீலின் தலைமையில் குழு அமைத்துத் தனிச்சட்டங்களை இயற்றிக் கொள்ளை அடித்து வந்த தக்கார்களை ஒழித்தார்.
- பெண்மகவுக் கொலையைச் சட்டப்படி குற்றமாக்கினார்.
- உயிர்ப்பலி தடை செய்யப்பட்டது
- சமய மாறுதல் செய்பவர்களுக்குச் சொத்தில் உரிமை உண்டு

**ஆக்லாந்து பிரபு (1836 – 1842)**

- முதலாம் ஆப்கான் போர்
- இவர் இரஞ்சித் சிங் மற்றும் ஷா ஷீஜா ஆகியவர்களிடம் மூன்று நாடுகள் கூட்டு உடன்படிக்கை செய்து கொண்டார்

**எல்லன்பரோ பிரபு – 28.2.1842 - .6.1844**

- சர் சார்லஸ் நேப்பியரால் சிந்து மாகாணம் இணைப்பு

**டல்ஹௌசி பிரபு – 1848 - 1856**

**இரண்டாம் சீக்கியப் போர் (1848 – 49)**

- முதல் போரில் சிக்கியர்கள் தோல்வியுற்றனர். லாகூர் உடன்படிக்கை அவர்களுக்கு வெறுப்பினை ஏற்படுத்தியது. லாகூரிலிருந்த ஆங்கிலேயப் பிரதிநிதி ஹென்றி லாரன்சின் அடக்குமுறையை எதிர்த்துஇராணி ஜிண்டான் கலகம் செய்தபோது அவர் மீது அரச விரோதக் குற்றம் சுமத்தி லாகூரிலிருந்து வெளியேற்றினார்.
- மூல்தானின் ஆளுநராக இருந்த மூல்ராஜ் பதவியை விட்டு விலகினார். எனவே கான்சிங் என்பாரை மூல்தான் ஆளுநராகப் பதவியேற்க மூல்தான் சென்றபோது இரு ஆங்கிலேய அதிகாரிகள் உடன் சென்றனர்.
- மூல்தான் மக்கள் கலகம் செய்யத் தொடங்கினார். இரு அதிகாரிகளையும் கொன்றனர். மூல்ராஜைத் தலைமைப் பொறுப்பேற்க மீண்டும் அழைத்தனர். ஆங்கிலேயர்கள் மூல்ராஜை அதிகாரிகளின் கொலைக்காக குற்றம் சாட்டியபோது மூல்ராஜ் கலகத்தை தொடங்கினார். அவரை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட ஷெர்சிங்கும் மூல்ராஜீடன் சேரவே கலகம் பஞ்சாப் முழுமையும் பரவிற்கு ஆங்கிலேயரைப் பஞ்சாபை விட்டு விரட்டச் சீக்கியர்கள் உறுதிபூண்டனர். பெஷாவரைத் திரும்பப்பெறும் எண்ணத்தடுன் ஆப்கானியரும் சீக்கியரும் சேர்ந்தார். சீக்கியர்களை அடக்க டல்ஹௌசி பிரபு மேற்கொண்ட போர் நடவடிக்கையே இரண்டாம் சீக்கியப் போர் நிகழ்ச்சியாகும்.
- ராம்நகர், சிலியன் வாலா, முல்தான் ஆகிய இடங்களில் இப்போர் நடைப்பெற்றது. சீக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். மகாராஜா தலிப் சிங் பதவி நீக்கம் செய்யப்பட்டர். அவருக்கு ஓய்வூதியம் வழங்கிப் பஞ்சாபை ஆங்கிலேய ஆட்சிப் பகுதியோடு இணைத்தார். பஞ்சாபை இணைத்தது நம்பிக்கைத் துரோகம் என்று டல்ஹௌசியின் செயல்பெரிதும் விமர்சிக்கப்பட்டது.

**இரண்டாம் பர்மியப் போர் (1852)**

- டல்ஹௌசி பர்மாவில் பிற ஐரோப்பியர் ஆதிக்கம் இருப்பதை விரும்பவில்லை. ஆங்கிலேயர் மட்டும் ஆதிக்கம் செலுத்த எண்ணினார். முதல் ஆங்கிலேய பர்மியப் போரின் முடிவில் யாண்டபூ உடன்படிக்கை கையெழுத்தாகியது. அது ஆங்கிலேயருக்குப்

பல வணிக உரிமைகள் வழங்கிய போதிலும் அவர்கள் மன நிறைவு அடையாததால் பர்மியர் யாண்டபூ உடன்படிக்கையை மீறித் தமது உரிமை மறுக்கப்படுவதாக ஆங்கிலேயர் கூறினார். ஆங்கிலேயர்கள் உரிமைகளை மீறுவதாகப் பர்மியர்கள் குற்றம் சாட்டினர். 'லாம்பர்ட்' என்ற தூதுவரை டல்ஹௌசி பர்மாவுக்கு அனுப்பி உரிமைகள் மறுக்கப்படுவதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்டப் பெருந்தொகை கேட்டார். அதற்கு மறுப்பு தெரிவித்த பர்மியர்கள் மீது ஆங்கிலேயர்கள் தொடுத்த போரே இரண்டாம் பர்மியப் போராகும்

- தளபதி காட்வின் தலைமையில் சென்ற படையிடம் பர்மியர்களின் நகரமான இரங்கூன் புரோம் மற்றும் பல முக்கிய நகரங்களை ஆங்கிலேயர் பிடித்தனர். பெரு மாநிலம் 1852ல் ஆங்கிலேய இந்தியப் பேரரசோடு இணைக்கப்பட்டது.

**வாரிசு இழப்புக் கொள்கையால் அரசு இழந்த நாடுகள்:**

- 1849 ல் சதாராவை ஆங்கிலேயப் பகுதியோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

**ஜெய்ப்பூர், பகாத், உதய்பூர், சம்பல்பூர், நாகபுரி**

- ஓரிசாவில் உள்ள சம்பல்பூரில் 1848ல் அதன் அரசர் வாரிசு இன்றி இறந்ததால் அப்பகுதியையும் இணைத்துக்கொள்ளப்பட்டது.
- நாகபுரியை ஆட்சி செய்த இரகூஜி பான்சுலே 1853ல் வாரிசின்றி மரணமடைந்தார். அவரது இராணி யஷ்வந்தராவை வாரிசாக ஆங்கிலேயர் மறுத்து நாகபுரியைத் தங்கள் அரசோடு இணைத்துக் கொண்டனர்.

**ஜான்சி**

- ஜான்சியை ஆட்சி செய்த கடைசி மராத்திய மன்னர் கங்காதரராவ் 1852ல் மரணமடைந்தார். அவரது மனைவி இராணி லட்சுமிபாய் வாரிசு நியமித்த ஆங்கிலேயரிடம் அனுமதி கோரினார். அவரது கோரிக்கையை ஆங்கிலேயர் மறுத்து அப்பகுதியையும் இணைத்துக்கொண்டனர்

**அயோத்தி இணைப்பு**

- 1856ல் அயோத்தியை ஆங்கிலேயர் தம் பகுதியுடன் இணைத்துக்கொண்டனர்

**பீரார் இணைப்பு**

- ஹைதராபாத் நிசாம் பீராரை ஆங்கிலேயருக்கு அளித்தார்

**கர்நாடகம், தஞ்சாவூர் இணைப்பு**

- கர்நாடாக நவாப் வாரிசின்றி இறந்ததும் கர்நாடகப் பகுதியை இணைத்துக் கொள்ளப்பட்டது. தஞ்சாவூர் அரசர் இறந்தபோது தஞ்சாவூரும் இணைக்கப்பட்டது.

**பசைட் சீர்திருத்தம்**

- வங்காளப் படையின் தலைமையகம் கல்கத்தாவிலிருந்து மீரட்டிற்கு மாற்றப்பட்டது. படையின் தலைமையிடத்தைச் சிம்லாவுக்கு மாற்றப்பட்டது.

**இரும்புப்பாதை**

- 1853ல் பம்பாய் முதல் தாணாவுக்கும், 1856ல் ஹெளரா முதல் இராணிகஞ்ச் வரையிலும், 1856ல் சென்னை முதல் அரக்கோணம் வரையிலும் இருப்புப்பாதைகள் போடப்பட்டன.
- எனவே இவர் இருப்புப்பாதையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

**அஞ்சல் முறை**

- ஆங்கிலேய இந்தியப் பேரரசு முழுமையும் ஒரே சீரான அரையணா விலையுள்ள (Penny Post) கடித முறை கொண்டு வரப்பட்டது

**தந்திமுறை**

- 1854ல் கல்கத்தா முதல் ஆக்ராவுக்கு தந்தி அனுப்பும்முறை கொண்டு வரப்பட்டது

**பொதுப்பணித்துறை**

- ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் ஒரு பொதுப்பணித்துறை அலுவலகம் நிறுவப்பட்டது.
- கங்கை, சிந்து நதிகளில் பல கால்வாய்கள் அமைத்துப் பாசன வசதிகள் அளித்தனர். கல்கத்தா முதல் பெஷாவார் வரை நெடுஞ்சாலையால் இணைத்தனர்.

**கல்விப்பணி**

- 1854ல் 'சர் சார்லஸ் உட்' என்பவர் கல்வி குறித்த அறிக்கையை வெளியிட்டார். சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தப்பட்டது. ரூர்க்கியில் பொறியியல் கல்லூரி ஒன்றை அமைத்தனர். தொழில் நுட்பக் கல்வியின் தந்தை என்று டல்ஹௌசி போற்றப்படுகிறார்.
- தொல்பொருள் துறை உருவாக்கப்பட்டது.
- விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது

**கானிங் பிரபு**

- பல்கலைக்கழகங்கள் கல்கத்தா, சென்னை, மும்பையில் துவக்கப்பட்டது.
- கானிங் பிரபுவை 'கருணை உள்ள கானிங்" என்றனர்.
- இந்திய பெருங்கலகம் கானிங் பிரபு காலத்தில் ஏற்பட்டது.

**இந்தியப் பெருங்கலகம்**

**(படையினர் காலம்) (1857-1858)**

**கலகத்தின் இயல்பு:**

- சர்ஜான் லபரன்ஸ்: கொழுப்புத் தடவப்பட்ட துப்பாக்கி ரவைகள் வைக்கப்பட்டுள்ள காட்ரிட்ஜ்
- சீலி: தன்னலமுள்ள படைவீரர்கள் நாட்டுப் பற்றின்றி மேற்கொண்ட செய்கை
- அவுட்ராம்: இந்திய மக்களின் மன வேதனைகளை அதிகரிக்க முஸ்லீம்கள் செய்த சதித்திட்டத்தின் விளைவே
- வீரசவர்க்கார்: முதல் இந்திய விடுதலைப்போர்.

**பெருங்கலகத்திற்கான காரணங்கள்:**

**அரசியல் காரணங்கள்:**

- டல்ஹௌசிப்பிரபுவின் நாடிழப்புக் கொள்ளையினால் சில இந்திய அரசுகள் ஆங்கிலேயர் வசமாயின. இதனால் இந்திய அரசர்கள் மன அமைதி அழைத்தனர். சதாரா, நாகபுரி ஆகியன இணைத்துக் கொள்ளப்பட்டன. அயோத்தி நவாபைப் பதவி நீக்கம் செய்து அயோத்தியை இணைத்துக்கொண்டது. இசுலாமியர்களுக்கு வெறுப்பூட்டியது
- மராத்தியத் தலைவர், இரண்டாம் பாஜிராவின் மரணத்திற்குப்பின் நாநாசாகிப்புக்கு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. மராத்தியர்களுக்கு இது எரிச்சலூட்டியது.
- மானிய நிலங்களை ஆங்கில அரசு மீண்டும் அரசுடமையாக்கியது
- இதனால் பல நிலச்சுவான்தார்கள்

நிலமிழந்தனர்.

**சமயக் காரணங்கள்**

- வைதீக இந்துக்கள், இந்துச் சமயம் கிறித்தவர்களால் அழிய நேரும் உள்ளதென எண்ணினர். கிறித்துவச் சமயப் பணியாளர்கள் தங்களின் பிரச்சாரத்தால் இந்துக்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றினர்.
- ஆர். டி. மேங்கல்ஸ் (R. D. Mangles) என்ற ஆங்கிலேய பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொரு ஆங்கிலேயரும் ஒரு இந்தியரையாவது கிறித்துவ சமயத்திற்கு மாற்ற வேண்டும் என அறிகை வெளியிட்டார்.
- அங்ஙனம் சமயம் மாறியவர்களுக்கு சட்டம் நிறைவேற்றிச் சொத்துரிமை வழங்கப்பட்டது.
- புகை வண்டியில் ஒன்றாக அமர்ந்து சாதி வேறுபாடில்லாமல் பயணம் மேற்கொண்டதை வைதீக இந்துக்கள் பாவமெனக் கருதினர்
- எனவே இந்துக்கள் தங்களுடைய சமய நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன என்று நம்பினார்கள்.

**படைக் காரணங்கள்:**

- படைக்காரணமே இந்தியப் பெருங்கலகத்தின் முக்கியக் காரணமாகக் கருதப்பட்டது
- படையில் இந்தியப் படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த பதிவ சுபேதார் ஆகும்.
- ஆந்த உயர்ந்த பதவிக்கு அளிக்கப்பட்ட ஊதியம் மிகக் குறைவானதாகும்.
- 1856ம் ஆண்டு பொது படையினர் தேர்வுச் சட்டம் (The General Service Enlistment Act) இயற்றப்பட்டது
- இச்சட்டத்தின் இந்தியப் படைவீரர்கள் கடல்கடந்து போரிடவேண்டும்.
- இந்துக்களோ கடல்கடந்து செல்வது பாவமான செயல் என கருதினர்
- பிளாசிப்போரின் நூற்றாண்டு விழா 1857ம் ஆண்டு சூன் மாதம் 27ம் நாள் நடைபெற இருந்தது.

**உடனடிக் காரணம்**

- 1857ம் ஆண்டு சூன் 22ம் நாள் வரை பொறுத்திருந்து இந்தியப் படையினர் திட்டம் தீட்டியபடி செய்திருப்பார்களேயானால் அவை இந்தியருக்கு சாதகமாக இருந்திருக்கலாம்
- ஆனால் அதற்கு முன்னரே தோட்டாவை கடித்தெடுக்கும் ஆணை வழங்கப்பட்டது.
- இத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் தோட்டாக்களில் ஒருவகை கொழுப்பு எண்ணைத் தடவப்பட்டிருந்தது.
- தோட்டாக்களில் பசு, பன்றியின் கொழுப்புகள் தடவப்பட்டுள்ளது என வாந்தி பரவியது
- இதனால் இந்து, முஸ்லீம் வீரர்கள் கோபமுற்றனர்.

**பெருங்காலக நிகழ்வுகள்**

- கி.பி. 1857ம் ஆண்டு ஜனவரியில் கல்கத்தா டம்டம் நகரில் கொழுப்புத்தடவப்பட்ட தோட்டாக்கள் பற்றிய செய்தியை இந்தியச் சிப்பாய்கள் பேசலாயினர்
- கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பாரக்பூரில் மங்கள் பாண்டே என்ற சிப்பாய் கடித்தெடுக்கும் ஆணையை முதல் முதலாக மறுத்துத் தம் அதிகாரி லெப்டினட் பாக் என்பவரை 29.3.1857 அன்று சுட்டக்

கொன்றார்

- இதுவே புரட்சி தொடங்கிய முதல் இடமாகும்.
- 1857ம் ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி மீரட்டடில் பல சிப்பாய்கள் பற்கடி ஆணைக்குப் பணிய மறுத்தனர்
- டெல்லியில் பகர்தூர்ஷாவை அரியணை ஏற்றினார்கள்.
- லாகூர், டெல்லி, ராய்பெரைய்லி, கான்பூர், ஆக்ரா, ஜான்சி, மத்தி இந்தியா, ஆகிய இடங்களிலும் இக்கலகம் பரவியது.
- அயோத்தி, ரோகில்கண்டு, கங்கை யமுனைக்கு இடைப்பட்ட பகுதி, பண்டேல்கண்ட். பீகார் ஆகிய இடங்களுக்கும் இது பரவியது.

**டெல்லி ஆங்கிலேயர் வசம் மீண்டும் வருதல்:**

- டெல்லியை மீட்கப் பஞ்சாப் படையுடன் ஆங்கில தளபதி நிக்கல்சன் முற்றுகையிட்டார்.
- நிக்கல்சன் கொல்லப்பட்டார். டெல்லி ஆங்கிலேயர் வசம் ஆனது
- கடைசி முகலாய மன்னர் இரண்டாம் பகதூர்ஷா ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்
- அவரது மகன்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்
- இந்தியாவின் கடைசி முகலாய அரசரான அவர் மனம் வருந்தி இறந்தார்

**லக்னோ**

- லக்னோவில் அயோத்தியின் அரசி ஹஸ்ரத் மகால் பேகம் புரட்சியை நடத்தினார்
- லக்னோவில் ஆங்கிலப் பிரதிநிதயான சர் ஹென்றி லாரன்சின் இல்லம் முற்றுகையிடப்பட்டது. அவர் கொல்லப்பட்டார்
- தளபதி ஹெளலாக்கும், அவுட்ரமும் லக்னோவை மீட்கச் செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை
- இதற்கிடையில் சர் காலின் கேம்பெல் என்ற புதிய தளபதி இங்கிலாந்திலிருந்து, இந்தியாவுக்க வந்தார்.
- கூர்க்கர் படைப்பிரிவின் உதவியுடன் லக்னோவைக் கைப்பற்றினார்.

**கான்பூர்**

- நானா சாகிப் கான்பூரில் புரட்சியாளர்களுக்குத் தலைமை தாங்கினார்.
- இவரின் ஆலோசகர் சுசிமுல்லாகான்
- அவரது போர்த் தளபதி தாந்தியதோபே கான்பூரில் பல ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்தார்
- கான்பூர் படுகொலைக்கு நானா சாகிப் காரணமாக்கப்பட்டார்
- போரில் தோல்வியுற்ற நானாசாகிப் நேபாளத்திற்கு ஓடி விட்டார்
- தாந்தியாதோபே குவாலியர் கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கினார்
- அங்கு சர்காலின் காம்ப்பலெ் என்ற ஆங்கில தளபதியால் தோற்கடிக்கப்பட்டடர்

**மத்திய இந்தியா**

- மத்திய இந்தியா, பண்டேல்கண்ட ஆகிய பகுதிகளில் கலகக்காரர்களுக்கு ஜான்சிராணி இலட்சுமிபாய் தலைமை தாங்கினார்
- அவரைப்போரில் எதிர்த்த ஆங்கிலேய தளபதி ஹக்ரோஸ் ஆவார்
- 1858ம் ஆண்டு ஜீன் மாதம் ஆணுடை தரித்து வீரப்போர் புரிந்து போர்க்களத்தில் உயிர்

துறந்தார்.

- ரோகில் கண்டின் தலைநகரான பரேய்லியில் கான்பகதூர் கான் எனப்வர் தன்னை நவாப் நசீமாக அறிவித்தக் கொண்டார்
- பீகாரின் ஜகதீஷ்பூரியில் கனவார் சிங் கலகக் கொடியை உயர்த்தினார்
- காசியில் எழுந்த கலகம் க்ர்னல் நீல் என்பவரால் ஒடுக்கப்பட்டது.

**போர் தோல்வியுற்றதற்கான காரணங்கள்:**

- திட்டத்திற்கு முன்னதாகவே கலகம் தொடங்கிவிட்டது.
- எனவே திட்டங்களும், செயல்பாடுகளும் நிறைவேற்ற முடியாத நிலையை அடைந்து விட்டன
- தொடக்கத்தில் படைவீரர்கள் கலகத்தை மேற்கொண்டாலும் பின்னர் வெவ்வேறு காரணங்களுக்காக அரசர்களும், மக்களும் இதில் ஈடுபட்டனர்
- ஆனால் இவர்களை இணைத்து ஒரு மாபெரும் சக்தியாக செய்ய வல்ல தேசியத் தலைவர்கள் அவர்களிடையே இல்லை
- சீக்கியர்களும், ஆப்கானியர்கள், கூர்க்கர்களும் நிறைந்த படை அணிகள் அங்கிலேயர்களுக்கு ஆதரவாகவே போரிட்டன
- பாட்டியாலா மன்னர், நேபாள மன்னர், ஹைதரபாத் மன்னர் மற்றும் சிந்தியாவும் இந்திய உயர் அதிகாரிகளும் ஆங்கிலேயருக்கும் உறுதுணையாய் இருந்தனர்
- இதனால் ஒற்றுமையின்மை காணப்பட்டது.
- வெளிநாடுகளிலிருந்து படை உதவி பெறவும், கலகப் பகுதியினை உடனுக்குடன் அறிந்து அடக்கவும். ஆங்கிலேயரின் தந்தி முறை அவர்களுக்ப பேருதவியாக இருந்தது.
- இவ்வசதி இந்தியச் சிப்பாய்களுக்கு இல்லை.
- செல்வமிக்க இந்தியர்கள் கலகக் காரர்களுக்கு உதவவில்லை
- எனவே பொருளாதார அடிப்படையில் செல்வம் மிகுந்த ஆங்கியேலப் படைவீரர்களை எதிர்த்துப் போரிட இயலவில்லை
- இப்போரினால் இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது
- இப்போரின் விளைவாக இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1858ம் ஆண்டு இந்தியச் சட்டத்தை இயற்றியது
- இதுவே விக்டோரியா ராணியின் அறிக்கை ஆகும்.

**இதன் முக்கிய கூறுகள்:**

அ. இது இந்தியாவில் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது

ஆ. இந்தியா, இங்கிலாந்தின் மாட்சிமை தாங்கிய மகாராணி விக்டோரியாவின் நேராட்சியின் கீழ் வந்தது

இ. இந்தியாவின் தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதியும் ஆனார்.

- இவ்வாறு இந்தியாவின் முதல் தலைமை ஆளுநரும் அரசப் பிரதிநிதியுமாக நியமிக்கப்பட்டவர் கானிங் பிரபு ஆவார்
- அதுவரை வாணிகக் குழுவின் நிர்வாகத்தை மேற்பார்த்த கட்டுப்பாட்டுக் குழுவும் (Board of Control) இயக்குநர் அவையும் (Board of

Directors) கலைக்கப்பட்டன.

- இவற்றிற்கு பதிலாக இந்திய நிர்வாகப் பொறுப்பினை, இந்தியச் செயலாளர் (Secretary of State for India) அவர் கீழ் உள்ள 15 உறுப்பினர்களும் ஏற்றுச் செயல்பட வேண்டும்.
- இந்தியத் தலைமை ஆளுநரும், அரசப் பிரதிநதியும் என்று அழைக்கப்படல் வேண்டும் (Governor General and Viceroy) அரசப் பிரதிநிதியம், மாநில ஆளுநர்களும் இங்கிலாந்து இந்திய வருவாயிலிருந்து ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று விக்டோரியா அரசியாரின் பேரறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின் மூலம் இந்தியர்களுக்குப் பலச் சலுகைகள் அளிக்கப்பட்டன. அவையாவன:

1. தத்தெடுக்கும் உரிமை: இந்திய அரசர்கள் ஆண் வாரிசு இல்லாதிருந்தால் தங்களுக்குப் பின் அரியணை ஏற ஒரு மகனைத் தத்தெடுத்துக் கொள்ளும் உரிமை மீண்டும் அளிக்கப்பட்டது. இதனால், டல்ஹெளசி புகுத்திய வாரிசு இழப்புக் கொள்கை (Doctrine of Lapse) கைவிடப்பட்டது.
2. பேச்சுரிமையும், உடன்பாட்டு உரிமையும்: இந்திய அரசர்கள் தங்களுக்குள் எப்பொருள் பற்றியும் பேசிக் கொள்ளலாம், உடன்பாடு செய்து கொள்ளலாம் என்ற உரிமை அளிக்கப்பட்டது. அவர்கள் தங்களிடையே செய்து கொண்ட உடன்பாடுகள் பின்னர் ஆங்கில அரசால் ஒத்துக்கொள்ளப்படும் அவர்களின் உரிமைகளும், பெருமைகளும், சிறப்புகளும் பாதுகாக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. மேற்கொண்டு இந்தியப் பகுதிகளை கைப்பற்றுவது இல்லை என உறுதி அளிக்கப்பட்டது
3. இந்திய மக்களிடையே கிருத்துவ சமயக் கொள்கைகளை வற்புறுத்திப் பரவச் செய்வதில்லை
4. இந்திய நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் இந்தியாவிலுள்ள அனைத்து மக்களையும் சமமாகக் கொண்டு இயற்றப்படும்
5. சமயம், சாதி இடம் ஆகிய வேறுபாடுகளின்றி அவரவர் கல்வித் தகுதிகளுக்கு ஏற்ப இந்தியர் அனைவருக்கும் உயர்ந்த அரசுப் பதவிகள் அளிக்கப்படும். புதிய சட்டங்கள் இயற்றப்படும் முன்னர் இந்தியப் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் மனதில் கொள்ளப்பட்டு அவை இயற்றப்படும்
6. பெருங்கலகத்தில் ஆங்கிலேயரைக் கொலை செய்தோர் நீங்கலாக மற்றவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படும்.
7. மேலும் இந்தியர் நலனே ஆங்கிலேயர் ஆட்சியின் குறிக்கோள் என்றும் கூறப்பட்டது.

- இந்தியப் பெருங்கலகம், இந்திய அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இந்தியர் நலனில் ஆங்கிலேய இந்திய அரசை அக்கறை கொள்ளச் செய்தது.
- புல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டுப் பலச் சலுகைகள் வழங்கப்பட்டன
- இதன் பின்னர் இந்தியர்கள் ஆட்சிக் கலையில் அனுபவம் பெற அவர்கள் படிப்படியாக அதில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- இவற்றால் விக்டோரியா மகாராணியாரின் பேரறிக்கை இந்தியாவின் பேருரிமைப் பட்டயம் என்று (Magna Carta)

அழைக்கப்பட்டது.

- ஆனால் இவ்வறிக்கையில் கூறப்பட்டவை நடைமுறையில் பின்பற்றப்படவில்லை
- மேலும் இந்தியர்கள் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் ஐக்கியத்தினால் ஊக்கம் கொண்டு சுதந்திரத்தை விரும்பின

**கனடா சுயஉரிமை**

- விக்டோரிய பேரரசியின் காலத்தில் கனடாவிற்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்டது. எனவே இந்தியர்கள் மனதில் சுதந்திர வேட்கை உருவாயிற்று

**ஐ.சி.எஸ்**

- இந்தியர்களுக்கு உயர்பதவி அளிக்கப்படும் என்ற வாக்குறுதி வெறும் ஏட்டளவிலேயே இருந்தன.
- ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றிப்பெற்ற முதல் இந்தியர் சுரேந்திரநாத் பானர்ஜி இவரது தேர்ச்சிப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. பின்பு இவர் நீதிமன்றம் சென்று வெற்றிக்பெற்றார்
- இவர் 26-7-1876ல் கல்கத்தா இந்தியச் சங்கம் நிறுவினார்
- 18-7-1877ல் ஐ.சி.எஸ். பதவிக்கான வயது வரம்பு 21ல் 19 ஆக குறைக்கப்பட்டது
- இதன் தொடர்ச்சியாக பானர்ஜி இந்தியா முழுவதும் பயணம் செய்தார். வயது வரம்பு குறைவு எதிர்த்து லால் வழக்கறிஞர் இங்கிலாந்து சென்று வாதாடினார்.

**ஆலன் ஆக்டோவியன் ஹீயூம்**

- ஸ்காட்லாண்ட் நாட்டைச் சார்ந்த இவர் ஆங்கில அரசில் உயர் அதிகாரியாக இரந்து ஓய்வு பெற்றார்
- இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்
- இவர் கல்கத்தா பட்டதாரிகளுக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வந்தார்
- இந்திய மக்களின் உண்மையான விருப்பம் அறிவதற்காக பொறுப்பான ஒரு நிறுவனம் வேண்டும் என டப்ரின் பிரபு ஹீயூம்யை கேட்டுக்கொண்டார்
- எனவே ஹீயூம் இந்திய நேஷனல் காங்கிரஸ் என்ற அமைப்பை துவக்கினார்
- Father of Indian National Congress என்று இவர் அழைக்கப்பட்டார்.
- இவர் எழுதிய நூல் முதியவரின் நம்பிக்கை
- இவரின் வாழ்க்கையை வில்லியம் வெடர்பான் என்பவர் எழுதியுள்ளார்
- இவர் 1907 வரை காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்தார்.

**இந்திய தேசிய காங்கிரஸ் துவக்கம் - 1885**

- இக்கூட்டம் முதலில் பூனாவில் துவங்க இருந்தது. அந்நகரில் காலரா நோய் பதவி இருந்தமையால் 1885ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-31 ஆம் தேதி வரை மும்பையில் கூட்டப்பட்டது.
- 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்
- தலைவராக உமேஷ் சந்திர பானர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். செயலர் A. O. ஹியூம் கலந்து கொண்ட முக்கியமானவர்கள்:
- தாதாபாய் நௌரோஜி
- K. D. திலாங்
- ரானடே
- சுப்பிரமணிய அய்யர் (Hindu)
- பெரோஸ் ஷா

- தீன்ஷா வச்சா
- பிரோஷ்ஷா மேத்தா

**இயற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்:**

- அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருத்தல்
- இந்திய கவுன்சில் சபை நீக்கம்
- நடைமுறை பற்றி ஆய்வு செய்ய அரசு ஆணைக்குழு நியமித்தல்
- பஞ்சாப், அயோத்தி மற்றும் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் சட்டமன்றங்களை உருவாக்குதல்
- இந்திய சிவில் சர்வீஸ் தேர்வுகளை இந்தியாவில் நடத்துதல் மற்றும் வயது அதிகரித்தல்
- இதே நேரத்தில் சுரேந்திரநாத் பானர்ஜியின் இரண்டாம் கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றது.
- பிற்காலத்தில் இரு அமைப்புகளும் ஒன்றாயிற்று

**1886 இரண்டாவது காங்கிரஸ் மாநாடு**

- கல்கத்தாவில் நடைபெற்றது
- டஃபிரின் பிரபு காலத்தில் நடைபெற்றது
- 400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள்
- பொதுமக்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டனர்
- நிர்வாகத்தில் இரந்து நீதித்துறை பிரித்தல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**1887 மூன்றாவது காங்கிரஸ் மாநாடு**

- சென்னையில் நடைபெற்றது
- முறையான அமைப்பு குறித்து முடிவெடுக்கப்பட்டது.
- கன்னிமரா பிரபு சென்னையில் மாகாண கவர்னர்.
- 600க்கும் மேற்கட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

**1888 நான்காவது காங்கிரஸ் மாநாடு**

- அலகாபாத்தில் நடைபெற்றது
- அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்தது
- தர்பங்கா மகாராசாவின் உதவியுடன் நடைபெற்றது.
- ஆண்ட்ருயூல் என்பவரின் தலைமையில் நடைபெற்றது
- இங்கிலாந்தைச் சார்ந்த சார்லஸ் பிராட்லா என்பவர் கலந்து கொண்டார்
- நிலவரிக் கொள்கை குறித்து தீர்மானம் இயற்றப்பட்டது.
- நாளடைவில் காங்கிரஸ் உள்ளவர்கள் படித்தவர்களே என்றும் இவர்கள் இந்திய மக்கள் தொகையில் சிறியவர்கள் என அரசு கருதியது. எனவே காங்கிரசின் கோரிக்கையை அவர்கள் ஏற்கவில்லை
- எனவே இந்தியா மற்றும் இங்கிலாந்து பொதுக்கூட்டங்களும் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டன
- இத்ன விளைவாக பாராளுமன்ற உறுப்பினர் சார்லஸ் பஜராட்லா என்பவர் 1889ல் பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இதன் விளைவாக 1892ல் இந்திய சட்டசபைச் சட்டம் ஏற்பட்டது. இது காங்கிரசின் மறைமுக சாதனை ஆகும்

**1893 காங்கிரஸ் மாநாடு**

- லாகூரில் கூடியது
- தாதாபாய் நௌரோஜி தலைமை ஏற்றார்
- பருத்தி ஆடை மீதான கலால் வரியை நீக்குதல், நிர்வாக செலவினைக் குறைத்தல்,

கட்டாய வேலை வாங்குவதை தடை செய்தல் போன்றவை குறித்து தீர்மானம் இயற்றப்பட்டது

**1894 – சென்னை காங்கிரஸ் மாநாடு**

- இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆல்பிரட் வெப் தலைமை ஏற்றார்

**1895 – பூனா காங்கிரஸ் மாநாடு**

- விவசாயிகளின் கடன் நிலை
- புகை வண்டிகளில் மூன்றாம் வகுப்புகளுக்கு வசதி குறித்து தீர்மானம் இயற்றப்பட்டது

**1896 கல்கத்தா காங்கிரஸ் மாநாடு**

- ரகமத்துல்லா சயானி தலைமை
- மாநிலங்களுக்கு நிதி பங்கீடு, கல்வித்துறை சீர்திருத்தம்

**முஸ்லீம்களின் நிலைமை**

- இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி மறைந்து போனதற்கு ஆங்கிலேயரே காணரம் என முஸ்லீம்கள் நினைத்தனர்
- எனவே 1857ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் சுதந்திரப்போராட்டம், வாகாபி இயக்கம் ஆகியவற்றிற்கு முஸ்லீம்கள் ஆதரவினை தெரிவித்தனர்

**அலிகார் இயக்கம்**

- கிழக்கு இந்திய நிறுவனத்தி பணிபுரிந்த சர் சையது அகமது என்பவர் முஸ்லீம்களின் நலனுக்காக 1875ல் அலிகாரில் ஒரு பள்ளியை நிறுவினார். பின்னர் இதுவே அலிகார் பல்கலைக்கழகமாக மாறியது
- அவர் இசுலாமியரின் பழைய பழக்க வழக்கங்களான பலதாரமணம், எளிய விவாகரத்து பெறும்முறை, பெண்கள் முகத்தை மறைத்து கொள்ளும் வழக்கம் போன்றவற்றை கண்டித்தார்
- மேலையர் கல்வியின் அவசியத்தை எழுத்துரைத்தார். மக்கள் நெறிமிக்க வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்றார்
- இவர் Tahaibal Akhlaq என்ற உருது இதழை துவங்கினார்.
- இவ்வியக்கம் இந்திய தேசிய இயக்கத்திற்கு எதிராயிற்று. இதற்குக் காரணம் தொடக்கத்திலிருந்தே சையத் அகமதுகானும், அலிகார் இயக்கமும் ஆங்கிலேயரைச் சார்ந்து இருந்தன. இருப்பினும் இசுலாமியர்களிடையே சமுதாய, பண்பாட்டு உணர்வை ஊட்டியது இவ்வமைப்பே ஆகும்.
- சர் சையது அகமது கல்விக் காங்கிரஸ் என்ற அமைப்பினையும் காங்கிரசை எதிர்க்க ஐக்கிய இந்தியத் தேசபக்தர் சங்கம் (United India Patriotic Association) என்ற அமைப்பை 1888ல் துவக்கினார். இதில் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் உறுப்பினர்கள் ஆவார்.
- பின் இவர் முகம்மதியர் ஆங்கிலோ கீழ்த்திசையினர் பாதுகாப்புச் சங்கம் (Muhammadan Anglo Oriental Defence Assocaition) என்ற அமைப்பை 1893ல் நிறுவினர்.
- இதில் இந்துக்கள் நீங்கலாக முஸ்லீம்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் உறுப்பினர்கள் ஆவர்

**வங்கப்பிரிவினை - 1905**

- வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்ட நாள் : 20-7-1905

- வங்கப் பிரிவினை எதிர்ப்பு நாள்: 7-8-1905
- வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்த நாள்: 16-10-1905. வங்காளம், பீகார், மற்றும் ஒரிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கிய பெரிய மகாணமாக வங்காளம் இருந்தது. அப்பெரிய மாநிலத்தை நிர்வகிப்பது மிக கடினமாக இருந்தது. எனவே 16-10-1995ல் நிர்வாக சீரமைப்புக்காக வங்காளத்தை கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் என இரு வகையாக கர்சன் பிரவு பிரித்தார்
- இதன்படி கிழக்கு வங்காளத்தின் தலைநகர் டாக்கா என்றும் மேற்கு வங்காளத்தின் தலைநகர் கொல்கத்தா என்றும் அறிவிக்கப்பட்டது.
- இப்பிரிவினையை இந்திய தேசிய காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டது

**வங்காளப் பிரிவினையை எதிர்த்து போராடியவர்கள்**

1. சுரேந்திர நாத் பானர்ஜி
2. விபின் சந்திரபால்
3. அஸ்வினி குமார் தத்தா
4. ரசூல்
5. அரவிந்த கோஷ் ஆகியோர் ஆவர்

- 1911ல் இப்பிரிவினை கைவிடப்பட்டது.
- 19ஆம் நூற்றாண்டில் இந்தியா சுதந்திர போராட்ட களமாக விளங்கியது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு நிலையில் உள்ள மக்கள் தங்களின் குறுகிய சுய நலன்களை மறந்து சுதந்திர போராட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

**1906 கல்கத்தா மாநாடு**

- 1906 நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் காங்கிரஸ் சுதேசி இயக்கம், தேசிய கல்வி குறித்து தீவிரவாதிகளால் தீர்மானம் இயற்றப்பட்டது
- மிதவாதிகள் இதனை ஏற்கவில்லை
- காங்கிரஸ் வரலாற்றிலேயே முதன் முறையாகப் பூரண சுதந்திரம் பெறுவதே தனது குறிக்கோள் என தீர்மானம் இயற்றப்பட்டது

**சுதேசிய இயக்கம்**

- கர்சனின் வங்கப் பிரிவினைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் சுதேசி இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது
- இதன்படி அன்னிய நாட்டு பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டது
- இவ்வியக்கம் மீண்டும் காந்தியடிகளால் புத்துயிர் பெறப்பட்டது

**1906 சிம்லா தூதுக் குழு**

- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 35 முஸ்லீம் அறிஞர்கள் ஆகா கான் தலைமையில் ஒன்று கூடி மிண்டோ பிரபுவை சிம்லாவில் சந்தித்து பேசினர். முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி போன்றவற்றை அவர்கள் கோரிக்கையாக வைத்தனர்.

**1906 முஸ்லீம் லீக் தோற்றம்**

- 1906 டாக்காவில் ஆகாகான் நவாப் சலி முல்லாகான் அகமது கான் ஆகியவர்களால் அகில இந்திய முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்டது.
- இக்கட்சி வங்கப் பிரிவினையை ஆதரித்தது

- முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி, தனி உரிமைகளை கேட்டது
- 1907ல் ராஷ்பீகாரி கோஷ் தலைமையில் நடைபெற்ற சூரத் மாநாட்டில் மிதவாதிகளின் போக்கினை தீவிரவாதிகள் ஏற்கவில்லை. இதன் விளைவாக தீவிரவாதிகள் இம்மாநாட்டில் வெளியேறினார்கள். மக்கள் செல்வாக்கு தீவிரவாதிகளுக்கு கிடைத்தது.
- தீவிரவாதிகள், மிதவாதிகள் ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு 1916ல் லக்னோ மாநாட்டில் மீண்டும் ஒன்று சேர்ந்தனர்
- மிதவாதிகள் நாளுக்கு நாள் தங்கள் செல்வாக்கினை இழந்தார்கள்

**காங்கிரஸின் மிதவாதிகள்**

1. கோபால கிருஷ்ண கோகலே
2. சுரேந்திர நாத் பானர்ஜி
3. பெரஸ் ஷா மேத்தா

**தீவிரவாதிகள்**

1. பாலகங்காதர திலகர்
2. விபின் சந்திர போஸ்
3. லாலா லஜபதி ராய்
4. அரவிந்தோகோஷ்

- இந்திய விடுதலை போராட்டக்காலங்களில் 1906 ஆம் ஆண்டு முதல் 1910ஆம் ஆண்டு வரை தீவிரவாதிகளின் காலம் எனப்படும்
- வங்காளத்தில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர்கள்
- பி. கே. கோஷ், பி. என். தத்
- லண்டனில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர் எஸ்கே. வர்மா
- பாரிஸ்ஸில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர் எஸ். ஆர். ராமா
- தீவிரவாதியாக இருந்து பின் ஆன்மிகவாதியாக மாறியவர் அரபிந்தோ கோஷ்

**மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் - 1909**

- இது 1909ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது
- கர்சனின் வங்க பிரிவினை, தீவிரவாதிகள் போக்கு போன்றவை இதற்கு காரணம்

**சீர்திருத்தங்கள்**

- சட்டமன்றம் விரிவுப்படுத்தப்பட்டது
- இதன்படி முஸ்லீம் இன மக்களுக்கும் தனித்தொகுதி வழங்கப்பட்டது
- வகுப்புவாரி பிரதிநிதித் துவத்தை அறிமுகப்படுத்தியதால் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளப்படவில்லை
- வாக்குரிமை இன வேற்று முறையால் இருந்தது. இதனை யாரும் ஏற்கவில்லை
- மிண்டோ மார்லி சட்டத்தின்படி வைஸ்ராய் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக எஸ். பி. சன்ஹா நியமிக்கப்பட்டார்

**1911யில் கல்கத்தா மாநாடு:**

- கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய “ஜன கண மன” என்ற பாடல் 1911ல் பி. என். தார் தலைமையில் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் முதன் முறையாக பாடகப்பெற்றது

**1911 தலைநகர் கல்கத்தாவில் இருந்து தில்லிக்கு மாற்றம்:**

- 1911 ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் தேதி இந்தியாவின் தலைநகராக தில்லி அறிவிக்கப்பட்டது. 1912 ஆம் அண்டு டிசம்பர் 1 ஆம் தேதி தில்லியில் நடைபெற்ற காரனேஷன் தர்பாரில் (Coronation Durbar) ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அவரது

மனைவியான இராணி மேரியாரும் கலந்து கொண்டனர்.

- இந்தியாவிற்கு வருகை தந்த ஒரே King – emperor இவரே ஆவார்

**1913ல் முஸ்லீம் மாநாடு:**

- இம்மாநாட்டில் பேரரசுக்குள் அடங்கிய சுய ஆட்சியை முஸ்லீம்லீக் அறிவித்தது.

**இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மூன்றாம் நிலை**

- காந்தியடிகள் 1915ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞர் தொழில் மேற்கொண்டார்
- இவர் 1915ல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்
- முதல் உலகப்போரின் போது பிரிட்டிஷ் அரசு உதவி செய்ததால் காந்தியடிகளுக்கு கேசர்-இ-ஹிந்த் என்ற பட்டம் வழங்கப்பட்டது

**சபர்மதி ஆசிரமம்**

- இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த இந்திய மக்களின் வறுமையை கண்டு வருந்தினார். எனவே இந்தியர்களின் கண்ணீரை துடைக்க விரும்பினார். (wiping of every tear from every eye) எனவே 1916 ல் அகமதபாத் நகரில் சபர்மதி ஆசிரமம் அமைத்தார்
- ஆவரின் ஆயுதங்கள் அகிம்சையும், உண்மையும் ஆகும்
- காந்தியடிகளின் போராட்டம் சத்யாகிரகம் என்பது ஆகும். சத்யா என்ற சமஸ்கிருத சொல்லிற்கு உண்மை என்றும் கிரஹா என்ற சொல்லிற்கு வலியுறுத்துதல் என்றும் எனவே சத்யாகிரகம் என்ற சொல்லிற்கு உண்மையை வலியுறுத்துதல் என்று பொருள்படும் (the firmness of truth, the force of truth)

**1916 லக்னோ (இலட்சுமணபுரி) மாநாடு:**

- மிண்டோ மார்லியின் சில சீர்திருத்தங்களால் மிதவாதிகளுக்கும் அரசுக்கும் இடைவெளி அதிகமாகியது
- மேலும் சில தலைவர்கள் இறந்தனர்
- எனவே 1916ஆம் ஆண்டு இலட்சுமணபுரி மாநாடு தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே ஒற்றுமை உண்டாகியது

**லக்னோ உடன்படிக்கை - 1916**

- காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் இருவரும் இந்தியாவிற்கு டொமினிய்ன அந்தஸ்து பெற வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள்.
- எனவே இவ்விரு கட்சிகளும் லக்னோவில் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது
- இதுவே லக்னோ உடன்படிக்கை அல்லது காங்கிரஸ் முஸ்லீம் லீக் உடன்டிபக்கை எனப்படும்
- இவ்வுடன்படிக்கை 1916ம் ஆண்டு டிசம்பர் 29ம் தேதி ஏற்படுத்தப்பட்டது
- இவ்வொப்பந்தத்தின் முக்கிய அம்சம் Agreed to separate electrorates for the Muslism. மேலும் முஸ்லீம்களின் ஒரே பிரதிநிதியாக முஸ்லீம் லீக் என காங்கிரஸ் ஏற்று முஸ்லீம் லீக் கட்டிசியை அரசியல் கட்சியாக அங்கீகரித்தது

**சுய ஆட்சி கழகங்கள்:**

- 1916ல் ஏப்ரல் மாதம் மும்பையில் திலகரும் பின் 5 மாதங்கள் கழித்து செப்டம்பர் 1916ல்

தமிழகத்தில் அன்னிப்பெசன்ட் அம்மையாரும் சுய ஆட்சி கழகங்களை (Home Rule Leadques) துவக்கினார்.

- திலகரின் சுய ஆட்சிக் கழகம் மகாராஷ்டிரா மற்றும் மத்திய மாகாணத்திலும் அன்னிபெசன்ட் துவக்கிய சுய ஆட்சிக் கழகம் நாட்டின் பிற பகுதியிலும் இருந்தது. இது காங்கிரஸ் மற்றும் முஸ்லீம்களின் ஆதரவைப் பெற்றது.

**ரௌலட் சட்டம் 1919**

- இந்தியச் சட்டம் 1919ல் இந்தியர்கள் தொடர்ந்து எதிர்த்தனர். மேலும் தீவிரவாத இயக்கங்கள் வளர்ச்சியடைந்தன.
- இதனை தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு யாரையம் விசாரணை இன்றி சிறையில் அடைத்தல் போன்றவை குறித்து இரு சட்டங்களை அறிமுகப்படுத்தியது
- இதற்கு ரௌலட் சட்டம் என்று பெயர்
- இதனை இந்திய மக்கள் கருப்புச் சட்டம் என அழைத்தனர்
- முதல் சட்டம் 10 மார்ச் 1919லும் இரண்டாவது சட்டம் 21 மார்ச் 1919லும் அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவில் தீவிரவாதம் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இச்செயல் சுதந்திரதாகத்தை மேலும் தீவிரமாக்கியது
- இதனை மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தனர். முகமது அலி ஜின்னா, மதன் மோகன் மாளவியா மற்றும் மசார் - உல் - ஹா் ஆகிய 3 உறுப்பினர்கள் பதவி விலகினர்
- காந்தியடிகள் இச்சட்டத்தை எதிர்த்து சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்.
- அவர் சத்தியாகிரக சபாவினை துவக்கினார்.
- அதன்படி இந்தியா முழுவதும் 1919ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் தேதி சத்தியாகிரக நாள் (National Day) நடைபெற்றது
- இது தொடர்பாக அரசியல் கூட்டங்கள், மாநாடுகள் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை, அன்னிய பொருட்களை பகிஷ்கரித்தல், பள்ளிக்கூடங்களை தவிர்த்தல், தீவிரவாதச் செயல்கள் நாடெங்கும் நடைபெற்றது

**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

- சுதந்திர எழுச்சியின் காரணமாக பஞ்சாப்பில் உள்ள மற்றும் டாக்டர் சத்தியபால் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்
- மக்கள் இவர்களை விடுதலை செய்ய மாவட்ட நீதிபதி முன் போராட்டம் நடத்தினர், வங்கி கொளுத்தப்பட்டது
- இதன் விளைவாக அமிர்தசரஸ் நகரில் வன்முறை நடைபெற்றது. ஆங்கிலேய அலுவலர்கள் கொல்லப்பட்டனர்
- இந்நிகழ்ச்சிக்கு மறுநாள் பஞ்சாப்பியரின் பைசாகி விழா அரசியல் கூட்டம் நடைபெற்றது
- அன்று 13 ஏப்ரல் 1919 லெப்டினன்ட் - ஜெனரல் மைக்கேல் ஓ டயர் என்ற இராணுவ அதிகாரியின் தலைமையில் நூற்றுக்காணக்கான இராணுவ வீரர்களை கண்மூடித்தனமாக துப்பாக்கியால் அக்கூட்டத்திற்கு வந்த மக்களை சுட்டனர்.
- இதில் 1650 ரவுண்டு குண்டுகள் பயன்படுத்தப்பட்டது
- இந்நிகழ்ச்சியே ஜாலியன் வாலாபாக்

படுகொலை எனப்பட்டது

- காந்தியடிகள் ஆங்கிலேயர்கள் மீது கொண்டு இருந்த நம்பிக்கையை இழந்தார்
- தமக்கு அளிக்கப்பட்ட கேசர் - இ - ஹிந்த் என்ற பட்டத்தை திருப்பி அளித்தார்
- 1940ஆம் ஆண்டு உத்தம் சிங் என்பவர் இந் நிகழ்ச்சிக்கு காரணமான ஜெனரல் டயரை இங்கிலாந்தில் சுட்டுக் கொன்றார்

**கிலாபத் இயக்கம் 1919-20**

- முதல் உலகப் போர் 1914 – 1918 வரை நடைபெற்றது. இப்போருக்குப் பின் செவர்ஸ் உடன்படிக்கையின் (28.6.1919) அடிப்படையில் துருக்கி நாட்டின் மீது ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த நிபந்தனைகளை எதிர்த்து கிலாபத் இயக்கம் தோன்றியது
- துருக்கி ஒரு வலிமையான முஸ்லீம் நாடாக இருந்தமையாலும் கலிபா எனப்படும் தலைவருக்கு எதிராக ஆங்கிலேயர்கள் செயல்பட்டதாலும், இவ்வியக்கம் தோன்றியது
- இந்திவாயில் இவ்வியகத்தை அலி சகோதரர்கள் எனப்படும் முகமது அலி மற்றும் சௌகத் அலி ஆகியோரால் தொடங்கப்பட்டது
- இந்தியாவில் கிலாபத் இயக்கத்தின் போது ஜாலியன் வாலாபாக் படுகொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட ஹண்டர் கமிஷன் குறித்த அறிக்கை வெளியானது இதனையும் கிலாபத் இயக்கம் எதிர்த்தது
- 17.10.1919 கிலாபத் தினமாக கொண்டாடப்பட்டது.
- இரண்டாவது கிலாபத் மாநாடு 23.11.1919ல் டில்லியில் கூடியது
- அலகாபாத்தில் நடைபெற்ற மத்திய கிலாபாத் கமிட்டி (1920) பட்டங்களை துறத்தல், வரிகொடா இயக்கம் போன்ற நான்கு கட்ட போராட்டங்களை நடத்தியது.
- இவ்வியக்கம் காந்தியடிகளின் இயக்கத்திற்கு ஒத்துழைப்பு தந்தது
- காந்தியடிகள் இந்துக்கள் இப்போராட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றார்.
- இதனால் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது. அரசியல் மத சார்புடைமை நிலை ஏற்பட்டது
- 1919க்குப் பின் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு வெகுஜன மக்கள் இயக்கமாக (Mass Movement) மாறத் துவங்கியது

**கிளாபத் இயக்கத்தின் தோல்விக்கு முக்கிய காரணங்கள்**

- இப்போராட்டம் ஒத்துழையாமை இயக்கத்துடன் இணைந்தது
- துருக்கியை கமால்பாட்ஷா கைப்பற்றியது.

**காந்தியடிகளின் காலம்: 1919 – 1947 வரை**

- 1919 முதல் 1947 ஆம் ஆண்டு வரை காந்தியடிகள் சுதந்திர போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்
- இக்காலகட்டங்களில் வன்முறைக்கு பதிலாக சத்தியாகிரகம், அகிம்சை ஆகிய முறையை பயன்படுத்தினர். எனவே இக்காலம் இந்திய சுதந்திரப்போராட்டத்தில் காந்தியடிகளின் காலம் என பேசப்படுகிறது.

**ஒத்துழையாமை இயக்கம் - 1919 - 1922**

- காந்தியடிகளால் ஒத்துழையாமை இயக்கம்

1921 – 22ல் துவக்கப்பட்டது

- இதன் நோக்கம் இந்தியச் சட்டம் 1919ன் படி நடக்க இருக்கும் தேர்தலை புறக்கணித்தல்
- இதுவே அகில இந்திய அளவில் ஏற்படுத்தப்பட்ட முதல் போராட்டமாகும்
- இந்திய மக்களைப் பற்றி ஆங்கிலேயர் அச்சம் இதன் மூலம் ஏற்பட்டது
- சௌரி சௌரா இயக்கத்தால் இதனை தன்னிச்சையாக காந்தியடிகள் நிறுத்தி விட்டார்

**1919ஆம் ஆண்டு இலட்சுமணபுரி மாநாடு**

- 1919ல் காங்கிரஸ் மாநாட்டில் ஜாலியன் வாலாபாக் படுகொலை அறிக்கை பற்றி ஆய்வு செய்யப்பட்டது.
- இவ்வறிக்கை காந்தியடிகளுக்கு அதிர்ச்சி அளித்தது
- எனவே தேசிய போராட்டத்தை துவக்க முடிவு செய்தார்.

**1920 ஆம் ஆண்டு கல்கத்தா மாநாடு:**

- லாலா லஜபதி ராய் அவர்களின் தலைமையில் செப்டம்பர் 20ல் கல்கத்தாவில் செப்டம்பர் 20ல் கல்கத்தாவில் கூடிய சிறப்பு மாநாட்டில் வாக்கெடுப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது வரி கொடா இயக்கம். பட்டங்கள், பாராட்டு பத்திரங்களை திருப்பி அளித்தல், அரசு பணிகளை துறத்தல், நீதி மன்றம், கல்லூரிகளுக்கு செல்லாது இருத்தல் போன்றவை நடைபெற்றது.

**1920 ஆம் ஆண்டு நாகபுரி மாநாடு:**

- 1920ல் நாகபுரியில் நடைபெற்ற மாநாட்டில் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் முடிவு செய்யப்பட்டது
- 1921ல் ரெஸ்வடாவில் நடைபெற்ற மாநாட்டில் ஒரு கோடி நபர்களை உறுப்பினராக சேர்த்தது. திலகர் சுயராஜ்ஜிய நிதியாக 1 கோடி ரூபாய் திரட்டப்பட்டு கைராட்டைகள் போன்றவை வாங்கித் தரப்பட்டது
- ஒத்துழையாமை இயக்கம் படிப்படியாக வரிகொடா இயக்கம், கிசான் (விவசாயிகள்) இயக்கம், அகாலி இயக்கம் போன்ற இயக்கங்களாக பிரிந்து உச்ச கட்டத்தை அடைந்தது
- 17-11-1921ல் பம்பாய் வந்து இறங்கிய வேல்ஸ் இளவரசருக்கு கண்டனம் தெரிவித்து முழு அடைப்பு மற்றும் கருப்புக் கொடி காட்டப்பட்டது.
- பார்சி, கிருத்துவர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள் தாக்கப்பட்டனர்.

**சௌரி சௌரா சம்பவம்**

- உத்திரப்பிரதேசத்தில் உள்ள கோரக்பூர் அருகே உள்ள சௌரி சௌரா கிராமத்தில் ஒத்துடையாமை இயக்கத்தினால் ஏற்பட்ட கலவரமே சௌரி சௌரா சம்பவம் எனப்படும்
- இச்சம்பவத்தில் ஒரு கும்பல் 1922ம் ஆணடு பிப்ரவரி 5ம் தேதி வன்முறையில் காவல் நிலையத்தை தாக்கியதால் பலர் உயிர் இழக்க நேரிட்டது
- ஆங்கிலேயர்களுக்கும், அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட பார்சிகளுக்கும் இந்த ஒத்துழையாமை போராட்ட வன்முறையில் வெகுவாக பாதிக்கப்பட்டமையால் காந்தியடிகள் இப்போராட்டத்தை

தன்னிச்சையாக 12 பிப்ரவரி 1922ல் நிறுத்தி விட்டார்

**சுயராஜ்ஜிய கட்சி**

- காந்தியடிகள்
- தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற பொழுது சட்டமன்றத்தில் இந்தியர்கள் இடம்பெற வேண்டும் என்றும் அதன் மூலம் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது
- காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தை தன்னிச்சையாக நிறுத்தி விட்டமையால் சில தலைவர்கள் அதிருப்தி அடைந்தார்.
- 1922ல் கயாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வெளியேறிய முக்கிய தலைவர்கள் சுயராஜ்ஜிய கட்சியை துவக்கினார்கள்.
- இதன் தலைவர் சி. ஆா. தாஸ், செயலாளர் மோதிலால் நேரு
- சுயராஜ்ஜிய கட்சியிய்ன முதல் கூட்டம் மோதிலால் நேருவின் ஆனந்தபவன் இல்லத்தில் நடைபெற்றது. ஆனந்தபவனிற்கு சுயராஜ்ஜிய பவன் என்ற பெயரும் உண்டு
- சுட்டமன்றத்தில் பெருவாரியான இடங்களை பெற்று வல்லபபாய் பட்டேலை சட்டமன்ற தலைவர் ஆக்கினார்கள்.
- இருப்பினும் சுயராஜ்ஜிய கட்சி தனது குறிக்கோளை அடைய முடியவில்லை

**சுயராஜ்ஜிய கட்சியை ஆதரித்தவர்கள்:**

1. சித்தரஞ்சன் தாஸ் (சி. ஆர். தாஸ்)
2. மோதிலால் நேது 3. என். சி. கேல்கர் 4. அஜ்மல்கான் 5. விட்டல்பாய் பட்டேல்

**சுயராஜ்ஜிய கட்சியை ஆதரித்தவர்கள்:**

1. எம். ஏ. அன்சாரி
2. ராசகோபலாச்சாரி
3. ரெங்கசாமி அய்யங்காரா்

**சுயராஜ்ஜிய கட்சி வென்ற மாகாணங்கள்**

1. மத்திய மாகாணம், 2. பீகார் 3. வங்காளம் 4. பம்பாய் 5. ஐக்கிய மாகாணம்

**சுயராஜ்ஜிய கட்சி தோல்வியடைந்த மாகாணங்கள்**

1. பஞ்சாப் 2. சென்னை 3. ஓரிசா

**1924 பெல்ஹாம் காங்கிரஸ் மாநாடு**

- 1924 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் காந்தியடிகள் ஆவார். அவர் தலைமை ஏற்று நடத்திய ஒரே காங்கிரஸ் மாநாடு இதுவே ஆகும்.
- இம் மாநாட்டில் காந்தி – தாஸ் - நேரு ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது
- வைக்கம் சத்தியாகிரகம், அலிகார் இயக்கம் போன்ற இயக்கங்கள் வரவேற்கப்பட்டது. காங்கிரஸ் விதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டது.

**முடிமன் குழு**

- சர் அலெக்சாண்டர் தலைமையில் ஒரு குழு 1919 ஆம் ஆண்டைய இந்தியச் சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராய இங்கிலாந்து அரசாங்கம் அனுப்பியது

**சைமன் குழு - 1927**

- 1927ஆம் ஆண்டு இர்வின் பிரபு காந்தியடிகள். சீனிவாச அய்யங்கார் மற்றும் அன்சாரி ஆகியோரை டில்லியில் சந்தித்து சைமன் குழு வருகை பற்றி தெரிவித்தார்
- இக்குழு 3-2-1928ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தது.
- ஐனெயைெ Statutory Commission

எனப்படும் இக்கமிஷனுக்கு சர்.ஜான் சைமன் தலைமை ஏற்றதால் சைமன் கமிஷன் எனப்பட்டது.

- இக்குழுவில் மொத்தம் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர்
- இக்கமிஷன் நியமிக்கப்பட்ட போது Conservative கட்சி ஆட்சி செய்தது
- இக்குழு இந்தியர்களின் செயல்முறையைக் கண்டு இந்தியாவிற்கு பொறுப்பாட்சி அளித்தல், இந்திய பிரிட்டிஷ் உறவுகளை வளர்த்தல் போன்ற காரணங்களுக்காக நியமிக்கப்பட்டது

**1927 சென்னை காங்கிரஸ் மாநாடு**

- இம்மாநாட்டில் சைமன் குழுவை புறக்கணிப்பது மற்றும் முழுமையான சுதந்திரம் கேட்டல் என்பது குறித்து தீர்மானங்கள் இயற்றப்பட்டன
- சைமன் குழு முதன்முதலில் பம்பாயில் இறங்கிய நாளன்று நகர் எங்கும் கடையடைப்பு நடந்தது
- சைமனே திரும்பிப்போ என்ற முழக்கம் முழங்கப்பட்டது.
- இக்குழுவில் இந்தியர்கள் ஒருவரும் இல்லை என்பதாலும் இந்தியாவின் சுதந்திரம் குறித்து இந்தியர்களே முடிவு செய்ய வேண்டும் என்பதாலும் இக்குழு புறக்கணிக்கப்பட்டது.
- சைமன் குழு வருகையை இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சி மற்றும் இயக்கங்களும் எதிர்த்தன
- நீதிக்கட்சி எனப்படும் ஜஸ்டிஸ் பார்ட்டி மற்றும் பஞ்சாப் யூனியனிஸ்ட் ஆகிய இரண்டும் எதிர்க்கவில்லை
- சைமன் குழு வருகையின் போது அதனை எதிர்த்து லாகூரில் லாலாலஜபதிராய் 30-10-1928ல் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டபோது காவல்துறையினரால் தாக்கப்பட்டார்.

**சைமன் குழுவின் முக்கிய பரிந்துரைகள்:**

1. இரட்டையாட்சி நீக்கப்பட்டு மாநில சுயாட்சி உருவாக்குதல்
2. அமைச்சர்களுக்கு மேலும் அதிகாரம் வழங்குதல்
3. நியமன உறுப்பினர்களை தடை செய்தல்
4. உயர்நீதி மன்றங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருத்தல்
5. மத்தியில் கூட்டாட்சி அமைத்தல்
6. பர்மாவை தனி நாடாக பிரித்தல்
7. முஸ்லீம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்குதல்
8. வடமேற்கு எல்லைபுறத்தில் சட்டமன்றம் அமைத்தல்

**நேரு அறிக்கை - 1927**

- சைமன் குழு புறக்கணித்தலை தொடர்ந்து இந்திய மக்களுக்காக ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்த்தின் அடிப்படையில் 1928ஆம் ஆண்டு மே மாதம் பம்பாயில் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் மோதிலால் நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.
- இக்குழுவின் அறிக்கைகளை ஜின்னா எதிர்த்தார்.

**நேரு அறிக்கை**

- இவ்வறிக்கை டி.பி. சப்ரூ உதவியுடன் உருவாக்கப்பட்டது

1. உடனடி டொமினியன் அந்தஸ்து
2. பூரண சுயராஜ்ஜியம் இறுதி இலட்சியம்

3. மத்தியில் கூட்டாட்சி அமைத்தல்
4. அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தல்
5. இந்தியாவிலுள்ள உச்சநீதிமன்றமே இறுதி மேல்முறையீட்டு மன்றமாக இருக்கவேண்டும்
6. சிந்து மாநிலம் தனி மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும்
7. மத்திய சட்ட மன்றம் இரு அவை கொண்டதாக இருக்க வேண்டும்
8. இந்தியாவிற்கு ஒரு பாதுகாப்பு குழு அமைத்தல் வேண்டும்
9. வாக்குரிமை

**நேரு அறிக்கை ஏற்றவர்கள்:**

1. மௌலானா அப்துல்கலாம் ஆஸாத்
2. டாக்டர். அன்சாரி

**நேரு அறிக்கை எதிர்த்தவர்கள்:**

1. சர் முகமது ஷபி
2. முகமது அலி ஜின்னா

**ஜின்னாவின் 14 அம்ச திட்டம்:**

1. கூட்டாட்சி அளித்தல்
2. மாநிலங்களுக்கு அதிகாரம் அளித்தல்
3. முஸ்லீம்களுக்கு அரசுப்பணியில் போதிய இடம் கொடுக்க வேண்டும்
4. சட்டமன்றம், உள்ளாட்சி மன்றங்களில் போதிய அளவில் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும்.
5. மத்திய சட்டமன்றத்தில் மூன்றில் ஒரு பகுதி இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்
6. மாநிலங்களில் எல்லை பிரிக்கும் போது பஞ்சாப், வடமேற்கு எல்லைபுற மாகாணம் ஆகியவற்றில் உள்ள எண்ணிக்கை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்
7. பலுஸிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றில் வேறுபாடு காட்டக் கூடாது
8. மத்திய மாநில அமைச்சரவையில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம்களுக்கு வழங்க வெண்டும். சிந்து மாநிலம் பிரிக்க வேண்டும்.
9. டெல்லியில் நடைபெற்ற முஸ்லீம்கள் (1923) மாநாட்டில் நேருவின் அறிக்கை முஸ்லீம்களின் இறப்பு ஆணை எனப்பட்டது
10. 1929ல் முஸ்லீம் லீக்கில் சில தலைவர்கள் பிரிந்து தேசிய லீக் முக்கிய கட்சிகள் தொடங்கின.

**லாகூர் காங்கிரஸ் மாநாடு:**

- இம்மாநாடு இராவி நதிக்கரையில் உள்ள லாகூரில் 31-12-1929 அன்று நடைபெற்றது
- பூரண சுயராஜ்ஜியம் காங்கிரசின் இலட்சியம் என அறிவிக்கப்பட்டது. 26-1-1930 நாளினை முதல் சுதந்திர தினமாக கொண்டாட வேண்டும் எனப்பட்டது. இம்மாநாட்டில் மூவண்ண கொடியை ஜவஹர்லால் நேரு ஏற்றி வைத்தார்.
- 1930 ஆம் ஆண்டு ஜனவரி 24ம் நாள் காங்கிரஸ் கட்சியின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. …… ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
- காந்தியடிகள் பிரிட்டிஷ் ஆட்சியை A Crime Against the man and the God என்று கூறினார். மேலும் காந்தியடிகள் தலைமையில் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.
- சட்ட மறுப்பு இயக்கம்: சட்டமறுப்பு இயக்கத்தின் முக்கிய நோக்கம் முழுச் சுதந்திரம் பெறுவதாகும். அதாவது சட்டத்தை

மீறியாவது அச்சுதந்திரத்தை அடைய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

- மதுவிலக்கு, இந்திய ரூபாயின் மதிப்பு உயர்த்துதல், அரசின் செலவு மற்றும் அரசு ஊழியர்களுக்கான சம்பளம் குறைப்பு, உப்புவரி நீக்கம். நிலவரி குறைப்பு, படைச் செலவு குறைப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக் சீட்டு போன்றவை குறித்த 11 அம்ச கோரிக்கையை காந்தியடிகள் 31-1-1930ல் இர்வின் பிரபுவிற்கு தெரிவித்தார்.
- “ரொட்டி வேண்டுமென்று முழந்தாளிட்டு கேட்டதற்கு கல்லே கிடைத்தது” என காந்தியடிகள் குறிப்பிட்டு உப்புச் சத்தியாகிரகத்தை துவக்கினார்.
- இதனை Storm in a Tea cup என இர்வீன் கருதினார்.

**காந்தியடிகளின் உப்பு சத்தியாகிரகம் 12.3.1930 – 6.4.1930**

- காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து 12-3-1930 அன்று 78 தொண்டர்களுடன் புறப்பட்டு 240 மைல் அல்லது 385 கி.மீ. தொலைவில் குஜராத்தில் உள்ள தண்டி எனற இடத்தை 24 நாட்கள் நடை பயணத்திற்கு பின் அடைந்து 6-4-1930 அன்று உப்பு எடுத்தார். இதன் மூலம் உப்பு விதிகள் போன்றவை மீறப்பட்டது
- காந்தியடிகள் ஏரவடா சிறையில் அடைக்கப்பட்டார். நேரு நைனிடாலில் சிறைவைக்கப்பட்டார். இதன் பிறகு தொடர்ச்சியாக நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தின் போது காந்தியடிகளும் பிற காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.
- காந்தியடிகள் கைதுக்கு பிறகு பம்பாயின் தேசிய முஸ்லீம் குடும்பத்தைச் சார்ந்த அபாஸ் தயாப்ஜி தலைமை பொறுப்பை ஏற்றார். அவரது கைதுக்குப்பின் சரோஜினி நாயுடு தலைமைப் பொறுப்பை ஏற்றார்
- சரோஜினி நாயுடு மற்றும் மாணிக்லால் காந்தி தலைமையில் சூரத் மாநிலத்தில் உள்ள தார்சனா உப்பு கிடங்கை சூறையாடும் போராட்டம் நடைபெற்றது.
- இதனை வெப் மில்லர் என்ற ஆங்கிலேயே பத்திரிக்கையாளர் கண்ணுற்றார்.
- தமிழகத்தில் சி. ராசகோபாலாச்சாரி தலைமையில் திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை உப்பு சத்யாகிரகம் நடைபெற்றது.
- சென்னையில் மெரினா கடற்கரையில் பிரகாசமும் நாகேஸ்வரராவும் உப்புக் காய்ச்சினர்
- கர்னாடகத்தில் சானிக்கட்டா என்ற இடத்தில் உப்பு மண்டி தாக்கப்பட்டது
- கேரளாவில் கேளப்பன் என்பவர் கள்ளிக்கோட்டையில் இருந்து சத்தியாகிரகம் துவக்கினார்.
- வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் எல்லைக் காந்தி எனப்படும் கான் அப்துல் கபர் கான் தலைமையில் அவரின் சிவப்புச் சட்டை இயக்கமான Khudaikhidmatgars சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டார்கள்.

**முதல் வட்ட மேசை மாநாடு**

- இங்கிலாந்தில் தொழிற்கட்சி வெற்ற பெற்றது. இக்கட்சி 1929ல் இந்தியாவின் சுய ஆட்சி

கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து இருந்தது.

- சைமன் கமிஷன் அடிப்படையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது மற்றும் அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்து இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொன்டு ஒரு மாநாட்டு கூட்டத்தினை அறிவித்தார்.
- முதல் வட்டமேசை மாநாடு இர்வின் பிரபு காலத்தில் அறிவிக்கப்பட்டது.
- இது அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்டதால் தீபாவளி அறிவிப்பு எனப்படும்.
- மாநாடு லண்டன் மாநகரில் 16-11-1930 முதல் 19-01-1931 வரை நடைபெற்றது
- காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்தமையால் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.
- சட்ட மறுப்பு இயக்கத்தின் காரணமாக காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்தனர்
- இந்திய அரசியலமைப்பு உருவாக்கும் சில முடிவுகள் எடுக்கப்பட்டாலும் காங்கிரஸ் தலைவர்கள் இல்லாத காரணத்தால் இம்மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.
- இம்மாநாட்டிற்கு இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டோனால்டு தலைமை வகித்தார்
- இதில் பிரிட்டிஷ் இந்திய பிரதிநிதிகளாக கலந்து கொண்டவர்கள் 57 பேர். 16 பேர்கள் இந்திய சுதேசி அரசுகளில் இருந்து கலந்துகொண்டனர். இங்கிலாந்து அரசியல் கட்சி சார்பில் கலந்து கொண்டவர்கள் 13 பேர்.

**கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள்:**

தாழ்த்தப்பட்டவர்கள் சார்பாக: பீமாராவ் அம்பேத்கார்

முஸ்லீம் லீக்: ஆசர்கான், முகமது ஷா, பசுல்ஹக்ஈ ஆலி ஜின்னா, கர்முகமது

இந்தியன் லிபரல்: தேஜ் பகர்சப்ரு சீனிவாச சாஸ்திரி

பெடரேஷன்: C. Y. சிந்தாமணி

இந்தியன் ஸ்டோக்கர்: மீர்சா இஸ்மாயில், சர் அக்பர் ஹைதரி, பீகானி மகாராஜ்

பிறதலைவர்கள்: சர். எம். ஆர். ஜெயகர்

**டெல்லி ஒப்பந்தம் (அல்லது) காந்தி - இர்வின் ஒப்பந்தம்**

- இவ்வொப்பந்தம் 5-3-1931ல் ஏற்பட்டது. மிதவாதிகளான வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, ஜெயகர், சாப்ரு ஆகியோரின் முயற்சியின் பேரில் காந்தியடிகளுக்கும் இர்வின் பிரபுவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.
- இவ்வொப்பந்தத்தின்படி சிறப்பு சட்டங்கள் விலக்கிக் கொள்ள அரசு இசைந்தது. வன்முறையில் ஈடுபட்டவர்களை தவிர அனைத்து அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.
- குறிப்பிட்ட இடங்களில் மறியல் செய்ய அனுமதிக்கப்பட்டது.
- உப்பு காய்ச்சிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது
- போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட்டனர்
- அடுத்த வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள இசைவு தெரிவிக்கப்பட்டது
- இவ்வொப்பந்தம் தூக்குத்தண்டனை

விதிக்கப்பட்ட பகத்சிங், இராஜகுரு ஆகியோரின் விடுதலைக்கு வழிவகை செய்யவில்லை.

**கராச்சி காங்கிரஸ் மாநாடு**

- இம்மாநாடு சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் 29-3-1931ல் கூடியது
- பகத்சிங், சுக்தேவ் மற்றும் இராசகுரு ஆகியோர் தூக்கிலிடப்பட்டு 6 நாட்கள் கழித்து கூடியது.
- இம்மாநாடு காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மேலொப்பம் செய்தது
- இம்மாநாட்டில் அடிப்படை உரிமைகள் மற்றும் தேசிய பொருளாதார கொள்கைகள் குறித்து தீர்மானங்கள் இயற்றப்பட்டது

**இரண்டாம் வட்டமேசை மாநாடு**

- 1931ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7ம் தேதி தொடங்கி தொடர்ச்சியாக 3 மாதங்கள் இம்மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் காங்கிரஸ் சார்பில் காந்தியடிகள் கலந்து கொண்டார். அவருடன் மதன்மோகன் மாளவியாவும் உடன் சென்றார்.
- S. S. ராசபுதனா என்ற கப்பலில் காந்தியடிகள் இலண்டன் சென்றார்.

**இம்மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியமானவர்கள்:**

1. காங்கிரஸ் சார்பில் - டி. டி. கிருஷ்ணமாச்சாரி
2. தாழ்த்தப்பட்டவர்கள் சார்பில் - அம்பேத்கார், இரட்டைமலை ஆர். சீனிவாசன்
3. கிருத்தவர்கள் சார்பில் - ஏ. டி. பன்னீர் செல்வம்
4. ஆங்கிலோ இந்தியர்கள் சார்பில்-சர். கிளாடி
5. முகமதியர்கள் சார்பில் - ஆசார்கான் இக்பால்
6. சீக்கியர்கள் சார்பில் - தாராசிங்
7. இந்தியப் பெண்களின் சார்பாக – சரோஜினி நாயுடு

- இம்மாநாட்டில் இந்தியாவின் எதிர்கால அமைச்ச சட்டம், சிறுபான்மையோர் நலன் போன்றவை விவாதிக்கப்பட்டது
- காந்தியடிகள் கோரிக்கை நிறைவேற்றவில்லை.
- இம்மாநாடு தோல்வியில் முடிவடைந்தது
- இந்நிலையில் இங்கிலாந்தில் தேசிய ஆட்சி ஏற்பட்டது. இதில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் அதிக பலம் பெற்றனர்
- காந்தியடிகள் 28 டிசம்பர் 1931ல் இந்தியா (மும்பை) திரும்பினார். அச்சமயம் இந்தியாவில் அரசியல் சூழ்நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது. காந்தியடிகளை வரவேற்கச் சென்ற நேரு கைது செய்யப்பட்டார். 4-1-1932ல் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார்.
- அம்பேத்கார் 5-11-1931ல் இங்கிலாந்து அரசரை சந்தித்து தாழத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை விவரித்தார்
- பின் 14-1-1931ல் இலண்டனில் இருந்து புறப்பட்டு 29-1-1932ல் மும்பை வந்து சேர்ந்தார்.
- எனவே வகுப்புவாத தீர்வினை ராம்சே மெக்டோனல்டு வெளியிட்டார்.
- காந்தியடிகளின் எளிமையை கண்டு சர்ச்சில் அவரை அரைநிர்வாண பககிரி என்று கூறினார்.

**சட்டமறுப்பு இயக்கம்**

- காந்தியடிகள் இந்தியா திரும்பிய போது அரசியல் நிலைமை முற்றிலும் மாறுபாடு கொண்டு இருந்தது
- சூரத் மாவட்டத்தில் நிலவரி வசூல் செய்வதில் ஏற்பட்ட பிரச்சினைகளை விசாரணை செய்ய புலாபாய் தேசாய் மற்றும் வல்லபபாய் படேல் சென்றனர்
- வரிகொடா இயக்கம் காரணமாக ஜவஹர்லால் நேரு, புருஷோத்தம் தாஸ் தாண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
- காங்கிரசின் நடவடிக்கையினை ஒடுக்க வெல்லிங்டன் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டார்
- எனவே 4-1-1932ல் காந்தியடிகள் சட்ட மறுப்பு பேராட்டத்தை அறிவித்தார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டார்
- ஆங்கிலேயர்களின் மிருகத் தனமான செயல்களைக் கண்டு பல புரட்சி இயக்கங்கள் தோன்றியது.

**வகுப்புவாத தீர்வு**

- வட்டமேசை மாநாடுகளில் இடஒதுக்கீடு பிரச்சினைகளுக்கு தீர்பு காணாத நிலை ஏற்பட்டதால் ராம்சே டொனால்டு புகழ்பெற்ற வகுப்பு தீர்வினை 1932ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ம் நாள் கொண்டு வந்தார்.
- இதன்படி முஸ்லீம்கள், சீக்கியர், ஆங்கிலோ இந்தியர், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு சட்டமன்றத்தில் தனித் தொகுதி முறையைக் கொண்டு வரப்பட்டது
- இத் தீர்வு கொண்டு வரப்பட்ட பொழுது காந்தியடிகள் பூனாவில் உள்ள ஏர்வாடா சிறையில் இருந்தார்
- தாழ்த்தப்பட்ட மக்கள் ஜாதி இந்துகளிடமிருந்து பிரிக்கும் முயற்சியே இது என காந்தியடிகள் 20-9-1932 முதல் 21 நாட்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்
- காந்தியடிகள் உடல் நிலை மேசாமடைந்தது
- தொடர்ந்து காந்தியடிகள், அம்பேத்கார் இந்து மதத் தலைவர்களுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது
- இதுவே பூனா ஒப்பந்தம் என்பார்கள். இதனை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொண்டது
- இவ்வொப்பந்தம் ஏற்பட மதன் மோகன் மாளவியா அம்பேத்கார் மற்றும் எம்.வி. ராஜா ஆகியோர் காரணமாவார்கள். இவ்வொப்பந்தம் சட்டமறுப்பு போராட்டத்தை திசை மாற்றியது
- காந்தியடிகள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்

**பூனா ஒப்பந்தம்**

- பூனா ஒப்பந்தம் 24-9-1932ம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது. காங்கிரஸ் சார்பில் காந்தி, ராஜாஜி, பட்டேல் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் சார்பில் என். சிவராஜ், கொய்க்வாட் மற்றும் அம்பேத்கார் கையெழுத்து இட்டனர்
- பூனா ஒப்பந்தத்தின்படி தாழ்த்தப்பட்டோருக்கு மத்திய சட்டமன்றத்தின் இருக்கைகள் உயர்த்தப்பட்டது
- காந்தியடிகள் 7-11-1933 முதல் 20-7-1934 வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சுற்றுப்பயணம் மேற்கொண்டார்

**மூன்றாம் வட்ட மேசை மாநாடு**

- 1932ம் ஆண்டு நவம்பர் 17ம் தேதி கூடியது. இம்மாநாட்டில் தொழிற்கட்சி மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. 46 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வாக்குரிமை, நிதி, கூட்டாட்சி, சமஸ்தானங்கள் குறித்து ஏற்கனவே நடைபெற்ற குழுக்களின் அறிக்கைகளை ஆய்வு செய்தது. பெண்களுக்கு வாக்குரிமை அளித்தல், மாநில சட்டமன்றங்களிலிருந்து கூட்டாட்சி சட்டமன்ற மேலவைக்கு பிரதிநிதிகளை தேர்வு செய்வது குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டது. இம்மாநாடு எவருக்கும் மனநிறைவு தராத வகையில் 1932ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் தேதி முடிவடைந்தது

**மூன்று வட்ட மேசை மாநாடுகளில் பங்கு கொண்டவர்கள்**

1. பி. ஆர். அம்பேத்கார்
2. ஜெயகர்

- இம்மூன்று மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை அடிப்படையாக கொண்டு 1933ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது

**வெள்ளை அறிக்கை**

- அரசின் கொள்கைக் குறிப்பிற்கு வெள்ளை அறிக்கை என்று பெயர். இவ்வெள்ளை அறிக்கையில் இந்திய அரசாங்கம் பற்றிய திட்டம் இடம் பெற்றது. இந்தியாவில் இது குறித்து எதிர்ப்புகள் இருந்தன. வெள்ளை அறிக்கையில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஆய்வு செய்வதற்காக இங்கிலாந்து பாராளுமன்றத்தின் கூட்டுக்குழு நியமிக்கப்பட்டது.

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம்**

- இந்திய தலைவர்கள் சிற்றரசு பிரதிநிதிகள் இந்திய அமைச்சர் ஹோர் மற்றும் பலர் தெரிவித்த பரிந்துரையின் பேரில் ஒரு சட்ட முன் வரைவு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இச்சட்ட முன்வரைவு இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. 2-8-1935ம் ஆண்டு மன்னரின் ஒப்புதல் பெற்று சட்டம் ஆகியது. இதுவே 1935 ஆம் ஆண்டு இந்திய இரசாங்க சட்டம் ஆகும்
- இதனை அடிமை சாசனம் என்று சிலர் கூறுவர்

**இதன் முக்கிய அம்சங்கள்:**

- ஓரிசா, சிந்து மாநிலம் உருவாகுதல்
- மாகாணங்களில் தன்னாட்சி
- மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை நீக்கம்
- மத்தியில் கூட்டாட்சி அரசு
- கூட்டாட்சி ரிசர்வ் வங்கி அமைத்தல்
- மத்திய மாகாணங்களை பிரச்சினைகளை தீர்க்க கூட்டாட்சி நீதிமன்றம் அமைத்தல்
- பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தல்
- வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்ய தேர்வுக்குழு அமைத்தல். மொத்தமுள்ள 11 மாநிலங்களில் ஆளும் மாநிலத்தில் மேலவை ஏற்படுத்துதல்
- இச்சட்டத்தின்படி 1937ல் தேர்தல்கள் 11 மாநிலத்தில் நடத்தப்பட்டது. இதில்

காங்கிரஸ் 7 மாநிலங்களில் ஆட்சி நடத்தின

**காங்கிரஸ் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த மாநிலங்கள்**

1. உத்திரப்பிரதேசம்
2. மத்திய பிரரேசம்
3. வடமேற்கு எல்லைப்புற மாநிலங்கள்
4. பீகார்
5. ஒரிசா
6. பம்பாய்
7. சென்னை

- 1937ல் இந்தியாவில் இருந்து பர்மா பிரிக்கப் பட்டது.
- முஸ்லீம்கள் அதிகம் உள்ள இடங்களில் கூட முஸ்லீம் லீக்க தோல்வி அடைந்தது. கூட்டணி அமைச்சரவை என்ற போது "The Muslims can expect neither justice nor fair play under Congress Government" என கூறினார்.

**இரண்டாம் உலகப்போர் துவக்கம் 1939**

- இரண்டாம் உலகப்போர் 1.9.1939 ஆம் ஆண்டு துவங்கி 2.9.1945ல் முடிவுற்றது. காங்கிரஸ் தலைவர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களையோ கலந்து ஆலோசிக்காமல் இந்தியர்களை இங்கிலாந்து இப்போரில் பயன்படுத்தியது

**1939 வார்தா காங்கிரசின் செயற்குழு:**

- இரண்டாம் உலகப்போர் தோன்றியவுடன் 8.9.1939ல் வார்த்தாவில் காங்கிரஸ் செயற்குழு கூடியது. அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. நாசிசம் மற்றும் பாசிசக் கொள்கைளை கண்டித்தது
2. இந்திய மக்கள் போர் மற்றும் அமைதியில் கலந்து கொள்வரை தீர்மானிக்க எந்த வெளிநாட்டிற்கும் உரிமை இல்லை என்றும், இதனை இந்திய மக்களே தீர்மானிப்பர்.
3. போரின் காரணத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக தெரிவிக்க வேண்டும்
4. பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்க வேண்டும். சுதந்திர இந்தியா தனது இராணுவ உதவிகளை பரஸ்பரத்தின் பேரில் அளிக்கும்.
5. போரின் நோக்த்தினை உடன் அறிவிக்கவேண்டும். எனவே 8-8-1940ம் ஆண்டு லின்லித்தோ பிரபு அறிக்கை வெளியிடப்பட்டது

- இதுவே ஆகஸ்ட் அறிக்கையில் போர் ஆலோசனைக் குழு அமைத்தல் சிறுபான்மையினர் நலம், இந்தியாவிற்கு டொமினியின் அந்தஸ்து, முஸ்லீம்களுக்கு தனி அரசியலமைப்பு போன்றவை குறித்து கருத்துக்கள் இருந்தது.
- இவ்வறிக்கை ஜின்னாவிற்கு ஆதரவாக இருப்பதாக காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை
- இதன் தொடர்ச்சியாக தனி நபர் சத்தியாகிரகத்தை காந்தியடிகள் துவக்கினார்

**பாகிஸ்தான்**

- 1940 ஆம் ஆண்டு முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் தனி நாடாக வேண்டும் என்றார். இதற்கு பாகிஸ்தான் என பெயரிடப்பட்டது.
- இத்தீர்மானம் லாகூர் மாநாட்டில் 23 மார்ச் 1940ல் நிறைவேற்றப்பட்டது. பிற்காலத்தில் இதனையே பாகிஸ்தான் நாள் என

கொண்டாடப்படுகிறது.

**தனிநபர் சத்தியாகிரகம் - 1940**

- இது 17-10-1940 அன்று காந்தியடிகளால் துவக்கப்பட்டது
- முதன் முதலில் இதனை Anti-war Slogan மூலம் தொடங்கி வைத்தவர் ஆச்சாரியா வினோபா பாவே. இரண்டாவது சத்தியாகிரகி ஜவஹர்லால் நேது, இப்போராட்டம் 17-12-1940 முடிக்கப்பட்டது.
- இத் தீர்மானம் லாகூர் மாநாட்டில் 23 மார்ச் 1940ல் நிறைவேற்றப்பட்டது. பிற்காலத்தில் இதனையே பாகிஸ்தான் நாள் என கொண்டாப்படுகிறது
- உலகப்போரில் ஜப்பான் தொடர்ந்து வெற்றிப்பெற்று வரும் நிலையில் நேச நாடுகள் இந்தியா குறித்து வின்ஸ்டன் சர்சிலை வற்புறுத்தின. எனவே வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் கேபினட் தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பினார்

**கிரிப்ஸ் தூதுக் குழு - 1942**

- சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், பிரிவிசில் பிரபு ஆகியோர் கொண்ட குழு 1942ம் ஆண்டு மார்ச் திங்கள் இந்தியாவிற்கு வந்தது
- வந்தவுடன் அக்குழு ஒரு பிரகடனம் கொண்டு வந்தது. அதன்படி இந்தியாவின் அரசியலமைப்பு, சிறுபான்மையோர் நலன், இந்தியாவின் பாதுகாப்பு ஆகியவை குறித்து அறிக்கை வெளியிட்டது
- இது ஆகஸ்ட் திட்டத்தின் பிரதிபலிப்பே என்பதால் அதனை காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சியும் எதிர்த்தது
- காந்தியடிகள் இதனை (Post Dated Cheque on a Crushing Bank) குறிப்பிட்டார்.
- இக்குழு முழுமையாக தோல்வியடைந்து இங்கிலாந்து சென்றது

**வெள்ளையனே வெளியேறு இயக்கம் - 1942**

- வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஸ்ட் தீர்மானம் என்றும் பாரத் சோரா அண்டோலன் வார்தாவில் கூடிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் (14-7-1942) எந்தவிதமான நிபந்தனைகள் இன்றி இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குதல் போன்றவை தொடர்பாக தீர்மானம் இயற்றியது
- வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தை தயாரித்தவர் ஜவஹர்லால் நேரு
- இப்போராட்டத்தின் போது காந்தியடிகள் செய் அல்லது செத்து மடி என்ற முழக்கத்தை ஏற்படுத்தினார்.
- இப்போராட்டத்தின் போது பீகாரில் பெருமளவு வன்முறை ஏற்பட்டது
- காந்தியடிகள் இப்போராட்டத்தின் போது 9-8-1942ம் ஆண்டு கைது செய்யப்பட்டு 6-5-1944 அன்று விடுதலை செய்யப்பட்டார்
- இதுவே காந்தியடிகள் கடைசியாக சிறையில் இருந்த காலம்
- காந்தியுடன் கைது செய்யப்பட்ட கஸ்தூரிபாய் காந்தி 23-3-1944ல் சிறையில் உயிர் நீத்தார்.
- காந்தியடிகள் இப்போராட்டத்தின் போது I want freedom immediately this very night எனக் கூறியுள்ளார். தமிழகத்தில் இப் போராட்டத்தில் கு. காமராஜ் கலந்துக்

கொண்டார்.

**வேவல் திட்டம் - சிம்லா மாநாடு – 1945**

- இந்நிலையில் இந்தியாவின் புதிய வைஸ்ராய்-ஆக 20.10.1943 அன்று வேவல் பதவி ஏற்றுக் கொண்டார்
- சிறையில் இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்
- 1945ல் வேவல் பிரபு இந்தியாவின் எதிர்காலம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக இந்தியா சென்றார்
- வைஸ்ராய் குழுவினை மறு நியமனம் செய்வது என்றும், அக்குழுவின் உறுப்பினர்களாக அரசியல் கட்சி பரிந்துரைக்கும் நபர்களை தேர்வு செய்வது என்றும் வேவல் பிரபு முடிவு செய்தார்.
- இதன் அடிப்படையில் இடைக்கால அரசு அமைப்பது குறித்து வேவல் 1945ம் ஆண்டு ஜீன் மாதம் 24ம் தேதி சிம்லாவில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாடு ஜீலை மாதம் 14ம் தேதி முடிய நடைபெற்றது
- இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் மௌலான அபுல் கலாம் ஆசாத் தலைவராகவும் ஜவஹர்லால் நேரு, தீர் கான் சாகிப் ஆகியோர் சலந்து கொண்டனர். காந்தியடிகள் சிம்லா சென்றாலும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. வைஸ்ராய் தனியே அவரிடம் ஆலோசனை செய்தார். அம்மாநாட்டில் இடைக்கால அரசு அமைப்பது என்றும் இராணுவ இலாக்கா தவிர மற்ற இலாக்கக்களை இந்தியர்களுக்கு தர வேவல் பிரவு இசைவு தெரிவித்தார். முஸ்லீம் மக்களின் ஒரே பிரதிநிதயாக முஸ்லீம் லீக் கட்சி இருக்க விரும்பியதால் இம் மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.
- முஸ்லீம்கள் வேவல் திட்டத்தை ஏற்க மறுத்தமையால் இத்திட்டம் தோல்வி அடைந்தது
- இம் மாநாட்டினால் தீமைகள் அதிகமாகியது
- இந்தியாவில் பொதுத் தேர்தல் நடத்துவது என 21.8.1945 அன்று அறிவிக்கப்பட்டது
- 1945ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து இங்கிலாந்தில் தொழில் கட்சி வெற்றி பெற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அட்லி பிரதம அமைச்சர் ஆனார்.
- 1946ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது
- முஸ்லீம் லீக் முஸ்லீம்களுக்கான தொகுதிகளில் வெற்றி பெற்றது

**ராஜாஜி திட்டம்**

- இந்து முஸ்லீம் சிக்கலைத் தீர்க்க ராஜாஜி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- இத்திட்டத்தின் படி பாகிஸ்தான் என்ற நாடு உருவாவதற்கு காரண சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதால் இது தற்கொலைக்கு சமம் என காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை.
- இதன்பின் வேவல் பிரபு 1945 ஜீன் 14ம் தேதி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்
- இதுவே வேவல் திட்டம் எனப் பெயர் பெற்றது

**கேபினட் தூதுக்குழு 1946**

- இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்கு வழியில்லை என்பதை உணர்ந்த ஆங்கில சுதந்திரம் வழங்குவது மற்றும் சுய நிர்ணயம் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களை

சந்தித்து பேச அமைச்சரவைத் தூதுக் குழு ஒன்று அனுப்புவது என அட்லி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்

- 15.3.1946ல் பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் அட்லி அவர்கள் ஒரு தூதுக் குழுவினை அமைத்தார்.
- பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஏ. வி. அலெக்சாண்டர் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்று இருந்தனர்.
- இக்குழு இந்தியாவிற்கு 24 மார்ச் 1946ல் புது தில்லிக்கு வந்தது
- இக்குழு இந்தியாவில் இருந்து 29 ஜீன் 1946ல் திரும்பிச் சென்றது
- இக்குழு காங்கிரஸ், முஸ்லீம் லீக், சீக்கியர்கள், ஆதி திராவிடர்கள், லிபரல் தலைவர் சர் தேஜ் பகதூர் சப்ரூ மற்றும் தனியார்கள் உள்ள 472 நபர்களை சந்தித்து பேசியது
- இக்குழு மீண்டும் சிம்லாவில் ஒரு கூட்டத்தை நடத்தியது. காங்கிரஸ் சார்பில் ஜவஹர்லால்நேரு, மௌலானா அபுல் கலாம் ஆசாத், சர்தார் வல்லபபாய் படேல் மற்றும் கான் அப்துல் கபார் கான் ஆகியவர்கள் கலந்து கொண்டனர். முஸ்லீம் லீக் சார்பில் முகமது அலி ஜின்னா, லியகத் அலிகான், இஸ்மாயில் கான் மற்றும் அதுர் ரப் நிஷதார் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆனால் தீர்வு ஏதும் ஏற்படவில்லை
- இக்குழு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் தலைவர்களுடன் பேசி தனது அறிக்கை 16-5-1946 மாதம் வெளியிட்டது. காங்கிரஸ் கட்சி அமைச்சரவை தூதுக்குழுவின் முடிவை ஏற்று சட்ட மன்றத்தில் நுழைவது என முடிவு செய்தது.
- இதன்படி நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 8 மாநிலங்களில் ஆட்சி அமைத்தது
- ஒவ்வொருவருக்கும் இதில் ஆதாயம் கிடைத்ததால் அனைவரும் இதனை ஏற்றனர்.
- இதன்படி இக்கால அரசு அமைக்கப்பட்டது.

**இடைக்கால அரசு**

- 1946ம் ஆண்டு வேவல் பிரபு நேருவின் தலைமையில் அமைச்சரவை (இடைக்கால அரசு) அமைக்குமாறு அழைப்பு விடுத்ததின் பேரில் மந்திரி சபை அமைக்கப்பட்டது
- இதன்படி காங்கிரஸ் நேரு தலைமையில் 2-9-1946 பதவி ஏற்றனர்.
- இதில் மொத்தம் 14 அமைச்சர்கள் பங்கேற்றனர். 6 இந்து அமைச்சர்கள், 3 முஸ்லீம் அமைச்சர்கள், 1 சீக்கியர், 1 பார்சி, 1 இந்திய கிருத்துவர் என்றும் 2 அமைச்சர்கள் முஸ்லீம் லீக்கிற்கும் என்றும் தெரிவித்தார்.

**இடைக்கால அரசின் இந்து அமைச்சர்கள்:**

1. ஜவஹர்லால் நேரு – Vice President of Executive Council, வெளிவிவகாரம் மற்றும் காமன் வெல்த்
2. வல்லபபாய் படேல் - உள்துறை, தகவல் மற்றும் ஒளிபரப்பு
3. இராசேந்திர பிரசாத் - உணவு மற்றும் வேளாண்மை
4. சரத் சந்திர போஸ்
5. சி. இராஜகோபாலாச்சாரி – கல்வி
6. ஜெகஜீவன் ராம் - தொழிலாளர் நலன்

**மூன்று முஸ்லீம் அமைச்சர்கள்**

1. ஆசாப் அலி - இரயில்வே

2. சர் சபத் அகமது கான்
3. சையத் அலி ஜகீர்

**ஒரு சீக்கிய அமைச்சர்**

1. பல்தேவ் சிங் - இராணுவம்

**ஒரு பார்சி அமைச்சர்**

1. சி. எச். பாபா

**ஒரு இந்திய கிருத்துவர்**

1. டாக்டர் ஜான் மத்தயா் - தொழில் மற்றும் வழங்குதல்

**இரு முஸ்லீம் லீக் அமைச்சர்கள்**

1. லியாகத் அலிகான் - நிதி
2. கஜான்பர் அலிகான் - சுகாதாரம்

**நேரடி நடவடிக்கை நாள்**

இந்த இடைக்கால அரசில் பங்கு வகித்த நிதி அமைச்சர் இந்து வணிகர்களின் வணிகத்தை அழிக்கும் வகையில் அமைந்ததாக கூறப்பட்டது. மேலும் பஞ்சாப், வங்காளம் மற்றும் மத்திய மாகாணங்களில் இந்துக்களுக்கு எதிராக முஸ்லீம் லீக் ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தியது.

- மேலும் அரசியல் நிர்ணய சபையில் முஸ்லீம் லீக் சேர மறுத்தது
- இதனைத் தொடர்ந்து இடைக்கால அரசை எதிர்த்து முஸ்லீம் லீக் ஜின்னாவின் தலைமையில் கல்கத்தாவில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் நாளை நேரடி நடவடிக்கை நாள் என அறிவித்தது. நாடு முழுவதும் கிளர்ச்சி செய்தது
- இதனால் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது
- வங்காளம் மற்றும் பீகாரில் கலவரம் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டது
- வைஸ்ராய் கவுன்சிலில் காங்கிரசின் செல்வாக்கை குறைப்பதற்காக முகமது அலி ஜின்னா வேவல் பிரபுவிடம் 5 நபர்களின் பெயரை பரிந்துரை செய்தார். அதன்படி சர் சபத் அகமது கான், சையத் அலி ஜகீர் மற்றும் சரத் சந்திர போஸ் ஆகியோர் வைஸ்ராய் கவுன்சிலில் இருந்து பதவி விலகினர். லியாகத் அலி கான், இஸ்மாயில் இப்ராகிம் சந்திரகார், அப்துல் ராப் நிஷ்டார், கஜான்பர் அலிகான் மற்றும் ஜோகேந்திர நாத் மண்டல் ஆகியோர் வைஸ்ராய் கவுன்சிலில் 26 அக்டோபர் பதவி ஏற்றனர்
- ஆங்கில அரசு அரசியல் நிர்ணய சபையை உருவாக்குவதற்காக ஜவஹர்லால் நேரு, சர்தார் பல்தேவ் சிங், முகமது அலி ஜின்னா மற்றும் லியகத் அலி கான் ஆகியோர்களை லண்டன் வரவழைத்தனர். அங்கு இறுதி முடிவு ஏற்கப்படவில்லை. முஸ்லீம் லீக் சார்பில் நியமிக்கப்பட்ட 5 நபர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்கவில்லை
- இந்நிலையில் வேவல் பிரபுவை பதவி விலகுமாறு பிரதமர் அட்லி கேட்டுக் கொண்டார்.
- நிலைமைகளை கவனித்த பிரதமர் அட்லி 20, பிப்ரவரி 1947ல் அன்று அறிக்கை வெளியிட்டார். அதன்படி இங்கிலாந்து நாட்டவர்கள் ஜீன் 1948க்கு முன்பாகவே இந்தியாவை விட்டு வெளியேறுவார்கள் என அறிவித்தார்.
- தலைவர்கள் இந்தியாவைப் பிரிப்பதுதான் ஒரே வழி என முடிவு எடுத்தனர்

**பம்பாய் கலவரம்**

- 1946ம் பம்பாய் கடற்படையில் கலவரம் ஏற்பட்டது.

**இந்தியப் பிரிவினை**

**மவுன்ட்பேட்டன் திட்டம்**

- 24.3.1947ல் பதவி ஏற்ற மவுன்ட்பேட்டன் பிரபு 133 முறை இந்திய தலைவர்களை சந்தித்தார். வி. கே. கிருஷ்ண மேனன், சர்தார் வல்லபபாய் படேல், லியாகத் அலி கான், மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜே. பி. கிருபாளனி ஆகியோர் அவர் சந்தித்த முக்கிய அரசியல் தலைவர்கள் ஆவார்.
- ஏப்ரல், 1947ல் மவுன்ட் பேட்டன் பிரபு ஆட்சியை ஒப்படைப்பது தொடர்பாக மவுன்ட்பேட்டன் பிரபு, General Sir Hastings Ismay, Sir Eric Mieville, மற்றும் Sir George Able ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்தார். இக்குழுவின் திட்டத்தை (Plan Balkan) General Sir Hastings Ismay லண்டன் கொண்டு சென்றார்.
- இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட வழியில்லை என்பதை புரிந்து கொண்ட மவுண்ட்பேட்டன் இந்தியாவை இந்தியா – பாகிஸ்தான் என பிரிப்பது, வங்காளம், பஞ்சாப் போன்ற எல்லைகளை நிர்ணயித்தல் போன்றவை தொடர்பாக தனது திட்டத்தை லண்டனின் அமைச்சரவையில் தெரிவித்தார். அமைச்சரவையின் ஒப்புதலை பெற்ற அவர் மே மாதம் 30 தேதி இந்தியா வந்தார். 1947 ஜீன் மாதம் 2ம் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி இந்தியா – பாகிஸ்தான் என தன் திட்டத்தை வெளியிட்டார். பிறகு 1947 ஜீன் 4ம் நாள் செய்தி நிறுவனங்களுக்கு அளித்த பேட்டியில் ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திரம் வழங்கப்படும் (Transfer of Power) என அறிவித்தார்.
- இதுவே மவுண்ட் பேட்டன் திட்டமாகும்.
- 25 ஏப்ரல் 1947ல் இராணுவ குழுவை மவுண்ட்பேட்டன் பிரபு கூட்டினார். அக் கூட்டத்தில் சர்தார் பல்தேவ் சிங், லியாகத் அலிகான் மற்றும் Field Marshal Sir Claude Achinlecl ஆகியோர் கலந்து கொண்டனர். இந்திய இராணுவம் பிரிப்பது தொடர்பாக பேச்சு வார்த்தை நடைபெற்றது.
- 5 ஜீன் 1947ல் இரு காங்கிரஸ் மற்றும் இரு முஸ்லீம் லீக் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்தார். அக்குழு மேலும் பத்து துணைக் குழுக்களை ஏற்படுத்தியது. ஏந்த எந்த பகுதிகளை சேர்க்க வேண்டும் என்பது குறித்து இக்குழுக்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது. முக்கியமான பிரச்சினைகளை களையும் பொருட்டு ஒரு Arbitral Tribunal இந்தியாவின் தலைமை நீதிபதியான ஞசை Patrick Spens என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 30 ஜீன் 1947ல் பஞ்சாப், வங்காளம் மற்றும் அசாம் ஆகிய பகுதிகள் பிரிப்பது குறித்து 3 குழுக்களை அமைத்தார். பின் அக்குழு இரண்டு குழுக்களாகவும் இரண்டு குழு ஒரு குழுவாகவும் அமைந்தது. இக்குழுக்களின் உறுப்பினராக காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பெயரை பரிந்துரைக்குமாறு கூறப்பட்டது. இக்குழுக்களின் தலைவராக சர் சர் சிரில்

ராடிகிளிப் நியமிக்கப்பட்டார்

- இக்குழு பெருவாரியான மக்கள் வசிப்பது, நிர்வாக தலைமை, இயற்கை எல்லைகள், தொலைத் தொடர்பு நீர் மற்றும் பாசன வசதி ஆகியவற்றின் அடிப்படையில் பகுதியை எவ்வாறு பிரிப்பது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆகஸ்ட் 16 ஆம் தேதிக்குள் இப்பணியை முடிக்குமாறு காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டது
- காந்தியடிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் இதனை ஏற்றதன் அடிப்படையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதனை ஜூலை 18, 1947 அன்று நிறைவேற்றியது.
- இதன்படி சுதந்திரம் என நிர்ணயிக்கப்பட்டு சுதந்திரம் வழங்கப்பட்டது
- பாகிஸ்தான் 14-8-1947ல் சுதந்திரம் அடைந்தது. பாகிஸ்தானில் முதல் கவர்னர் ஜெனரலாக முகமது அலி ஜின்னா பதவி ஏற்றார்.
- மேற்பு பஞ்சாப், சிந்து வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் கிழக்கு வங்காளம் ஆகிய பகுதிகளை கொண்ட பகுதி பாகிஸ்தான் எனப்பட்டது
- இந்தியத் தலைவர்கள் கேட்டுக்கொண்டதன் பெயரில் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டன் பிரபு பதவி ஏற்றார். இவர் மாதம் 21ம் தேதி புறப்பட்டு லண்டன் சென்றார்
- பின் 1948 ஆம் ஆண்டு ஜீன் மாதம் இந்தியாவின் மாக்கியவல்லி எனப்பட்ட சி. ராஜகோபலாச்சாரி முதல் இந்திய கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றார்.
- இந்திய சுதந்திரம் அடைந்த போது சென்னை மாகாணத்தின் கவர்னராக சர் ஆர்சிபாலிடு எட்வர்டு நை என்பவர் இருந்தார். இவரே சென்னை மாகாணத்தின் கடைசி கவர்னராவர்.

**இடைக்கால சுதந்திர இந்தியாவின் அமைச்சரவை**

1. ஜவஹர்லால் நேரு – பிரதம அமைச்சர், வெளி விகாரம் நாடுகளின் உறவுகள் மற்றும் அறிவியல் ஆய்வு
2. சர்தார் வல்லபபாய்படேல் - உள்துறை, செயதி ஒளிபரப்பு மற்றும் மாநிலங்கள்
3. டாக்டர் இராசேந்திர பிரசாத் - உணவு மற்றும் வேளாண்மை
4. மௌலானா அபுல் கலாம் ஆசாத் - கல்வி
5. டாக்டர் ஜான் மத்தாய் - இரயில்வே மற்றும் போக்குவரத்து
6. சர்தார் பல்தேவ் சிங் -ராணுவம்
7. ஜகஜீவன்ராம் - தொழில்
8. சி. எச். பாபா – வணிகம்
9. ரவி அகமது கித்வாய் - தொடர்புகள்
10. ராஜ்குமாரி அமிதித் கவுல் - சுகாதாரம்
11. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் - சட்டம்
12. ஆர். கே. சண்முகம் செட்டியர் - நிதி
13. டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி – தொழில் மற்றும் வினியோகம்
14. என். வி. காட்சில் - சுரங்கம் மற்றும் சக்தி

**ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கங்கள்: குகா இயக்கம்:**

- பஞ்சாப்பில் தோன்றியது

**மாப்ளா புரட்சி:**

- 1921ல் கேரளாவில் ஏற்பட்டது

**வஹாபி இயக்கம்:**

**சுதந்திரப் போரில் புரட்சி இயக்கங்கள்:**

- சுதந்திரப் போராட்டத்தில் புரட்சி தேசியபற்று இயக்கங்கள் எழுந்த காலம் 1903 முதல் 1913 வரை ஆகும். இக்காலம் புரட்சியாளர்கள் காலம் எனப்படும்
- இதற்கு பிறகு 1932ல் புரட்சியாளர்கள் மீண்டும் உருவாயின

**ராண்ட் கொலை வழக்கு**

- இதுவே இந்தியாவில் நடந்த முதல் ஐரோப்பிய அரசியல் கொலையாகும்
- தாமோதிரன், பாலகிருஷ்ணன் என்ற இரு சித்பவ அந்தணர்கள் பிளேக் ஒழிப்பு கமிட்டியின் தலைவரான ராண்ட் எனப்வரை கொலை செய்ய முயன்றனர். ஆனால் குறி தவறுதலா லெப்டினன்ட் அயர்ஸ்ட் என்பவரின் மேல் பாய்ந்தது
- இவ்விருவரையும் தமது எழுத்தின் மூலம் வன்முறைக்கு வித்திட்டதாக கூறி 18 மாத காலம் கடுஞ்சிறையில் இடப்பட்டார்

**காதர் கட்சி - 1913**

- லாலாஹர்தயாள், சோகன் சிங் ஆகியோர்களால் இவ்வியக்கம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் துவக்கப்பட்டது
- தீவிரவாதத்தை வளர்த்தல், புரட்சிகரமான கருத்துக்களை கூறுதல், வெளியிடுதல், ஆயுதங்களை சேகரித்தல் போன்ற பணிகளை செய்தது.
- இக்கட்சி காதர் எனப்படும் வார இதழை வெளியிட்டது

**லாகூர் கொலை வழக்கு எனப்படும் சாண்டார்ஸ் கொலை வழக்கு**

- சைமன் கமிஷன் எதிர்ப்பு போராட்டத்தின் போது சாண்டார்ஸ் என்ற காவல் துறை அதிகாரியால் லாலா லஜபதிராய் கடுமையாக தாக்கப்பட்டு பின்பு இறந்தார். எனவே இந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிக் அசோசியேஷன் எனப்படும் புரட்சி சங்கத்தைச் சேர்ந்த பகத் சிங் என்பவர் சாண்டார்ஸ் என்ற காவல் துறை அதிகாரியை 17-12-1928ல் சுட்டுக் கொன்றார்.
- மேலும் சட்டமன்றத்தில் 8-8-1929ல் குண்டு வீச முயன்றதாகவும் பகத் சிங் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. இதன் தொடர்பாக பகத் சிங், ராஜ குரு, சுக்தேவ் ஆகியோர் 23-3-1931 அன்று தூக்கிலடப்பட்டனர். இந்த நாளை தியாகிகள் தினமாக (Political Sufferer’s day) என காங்கிரஸ் கொண்டாடியது

**ஜெனரல் டயர் கொலை வழக்கு**

- மைக்கேல் ஓ டயர் என்ற காவல் துறை அதிகாரி 13-4-1919ல் பஞ்சாப்பில் ஜாலியன் வலாபாக் என்ற இடத்தில் பைசாகி திருவிழாவின் போது கண்துடித்தமாக துப்பாக்கி சூடு நடத்தினார். அப்போது இதனை கண்ட உதம் சிங் என்பவர் இந்நிகழ்ச்சிக்கு காரணமான டயர் என்பவரை இரண்டனில் சுட்டுக் கொன்றார். 13-7-1940ல் உதம்சிங் தூக்கிலடப்பட்டார்.

**சர் வில்லியம் கர்சன் வில்லி கொலை வழக்கு**

- இலண்டனில் படிக்க சென்ற மாணவர்கள் லண்டனில் இந்தியா அவுஸ் என்ற விடுதியில் தங்கிப் படித்தனர். சிலர் இங்கு தீவிரவாதியாக மாறினார்கள். இங்கு உளவு பார்த்த சர் கர்சன் வில்லி என்பவரை மதன்லால் திங்கரா என்ற புரட்சியாளர்

சுட்டுக்கொன்றார். 13-8-1909ல் இவர் தூக்கிலிடப்பட்டார்.

**கிங்ஸ்போர்டு கொலை வழக்கு அல்லது அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு**

- முசாபர் நகரத்தின் தலைமை நீதிபதி கிங்ஸ்போர்டு சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அளித்த தண்டனையைக் கண்டு மனம் வெதும்பிய குதிராம்போஸ், நீதிபதி கிங்ஸ்போர்டு மீது வெடிகுண்டு வீசினார். இதில் நீதிபதி கிங்ஸ்போர்டு தப்பி விட்டார். ஆனால் அவரது மனைவி மற்றும் மகள் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.
- குதிராம் போஸ் மற்றும் பிரபுல்லா காக்கி 11-8-1908ல் தூக்கிலிடப்பட்டார். இதில் அரவிந்த கோஷ் விடுதலை செய்யப்பட்டார். அரவிந்தரின் விடுதலைக்கு வாதிட்டவர் சித்தரஞ்சன் தாஸ் ஆவார்

**நாசிக் சதி வழக்கு**

- 1909 ஆம் ஆண்டு நாசிக் நீதிபதி ஜாக்சன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்
- இக்கொலைக்கு பீனா தாஸ் காரணமானவர்

**மிண்டோ பிரபு கொலை முயற்சி வழக்கு**

- ஐக்கிய மாகாணத்தில் புரட்சிச்காரர்களின் தலைவராக விளங்கியவர் ராம்பிரசாத் பிஸ்மில்
- இவர் இயக்கத்திற்கு தேவையான பணம் பெறுவதற்காக ககோரியில் இருந்து லேம் நகர் செல்லும் இரயிலில் கொள்ளையடித்தார்
- இவ்வழக்கில் பிஸ்மில் தூக்கிலடப்பட்டார்

**ஹார்டிஞ்ச் பிரபு கொலை முயற்சி வழக்கு**

- 1911ம் ஆண்டில் **ஹார்டிஞ்ச்** பிரபு மற்றும் அவரது மனைவி ஆகியோர் யானை மீது ஊர்வலமாக வந்த பொழுது குண்டு வீசி கொல்ல முயற்சிக்கப்பட்டது. இதில் அவரின் பணியாட்கள் உயிர் துறந்தனர். ராஷ் பிகாரி போஸ் இதற்கு காரணமானவர்

**புரட்சிவாத இயக்கங்கள்:**

**மித்திர மேளா:**

- இந்தியாவின் முதல் தீவிரவாத இயக்கம்
- துவக்கப்பட்ட ஆண்டு 1899
- துவக்கியவர்: வினாயக் தாமோதர் சவர்க்கார் மற்றும் கணேஷ் சவர்க்கார்
- இடம்: மகாராஷ்டிரா

**அனுசிலியன் சமிதி:**

- இந்தியாவின் முதல் இரசகசிய தீவிரவாத இயக்கம். துவக்கப்பட்ட ஆண்டு – 1902
- கல்கத்தாவில் துவக்கப்பட்டது
- துவக்கியவர்கள்: பரிந்திர குமார் கோஷ் மற்றும் பிரமோத்திர மித்திரா
- டாக்காவில் துவக்கியவர்: புலின் தாஸ்
- இயக்கத்தின் பத்திரிக்கை: பவானி மந்திர், Bartaman Mandir, Mukti Kon Patha
- பிற தலைவர்கள்: குர்திக் சிங்

**அபிநவ பாரதம் (இளம் இந்தியா):**

- 1907ல் துவக்கப்பட்டது
- துவக்கியவர்: சாவர்க்கர் சகோதரர்கள்
- வினாயக் தாமோதர் சாவர்க்கர் எழுதிய புத்தகம்: India’s First war of Independence

**ஜீகாந்தர்**

- அனுசிலியன் சமிதி துவக்கிய பத்திரிக்கை: ஜீகாந்தர் கல்கத்தாவில் தோன்றியது
- ஹேமசந்திர தாஸ் ரஷ்ய குண்டுகள்

தயாரித்தார்

- இதன் போர்க் குழுவிற்கு மானிக்டோலா கார்டன் சொசைட்டி என்று பெயர்

**நவபாரத் சொசைட்டி**

- குவாலியரில் தோன்றியது

**பாரிசார் சமிதி**

- கிழக்கு வங்காளத்தில் தோன்றியது

**ராஜா பஜார்**

- கல்கத்தாவில் தோன்றியது

**சந்திர சேகர் ஆசார்:**

- இந்துஸ்தான் குடியரசுக் கழகத்தினை இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு என பெயர் மாற்றியவர்.
- ககோகி வழக்கில் தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர்
- 1931ல் சுட்டுக்கொல்லப்பட்டார்

**சூர்யாசென்:**

- சிட்டகாங் மாநிலத்தின் புரட்சியாளர்
- இந்திய குடியரசுப் படையைச் சார்ந்தவர்

**இந்திய விடுதலைப் படை**

- ராஷ் பிகாரி போஸ் என்பவர் ஜப்பானில் இந்திய விடுதலைக் கழகத்தை துவக்கினார்.
- இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய அரசு இவ்விடுதலைக் கழகத்திற்கு ஆதரவு காட்டியது
- 1942ல் சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றியது.
- ஜப்பான் பிரதமர் இந்தியா இந்தியருக்கே எனக் கூறி இந்திய சுதந்திர விடுதலைக்கு ஜப்பான் உதவி புரியும் எனக் கூறினா
- இந்திய விடுதலைக் கழகம் ஆங்காங்கு இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சி அளித்தது.
- இதன் பிரிதிநிதிகள் மாநாடு பாங்காங்கில் கூட்டப்பட்டது.
- சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றியதும் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய இந்திய இராணுவ வீரர்கள் (போர்க் கைதிகள்) கேப்டன் மோகன் சிங் என்பவர் தலைமையில் இந்திய விடுதலைக் கழகத்தில் சேர்ந்தனர்.
- பாங்காங்கின் இந்திய விடுதலைக் கழகத் தலைவர் பீதாம்பர் சிங் மோகன் சிங்கிற்கு உதவி புரிந்தார்.
- 1-9-1942ல் இந்திய தேசிய படை முறையாக அமைக்கப்பட்டது
- இந்திய தேசிய படையின் மூன்று கொள்கைகள் ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம், இப்படையில் உள்ள ஒற்றுமையின்மை காரணமாக ராஷ் பிகாரி போஸ் அவர்களால் துவக்கப்படவில்லை
- சுபாஷ் சந்திர போஸ் 16 முதல் 17-1-1947 நள்ளிரவில் இந்தியாவில் இரந்து தப்பினார். ஆவர் ஜெர்மனியில் இருந்து ஜப்பானுக்கு வந்தார்
- அவர் ஜப்பான் பிரதமரை சந்தித்து இந்திய விடுதலை பற்றிய கோரிக்கை வைத்தார்
- ஜப்பான் இந்திய விடுதலையை ஏற்றுக்கொண்டது
- சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூர் வந்தவுடன் ராஷ் பிகாரி போஸ் இந்திய தேசிய படையின் பொறுப்பை சுபாஷ் சந்திர போசுக்கு தந்தார்.
- இந்திய விடுதலைப் படையை சற்று மாற்றி Azad Hind Fauj என பெயர் வைத்தார்.
- ஜப்பான் இராணுவத்தில் சுபாஷ் பிரிகேட்

என்ற புதிய படைப்பு பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமையை ஷா நவாஸ் ஏற்றார்.

- இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் அணிப்பிரிவு கேப்டன் லட்சுமி என்பவர் தலைமையில் இருந்தது
- இந்திய பர்மா எல்லையில் சுமார் 150 கி. மீ. தோலைவை இந்திய தேசிய படை கைப்பற்றியது
- டில்லி சலோ, ஜெய் இந்த் போன்ற முழக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டது
- இந்திய தேசிய விடுதலைப் படை பிரிட்டிஷாரின் கலாங் கலாங் என்ற முக்கிய இடத்தை கைப்பற்றியது
- இந்திய எல்லைக்குள் ஜப்பான் துணையுடன் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது
- இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டு வீச்சு போன்ற காரணத்தால் ஜப்பான் பின் வாங்க நேரிட்டது
- சிந்த்வின் ஆற்றங்கரையில் இந்திய தேசியப்படை தோல்வியடைந்தது. சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரில் இருந்து தப்பிச் சென்று மீண்டும் போரினை துவக்க எண்ணினார்
- பாங்காக்கிலிருந்து டோக்கியோ செல்ல ஜப்பான் படைத் தலைவர்களுடன் விமானத்தில் பயணம் செய்த நேதாஜி பார்மோசாவில் உணவு அருந்திய கடைசி தகவல் கிடைத்துள்ளது.
- அதன்பின் அவர் சென்ற விமானம் தீப்பிடித்தது என்பர். சிலர் இதை பொய் என்று கூறுகின்றனர்.
- இவ்விடுதலைப் போரில் சுமார் 4000 இந்திய தேசிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் கைது செய்து தில்லி செங்கோட்டையில் விசாரணை செய்தது
- இவ்விசாரணை தில்லி செங்கோட்டை விசாரணை என்று கூறுவர்.
- பி. கே. செனகல், ஷா நவாஸ் மற்றும் குர்பாகாஷ் சிங் தில்லான் ஆகியோர் மீது விசாரணை நடைபெற்றது
- இந்திய தேசிய படைவீரர்களுக்கு ஆதரவாக ஜவஹர்லால் நேரு. புலாபாய் தேசாய் மற்றும் தேஜ்பகதூர் சப்ரு ஆகியோர் விசாரணையில் வாதாடினார்கள்.

**முக்கிய சமுதாய மற்றும் அரசியல் இயக்கங்கள்**

- சிகப்புச் சட்ட இயக்கம்: கான் அப்துல் காபர் கான்
- தேவா சமாஜ்: சிவான்ரங்கள் அக்னிகோத்திரி
- நில உரிமையாளர்கள் சங்கம்: துவராகநாத் தாகூர்
- இந்தியன் அசோசியேஷன் 1876: சுரேந்திரநாத் பானர்ஜி
- மதராஸ் அசோசியேஷன்: சி. எஸ். அய்யர். விஜயராகவ ஆச்சாரி
- ஈஸ்ட் இந்தியா அசோசியேஷன்: 1866: தாதாபாய் நௌரோஜி: இது லண்டனில் துவக்கப்பட்டது
- இந்தியன் விடுதலைக் கழகம் - 1942: ராஷ் பிகாரி போஸ்
- பிரம்ம சமாஜ் - 1828: ராஜாராம் மோகன்ராய்
- பிரத்தனா சமாஜ்: டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்

- ஆரிய சமாஜ்: சுவாமி தயானந்த சரஸ்வதி
- ராமகிருஷ்ணா மிஷன்: சுவாமி விவேகானந்தர்
- பிரம்ம ஞான சபை: மேடம் எச். பி. பிளாட்ஸ்கி
- தற்கால இந்தியாவில் தோன்றிய முதல் பொதுச்சங்கமான தி லேண்ட் ஓல்டர்ஸ் சொசைட்டி 1837 மற்றும் பெங்கால் பிரிட்டிஷ் இந்தியா சொசைட்டி 1843. இவை இரண்டும் சேர்த்து 1851ல் பிரிட்டிஷ் இந்தியா அசோசியேஷன் என துவக்கப்பட்டது
- நேஷனல் இந்தியன் அசோசியேஷன் - 1867 மேரி கார்பென்டர்
- ஆல் இந்தியா கிசான் சபா – 1936 சுவாமி சகஜனந்த சரஸ்வதி
- வகாபி இயக்கம் - சையத் அகமது ப்ரோப்லி (இந்தியா), இபான் அப்துல் வகாப் (அரேபியா)
- சந்வந்தி புரட்சி: பாண்ட் சரட்
- பர்தோலி சத்யாகிரகம்: காந்தி, சர்தார் வல்லபபாய் படேல்
- கீர்த்தி கிசான் பார்ட்டி: சி. எல். ஆண்ட்ரூஸ்
- ஈகா இயக்கம்: மதன்பாசி
- ஆண்டி சர்குலர் பார்ட்டி: கிருஷ்ணகுமார் மித்ரா
- ஆரிய பந்தர் இந்தியன் சொசைட்டி: திலகர்
- இந்தியன் நேஷனல் பார்ட்டி: சம்சிரமன் பிள்ளை
- இளம் வங்காள இயக்கம்: ஹென்றி விவியன் டோசாரியோ
- டேக்கான் எஜீகேஷனல் சொசைட்டி: எம். பி. ராணடேவ்
- ஆல் இந்தியா டிப்ரஸ்டு கிளாசஸ் அசோசியேஷன் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

**யங் இந்தியா: வி. டி. சவார்க்கர்**

**இந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிக் அசோசியேஷன்**

- சந்திர சேகர் ஆசாத்

**இந்தியன் ரிபப்ளிக்கன் ஆர்மி:** சச்சிந்திர சன்யால்

- **டிரான்சிலேசன் சொசைட்டி: 1864 –** சையது அகமது கான்
- **பீகார் மாணவர்கள் மாநாடு:** டாக்டர். ராஜேந்திர பிரசாத், மெட்ராஸ் சொந்த சங்கம் - 1852

**மதராஸ் மகாசன சபா - 1884**

- ஜி. சுப்பிரமணிய அய்யர், பி. ஆனந்த ஆச்சார்யலு மற்றும் ரங்கைய்ய நாயுடு ஆகியோர்களால் இச் சங்கம் துவக்கப்பட்டது
- பிரிட்டிஷ் இந்தியா அசோசியேஷன் - 1851
- பாம்பே அசோசியேஷன் - 1852
- பூனா சர்வஜனிக் சபா – 1870
- பாம்பே பிரெசிடென்சி அசோசியேஷன் - 1884

**பூமி தான இயக்கம் அல்லது பூதான இயக்கம்:**

- அச்சார்ய வினோபாவால் 18.4.1951ல் தெலுங்கானாவில் துவக்கப்பட்டது. முதன் முதலில் ஆதி திராவிட மக்களுக்கு ராம சந்திர ரெட்டி என்பவர் 100 ஏக்கர் நிலத்தை இனாமாக அளித்தார்

**சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியப் பத்திரிக்கைகள் மற்றும் அதன் நிறுவனர்கள்**

- **அன்னி பெசண்ட்**: காமன் வெல்த், தி மெட்ராஸ் ஸ்டான்டர்ட், நியு இந்தியா
- **மகாத்மா காந்தி**: யங் இந்தியா: ஹரிஜன்

- **திலகர் மற்றும் அகர்கர்**: கேசரி, மராத்தி
- **மோதிலால் நேரு**: தி இன்டிபென்டன்ட்
- **லாலாலஜபதி ராய் :** தி பீப்ள
- **பெரோஷா மேத்தா:** தி பாம்பே க்ரானிக்கல்
- **சிசிர் குமார் கோஷ்:** அம்ரிதா பஜார் பத்திரிக்கா 1868
- **தயாள் சிங்**: டிரிபியூன் 1878
- **சா.சார்லாஸ் மெட்டகேப் மற்றும் மெகாலே பிரபு**: Liberatory of Indian Press
- **தேவேந்திரநாத் தாகூர்:** தவபோதினி பத்திரிக்கா
- **கிரிஷ் சந்திர கோஷ்:** பெங்காலி: இந்து பேட்ரியாட்
- **கே. எம். பணிக்கர்:** தி இந்துஸ்தான் டைம்ஸ்
- **ஜோகிந்தர் பாபு:** வங்கபாசி
- **ஜி. பி. வர்மா:** இந்துஸ்தானி அட்வகேட்
- **ராபர்ட் பென்னட்:** பாம்பே டைம்ஸ்
- **ஹென்றி விவியன் டிசாரியோ:** இஸ்ட் இந்தியன்
- **சியாம்ஜி கிருஷ் வர்மா**: இந்தியன் சோசியாலஜிஸ்ட்
- **ராமானந்த சட்டர்ஜி:** மாடர்ன் ரிவிய்யு
- **சுரேந்திரநாத் பானர்ஜி**: தி பெங்காலி
- **தேவேந்திரநாத் தாகூர்:** இந்தியன் மிரர் - 1862
- **ஈஸ்வர சந்திர வித்யாசாகர்:** சோம் பிரகாஷ்
- **முகந்தராவ் பாடில்:** தீன் மித்ரா, இன்டிபென்டன்ட் இந்தியா
- **பிரம்பந்தப் உபாத்தியா:** சந்தியா
- **பிகாஜிகாமா**: பந்தே மாதரம்
- **காதர் கட்சி:** காதர்
- **பிபின் சந்திரபால்:** நியு இந்தியா
- **எம். என். ராய்**
- **அரவிந்த கோஷ்:** வந்தே மாதரம்
- **எம். ஜி. தேசாய்:** தி ஸ்பார்க்
- **அஜித் சிங்:** பாரத மாதா
- **மௌலானா அபுல் கலம் ஆசாத்:** அல் நாவத் வக்கீல், அல் இலால், அல் பலாக்
- **கிராந்தி**: ஓர்க்கர்ஸ் அண்ட் டிசண்ட் பார்டி
- **பெகராம்ஜி பலபாரி:** இந்தியன் ஸ்பெக்டேடர்
- **பக்கிம் சந்திர சட்டர்ஜி**: கங்கதர்சனா – 1873
- **ராசாராம் மோகன் ராய்**: பங்க தத்தா, மீரத் - உல் - அக்பர், சம்பத் கமுதி
- சென்னையில் வெளியான முதல் பத்திரிக்கை மெட்ராஸ் குரியர்- 1785 ரிச்சர்டு ஜான்ஸ்டன்
- இந்தியாவில் வெளியான முதல் பத்திரிக்கை பெங்கால் கெஜட். இதனை துவக்கியவர் - ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி - இது கல்கத்தாவில் துவக்கப்பட்டது
- இந்தியாவின் இரண்டாவது செய்தி இதழ் - கல்கத்தா அட்வர்டைசர்
- முதல் மும்பை செய்தித்தாள்: பம்பாய் ஹெராய்டு – 1789
- முதல் உருது செய்தித்தாள்: பம்பாய் சமச்சர்
- முதல் ஆங்கில தினசரி: இந்தியா மிரர்
- முதல் இந்திய மொழி செய்தித்தாள் - திக்தர்ஷன் (அ) சமாச்சார் தர்பன்
- முதல் தமிழ் மொழி செய்தித்தாள் - சுதேசமித்திரன். இச் செயத்தித் தாள் 1882ல் ஜி. சுப்பிரமணிய அய்யர் எனப்வரால் துவக்கப்பட்டு 1899ல் தினசரி தமிழ்மொழி

செயத்தித் தாளாக மாற்றப்பட்டது

**முக்கிய தலைவர்களும் அவர்கள் எழுதிய புத்தகங்களும்**

- காந்தி – சத்திய சோதனை
- மௌலான அபுல்கலாம் ஆசாத் - இன்டியா வின்ஸ் பிரீடம்
- லாலா லஜபதி – அன் நேப்பி இந்தியா
- டாக்டர் ராஜேந்திர பிரசாத் - இண்டியா டிவைடட்
- ஜவஹர்லால் நேரு – டிஸ்கவரி ஆப் இந்தியா

**விடுதலைக்குப் பின் இந்தியா**

- விடுதலை பெற்ற இந்தியாவின் முதன் தலைமை ஆளுநராக மௌண்ட் பேட்டன் பிரிவு 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாளிலிருந்து 1948ஆம் ஆண்டு ஜீன் வரை பணியாற்றினார். அவருக்குப்பின் 1950ம் ஆண்டு ஜனவரி 25ம் நாள் வரை சி. இராஜகோபலாச்சாரி முதல் இந்தியர் தலைமை ஆளுநராக இருந்தார்

**இந்தியச் சிற்றரசுகளின் இணைவு**

- இந்தியா சுதந்திரம் பெறும் முன்னர் 562 சிற்றரசுகள் இருந்தன. இந்தியாவின் இரும்பு மனிதர் அல்லது பிஸ்மார்க் என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபபாய் படேல் மற்றும் வி. பி. மேனன் 1947 ஜீலை 15 ஆம் நாள் அனைத்துச் சிற்றரசர்களையும் அழைத்து இணைப்பு குறித்து பேசினார்.
- மௌணட் பேட்டன் பிரபு இந்திய சிற்றரசர்களை இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ, இணைய அழைப்பு விடுத்தனர்.
- ஒரிசாவுடன் 39 சிற்றரசர்களும், மும்பையுடன் 300க்கு மேற்பட்ட அரசுகளும், சென்னை, வங்காளம், அசாம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுடன் சில அரசுகளும் இணைந்தன.

**சூனாகாத் இணைவு**

- கத்தியவார் தீபகர்ப்பத்தில் சூனாகாத் என்ற அரசில் 80% இந்துக்களும் 20% பிற சமயத்தவரும், அசரர் இசுலாமியராகவும் இருந்தனர். அரசர் பாகிஸ்தானுடன் இணைய விருப்பம் தெரிவித்தார். இதனால் கலகம் ஏற்பட்டது. சூனாகாத் திவான் இந்திய அரசின் உதவியை நாடினார். இந்திய அரசு கலகம் செய்தோரை அடக்கி அமைதி ஏற்படுத்தியது. பின்னர் அங்கு பொதுமக்கள் வாக்கெடுப்பு முறையால் அப்பகுதி இந்தியாவுடன் இணைந்தது.

**ஹைதராபாத் இணைவு**

- 1889 வேல்ஸ் இளவரசர் இரண்டாவது முறையாக இந்தியா வருகை. ஜவஹர்லால் நேரு பிறப்பு
- 1891 தொழிற்சாலைகள் சட்டம். மணிப்பூர் கலகம். திருமண வயது நிர்ணயம்
- 1892ல் சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் கலந்து கொள்ளுதல் இந்திய கவுன்சில் சட்டம்
- 1897ல் சுபாஷ் சந்திரபோஸ் பிறப்பு. மும்பையில் பிளேக் நோய் பஞ்சக் கமிஷன் நியமனம்
- 1900 பஞ்சக் கமிஷன் நியமனம்
- 1903 டில்லி தர்பார்
- 1905 வங்கப் பிரிவினை. எதிர்ப்பு இயக்கம் தோன்றுதல்
- 1906 அனைத்திந்திய முஸ்லீம் லீக் உருவாக்கம்
- 1907 காங்கிரஸ் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் பிரிதல்
- 1908 இந்திய பத்திரிக்கைகள் சட்டம்
- 1909 மின்டோ மார்லி சீர்திருத்தம். இதன் அடிப்படையில் எஸ. பி. சின்கா கவர்னர் ஜெனரல் கவுன்சில் நியமனம்

- 1911 இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவில் இருந்து டில்லிக்கு மாற்றம். வங்கப் பிரிவினை கைவிடப்படுதல். இந்தியாவின் தேசிய கீதமாக ஜனகனமன பாடல் கல்கத்தா மாநாட்டில் பாடப்பட்டது.
- தில்லி தர்பாரில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவின் சக்கரவர்த்தியாக முடி சூடல், முதல் ஏர் மெயில் சர்வீஸ் துவக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்பு
- 1913 இரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசு. 3.5.1913ல் இந்தியாவின் முதல் திரைப்படமான இராஜா ஹரிச்சந்திரா மும்பையில் காரனேஷன் சினிமா திரையரங்கில் கோவிந்த பல்கே (தாதா சாகிப் பல்கே) என்பவரால் திரையிடப்பட்டது
- 1913 கல்விக்கான தீர்மானங்கள்
- 1914 காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா டிசம்பர் மாதம் புறப்பட்டு 1915ல் இந்தியா வருகை. முதல் உலகப்போர் துவக்கம்
- 1915 இந்திய பாதுகாப்புச் சட்டம்
- 1916 சட்லர் கமிஷன். இந்திய தேசிய காங்கிரஸ் முஸ்லீம் லீக் லக்னோ உடன்படிக்கை. தலசுய ஆட்சி இயக்கங்கள் தோன்றுதல். காசி இந்து பல்கலைக் கழகம் தொடக்கம்
- 1919 ஏப்ரல் 13 அன்று அமிர்தரசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் படுகொலை. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம். மூன்றாவது ஆப்கான் போர். முதல் உலகப் போர் முடிவுறுதல். சீக்கியர்கள் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொள்ளுதல்
- 1920-22 காந்தியின் ஒத்துழையாமை இயக்கம்.
- 1921 சுதேச அரசர்களின் சங்கம். மாப்பிள்ளைமார்களின் கலகம், வேல்ஸ் இளவரசர் இந்தியா வருகை
- 1922 ஒத்துழையாமை இயக்கம். கிலாபத் இயக்கம்
- 1922 பிப்ரவரி சௌரி சௌரா கலவரம்
- 1923 சுயராஜ்ய கட்சி துவக்கம். வங்காளத் தேர்தலில் சி. ஆர். தாஸ் வெற்றி
- 1924 லாகூர் முஸ்லீம் லீக் மாநாடு. 1916 லக்னோ உடன்படிக்கைக்கு பிறகு முஸ்லீம் லீக் காங்கிரஸ் தனித்தனி மாநாடுகள் நடத்தியத
- 1924 கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்கம்
- 1927-1929ல் காந்தியடிகள் சத்திய சோதனை என்ற தன்னுடைய சுய சரிதையை குஜராத்தில் எழுதுதல். அதனை சர் முகமது இக்பால் உருது மற்றும் பெர்சிய மொழி பெயர்த்தல்
- 1930 சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் உப்பு சத்தியாகிரகம்
- 1931ல் முதலாம் வட்ட மேசை மாநாடு மற்றும் காந்தி இர்வின் ஒப்பந்தம்
- 1932 இந்திய விமானப் படை துவக்கம். ஜே. ஆர். டி. டாடா விமானம் மூலம் கராச்சியில் இருந்து மும்பைக்கு வருகை. இரண்டாவது சட்ட மறுப்பு இயக்கம்
- 1935 இந்திய அரசு சட்டம்
- 1937ல் ஏப்ரல் 1 முதல் பர்மா இந்தியாவில் இருந்து பிரிதல்

- 1939 இரண்டாம் உலகப்போர் துவக்கம். 9 மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சர்கள் விலகல்
- 1941ல் சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவில் இருந்து தப்பி இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தல்
- 1941ல் ஜப்பான் போரில் நுழைந்து Pearl Harbour தாக்குதல்
- 1942 சிங்கப்பூர் வீழ்ச்சி, கிரிப்ஸ் தூதுக் குழு மும்பையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்க ஒப்புதல்
- 1943 வங்காளத்தில் பஞ்சம்
- 18.2.1946ல் இந்திய கடற்படை கலகம், 19.2.1946ல் கேபினட் மிஷன் நியமனம். 16.5.1946ல் கேபினட் மிஷன் அறிவிப்பு. ஜவஹர்லால் நேரு தலைமையில் 2.9.1946ல் இடைக்கால அரசு.
- 1947 – 8.6.1948ற்கு முன் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கப்படும் என இங்கிலாந்து அறிவித்தல். 20.2.1947ல் மவுண்ட்பேட்டன் பிரபு நியமனம் செய்தல். இந்திய பிரிவினை திட்டத்தை 3.6.1947 அன்று மவுண்ட் பேட்டன் அறிவித்தல். உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபபாய் படேல் இந்திய சிற்றரசுகளை ஒருங்கிணைத்தல். இந்தியா மீது பாகிஸ்தான் காஷ்மீருக்காக போர் தொடுத்தல். இராஜா ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தல்
- 1948 காந்தியடிகள் நாதுராம் கோட்சேவினால் சுட்டுக் கொல்லப்படுதல். காஷ்மீர் மீது ஐக்கிய நாட்டு சபை தீர்மானம்
- 1950 இந்தியா குடியரசு நாடாக அறிவித்தல். சர்தார் வல்லபபாய் படேல் மரணம். டாக்டர் இராசேந்திரபிரசாத் முதல் குடியரசுத் தலைவராக தேர்வு

## காலக் கடிகாரம் - 1950க்குப்பின்

- 1951 முதல் 5 ஆண்டுத் திட்டம் நடைமுறை படுத்துதல்
- 1952 முதல் பொதுத் தேர்தல்
- 1953 எவரெஸ்ட் சிகரத்தின் மீது டென்சிங் மற்றும் ஹில்லாரி ஏறி சாதனை படைத்தல்
- 1954 இந்தியாவில் பிரெஞ்சு குடியேற்றங்கள் இணைதல் ம்றறம் பஞ்ச சீலக் கொள்கை
- 1956 இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் உருவாகுதல். இரண்டாவது 5 ஆண்டுத் திட்டம். பாகிஸ்தானில் புதிய அரசியலமைப்பு உருவாகுதல்
- 1957 இந்தியாவில் இரண்டாவது பொதுத் தேர்தல்.
- 1958 இந்தியாவில் எடை போன்றவற்றில் மெட்ரிக் நடைமுறை அமுல்படுத்துதல்
- 1960ல் பம்பாய் மற்றும் சௌராஷ்டிரா பகுதிகள் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் என மாற்றதுல்
- 1961ல் போர்ச்சுக்கீசியரிடமிருந்து கோவா கைபற்றப்படுதல் மற்றும் அதனை இந்தியாவுடன் இணைத்தல்
- 1961ல் அணிசேரா நாடுகள் உருவாக்குதல்
- 1962ல் இந்தியா சீனா போர். மூன்றாவது பொதுத் தேர்தல்
- 1963ல் தம்பா தளத்தில் முதல் ராக்கெட் ஏவுதல்
- 1964 ஜவஹர்லால் நேரு மரணம். லால்

பகதூர் சாஸ்திரி இரண்டாவது பிரதம அமைச்சராக நியமனம்

- 1965-66ல் இந்தியா பாகிஸ்தான் போர்
- 1966ல் இந்தியா பாகிஸ்தான் தாஷ்கண்ட் ஒப்பந்தம்
- 1966ல் இந்திராகாந்தி பிரதம அமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுதல். பஞ்சாப் பஞ்சாபி பேசும் மாநிலமாக பஞ்சாப்பும் இந்தி பேசும் மாநிலமாக அரியானாவும் பிரிக்கப்படுதல்
- 1967 இந்தியாவில் நான்காவது பொதுத் தேர்தல்
- 1968 காங்கிரஸ் இரண்டாவதாக உடைதல்
- 1969 காங்கிரஸ் கட்சி இரண்டாவதாக பிரிதல். வி.வி.கிரி இந்தியாவின் குடியரசு தலைவராக தேர்ந்தெடுத்தல்
- 1970 மேகாலயா மாநிலம் உருவாகுதல்
- 1971 இமாச்சல பிரதேசம் உருவாகுதல். ஆமெரிக்கா ஜனாதிபதி நிக்சனுடன் இந்திரா காந்தி சந்திப்பு. இந்தியா சோவியத் இராஷ்யாவுடன் ஒப்பந்தம் இந்தியா பாகிஸ்தான் போர். வங்க தேசம் என்ற நாடு உருவாகுதல்
- 1972 சிம்லா ஒப்பந்தம். வுடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களை சீரமைத்து திரிபுரா மற்றும் மணிப்பூர் உருவாகுதல். 5வது பொதுத் தேர்தல்
- 1973 இந்தியா பாகிஸ்தான் டில்லி ஒப்பந்தம்
- 1974ல் பொக்ரானில் முதல் அணு குண்டு சோதனை
- 1975ல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக ஹாக்கி போட்டியில் வெற்றி. முதல் இந்தியாவின் விண்வெளிக் கலம் ஆரிய பட்டா ஏவப்படுதல். சிக்கிம் இந்தியாவின் பகுதியாக அறிவித்தல். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம். ஜீன் 26, அவசர நிலை பிரகடனம் செய்தல்
- 1976 திருமண வயது ஆண்களுக்கு 21 என்றும் பெண்களுக்கு 18 என்றும் நிர்ணயம் செய்தல்
- 1977-78 தேர்தலில் இந்திரா காந்தி தோல்வி மெரார்ஜி தேசாய் ஆட்சி இழத்தல். சரண்சிங் பிரதம அமைச்சர் சூலை 28ல் பதவி ஏற்று ஆகஸ்ட் 28ல் ஆட்சி இழத்தல்
- 1980ல் ஏழாவது பொதுத் தேர்தல். இந்திரா காந்தி வெற்றி
- 1980 ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஹாக்கி விளையாட்டில் தங்கம் வென்றது
- 1981 ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து ரோகிணி ஏவப்படுதல். முதல் தொலைத் தொடர்பு விண்வெளிக் கலம் ஆப்பிள் ஏவப்படுதல்
- 1983 மூன்றாவது உலக கிரிக்கெட் கோப்பையை கபில் தேவ் தலைமையில் வெல்லுதல்
- 1982-84ல் சீக்கியர்கள் பிந்தரன் வாலோ தலைமையில் காலிஸ்தான் என தனி நாடு கோருதல். பொற்கோவிலில் இராணுவம் நுழைதல்
- 31.10.1984 இந்திரா காந்தி படுகொலை செய்யப்படுதல்
- 3.12.1984ல் போபால் யூனியன் கார்பைடு விஷ வாயு சம்பவம்
- 1985 The Narcotic Drugs and Psychotropic Substances Act
- 1985 சிறப்பு பாதுகாப்பு படை (Speical

Protection Group_) உருவாக்கப்பட்டது

- 1985 இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகம்
- 1985 தடா சட்டம்; (Terrorist and Disruptive Activities (Prevention) Act (TADA)
- The National Consumer Disputes Redressal Commission is set up under the Consumer Protection Act of 1986
- 1989ல் 9வது பொதுத் தேர்தல். இராஜீவ் காந்தி தலைமையில் காங்கிரஸ் தோல்வியடைதல். வி. பி. சிங் பிரதம அமைச்சர்
- 1990ல் மண்டல் கமிஷன் அறிக்கை
- 1991 வி. பி. சிங் ஆட்சி நம்பிக்கை பெறுபான்மை இழத்தல். சந்திரசேகர் பிரதமராக பதவி ஏற்று சிறிது காலத்தில் நம்பிக்கை பெறும்பான்மை இழத்தல். ராஜீவ் காந்தி கொல்லப்படுதல். நரசிம்ம் ராவ் பிரதம அமைச்சராக பதவி ஏற்றல்
- 1992-94ல் மன்மோகன் சிங் தலைமையில் நரசிம்மராவ் புதிய பொருளாதார கொள்கை பொருளாதார சீர்திருத்தம் மேற்கொள்ளுதல். பாபர் மசூதி இடித்தல்
- 2000 மே மாதம் இந்தியாவின் மக்கள் தொகை 1 பில்லியன் அடைதல்

**History of School Education Department**

**Year Event**

1826 – Board of Public Instructions established

1841 – Frist High School opened in Madras

1849 – High Schools for Girls Opened

1854 – Directorate of Public Instruction established

1892 – Madras Educational Rules enforced

1910 – Board of Secondary Education established

1911 – SSLC Public Examination conducted for the first time

1921 – Madras Elementary Educational Rules enforced

1924 – Compulsory and Free Education introduced in some slected places

1953 – சட்டக் கல்வி இயக்குநரகம் உருவாக்குதல்

1956 மதிய உணவுத் திட்டம் செயல்படுத்துதல்

1957 – தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநரகம் தோற்றுவித்தல்

1960 – Scheme for Free supply of Uniforms for School Children organized

1964 – Introduction of Free Educationl upto high school level

1965 – கல்லூரி இயக்குநரகம் தோற்றுவித்தல்

1969 தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தோற்றுவித்தல்

1972 பொது நூலகத் துறை இயக்குநரகம் தோற்றுவித்தல்

1973 – Directorate of Government Examinations and SCERT established

1976 – Directorate of Non-formal and Adult Education established

1977 – Higher Secondary Edcuation (10+2) introduced

1981 – Teachers in Panchayat Union Schools become Government Employees

1982 – Nutirition Meal Scheme introduced

1985 – Free supply of Text Books and Uniforms upto VIII Standard extended

1986 – Directorate of Elementary education established. Implementation of National Policy on Education, Teachers in Muncipal / Township / Corporation become Government Employees

1988-1990 – Introduction of revised syllabus based on National Policy for I – XII standards

1990 – Directorate to Teacher Education Research and Training established

2001 – Directorate of Matriculation School formed

**தமிழக வரலாறு**

- தமிழக வரலாற்றில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை 1. புழைய கற்காலம் 2. புதிய கற்காலம் 3. உலோக கலாம் 4. பெருங்கல் காலம் என வகைப்படுத்தலாம்
- ராபட் புருஸ் பூட் முதன் முதலில் குவார்ட்சைட் கருவிகளை சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் கண்டறிந்தார்
- சென்னையை அடுத்துள்ள பல்லவபுரம் சமவெளியிலும், வட மதுரையிலும் இக்காலத்தைச் சேர்ந்த கைக்கோடாரிகள் மற்றும் சிறிய கற்கருவிகள் கிடைத்துள்ளன

**புதிய கற்காலம்**

- தமிழகத்தில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டைம ற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கிடைத்துள்ளன
- புதிய கற்கால மக்கள் இழந்தோரை வழிபட்டனா்

**உலோகக் காலம்**

- மனிதன் அறிந்த முதல் உலோகம் செம்பு
- தென்னிந்தியாவில் மனிதன் இரும்பைப் கண்டறிந்து பயன்படுத்தத் தொடங்கினா்.
- சென்னையை அடுத்துள்ள பெரும்புதூா் என்ற இடத்தில் கற்காலக் கருவிகளுடன் இரும்பினால் ஆன கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன.

**பெருங்கல் காலம்:**

- பெருங்கல் என்ற சொல்லுக்கு நீத்தாா் நினைவுச் சின்னம் என்பது பொருள்
- பெருங்கற்கால நீத்தாா் நினைவுச் சின்னங்கள் காஞ்சிபுரம், வேலூா், திருவண்ணாமலை, கடலூா், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மற்றொரு வகை உடல் அடக்கத்திற்கு மண் தாழி அடக்கம் என்று பெயா். திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் இத்தகையை தாழிகள் கிடைத்துள்ளன
- தங்கம் மற்றும் இரும்பிலானா பொருட்கள் இத்தாழிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. இரும்பினாலான வேல் இங்கு கண்டெடுக்கப்பட்டது.

## தமிழக வரலாறு

**சோழ அரசு: முற்கால சோழரசா்கள்**

1. இளசேட்சென்னி 2. கரிகால சோழன்
2. நெடுங்கிள்ளி 4. நலங்கிள்ளி 5. கிள்ளி வளவன் 6. கோப்பெருஞ்சோழன் 7.

கோச்செங் கண்ணன் 8. பெருநாற் கிள்ளி

**சோழ அரசு:**

- சோழ நாடு, காவிரி சூழ்நாடு, நீர்நாடு மற்றும் புனல் நாடு எனப்பட்டது. காவிரி நதிப் பள்ளத்தாக்கில் நீர் பாய்வதால் சோழ நாடு நீர்வளம் மிக்கதாக விளங்கியது
- சோழர்களின் தலைநகர் உறையூர், துறைமுகம் காவிரிப்பூம்பட்டினம்
- சோழர்களின் சின்னம் புலியாகும்
- கிள்ளி, வளவன், சென்னி, சோழன் போன்ற பெயர்களைத் தாங்கிய சோழநாடு தற்போதைய தஞ்சை திருச்சி மாவட்டம் உள்ளடக்கியதாக இருந்தது

**கரிகாலன்**

- கரிகாலன் சங்ககாலச் சோழர்களின் புகழ் மிக்கவர். பட்டினப்பாலை மற்றும் பொருநராற்றுப்படை கரிகாலனைப் பற்றி விவரிக்கின்றன
- காவிரியின் குறுக்கே கல்லணையை அமைத்தார்.
- சங்ககாலத்தில் புகார் நகரம் சிறந்த வாணிப நகராமாகவும், துறைமுகமாகவும், இரண்டாவது தலைநகரமாகவும் திகழ்ந்தது
- கரிகாலனுக்குப் பிறகு நலங்கிள்ளி, கிள்ளிவளவன், கோப்பெருஞ்சோழன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.
- சங்ககால சோழரின் ஆட்சி கோச் செங்கணான் காலத்தோடு முடிவுக்கு வந்தது
- கரிகாலனால் ஆதரிக்கப்பட்ட புலவர் உருத்திரங்கண்ணனார். இவர் எழுதிய பாடல் பட்டினப்பாலை
- வாகைப்பரந்தலைப் போரில் வென்ற மன்னர் கரிகாலன்
- பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்றபோது பிற்கால சோழர்கள் ஆட்சி துவங்கியது

**சேர அரசு:**

- சங்ககாலச் சேரர்கள் வானவர், வில்லவர், மலையர் எனப்பட்டனர். முதலாவதாக உதியன் சேரலாதன் மரபும், இரண்டாவதாக இரும்பொறை மரபும் சேர நாட்டை ஆட்சி புரிந்தன
- சேரர்களின் தலைநகரம் வஞ்சி, அவர்களின் துறைமுகம் தொண்டி, முசிறி சேரர்களின் சின்னம் வில் அம்பு ஆகும்.
- நெடுஞ்சசேரலாதன் கடம்பர்களை வென்றார். இவர் இமயவரம்பன் என்று அழைக்கப்பட்டார்.
- சங்க காலச் சேரர்களில் தலைசிறந்த மன்னர் செங்குட்டுவன், பதிற்றுப்பத்து, அகநானூறும், செங்குட்டுவன் பற்றிய செய்திகளை கூறியது. இவர் கரிகாலன் சோழ நாட்டை ஆட்சி செய்தபோது சேரநாட்டை ஆட்சி செய்தார்
- செங்குட்டுவனின் இளவலான இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்
- சேரலாதன் பெரும் சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை ஆகியோர் புகழ்மிக்கவராவர். சங்க கால சேர நாடு தற்கால கேரளப் பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. எனவே கேரளபுத்திரர்கள் என்று அழைக்கப்பட்டார்.

**பாண்டிய அரசு:**

- சங்க காலப் பாண்டிய அரசு மதுரை. திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது

- பாண்டிய அரசர்கள் மாறன், வழுதி, செழியன் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்
- மதுரை பாண்டியர்களின் தலைநகராமாகவும் கொற்கை துறைமுகமாகவும், மீன் சின்னமாகவும் விளங்கியது
- முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் தனது வெற்றிகளைப் போற்றும் வகையில் பல வேள்விகளைச் செயததால் பல்யாசாலை என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்
- பூதப்பாண்டியன் என்ற அரசன் சிறந்த வீரனாகவும் புலவரைப் போற்றும் வள்ளலாகவும் விளங்கினான்.
- பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு சிறந்த பெண்பாற்புலவராவார்
- ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற மன்னன் சிலப்பதிகார நாயகனாக கோவலனுக்கு தவறாக தண்டனை வழங்கி பின் உணர்ந்தவுடனே உயிரை விட்டான்
- தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்ற இடத்தில் நடந்த போரில் சேர, சோழ, மற்றும் குறுநில மன்னர்களின் கூட்டுப்படைகளை முறியடித்தான்
- கிரேக்க நாடுகளுடன் தொடர்புடையவர்கள்
- புகழ்பெற்ற மன்னர் - நெடுஞ்செழியன்
- சிறந்த கொடை வள்ளலாக விளங்கிய இவன் மாங்குடி மருதனார் போன்ற பல புலவர்களை ஆதரித்துப் போற்றினார்

**சங்க காலம்**

- தமிழகத்தின் தெளிவான வரலாறு சங்க காலத்திலிருந்தே தொடங்குகிறது. சங்கம் என்ற சொல்லுக்கு கழகம் என்பது பொருள்
- அசோகரின் பாறைக் கல்வெட்டுக்கள் மற்றும் காலவேலனின் அதிகும்பா கல்வெட்டு தமிழக அரசுகளை பற்றி குறிப்பிடுகின்றன
- பழங்காலத் தமிழ் பிராமி எழுத்துக்களைப் பற்றி அறிந்துக்கொள்ள கழுகு மலைக் கல்வெட்டுகள் பயன்படுகின்றன. திருக்கோவிலூர் கல்வெட்டு குறுநில மன்னர்களைப் பற்றியும் தமிழ்ப் புலவர் கபிலரின் துயரமான முடிவைப் பற்றியும் கூறுகிறது
- புகலூருக்கு அருகிலுள்ள ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டு சேர மன்னர்களை பற்றி கூறுகின்றது.
- திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் ராபர் புரூஸ்பூட் என்பவர் அகழாய்வுகளை மேற்கொண்டார்
- புதுக்சேரிக்கு அருகில் **அரிக்கமேடு** என்ற இடத்தில் துப்ரேல் மற்றும் மார்டிமர்வீலர் போன்ற அறிஞர்கள் அகழாய்வுகள் செய்தனர். அப்போது ரோமானிய மட்பாண்டங்கள், கண்ணாடிக்குவளைகள், இரத்தினங்கள், நாணயங்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன
- காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் கீழையூர் என்ற இடத்தில் சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த புத்த விக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- பூம்புகார் கடற்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சங்க காலத்தைச் சேர்ந்த கப்பற் சிதைவுகள் மிகச் சிறந்த தொல்லியல் சான்றாகும்

- மெகஸதனிஸ் எழுதிய இண்டிகா ஸ்ட்ராபோ, பிளினி தாலமி போன்ற ஆசிரியர்களும் சங்க காலத்தைப் பற்றி பல அரிய தகவல்களை அளித்துள்ளனர். இலங்கை நூல்களான மகாவம்சம், தீபவம்சம் ஆகியன சங்கங்களின் காலத்தை நிர்ணயிக்கப் பயன்படுகின்றன
- கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை சங்க காலம் நீடித்தது.

1. தலைச் சங்க காலம் கி. மு. 9654 – கி. மு. 5214
2. இடைச் சங்க காலம் கி. மு. 5210 – கி. மு. 1510
3. கடைச் சங்க காலம் கி. மு. 1500 கி. மு. 350

- முதற் சங்கம் நடைபெற்ற இடம் தென் மதுரை
- இடைச் சங்கம் நடைபெற்ற இடம் காபாடபுரம்
- இப்பகுதிகள் இந்து மாக்கடலில் மூழ்கி விட்டதால் பாண்டிய அரசர்கள் மதுரையில் மூன்றாவது தமிழ்ச்சங்கத்தை நிறுவினர்
- கடைச்சங்கம் நடைபெற்ற இடம் வட மதுரை

**சங்க கால இலக்கியங்கள்**

- தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியன சங்க இலக்கியங்களாகும். இவற்றில் தொல்காப்பியம் மிகவும் தொன்மையான சங்க இலக்கண நூலாகும்
- தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர்
- இடைச் சங்க காலத்தைச் சார்ந்த இந் நூலே நமக்கு கிடைத்த பழைமையான இலக்கண நூலாகும்

**எட்டுத்தொகை நூல்கள்**

1. நற்றிணை 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. கலித்தொகை 5. அகநானூறு 6. புறநானூறு 7. பதிற்றுப் பத்து 8. பரிபாடல்

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி

**பதினெண்கீழ்கணக்கு நூல்கள்:**

1. நாலடியார் 2. நான்மிணக்கடிகை 3. இன்னா நாற்பது 4. இனியவை நாற்பது 5. கார் நாற்பது 6. களவிழி நாற்பது 7. திருகடுகம் 8. ஆசார கோவை 9. புழிமொழி, 10. சிறுபஞ்சமூலம் 11. முதுமொழிக்காஞ்சி 12. ஏலாதி 13. திருக்குறள் 14. ஐந்திணை ஐம்பது 15. ஐந்திணை எழுபது 16. திணைமொழி ஐம்பது 17. துிணைமாலை நூற்றைம்பது 10. கைந்நிலை

**சங்க கால மக்களின் வாழ்க்கை**

- சங்க கால தமிழர்கள் திணைகள் எனப்பட்ட ஐந்து வேறுபட்ட இயற்கையான நிலப்பகுதியில் வாழ்ந்தனர். அவை

1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல் 5. பாலை

**குறிஞ்சி**

- மலையும் அதனைச் சார்ந்த மலைப்பகுதி
- மக்களின் வேட்டுவர், குரவர் எனப்பட்டனர்.
- முருகன் அல்லது சேயோன் என்ற கடவுளை வணங்கினார்

**முல்லை**

- காடும் அதனைச் சார்ந்த பகுதி
- மேய்ச்சல் தொழில் மக்கள் ஆயர் அல்லது கோவலர் எனப்பட்டனர்
- கடவுள் திருமால் அல்லது மாயோன்

**பாலை**

- பாலைவனத்தைக் குறிக்கும்
- மக்கள் மறவர் அல்லது கள்வர் எனப்பட்டனர்
- கொற்றவையை வழிபட்டனர்

**குறுநில மன்னர்கள்**

- தமிழகத்தின் பல பகுதிகளில் குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்தனர். இவர்கள் வேளிர்கள் என்று அழைக்கப்பட்டனா.
- வேளிர்களில் மிகச் சிறந்தவர்கள் கடையேழு வள்ளல்கள் ஆவார்கள்
- பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி ஆகியோர் கடையெழு வள்ளல் ஆவார்
- கபிலர், அவ்வையார், நல்லாதனார், பெருஞ்சித்திரனார் போன்ற தமிழ்ப் புலவர்களை இவர்கள் ஆதரித்தனர்.
- அதியமானின் அவைப் புலவராக அவ்வையார் சிறந்த சமாதானத் தூதுவராக திகழ்ந்தார்

**முக்கிய குறிப்புகள்**

- அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்ற நான்கு பிரிவு காணப்பட்டது
- அவ்வையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார் போன்றவர்கள் முக்கிய பெண்பாற் புலவர்கள்
- கலிங்கம் என்பது மெல்லிய ஆடையைக் குறிக்கும்.
- தொடக்கத்தில் பண்டமாற்று முறை இருந்தது
- இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டனர்
- சங்கு, பாறை, குழல், யாழி போன்ற இசை கருவிகள் இருந்தன
- கரிகாலன் ஏழிசை வல்லவன் என்று போற்றப்பட்டான்
- புகார் நகரில் ஆண்டு தோறும் இந்திர விழி நடைபெற்றது
- அன்றாட நிர்வாகத்தில் அரசனுக்கு உதவியாக இரண்டு குழுக்கள் செயல்பட்டன. அவை ஐம்பெருங்குழு எண்பேராயம்
- சங்க காலத்தில் அரசுகள் மண்டலம், நாடு, வளநாடு, கூற்றம் என அழைக்கப்பட்டன
- கிராமங்கள் மூத்தோர் அடங்கிய அவைகள் மன்றம், பொதியில், அவை மற்றும் அம்பலம் என்று அழைக்கப்பட்டன

**கிரேக்க – உரோமானியத் தொடர்புகள்:**

- சங்க இலக்கியங்கள் கிரேக்கர்களை யவனர்கள் எனக் குறிப்பிடுகின்றன
- பிளினி, டாலமி, புருடார்க், செங்கடற் செலவு என்ற நூலின் ஆசிரியர் ஆகியோர் கிரேக்க – உரோமானியர்களின் வர்த்தக உறவுகளை குறிக்கின்றனர். பிளினி எழுதிய புத்தகத்தின் பெயர் Naturalis Historia (“Natural History”)
- புதுகே என்பது அரிக்கமேட்டை குறிக்கும். இங்கு உரோமானிய வர்த்தக நிலையம் இருந்தது. இங்கு கிரேக்க – உரோமானிய நாணயங்கள் போன்றவை கிடைத்துள்ளது.
- கிரேக்கர்கள் அரிசியை ஓரிச என்று அழைத்தனர்

**சங்கம் மருவிய காலம்: களப்பிரர்கள்**

- கி.பி.3 ஆம் நூற்றாண்டின் மத்தியில் சங்க காலம் முடிவுக்கு வந்தது
- சங்க காலத்தின் இறுதிப் பகுதியை சங்கம்

மருவிய காலம் என்பர்

- சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதிணென்கீழக்கணக்கு நூல்கள்
- இக்காலத்தை இருண்ட காலம் என்று அழைப்பர்
- தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரியபுராணம், வேள்விக்குடி மற்றும் தளவாய்புரம் செப்பேடுகள் திருப்புகலூர் கல்வெட்டு மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள வைகுந்த பெருமாள் கோவில் கல்வெட்டு ஆகியவை களப்பிரர்களை குறித்து அறிய உதவும் சான்றுகளாகும். அச்சுத களப்பாளன் என்ற களப்பிர மன்னனைக் குறித்து யாப்பெருங்கலம் குறிப்பிடுகின்றது.
- வடமொழியும் பிராகிருதமும் அறிமுகப் படுத்தப்பட்டன. வட்டெழுத்து என்ற புதிய வரி வடிவம் வளர்ச்சி பெற்றது
- சீவக சிந்தாமணி, குண்டலகேசி, நிகண்டுகள் இயற்றப்பட்டன
- புத்த, சமண சமயம் வேகமாக பரவியது
- புத்த தத்தரி, புத்த கோஷர் மற்றும் போதி தர்மர் போன்ற புத்த அறிஞர்கள் மற்றும் சர்வநந்தி, வஜ்ரநந்தி போன்ற சமண அறிஞர்கள் வாழ்ந்தனர்.
- திருப்பாதிரிபுலியூரில் சமணப்பள்ளி ஒன்று செயல்பட்டது
- களப்பிரர்களின் இறுதியில் மன்னர்கள் சைவ சமயத்தை தழுவினார்
- பாண்டிய மன்னன் கடுங்கோன் தென் தமிழ் நாட்டையும் பல்லவ அரசன் சிம்ம விஷ்ணு தொண்டை மற்றும் சோழ மண்டலத்தையம் களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றி களப்பிரர் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

**தென்னிந்திய பேரரசுகள் (கி.பி. 601-1300)**

**பல்லவர்கள்:**

- பல்லவர்கள் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துகள் காணப்படுகிறது.
- சோழ அரசனுக்கும் இலங்கையை அடுத்த மணிபல்லவத் தீவைச் சார்ந்த நாக அரச குமாரிக்கும் இடையே தோன்றிய இளந்திரையன் என்ற மரபைச் சார்ந்தவர்கள் (அல்லது) மகாராஷ்டிரத்திலிருந்து வந்த ஆரியர்கள் (அல்லது) பரத்வாஜ் கோத்திரத்தைச் சார்ந்த வட இந்திய பிராமணர்கள் (அல்லது) ஆந்திராவை ஆண்டு வந்த சாதவாகணர்களின் கீழ் சிற்றரசர்களாக இருந்து பின் சாதவாகனர்களின் வீழ்ச்சிக்குப் பின் வலிமை வாய்ந்தவர்களாக உருவானவர்கள்.

**பல்லவர்களை 3 பிரிவாக பிரிக்கலாம்**

1. பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்ட முற்கால பல்லவர்கள்
2. வடமொழியில் பட்டயங்களை வெளியிட்ட இடைக்கால பல்லவர்கள்
3. கிரந்த தமிழ்மொழியில் பட்டயங்களை வெளியிட்ட பிற்கால பல்லவர்கள்

**முக்கிய பல்லவ மன்னர்கள்**

- முதல் பல்லவ மரபினை தோற்றுவித்தவர் வீரகுர்ச்சனன் ஆவார்
- இவரின் மகன் சில ஸ்கந்த வர்மன் இவர் அசுவமேக யாகம் செய்தார். இவருக்கு மகாராசாதிராசன் என்ற பட்டப்பெயர் உண்டு

**விஷ்ணு கோபன்:**

- பல்லவ மன்னர்களில் முக்கியமானவர்

- இவர் சமுத்திர குப்தரால் தோற்கடிக்கப்பட்டவர்

**மகேந்திரவர்மன்:**

- இவரது காலத்தில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி போரிட்டு வெங்கியை கைப்பற்றினான்.
- இவர் மகேந்திரமங்கலத்தில் (மாமண்டூர்) சித்தமேகத் தாகடகம் என்ற ஏரி அமைத்தார்
- சுமணத்தை ஆதரித்த இவர் பிற்காலத்தில் சைவ மதத்திற்கு மாறியதால், சமண மதம் தனது செல்வாக்கினை இழந்தது
- இவர் சித்தரகார புலி, விசித்திர சித்தன் மத்த விலாசன் என்று அழைக்கப்பட்டார்
- குடுமியான் மலைக் கல்வெட்டு இவரது இசைப் புலமையை கூறுகின்றது

**முதலாம் நரசிம்மவர்மன்:**

- இவர் மாமல்லன் எனப்பட்டார்
- யுவான் சுவாங் கி.பி. 640ல் காஞ்சிபுரம் வந்தார்.
- பின் சாளுக்கிய நாட்டின் மீது போர் தொடுத்து அவர்களின் தலைநகர் வாதாபியை தீக்கிரையாக்கினார்
- இதனால் வாதாபி கொண்டான் எனப் பெயர் பெற்றார்
- சிங்கள மன்னன் மானவர்மனுக்கு உதவிகள் செய்து ஆட்சியுரிமையை பெற்றுத் தந்தார்
- சேர, சோழ, பாண்டியர்களை போரில் வென்றார்
- இவரின் புகழ் பெற்ற தளபதி பரஞ்சோதி. இவர் சிறுதொண்ட நாயனார் என அழைக்கப்பட்டார்.
- மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோவில்கள் பெரும்பாலும் நரசிம்ம வர்மனும் அவரது மகன் இராஜசிம்ம வர்மனாலும் கட்டப்பட்டது.
- சிம்ம விஷ்ணு இவர் சோழர், பாண்டியர் மற்றும் களப்பிரர்களை வென்றதால் அவனிசிம்மன் எனப்பெயர் பெற்றார்

**பல்லவர்களின் முக்கிய நகரங்கள்**

1. காஞ்சிபுரம் 2. மாமல்லபுரம் 3. மாமண்டூர் 4. உத்திரமேரூர் 5. வூதாபி 6. திருவதிலை

**பல்லவர்களின் கலைத் தொண்டு:**

**கட்டிடக்கலை: வகைகள்**

1. பாறைக் குகைகள் 2. ஒற்றைக் கல் இரதங்கள் 3. கட்டுமானக் கோயில்கள்

**சிற்பக் கலை: வகைகள்**

1. குடைவரைக் கோயில்கள் 2. ஒற்றைக் கல்கோயில்கள் 3. கட்டிடக் கோயில்கள் 4. மண்டபங்களைக் கொண்ட கோயில்கள்

**குடைவரைக் கோயில்கள்:**

- இவை பெரிய கற்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பெற்ற கோயில்கள்
- இவற்றை மகேந்திரவர்மர் அமைத்தார்

**காணப்படும் இடங்கள்**

- மகேந்திர வாடி, பல்லாவரம், தளவானூர், நாமக்கல், திருச்சி, வல்லம் மற்றும் மாமல்லபுரம்
- மாமல்லபுரத்தில் உள்ள மும்மூர்த்தி குகை, கொற்றவைக் கோயில், கோடிக்கல் மண்டபம் ஆகியவை குடைவரைக் கோயில்கள் ஆகும்

**ஒற்றைக்கல் கோயில்கள்:**

- நரசிம்மவர்மன் காலத்தில் ஒற்றைக்கல் கோயில்கள் உருவாக்கப்பட்டது
- மாமல்லபுரத்தில் உள்ள ஏழு கருப்பு

பகோடாக்கள் பஞ்ச பாண்டவர் இரதங்கள், மகிடாகுரமண்டபம், யானை, நந்தி, சிங்கம், அர்சுனன் தவம் செய்யும் காட்சி ஆகியவை ஒற்றைக்கல் கோயில்கள் ஆகும்.

**கட்டிடக் கோயில்கள்:**

- இராச சிம்ம வர்மனால் கட்டப்பட்ட மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோவில் மற்றும் காஞ்சி சைலாச நாதர் கோயில்கள்

**மண்டபங்களைக் கொண்ட கோயில்கள்:**

- அபராஜிதவர்மன் காலத்தில் கட்டப்பட்டவை.
- திருவதிகை வீரட்டானேசுவர் கோயில் மற்றும் திருத்தணிகை கோயில்

**பல்லவர்கள் கட்டிய பிற முக்கிய கோவில்கள்:**

**மகேந்திவரவர்மன் கட்டியது:**

- மகேந்திரவாடியில் உள்ள மகேந்திரப்பள்ளி சிவன்கொயில் மற்றும் திருவதிகையில் கட்டப்பட்ட குணபர ஈச்சரம் புதுக்கோட்டை குன்றாண்டார் கோவில்

**இரண்டாம் நந்திவர்மன் கட்டியது**

- காஞ்சி – வைகுந்தப் பெருமாள் கோயில்
- கூரம் - கேசவப் பெருமாள் கோவில்

**பல்லவர்கள் கால நுண்கலைகள்:**

- இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றை ஒழுங்கே வளர்த்தவர் மகேந்திரவர்மன் பல்லவன் ஆவார். எனவே இவர் சித்திரகாரப்புலி என அழைக்கப்பட்டார்.
- சித்தன்னவாசல் ஓவியங்கள், மாமண்டூர் குகை ஓவியங்கள் காஞ்சி கைலாயநாதர் கோவில் ஓவியங்கள், பனைமலைக் கோயில் ஓவியங்கள் ஆகியவை பல்லவர்கால ஓவியங்கள்

**பல்லவர்கள் கால இசைக் கருவிகள்:**

- யாழ், விணை, குழல், கின்னரி மத்தளம், குடமுழா

**பிறமுக்கிய குறிப்புகள்:**

- மத்த விலாச பிரகசனம் என்ற நூலை எழுதியவர் மகேந்திர வர்மன்
- பல்லவர்களின் கடற்கரைப் பட்டினம் - மாமல்லபுரம்
- முதலில் சமண மதத்தையம் பின் சைவ மதத்தையும் பின்பற்றியவர் மகேந்திரவர்மன் இவரை சைவ மதத்திற்கு மாற்றியவர் அப்பர்
- நரசிம்ம பல்லவர் காலத்தில் யுவான் - சுவாங் காஞ்சிபுரத்திற்கு வந்தார்
- பிற்கால பல்லவமரபை நிறுவியவர் சிம்ம விஷ்ணு
- இராச சிம்மன் அவையில் இருந்த புலவர் - தண்டி
- தண்டி – தண்டியலங்காரம் காவியதரிசனம், குமாரசரிதம் ஆகிய நூல்களை எழுதினார்
- பாரவி எழுதியநூல் சிராதர் ஜீனியம்
- பல்லவர்களின் கடைசி மன்னன் - அபராஜிதவர்மன்
- பல்லவர்காலத்தில் திருமந்திரம் என்ற நூலை எழுதிய திருடூலர் வாழ்ந்தார். இவர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை வழங்கினார்.

**பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள்:**

- திருநாவுக்கரசர் மற்றும் திருஞானசம்பந்தர்

**பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள்:**

- திருமங்கையாழ்வார் மற்றும் திருப்பாணாழ்வார்

**காஞ்சி பல்கலைக் கழகம்**

- பண்டைய இந்தியாவின் புகழ்பெற்ற

பல்கலைக்கழகம்

**இங்கு பயின்றவர்கள்:**

1. திக்நாகர் - பௌத்த சமய நூலாசிரியர்
2. மயூரசர்மன் - கடம்ப மரபினை நிறுவியர்
3. தருமபாலர் - நாளந்தாவின் பேராசிரியர்

- மகேந்திரவர்மனின் இசைத் திறனுக்கு எடுத்துக்காட்டு குடுமியான் மலைக் கல்வெட்டு ஆகும்
- மேலும் பல்லாவரம் குகைக் கோயில் கல்வெட்டு சங்கிரணசாதி என்ற இசை குறிப்பினைத் தகுந்தது.

  **மொழி:** பல்லவர்கள் முதன் முதலில் சமண மதத்தை சார்ந்தவர்களாக இருந்தததால் பிரகிருத மொழி பின்பற்றப்பட்டது. பிற்காலத்தில் சமஸ்கிருத மொழி பின்பற்றப்பட்டது. பல்லவர்கள் சைவத்திற்கு மாறியவுடன் தமிழ் மொழி பின்பற்றப்பட்டது.

**இடைக்கால சோழரசர்கள்**

விஜயலாய சோழன் - 846 – 881

ஆதித்ய சோழன் - 871 – 907

முதலாம் பராந்தக சோழன் - 907 – 953

கண்டரதித்தியன் - 950 – 957

அரிஞ்சய சோழன் - 956 – 957

இரண்டாம் பராந்தக சுந்தர சோழன் - 957 – 970

உத்தம சோழன் - 970 – 985

இராச இராச சோழன் - 985 – 1014

இராசேந்திர சோழன் - 1012 – 1044

இராசாதி ராச சோழன் - 1018 – 1054

இரண்டாம் இராசேந்திர சோழன் - 1051 – 1063

வீர இராசேந்திர சோழன் - 1063 – 1070

ஆதி ராசேந்திர சோழன் - 1070

**சாளுக்கிய சோழர்கள்**

**முதலாம் குலோத்துங்கன் - 1070 – 1120**

விக்ரம சோழன் - 1118 - 1136

**இரண்டாம் குலோத்துங்கன் - 1133 - 1150**

இரண்டாம் இராஜ இராஜ சோழன் - 1146 – 1163

இரண்டாம் இராசாதி ராச சோழன் - 1163 – 1178

மூன்றாம் குலோத்துங்கன் - 1178 – 1218

மூன்றாம் இராஜ இராஜ சோழன் - 1216 – 1256

மூன்றாம் இராசேந்திர சோழன் - 1246 - 1279

- திருப்புறம்பியம் போரினால் பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்ற போது சோழ அரசு மறுபடியும் தலைதூக்க ஆரம்பித்தது
- விஜயபாலன் எனும் சோழ மன்னரால் மீண்டும் தஞ்சை சோழர் ஆட்சி துவங்கப்பட்டது
- சோழர்களின் தலைநகரம்: தஞ்சாவூர்
- ஆரசாங்க சின்னம் : புலி

**சான்றுகள்**

1. மகாவம்சம் 2. மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் 3. ஆல்புரூணி எனும் முகமதிய வரலாற்று ஆசிரியரின் குறிப்புகளாகும்

- தஞ்சை பெரிய போவில் பிரகதீஸ்வரர் ஆலய கல்வெட்டுகள்
- மூன்றாம் இராஜேந்திரனின் ஆட்சிமுறையைப் பற்றி கூறும் திருவந்திபுரம் கல்வெட்டுகள்
- கிராம நிர்வாகம், வரி வசூல்முறை, நில வருவாய் முறை ஆகியவை குறித்த உத்திரமேரூர் கல்வெட்டுகள்
- அன்பில் செப்பேடுகள், கன்னியாகுமரி கல்வெட்டுகள், கரந்தை செப்பேடுகள் மற்றும் திருவாலங்காடு செப்பேடுகள் மற்றும்

திருவலங்காடு செப்பேடுகள்

- கங்கைகொண்ட சோழபுரம் கோவில் தாராபுரத்திலுள்ள ஐராவதீஸ்வரர் ஆலயம் திருபுவனத்திலுள்ள கம்பகரேஸ்வரர் ஆலயம்.
- இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் வாழ்ந்தார்
- ஜெயம் கொண்டாரின் கலிங்கத்துப்பரணி ஒட்டக்கூத்தரின் மூன்று உலாக்கள். குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்
- வீர சோழியம், நவசோழ சரிதம், ஸ்தல புராணம், சோழ வம்ச சரிதம் ஆகியவை முக்கால சோழவம்சர் பற்றி அறிய உதவும் சான்றுகள் ஆகும்
- பிற்கால சோழ அரச மரவை உருவாக்கியவர் விஜயபாலன்
- கி. மு. 850ல் தஞ்சையைக் கைப்பற்றி சோழ நாட்டின் தலைநகராக்கினார்.
- பல்லவ மன்னர் அபராஜிதனை தோற்கடித்து அவரது இராஜ்ஜியத்தை கைப்பற்றினார்
- இவருக்குப் பின் ஆதித்திய சோழன் ஆட்சிக்கு வந்தார். இவர் அபராஜிதவர்மன் என்ற பல்லவ மன்னனை தோற்கடித்து ஆட்சியை நிலை நாட்டினார்.

முதலாம் பராந்தகன் கி. பி. 907 – கி. பி. 953

- உத்திரமேரூர் கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் பற்றி குறிப்பிடுகிறது
- இவர் ஆதித்தயனின் மகனாவார்
- பாண்டிய மன்னனைத் தோற்கடித்து மதுரை கொண்டான் என்றும் இலங்கை மற்றும் பாண்டிய அரசர்களின் கூட்டு இராணுவத்தை தோற்கடித்து மதுரையும் ஈழமும் கொண்டான் எனப் பெயர் பெற்றார்
- சிதம்பரத்தில் உள்ள நடராஜர் ஆலயத்திற்கு பொன்னல் கூரை வேய்ந்தார். எனவே இவர் பொன்வேய்ந்நத சோழன் என்றழைக்கப்பட்டார்
- இராஷ்டிரகூடவரசர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தக்கோலம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்றார்

**முதலாம் இராசராச சோழன் கி. பி. 985 – கி. பி. 1014**

- இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மகா தேவிக்கும் மகனாகப் பிறந்தவர்
- திருவலங்காடு செப்பேடுகள் இவரைப் பற்றி குறிப்பிடுகின்றது
- சேரரை திருவனந்தபுரத்தில் தோற்கடித்தார்
- கொல்லத்தை சார்ந்த பாஸ்கர ரவி என்பவரை தோற்கடித்து காந்தளூர் சாலை கலமருதருளிய என்ற பட்டத்தை பெற்றார்
- பாண்டிய மன்னன் அமர புஜங்களை வென்றார். இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தாவை வென்று அனுராதாபுரத்தை வென்றார். புலனருவா நகரத்தை புதிய தலைநகராக்கினார்
- சேர, சோழ, பாண்டியர்களை வென்றதால் மும்முடிச் சோழன் எனப்பட்டார்
- விளிங்கம் பகுதியை வென்று திக்விஜயம் நடத்தினார்
- நில அளவை முறையை அறிமுகப்படுத்தினார்
- இராச இராச சோழனுக்கு சிவபாத சேகரன். திருமறைகண்ட சோழன், அருண்மொழி, இராசகேசரி என்ற பட்டப் பெயர்கள் உண்டு
- தஞ்சையில் பெரிய பிரகதீஸ்வரர் எனப்படும் சிவன் கோயில் அமைத்த மன்னன் முதலாம்

ராசராசன் இக்கோவில் சோழர்களின் கட்டிடகலைக்கு எடுத்துக்காட்டாகும்

- நாகப்பட்டினத்தில் அமைந்த புத்த விக்கிரகத்திற்கு இராச இராசப் பெரும்பள்ளி என பெயரிடப்பட்டது
- ஆணைமங்கலம் கிராமத்தை புத்தமடத்திற்கு நன்கொடையாக வழங்கினார்
- இராச இராச சோழனின் பட்டத்து மனைவி உலக மாதேவி

**முதலாம் இராஜேந்திரன் கி.பி. 1012 – கி.பி. 1044**

- இவர் முதலாம் ராசராசனின் மகனாவர்
- முதலாம் இராஜேந்திரனைப் பற்றி திருவலங்காடு செப்பேடுகள், கரந்தை செப்பேடுகள் ஆகியன கூறுகின்றன
- வங்காள அரசன் முதலாம் மகிபாலனை தோற்கடித்து கங்கைத் தண்ணீரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகே உள்ள சோழ கங்கம் என்ற நீர்ப்பாசன ஏரியில் சேர்த்தார். எனவே கங்கை கொண்டவன் என்று அழைக்கப்பட்டார்
- இலங்கை, வங்காளம், கடாரம் மற்றும் மலேசியா பகுதிகளை வென்றதால் கடாரம் கொண்டான் என்ற கட்டம் சூட்டப்பெற்றது
- முகொண்டான், பண்டித சோழன், உத்தம சோழன் போன்ற பல பட்டங்களும் சூட்டப்பட்டன.
- இவர் தன் தலைநகரை தஞ்சையில் இருந்து கங்கை கொண்ட சோழப்புரத்திற்கு மாற்றினார்

**அதிராஜேந்திர சோழன்**

- இவர் கிருமி கண்ட சோழன் என்று அழைக்கப்படுகிறார்
- விஜயாலய சோழ மரவின் கடைசி மன்னர் இவரே

**முதலாம் குலோத்துங்கன் கி. பி. 1070 – கி. பி. 1120**

- இம்மரவு சாளுக்கிய சோழ மரபு என்று அழைக்கப்படுகிறது.
- குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், விக்கிரமசோழன் உலா ஆகிய நூல்கள் குலோத்துங்கனின் நிர்வாகம், இராணுவ வெற்றிகள் பற்றி விளக்குகின்றன
- குலோத்துங்கன் காலத்தில் சோழப்பேரரசு மிகவும் பரந்து காணப்பட்டது. வினயாதித்யாவிடம் இருந்து வெங்கியின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- வரி சுமையில் இரந்து மக்களை மீட்டதால் இவர் சுங்கம் தவிர்த்த சோழன் என்ற சிறப்புப் பட்டம் பெற்றார்
- முதலாம் குலோத்துங்கன் இலங்கை மன்னன் விஜயபாகுக்கு தன் மகளைக் கொடுத்து நல்லுறவு செய்து கொண்டார்
- கலிங்க நாட்டை வென்றார். செயங்கொண்டார் என்பவர் கலிங்கத்துப்பரணி என்ற நூலை எழுதினார்
- இவர் திருநீற்றுச் சோழன் என்றும் அழைக்கப்படுகிறார்.

**இரண்டாம் குலோத்துங்கன் 1133 - 1150**

- இவர் அவையில் சேக்கிழார் இருந்தார். இவர் அறுபத்து மூன்று சிவனடியார்களை கொண்டு பெரியபுராணம் அல்லது சிறுத்தொண்டர் புராணம் என்ற நூல் எழுதினார்
- இவர் தீவிர சைவ மதத்தினைச் சார்ந்தவர்.

இவர் இராமானுஜரை சைவ மதத்திற்கு மாறுமாறு கேட்டுக்கொண்டார்

- இராமானுஜர் சோழ நாட்டில் இருந்து வெளியேறி மைசூர் அருகே உள்ள ஹெய்சல அரசனிடம் சென்றார்
- இவரது அவையில் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகிய தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்தனர்.

**சோழர்கள் ஆட்சி**

- பேராசிரியர் K. V. நிலுகண்டசாஸ்திரி சோழர்கால மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையைக் குறித்து குறிப்பிடுகின்றார்
- முழுதஞ்சை மாவட்டம், திருச்சியின் ஒருபகுதி, புதுக்கோட்டை தென்னாற்காகு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக சோழ மண்டலம் இருந்தது.
- சோழப்பேரரசு 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலங்கள் எனப்பட்டது
- ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்கள் அல்லது வளநாடுகளாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கோட்டமும் நாடுகளாகவும் ஒவ்வொரு நாடும் ஊர் அல்லது கிராமங்களாக பிரிக்கப்பட்டது
- சோழ அரசாங்கத்தின் முக்கிய வருவாய் ஆன நில வருவாய் பொதுவாக விளைச்சலில் ஆறில் ஒரு பாகமாக (1/6) இருந்தது.
- சோழர்கள் எடையின் மீது எடைவரி என்ற வரியையும் உப்பின் மீது உப்பாயம் என்ற வரியையும் சுங்கவரியாக வரியாயம் என்ற வரியையும், வணிகத்தின் மீது செட்டிறை என்ற வரியையும் எண்ணெய் பொருட்களின் மீது செக்கிறை என்ற வரியையும் பூக்களின் மீது கடைப்பூ என்ற வரியையும் பொற்கொல்லர்கள் மீது ததர்பட்டம் என்ற வரியையும் கடைகள் மீது அங்காடி பட்டம் என்ற வரியையும் விதித்தனர்.
- சோழ இராணுவம் 70 படைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. சோழ ராணுவ யானைப்படையில் 60,000 யானைகள் இருந்தன. விலையுயர்ந்த அரேபியக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டு குதிரைப்படை பலப்படுத்தப்பட்டது.
- பிராமணர்கள் குடியிருந்த பகுதி சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது

**குடவோலை முறை**

- சோழர்களின் சிறப்பம்சம் கிராம கூட்டமைப்பாகும்.
- குடவோலை முறையை அறிமுகப்படுத்தியவர் முதலாம் பராந்தகச் சோழன்

**உத்திரமேரூர் கல்வெட்டு**

- கிராம வாரியம் மற்றும் சபைகளின் உள் குடவோலை முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகின்றது
- ஒவ்வொரு கிராமமும் 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதிநிதி குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்
- குடவோலை முறையில் தேர்ந்தெடுக் கப்படுபவர் 35 முதல் 70 வயதுக்குள் இருக்க வேண்டும். அவர் தனக்கு சொந்தமாக 1 வேலி நிலம் உடையவராகவும் வரி செலுத்துபவராகவும், சொந்த நிலத்தில்

வீடு உடையவராகவும் இருக்க வேண்டும்.

- அடிமை முறை இருந்தது
- வலங்கை இடங்கை சமுதாயப் பிரிவுகள் இருந்தன. வலங்கை பிரிவில் 98 சாதிகளும், இடங்கை பிரிவில் 98 சாதிகளும் இருந்தது
- சோழ அரச குடும்பத்துப் பெண்களிடையே சமுதாயத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது
- சீன நாட்டுடனும் சோழர்கள் வாணிப உறவு வைத்திருந்ததாக இபின்பட்டுடா, மார்கோ போலோ போன்றவர்களின் குறிப்புகள் கூறுகின்றது
- மகாபலிபுரம், காவிரிப்பூம்பட்டினம், சேலையூர், கொற்கை ஆகியவை சோழத்துறை முகங்களாகும்
- சோழ அரசர்கள் சைவர்கள் ஆவர்
- இராமானுஜர் சோழர்கள் காலத்தில் வாழ்ந்தார்
- நம்பி ஆண்டார் நம்பி சைவ முனிவர்களின் இசைப் பாடல்களையும், நாதமுனி என்பவர் வைணவ ஆழ்வார்களின் பக்திப் பாடல்களையும் தொகுத்தார்கள்.
- தமிழ் புலவர்களான கல்லாடனார், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், அவ்வையார், திருத்தக்கத் தேவர் ஆகியோர் சோழர்கள் காலத்தில் வாழ்ந்தனர். காவியங்கள், பரணி, கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகிய இலக்கிய வகைகள் சோழர் காலத்தில் புகழ் பெற்றிருந்தன.
- திருத்தக்கத் தேவர் சீவக சிந்தாமணியை எழுதினார்
- முதலம் குலோத்துங்கன் காலத்தில், இரண்டாம் கலிங்கத்துப் போரைப் பற்றி கலிங்கத்துப்பரணி என்ற நூலை ஜெயங்கொண்டார் எழுதினார்
- விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன் ஆகிய மூன்று அரசர்களின் அவையில் அவைப்புலவராக ஒட்டக்கூத்தர் இருந்தார்
- விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கன் உலா, இராஜராஜன் உலா என்ற மூன்று உலா நூல்களையும், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், சரஸ்வதி அந்தாதி என்ற நூலையம் ஒட்டக்கூத்தர் இயற்றினார்
- கம்பராமாயணத்தை கம்பர் எழுதியதால் மூன்றாம் குலோத்துங்கன் கம்பநாடு என்ற பகுதியையும், கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தையும் வழங்கி கம்பரை கவுரவித்தார். சடகோபர் அந்தாதி, மும்மணிக்கோவை ஆகிய நூல்களையும் கம்பர் எழுதினார்
- புகழேந்தி நளவெண்பாவை இயற்றினார். ஆத்திச்சூடி மற்றும் கொன்றைவேந்தன் ஆகிய நூல்களை அவ்வையார் எழுதினார்
- குலோத்துங்கன் கோவை, தஞ்சைவாணன் கோவை ஆகியவை சோழர்கால இலக்கியங்கள் ஆகும்
- மகா காவியங்களான வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமாரகாவியம், யசோதகாவியம், சீரச் சோழியம், தண்டியலங்காரம், நன்னூல் ஆகியவை இக்காலத்தை சார்ந்தவை
- தேவாரம், நந்திக்கலம்பகம், பரதவெண்பா, சிவஞான போதம் ஆகியன சோழர்காலத்தில் எழுதப்பட்டன. இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு விளக்கவுரை

எழுதினார்.

- புதுக்கோட்டை பகுதிகளில், முற்கால சோழமன்னர்கள் கட்டியப ல கோயில்கள் இன்றும் காணப்படுகின்றன.
- ஆரம்ப காலத்தில் சோழ மன்னர்கள் செங்கற்கோவில்களையும் பிற்காலத்தில் கற்கோவில்களையும் கட்டினார்
- முதல் சோழ அரசர் விஜயபாலயன், நார்த்தாமலையில் ஒரு கோயிலையும், முதலாம் ஆதித்தியனின் காலத்தில், புதுக்கோட்டை பகுதியில் உள்ள கன்னனூரில் பாலசுப்பிரமணியன் கோவிலும், திருக்கட்டளைக் கோவிலும் கட்டப்பட்டன. கும்பகோணத்தில் உள்ள நாகேஸ்வரர் கோவில் திருச்சி மாவட்டம், ஸ்ரீனிவாச நல்லூரில் உள்ள கோரங்கநாதர் ஆலயம் முதலாம் பராந்தகனால் கட்டப்பட்டது
- கொடும்பலூரில் உள்ள மூவர் கோவில் சோழர்கால கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் ஒரு சிறந்த எடுத்தக்காட்டு ஆகும்
- தென் இந்தியாவின் தலை சிறந்த வரலாற்று சின்னமாக தஞ்சையில் உள்ள பிரகதீஸ்பரர் கோயில் மதிப்பிடப்படுகிறது.
- முதலாம் குலோத்துங்கன் சூரியக் கடவுளுக்கென்று கும்பகோணத்தில் ஒரு கோவிலைக் கட்டினார். தென் இந்திய கட்டிடக்கலை வரலாற்றில் சூரியக் கடவுளுக்காக கட்டப்பட்ட முதல் கோவில் இதுதான். இரண்டாம் இராஜராஜன் தாராசுரத்தில் ஐராவதீஸ்வரர் கோவிலைக் கட்டினார்.
- சோழர்கால கோவில்களில் கர்ப்பக் கிரகங்கள் சதுர, வட்ட வடிவங்களில் காணப்படுகின்றன
- கோவில்களில் தூண்களால் அமைக்கப்பட்ட மண்டபங்கள் காணப்படுகின்றன. அவற்றிற்கு அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்டபம் என்று பெயர்
- கோரங்கநாதர் ஆலயத்திலும் நாகேஸ்வர சுவாமி கோவில் சுவர்களிலும் மிகச் சிறந்த உருவப்படங்கள் காணப்படுகின்றன. காளஹஸ்தி ஆலயத்தில் சோழமாதேசி, மூன்றாம் குலோத்துங்கள் ஆகியோரது உருவப்படங்கள் காணப்படுகின்றன.
- இசையில் 23 பண்கள் 7 ஸ்வரங்களாகிய ச, ரி, க, ம, ப, த, நி உபயோகிக்கப்பட்டன
- மேளம், உடுக்கை, வீணை, புல்லாங்குழல் ஆகியன புகழ் மிகுந்த இசைக்கருவிகள் ஆகும். சுகடக்கோட்டிகள் தலைமையில் இசைக் கலைஞர்கள் குழு இருந்தது
- சோழர் காலத்தில் கதகளி, பரதநாட்டியம் ஆகிய இருவகை நடனங்கள் போற்றி மதிக்கப்பட்டன
- சிவபெருமானே கரனவழக நடனத்திற்கு உதாரண நாயகராக கருதப்பட்டார்
- முதலாம் இராஜராஜன் தஞ்சை பெரிய கோவிலில் நாட்டியக்கலையை வளர்க்க 400 நடனப்பெண்களை பணியில் அமர்த்தினார்
- திருவிழாக்கலங்களில் இராஜராஜேஸ்வர நாடகம், இராஜராஜவிஜயம் ஆகிய நடாகங்கள் நடத்தப்பட்டன
- ஆரியக் கூத்து, சாக்கியக் கூத்து, சந்திக் கூத்து ஆகியவற்றைப் பற்றி, கல்வெட்டுகள் கூறுகின்றன.

**பாண்டியப் பேரரசு**

- கடுங்கொன் கி.பி. 560 – கி.பி. 590
- மாற வர்மன் அவனி சூளாமணி பாண்டியன் கி. பி. 590 – கி. பி. 620
- செழியன் சேந்தன் கி. பி. 620 – கி. பி. 640
- அரிகேசரி பராங்குச மாறவர்ம இராஜசிங்கன் கி. பி. 640 – கி. பி. 674
- கோச்சடைய இரணதீரன் கி. பி. 675 – கி. பி. 730
- அரிகேசரி பராங்குச மாறவர்ம இராஜசிங்கன் கி. பி. 730 – கி. பி. 765
- பராந்தக நெடுஞ்செழியன் கி. பி. 765 – கி. பி. 790
- இரண்டாம் ராஜசிங்கன் கி. பி. 790 – கி. பி. 800
- முதலாம் வரங்குணன் கி. பி. 800 – கி. பி. 830
- ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப கி. பி. 830 – கி. பி. 862
- இரண்டாம் வரங்குணன் கி. பி. 862 – கி. பி. 880
- பராந்தக வீர நாராயணன் கி. பி. 862 கி. பி. 905
- மூன்றாம் இராஜசிம்மன் கி. பி. 905 – கி. பி. 920
- முதலாம் சுந்தரபாண்டியன்
- முதலாம் வீரபாண்டியன்
- இரண்டாம் வீரபாண்டியன்
- ஆமர புஜங்க பாண்டியன்
- ஜடவர்ம சுந்தர சோழ பாண்டியன்
- மாறவர்ம விக்ரம சோழ பாண்டியன்
- ஜடவர்மன் சோழ பாண்டியன்
- ஸ்ரீ வல்லப மணக்குளச்ச பாண்டியன் கி. பி. 1101 – 1124
- மாறவர்மன் சீர் வல்லப பாண்டியன் கி. பி. 1132 – 1162
- பராக்கிரம பாண்டியன் கி. பி. 1161 – கி. பி. 1162
- மூன்றாம் குலசேகர பாண்டியன்
- மூன்றாம் வீரபாண்டியன்
- ஜடவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியன் - கி. பி. 1175 – 1180
- ஜடவர்மன் குலசேகர தேவ பாண்டியன் கி. பி. 1180 – 1216
- முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1216 – 1238
- இரண்டாம் சுந்தரவர்ம குலசேகரன் கி. பி. 1238 – 1240
- இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1241 – 1251
- முதலாம் ஜடவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1251 – 1268
- முதலாம் மாறவர்மகன் குலசேகர பாண்டியன் கி. பி. 1268 – கி. பி. 1308
- நான்காம் சுந்தரபாண்டியன் கி. பி. 1309 – கி. பி. 1327
- நான்காம் வீரபாண்டியன் கி. பி. 1309 – கி. பி. 1345
- சங்க காலத்தில் ஆட்சி செய்த பாண்டியர்கள் சங்க கால பாண்டியர் என்று அழைக்கப்பட்டனர்
- களப்பிரர்களை தோற்கடித்து மீண்டும் ஆட்சி

செய்த பாண்டியர்கள் முதலாம் பாண்டியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் காலம் கி. பி. 550 முதல் கி. பி. 950 வரை ஆகும்

- பல்லவர்கள் மற்றும் சோழர்கள் வீழ்ச்சிக்கு பிறகு கி. பி. 1190 – கி. பி. 1310 வரை தமிழகத்தை ஆண்ட பாண்டியர்கள் இரண்டாம் பாண்டியர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆக மொத்தத்தில் சுமார் 400 ஆண்டுகள் தமிழகத்தை பாண்டியர்கள் மதுரையை தலைநகரமாக கொண்டு ஆண்டனர்
- பாண்டியரின் நாணயங்களில் ஒரு பக்கத்தில் ஒரு மீனோ அல்லது ஒரு ஜோடி மீன்களோ காணப்படுகிறது. மறுபக்கம் அந்த நாணயத்தை வெளியிட்ட மன்னனின் பெயர் காணப்படுகிறது
- மதுரை மீனாட்சி கோவிலும், ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோவிலும் பாண்டியரின் சிறப்பு மிகுந்த நினைவுச் சின்னமாகும்.
- வாசப் மார்க்கோபோலோ போன்ற அயல்நாட்டு எழுத்தாளர்கள் பாண்டிய மன்னர்களின் ஆட்சியைப் பற்றி கூறுகின்றது.

**பாண்டியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்: செப்பேடுகள்:**

- வேள்விக்குடி செப்பேடுகள், சீவரமங்கலம் செப்பேடுகள், தளவாய்புரம் செப்பேடுகள், சின்னமனூர் செப்பேடுகள், பாண்டிய மன்னர்களின் நிர்வாகம் மற்றும் போர் வெற்றிகள் குறித்து கூறுகின்றன

**கல்வெட்டுகள்:**

1. சிதம்பரம் கல்வெட்டுகள்: பாண்டியர்களின் போர் திறனைப் பற்றி குறிப்பிடுகிறது
2. புதுக்கோட்டை மாறவர்மன் கல்வெட்டுகள்: வரி வசூல், நீதி நிர்வாகம் மற்றும் நிள அளவை பற்றியும் குல சேகர பாண்டியன் குறித்தும் குறிப்பிடப்படுகிறது

- திரிவந்திபுரம் கல்வெட்டுகள், ஸ்ரீரங்கம் கல்வெட்டுகள் பாண்டியர்களின் போர் முறைகள் பற்றியும் கூறுகின்றது.
- முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்யடினைப் பற்றிய செய்திகள், குடுமியான்மலை, ரங்கமலை, தென்காசி, திருவட்டீஸ்வரம் ஆகிய கல்வெட்டுகளில் காணப்படுகின்றன
- முதலாம் மாறவர்மன் குலசேகரன் சேர, சோழரை வெற்றிக்கொண்டது பற்றி திருநெல்வேில கல்வெட்டுகள் கூறுகின்றன

**நாணயங்கள்:**

- முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் 'சோனாடு கொண்டான்' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது
- சர் வால்டர் எலியட் எனும் அறிஞர் சோழர் கால நாணயங்கள் குறித்து எழுதியுள்ளார்

**முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் கி. பி. 1190 – கி. பி. 1210**

- மூன்றாம் குலோத்துங்க சோழனோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டார். இவரின் ஆட்சி, இரண்டாம் பாண்டியரது வரலாற்றிலேயே மிகவும் முக்கியமான கால கட்டமாகக் கருதப்படுகிறது. இவர் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேில, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை அரசாண்டார். இவர் 1030 பிராம தேயங்கள் அடங்கிய ராஜகம்பீர

சதுர்வேதி மங்கலத்தை உருவாக்கி 'ராஜகம்பீரர்' என்னும் பெயர் பெற்றார்

- இவர் "பொன் வேய்ந்த பெருமாள்" "எம் மண்டலமும் கொண்டருளிய" பாண்டியன், திரிபோன சக்கரவர்த்தி என்ற பட்டங்களை பெற்றார். மேலும் இவர் "இராஜகம்பீரர்" என்ற பட்டப்பெயரையும் பெற்றார்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1216 – கி. பி. 1238**

- திருநெல்வேலி கல்வெட்டுகளில் இவருக்கு "அதிசயப் பாண்டியதேவர்" என்ற பட்டம் கொடுக்கப்பட்டுள்ளதாய் தெரிகிறது. இவர் 'கலியுகராமன்' எனப் பல பட்டங்கள் பெற்றிருந்தார்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1238 – கி. பி. 1251**

- இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்
- கோவில்களுக்கு நன்கொடைகள் அதிகம் கொடுத்தார்
- இவர் சோழ அரசர் மூன்றாம் இராஜேந்திரனைத் தோற்கடித்தார்

**முதலாம் ஜடவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1251 – கி. பி. 1268**

- இவர் 'திருபுவன சக்கரவர்த்தி' என்னும் பட்டம் பெற்றார்
- இவர் 'எம்மண்டலமும் கொண்டருளிய பாண்டியன்' என்ற சிறப்புப்பட்டப்பெயர் பெற்றார்.
- பிராமண அறிஞர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் பிரம்மதேயங்கள் என்று அழைக்கப்பட்டன.
- முதலாம் ஜடவர்மன் சுந்தரபாண்டியன் மன்னர் சிதம்பரத்தில் உள்ள நடராஜ கோயிலுக்கும், ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாதர் கோவிலுக்கும் பொன் தகட்டால் கூரைவேய்ந்தார். இதனால் இவர் "பொன்வேய்ந்த பெருமாள்" என்னும் பட்டம் பெற்றார்

**முதலாம் மாறவர்மன் குல சேகரன்: கி. பி. 1268 – கி. பி. 1308**

- இவரின் ஆட்சியின் போது வருகை புரிந்த மார்கோபோலோ என்ற அயல்நாட்டு அறிஞர் தமிழ்நாடு பற்றி எழுதியுள்ளார். வாசாப் என்ற முஸ்லீம் வரலாற்று ஆசிரியர் தமிழ்நாட்டின் சமூக நிலையைக் குறித்து எழுதியுள்ளார்
- மாறவர்மன் சேரநாட்டிலுள்ள கொல்லம் என்ற பகுதியைக் கைப்பற்றியதால் இவர் "கொல்லம் கொண்ட பாண்டியன்" என்று பெயர் பெற்றார்
- இவர் இலங்கையின் மீது படையெடுத்து சுபகிரி கோட்டையில் இருந்த பெரும் செல்வத்தையும் நினைவுச் சின்னமான புத்தரின் பற்களையும் மதுரைக்கு கொண்டு வந்தார்.

**முக்கிய குறிப்புகள்:**

- புதுக்கொட்டை மாறவர்மன் கல்வெட்டுகள் பாண்டியர் நிதி நிர்வாகம், வரிவசூல் நில அளவை முறை பற்றிக் கூறுகிறது
- முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பற்றி குடுமியான்மலை, ஏங்கமலை, தென்காசி, திருவட்டீஸ்வரம் கல்வெட்டுகளில் காணப்படுகிறது
- திருமலைபுரம், திருப்பரங்குன்றம், ஆனைமலை, குன்றக்குடி, கழுகுமலை

குகைக் கோயில்களாகும்.

- சிதம்பரத்திலுள்ள நடராஜப் கோவிலுக்கும், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலுக்கும் பொன் தகட்டால் கூரை வேய்ந்தார்
- பாண்டிய மன்னர்களால் பிராமண அறிஞர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் பிரம்ம தேயங்கள் அல்லது சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது
- பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுறக் காரணமான படையெடுப்பு மாலிக்காபூர் படையெடுப்பு
- அடியார்க்கு நல்லால் விளக்க உரை எழுதிய நூல் சிலப்பதிகாரம்
- பாண்டிய அரண்மனையில் இருந்த தலைமை தமிழ்ப்புலவர் நக்கீரர்
- மதுரை மாநகரம் தமிழ்க்கூடல் என்று அழைக்கப்படுகிறது
- பாண்டியர் ஆட்சி காலத்தில் தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட நகரம் மதுரை
- ஸ்ரீமாறன், ஸ்ரீவல்லப பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட சித்தன்னவாசல் குடைவரைக் கோவில்கள், நடனமாதர்கள், அரசர்கள், அரசிகள், தாவரங்கள், விலங்குகள், தாமரை மலரின் ஓவியம், யானைக்கு குளிக்கும் காட்சி, மீன்கள் விளையாடும் காட்சி போன்றவை சிறப்பு வாய்ந்தவை ஆகும்
- பாண்டியர் ஆட்சிப் பகுதியிலிருந்து 50க்கும் அதிகமான குடைவரைக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றம், ஆனைமலை, காரைக்குடி, கழுகுமலை, மலையடிக்குறிச்சி, திருச்சி போன்ற பகுதிகளில் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன.
- பாண்டிய மன்னர் அதிவீரராமபாண்டியன் நைடதம் என்ற நூலை இயற்றியுள்ளார்
- வதுரங்கராமபாண்டிய மன்னன் பதிற்றுப்பத்து, கலத்துறை அந்தாதி, வெண்பா அந்தாதி போன்ற மூன்று நூல்களை இயற்றினார்
- ஸ்ரீ வில்லிபுத்தூரில் உள்ள வடபத்ரகாளி கோயிலும் அம்பாசமுத்திரத்தில் உள்ள சிவன் கோவிலும்.

**சாளுக்கியர்கள்**

- சாளுக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் ஜெயசிம்மன் ஆவார்
- சாளுக்கியவர்களின் தலைநகரம்: வாதாபி
- இவர்கள் கன்னட சத்திரிய வம்சத்தைச் சார்ந்தவர்கள்
- இவர்களின் தேவதைக் கோயில் நாகர்ஜீன கொண்டாவில் உள்ளது

**சாளுக்கியர்களின் மூன்று பிரிவுகள்:**

1. பாதாமியைச் சார்ந்த சாளுக்கியர்கள்
2. கல்யாணியைச் சார்ந்த மேலைச் சாளுக்கியர்கள்
3. வெங்கியைச் சார்ந்த சீழைச் சாளுக்கியர்கள்

- முதலாம் புலிகேசி கி. பி. 535 – சாளுக்கிய அரசுக்கு அடிகோலியவர்

**இரண்டாம் புலிகேசி – கி. பி. 610**

- தனது சிற்றப்பாவை மங்களேசனை வென்று ஆட்சி பிடித்தார்.
- அப்பாயிகா, கோவிந்தா என்ற குறுகிய மன்னர்களை வென்றார்
- கடம்ப நாட்டை வென்று அவர்களின் தலைநகரம் வனவாசினை கைப்பற்றினார்
- கொங்கணர்கள், மௌரியர்கள், கங்கர்கள் அலுப்பர்களை வென்றார். கங்க மன்ன்

புதல்வியை மணந்தார்

- கூர்ஜர், லாடர் மாளவர்களை வென்றார்
- ஹர்ஷர் நர்மதை ஆற்றங்கரையில் இரண்டாம் புலிகேசியிடம் தோற்றார்
- சேர சோழ பாண்டியர்களை வென்றார்
- இறுதியாக முதலாம் நரசிம்மரிடம் போரிட்டு இறந்தார்

**முதலாம் விக்கிரமாதித்தர்:**

- இவர் இரண்டாம் புலிகேசியின் மகன். இவர் முதலாம் பரமேஸ்வரன் என்ற பல்லவ மன்னனை முதலில் வென்றார். பிறகு கடைசி போரில் தோற்றார்

**சாளுக்கியரின் கட்டிடக் கலை:**

- தார்வார் பகுதியில் உள்ள அல்ஹோலேவில் கற்கோயில்கள் கட்டப்பட்டது. இது கோயில் நகரம் எனப்பட்டது
- அய்ஹோலேவில் உள்ள லாத்கான கோயில், துர்க்கை கோயில், ஹச்சிமள்ளிக்குடி கோயில் மற்றும் பட்டக்கல்லில் உள்ள விருபாட்சார்கோவில் ஆகியவை சாளுக்கியரின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

**சாளுக்கியரின் ஓவியங்கள்:**

- பாதாமியில் உள்ள குடைவரைக் கோயிலில் உள்ள நரசிம்ம மூர்த்தி, வராக மூர்த்தி ஓவியங்கள் மற்றும் மங்களேசன் கட்டிய அரண்மனையில் உள்ள ஓவியங்கள் பாரசீக குழுவினரை வரவேற்றது போன்ற ஓவியங்கள் உள்ளது
- சாளுக்கிய மரபின் கடைசி மன்னர்: கீர்த்திவர்மர்
- யுவான் சுவாங் இரண்டாம் புலிகேசி ஆட்சியின் போது வாதாபிக்கு வந்தார்
- இரண்டாம் புலிகேசியின் அவைப்புலவர்: ரவி கீர்த்தி
- இரண்டாம் புலிகேசியின் படையெடுப்பு மற்றும் வெற்றிகளை குறிப்பிடும் கல்வெட்டு அய்ஹோலே கல்வெட்டு

**இராட்டிரகூடர்கள்:**

- இராட்டிரகூடர்களின் மரபினைத் தோற்றுவித்தவர்: தண்டி துர்க்கர் என்கின்ற தண்டிவர்மன்
- இவரின் தலைநகரம்: பீரார் பகுதியில் உள்ள எலிட்சபூர்
- சாளுக்கிய பேரரசின் கடைசி மன்னன் இரண்டாம் கீர்த்தி வர்மரைத் தோற்கடித்து வட மராட்டியத்தில் ஆட்சி செய்தனர்.
- இவர்கள் ஆண்ட பகுதி தற்போதுள்ள சோலாப்பூர் பகுதியாகும்
- இவர்கள் யாதவ மரபினைச் சார்ந்தவர்கள்

**முக்கிய மன்னர்கள்**

**முதலாம் கிருஷ்ணன்**

- சாளுக்கிய மன்னன் கீர்த்திவர்மனை முழுமையாக வெற்றி கொண்டார்
- கங்கர், வெங்கி, சாளுக்கியர், கொங்கர் ஆகியோரை வென்றார்

**துருவர்**

- முதலாம் கிகன் இரண்டாம் கோவிந்தன் திறமையற்றவராக இருந்தமையால் கிருஷ்ணனின் தம்பி துருவர் ஆட்சியை கைப்பற்றினார்

**மூன்றாம் கோவிந்தர்:**

- இமயம் முதல் குமரி வரை இராஷ்டிர கூடர்களின் ஆட்சி பரவி இருந்தது

- வேங்கி நாட்டு மன்னன் இரண்டாம் விஜயாதித்தன் மீது படையெடுத்து அவரை வென்றார்
- கன்னோசியை ஆண்ட சக்ராயுதா மற்றும் தர்மபாலரை வென்றார்
- கேரள, பாண்டிய பல்லவ மன்னர்களை ஒன்றாக எதிர்த்து போரிட்டு அவர்களை வென்றார்

**அமோக வர்ஷா்:**

- இளம் வயதில் பட்டம் ஏற்றார். எனவே கங்கர் என்பவர் ஆட்சியில் பொறுப்பை ஏற்றார்
- வேங்கி நாட்டுடன், கங்கர்களுடன் திருமண உறவுகள் மூலம் நட்பை ஏற்படுத்திக் கொண்டார்
- இவர் மானியசேதம் என்ற தலைநகரை உருவாக்கினார்.
- இவரின் பட்டப்பெயர்கள்: நிருபதுங்கன் மற்றும் வீர நாராயணன்
- எல்லோரா கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர் முதலாம் கிருஷ்ணன் இது ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட உலகத்தின் ஒரே கோயில் ஆகும்
- இராஷ்டிர கூடர்களின் சிற்பக் கலையில் சிறப்புடையவை: தசாவதார வடிவங்கள்.
- அமோகவிருத்தி என்ற நூலை எழுதியவர்" சாயதயனர்
- அமோகவர்ஷர் எழுதிய நூல்: கவிராஜ் மார்க்கம்.
- ஆதிபுராணம் என்ற நூலை எழுதியவர்: ஜுனசேனர்
- குணித சரசக்கிராதம் என்ற நூலை எழுதியவர்: மகா வீராச்சாரியார்
- இராட்டிர கூடர்கள் சமண சமயத்தை போற்றினர்.
- ஆரச முத்திரையில் சிவன் யோக நிலையில் உள்ளது போலவும், கருடன் உருவமும் காணப்பட்டது
- எல்லோரா, எலிபெண்டா இடங்களில் இவர்கள் பௌத்த சமண இந்து குகைக் கோயில்களை அமைத்தனர்.
- நாங்குநேரியிலுள்ள, விஜயநாராயண கோவிலும் ஆத்தூரில் உள்ள லட்சுமி நாராயண கோவிலும் இரண்டாம் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களாகும்.
- குன்றக்குடியில் உள்ள லட்சி நாராயண கோவிலும் இரண்டாம் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களாகும்.
- குன்றக்குடியில் உள்ள நடராசர் சிற்பமும் பல்லவர், சோழர் காலத்து சிறப்புத்தன்மை கொண்டவை ஆகும்

**நூல்கள் எழுதியவர்கள்**

திருப்பாவை – ஆண்டாள்

திருச்சிற்றம்பலக் கோவை – மாணிக்கவாசகர்

திருப்பல்லாண்டு – நம்மாழ்வார்

நைடதம் - அதிவீரராம பாண்டிய மன்னன்

கலித்துறை அந்தாதி – வரதுங்கராம பாண்டியன்

ஸ்ரீ கவிராயர் - திருகாளத்திநாதர் உலா

பதிற்றுப்பத்து – வரதுங்க ராமபாண்டியன்

நன்னூல் விளக்க உரை: மயிலைநாதர்

சிலப்பதிகார விளக்க உரை – அடியார்க்கு நல்லார்

தொல்காப்பிய விளக்க உரை – சேனாவரையர்

திருக்குறள் உரை – பரிமேலழகர்

**சாதவாகனர்கள்: (230 BC – AD 225)**

- கோதாவரி, கிருஷ்ணா நதிக்களுக்கிடையே பெல்லாரி மாவட்டத்தை ஆண்டவர்கள். ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிராவின் ஒரு பகுதி ஆகியவற்றை இவர்கள் ஆண்டனர்.
- தோற்றுவித்தவர் : சிமுகா சதகர்ணி
- புகழ்பெற்றவர்: கௌதம புத்திர சதகர்ணி
- தலைநகர்: Pratishthana (Paithan)
- ஏழாவது அரசர்: Hala
- ர்யடய எழுதிய நூல்கள்: Gatha – Saptashati (700 பாடல்கள்) மற்றும் Maharastri – Prakrit Kavya
- குடைசி அரசர்: யஞ்னஸ்ரீ
- முதலாம் சதகர்ணிக்கு தக்காண பதாபதி என்ற பட்டம் உண்டு
- ஊராட்சி மன்றங்களில் பெண்கள் பங்கு பெற்றனர்
- அஜந்தா 9வது மற்றும் 10வது குகைக் கோயில் ஏற்படுத்தினர்

**மாலிக்காபூர் படையெடுப்பு:**

- குலசேகர பாண்டியனின் மகன்கள் சுந்தர பாண்டியன் மற்றும் வீர பாண்டியன் ஆகிய இருவர்களுக்கிடையே வாரிசுப் போர் நடைபெற்றது. போரில் தோல்வியடைந்த சுந்தர பாண்டியன் அலாவுதீன் கில்ஜியினடம் மதுரை மீது படையெடுக்க கோரினார்
- அலாவூதின் கில்ஜி தனது தளபதியான மாலிக்காபூரை மதுரைக்கு அனுப்பினார். மாலிக்காபூர் மதுரையை 1311ல் தாக்க பெரும் செல்வத்தை கொள்ளையடித்தார். மேலும் அவர் இராமேஸ்வரத்தையும் தாக்கினார்

**மார்க்கோபோலோ:**

- இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரத்தைச் சார்ந்தவர்
- மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டிற்கு வந்தார்.
- பாண்டியரின் ஆட்சி பற்றி அறிய இவரது குறிப்புகள் பெரிதும் பயன்படுகிறது

**சம்புவராயர்கள்**

- வேலூர், திருவண்ணாமலை போன்ற பகுதிகளை ஆட்சி செய்தனர். இவர்களின் தலைநகரம் விரிஞ்சிபுரம் ஆகும்
- இவ்வம்சத்தின் முதல் மன்னன் ஏகாம்பர நாதர் ஆவார்

**விசய நகர பேரரசு:**

- கம்பணர் என்ற விசய நகர அரசர் சம்புவராயர்களை தோற்கடித்து விரிஞ்சிபுரத்தை கைப்பற்றினார்

**தஞ்சை மராத்தியர்கள் ஆட்சி:**

- தஞ்சையில் மராட்டிய ஆட்சியை தோற்றுவித்தவர் வெங்காஜி
- வெங்காஜியின் வேறு பெயர் எக்கோஜி ஆகும்
- இந்தியாவின் முக்கிய பயிர் நெல் ஆகும். இப்பயிர் அதிகப் பரப்பில் பயிராகிறது. ஆண்டுச் சராசரி வெப்பநிலை 24 டிகிரி செ.மீயும் மழையளவு 150 செ.மீ உள்ள பகுதிகளில் அதிகமாக நெல் பயிராகிறது. மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் நெல் பயிரிடப்படுகிறது. செழுமையான களிமண் கலந்த வண்டல்மண்ணும் நீர் தேங்கி நிற்க சமநிலமும் அதிகப்படியான நீரும் நெல் பயிராவதற்கு அவசியம். சமவெளிப் பகுதி டெல்டாப்பகுதி ஆற்று வடிகால் பிரதேசங்கள் ஆகிய இடங்களில் நெல் பயிராகின்றது
- இந்தியாவின் 29 சதவீதம் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது
- உலகில் உற்பத்தி 13 பாகம் இந்தியாவில் உற்பத்தி
- அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் மேற்கு வங்காளம், இரண்டாவது இடம் உத்திரப்பிரதேசம், மூன்றாவது இடம் பஞ்சாப்.
- இந்தியாவில் 400 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் (அதிக நிலப்பரப்பில்) நெல் பயிரிடப்படுகிறது
- இந்தியாவில் தேயிலைக்கு அடுத்தபடியாக ஏற்றுமதியாகும் உணவுப் பொருள் அரிசி ஆகும்.
- அதிகமாக விளைச்சல் (Average yield per acre) ஆந்திரப்பிரதேசத்தில் (1210 lbs) காணப்படுகிறது.
- தீபகற்ப இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம் ஆந்திர பிரதேசம் ஆகும்
- தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்லுக்கான வட்ட ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறையில் உள்ளது

**கோதுமை**

- கோதுமை ஒரு மித வெப்பமண்டல பயிர்
- மொத்தம் 13 மில்லியன் ஹெக்டேர்களில் கோதுமைப் பயிரிடப்படுகிறது
- கோதுமை அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலம் உத்திரபிரதேசம்
- அதிகமான விளைச்சல் (Yield per acre) இராஜஸ்தானில் காணப்படுகிறது
- இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 1/5 பாகம் கோதுமை பஞ்சாப் மாநிலத்தில் இருந்து கிடைக்கிறது. எனவே இப்பகுதியினை இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம் என்று அழைப்பர்
- குளிர்ச்சியான ஈரமிக்க கால நிலையில் கோதுமை பயிராகிறது.

- கோதுமை 35° முதல் 55° தீர்க்கரேகையில் கோதுமை விளைகின்றது
- கோதுமை வியை 10° செ. முதல் 20° செ வரை வெப்பமும் 50 செ. மீ முதல் 100 செ. மீ வரை மழையும் தேவை
- மக்ரோனி வகை கோதுமை மத்திய இந்தியாவில் கரிசல் மண்ணில் நன்கு விளைகின்றது
- கோதுமையின் விளைச்சல் காலம் 5 முதல் 5 ½ மாதங்கள்
- கோதுமை விதைக்கப்படும் காலம் - அக்டோபர் முதல் நவம்பர் மாதங்கள்
- கதிர் முற்றும்போது மழை கூடாது. ஓரளவு களிமண கலந்த வண்டல் மண் விளைச்சலுக்கு ஏற்றது. பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம் மாநிலங்களில் நிர்பாசன வசதிகளுடனும் மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் மானாவாரியாகவும் கோதுமை பயிராகிறது

**மக்காச்சோளம்**

- **சோளம்:** 27 டிகிரி செ. முதல் 32 டிகிரி செ. வரை வெப்பமும் 30 செ. மீ முதல் 100 செ.மீ வரை மழையம் தேவை
- **கம்பு:** உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, தமிழ்நாடு. மகாராஷ்டிரம் முதலிய மாநிலங்களில் பயிராகிறது
- **கேழ்வரகு:** இது உற்பத்தியாகும் மொத்த நிலப்பரப்பில் பாதிக்கு மேல் கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் உள்ளது. 50 செ.மீ. முதல் 100 செ. மீ வரை மழை பெறும் பகுதிகளில் கேழ்வரகு பயிராகிறது

**பருப்பு வகைகள்**

- பருப்பு உற்பத்தியில் இந்தியா உலகின் முதலிடம் வகிக்கின்றது. உலக உற்பத்தியில் 28% இந்தியா உற்பத்தி செய்கின்றது. சுமார் 12-15 மில்லியன் டன் பருப்பு வகைகளை இந்தியா உற்பத்தி செய்கின்றது.
- துவரை, அவரை, கடலை, உளுந்து, கொள்ளு, பருப்பு வகைகள் புன்செய் பயிர்கள் ஆகும். உற்பத்தியில் முதல் இடம் மத்தியப்பிரதேசம், இரண்டாவது இடம் உத்திரப்பிரதேசம், மூன்றாவது இடம் இராஜஸ்தான்
- பஞ்சாப், பீஹார், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் பயிராகிறது.
- Indian Institute of Pulses Research உத்திரப்பிரதேசத்தில் உள்ள கான்பூரில் அமைந்துள்ளது

**நறுமணப் பொருட்கள்**

- நறுமணப் பொருட்கள் கேரளாவில் அதிகம் விளைகின்றது
- குங்குமப் பூ அதிகமாக விளையும் மாநிலம் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகும்

**மிளகு**

- இது கேரளத்தில் அதிகமாக விளைகிறது. உலக உற்பத்தியில் இரண்டாவது இடம். கர்நாடகம் மற்றும் கேரளாவில் விளைகின்றது. அன்னிய செலாவணி ஈட்டிக் கொடுப்பதில் மிளகு மூன்றாவது இடத்தை வகிக்கின்றது

**ஏலக்காய்**

- இதன் உலக உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள், சேர்வராயன் மலைப்பகுதிகள், போடிநாயக்கன் பகுதிகளில் பயிராகிறது. கேரளாவின் இடுக்கி மாவட்டம் புகழ்பெற்றது

**மஞ்சள்**

- இது ஆந்திரப்பிரதேசத்தில் அதிகமாக விளைகிறது. தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தில் அதிகம் பயிரிடப்படுகிறது. சாயம், மருந்து, உணவு பொருளாக பயன்படுகிறது

**இஞ்சி**

- இஞ்சி கேரளத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகாவில் பயிர் செய்யப்படுகிறது

**மிளகாய்**

- ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகத்தில் அதிகம் விளைகின்றது. குண்டூர் மிளகாய் புகழ்பெற்றது. நறுமண பொருட்களில் அதிக அன்னிய செலாவணியை மிளகாய் (இரண்டாவது இடம்) ஈட்டிக் கொடுக்கின்றது. மொத்த மிளகாய் உற்பத்தியில் 60 சதவீதம் ஆந்திராவில் உற்பத்தியாகின்றது

**பாக்கு**

- ஆதிகமாக விளையும் இடம் கேரளா ஆகும். கர்நாடகம், அசாம், மகாராஷ்டிரா மற்றும் தமிழகத்தில் அதிகம் விளைகின்றது

**புதினா (மின்ட்)**

- அன்னிய செலாவணி அதிகமாக ஈட்டித் தரும் வாசனைத் திரவியங்களில் மின்ட் முதலிடத்தை வகிக்கின்றது.

**பணப்பயிர்கள்**

**எண்ணெய் வித்துக்கள்**

- உலகில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இந்தியாவின் மொத்த விவசாய பரப்பில் 10 சதவீதம் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுகிறது
- இந்தியாவில் 2004-2005 ஆம் ஆண்டு 26.1 மெட்ரிக் டன்கள் எண்ணெய் உற்பத்தித செய்யப்படுகிறது.
- வறண்ட சூழ்நிலையிலும் வளரக் கூடிய பயிர் எண்ணெய் வித்துக்கள் ஆகும்
- எண்ணெய் வித்துக்கள் அதிகமாக விளையும் பகுதி தக்காண பீடபூமியாகும்
- The Technology Mission on Oilseeds – 1986
- அதிகமாக உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்து

1. சோயாபீன்ஸ் (27%) 2. நிலக்கடலை (26%)

**சோயாபீன்ஸ்**

- அதிக புரதச்சத்து உடையது
- மத்தியப்பிரதேசத்தில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது

**நிலக்கடலை**

- இது ஒரு வெப்பமண்டலப் பயிர்
- இந்தியாவில் சுமார் 86.72 இலட்சம் ஹெக்டேரில் இப்பயிர் பயிரிடப்படுகிறது. தக்காண பீடபூமியில் கரிசல் மண், செம்மண் உள்ள பகுதிகளில் நிலக்கடலை பயிரிட மிகவும் ஏற்றதாக உள்ளது. ஆந்திராவில் அதிக நிலப் பிரப்பில் இப்பயிர்

பயிரிடப்படுகிறது. குஜராத்தில் பெருமளவு விளைகிறது

- சுமார் 50 செ. மீ முதல் 70 செ. மீ வரை மழை தேவை. தமிழ்நாட்டில் சனவரி முதல் மே வரை விதைக்கப்படுகிறது. ஏப்ரல் முதல் மே வரை அறுவடை செய்யப்படுகிறது
- தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், குஜராத் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 80% நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த எண்ணெய் உற்பத்தியில் இது 25 சதவீதம் ஆகும்.
- குஜராத் முதலிடம் வகிக்கின்றது. இரண்டாவது இடத்தை தமிழ்நாடு அல்லது ஆந்திர பிரதேசம் வகிக்கின்றது
- நல்ல சூழலில் தற்போது நிலக்கடலை உற்பத்தி சுமார் 8 மில்லியன் டன்கள் ஆகும். தமிழ்நாடில் 1 மில்லியன் டன் நிலக்கடலை விளைகின்றது. முக்கிய ஏற்றுமதி நாடு செனகல் மற்றும் அர்ஜென்டைனா ஆகும்.

**எள்**

- தக்காண பீடபூமியில் அதிகமாக பயிரிடப்படுகிறது. உத்திரப்பிரதேசம் அதிகமாக பயிரிடப்படும் மாநிலம் ஆகும்

**கடுகு**

- கடுகு பயிரிட வறண்ட குளிர்காலமும் வளமான வண்டல் மண்ணும் தேவைப்படுகிறது. சட்லெஜ், கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் கடுகு அதிகமாக பயிராகிறது. உத்திரப்பிரதேசம் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது

**ஆமணக்கு**

- தக்காண பீடபூமியில் அதிகமாக பயிரிடப்படுகிறது. உலக உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்ததாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. ஆமணக்கு எண்ணெய் சிறந்த உயர்வு பொருளாக பயன்படுகிறது. ஆந்திரப்பிரதேசம் அதிக உற்பத்தி செய்யும் மாநிலம்

**தேங்காய்**

- உயர்ந்த வெப்பநிலை, ஈரப்பதம், அதிக தழை பொழிவு, வடிகால் வசதியுள்ள மண் ஆகியவை தேவைப்படும். இந்தியாவின் தேங்காய் உற்பத்தியில் 70 சதவீதம் கேரளாவிலிருந்து கிடைக்கிறது. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரா, ஒரிசா, தமிழ்நாட்டில் அதிகம் விளைகின்றது

**ஆளிவிதை**

- உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீஹார், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், ஆகிய மாநிலங்களில் இந்தியாவின் உற்பத்தியில் 90 சதவீதம் கிடைக்கிறது.

**முந்திரி**

- கேரளாவில் அதிகம் விளைகின்றது

**பார்லி**

- ஆரிசி மற்றும் கோதுமை விளையாத இடத்தில் பார்லி பயிரிடப்படுகிறது. அதிகமாக பயிரிடப்படும் மாநிலம் - உத்திரப்பிரதேசம்

**இழைப்பயிர்கள்**

**பருத்தி**

- நமது நாட்டு வாணிகப் பயிர்களுள் முதலிடம் வகிக்கிறது. இது வளர கரிசல் மண் அல்லது கருஞ்சிவப்பு மண் தேவை

- வெப்பமண்டலத்திலும் மித வெப்ப மண்டலத்திலும் பருத்தி நன்கு விளையும். இதற்கு 75 செ.மீ முதல் 100 செ.மீ மழை தேவை. இப்பயிர் விளைய 200 பனியற்ற நாட்கள் தேவைப்படுகின்றது. இது தக்காண பீடபூமியின் வடமேற்குப் பகுதியில் நன்கு விளைகிறது. தக்காண பீடபூமியின் மகாராஷ்டிரம், குஜராத், மத்தியப் பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய பகுதிகள் இந்தியாவின் பருத்தி பிரதேசம் என்பர்
- அதிகமாக பயிரிடப்படும் இடம்: மகாராஷ்டிரா
- அதிகமாக உற்பத்திசெய்யபடும் இடம்: குஜராத்
- அதிகமாக Yield per hectare குஜராத்
- இது ஒரு இயற்கையான நார்ப்பயிர்
- உலகில் பருத்தி அதிகமாக அமெரிக்காவில் தயார் செய்யப்படுகிறது
- இந்தியா உலக பருத்தி உற்பத்தியில் 14% சதவீதம் உற்பத்தி செய்யது மூன்றாவது இடம் வகிக்கின்றது
- பருத்தி பயிரிட ஆரம்பத்தில் உயர்ந்த வெப்ப நிலையும் பருத்தி காய் முற்றும் காலத்தில் அதிக வறட்சியும் தேவை
- பருத்தி வெப்ப மண்டத்திலும், மித வெப்ப மண்டலத்தில் நன்கு விளையும்.
- இந்தியாவில் குட்டையிழைப் பருத்தி பயிரிடப்படுகிறது
- உயர்ந்த ரக நெட்டிழைப் பருத்தி
- வட இந்தியாவில் ஆகஸ்ட் - மார்ச் வரை பருத்தி பயிரிடப்படுகிறது
- இந்தியாவில் பருத்தி 75% தக்காண (லாவா) பிரதேசத்தில் பயிரிடப்படுகிறது
- தென்னிந்தியாவில் பருத்தியின் பயிர்க்காலம் மே முதல் டிசம்பர் வரை ஆகும்
- இந்தியா நெட்டையிழைப் பருத்தியை எகிப்து, அமெரிக்காவில் இருந்து இறக்குமாதி செய்யப்படுகிறது
- பருத்தி வகைகள் - Mcu – 5, சுஜாதா, வரலெட்சுமி
- 2007-2008 ஆண்டு உற்பத்தி 310 இலட்சம் பேல்கள் ஆகும். ஒரு பேல் என்பது 170 கிலோ ஆகும்
- தமிழ்நாட்டில் இத்ன உற்பத்தி மிகக் குறைவு. ஆனால் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதில் இந்தியாவில் முதலிடம் தமிழ்நாடு ஆகும் 2007-2008

| **மாநிலம்** | **பரப்பு** | **உற்பத்தி** | **மகசூல்** |
|---|---|---|---|
| குஜராத் | 25.16 | 110.00 | 743 |
| மகாராஷ்டிரா | 31.91 | 60.00 | 320 |
| ஆந்திரப்பிரதேசம் | 10.96 | 43.00 | 667 |
| பஞ்சாப் | 6.48 | 24.00 | 630 |
| மத்திய பிரதேசம் | 6.62 | 21.00 | 539 |
| ஹரியானா | 4.78 | 16.00 | 569 |
| இராஜஸ்தான் | 3.68 | 9.00 | 416 |
| கர்நாடகா | 3.71 | 8.00 | 367 |
| தமிழ்நாடு | 1.23 | 5.00 | 691 |
| **மொத்தம்** | | **310.00** | |

- Central Institute for Cotton Research – Nagpur 1976

மண்டல நிலையங்கள் 1. Coimbatore 2. Sirsa

**சணல்**

- சுணல் ஒரு மலிவான இழைப்பயிர். இது வெப்ப மண்டலப் பயிர். சுணல் பயிரிட 28

சென்டிகிரேட் வெப்பமும் 200 செ.மீ மழையம் தேவை. புது வண்டல் மண் சமவெளிகளில் சணல் நன்கு விளையும். இந்தியாவில் சணல் பயிரிடப்படும் நிலப்பரப்பில் 55% நிலப்பரப்பு மேற்கு வங்காளத்தில் உள்ளது. **உலகிலேயே சணல் இந்தியாவில் அதிக உற்பத்தி செய்யப்படுகிறது**. இந்தியாவில் சுமார் 971,000 ஏக்கர் நிலப்பரப்பில் சணல் பயிரிடப்படுகின்றது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினையில் சணல் உற்பத்தி பாதிக்கப்பட்டது

- சுணல் மார்ச் முதல் மே மாதம் வரை விதைக்கப்படுகிறது. ஏப்ரல் முதல் ஜீன் வரை பயிர்கள் அதிகமாக வளரும். பயிர்காலம் 5 மாதங்கள். அறுவடை காலம் ஜீலை முதல் அக்டோபர் வரை. உலக உற்பத்தியில் இந்தியா வங்காளதேசம் 96% கொண்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தி ஆகும் சணலின் அளவு 10940,000 பேல்கள் ஆகும்.
- மேற்கு வங்காளத்தில் தென்பகுதிகளில் குறிப்பாக ஹௌரா, ஹுக்ளி, பார்த்துவான், பர்கானாக்கள், மிட்னாபூர், நாடியா ஆகிய மாவட்டங்களில் சணல் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் சுமார் 77 சணல் மில்கள் காணப்படுகிறது. அதில் 60 மில்கள் மேற்கு வங்காளத்திலும் ஆந்திரப் பிரதேசத்தில் 7, பீகாரில் 3 உ.பியில் 3 அசாம் மாநிலத்தில் ஒன்றும் காணப்படுகின்றது. சணல் தண்டில் இருந்து சணலை பிரித்ததெடுக்கும் முறைக்கு ரெட்டிங் என்று பெயர். சுமார் 90,000 பேர் நேரிடையாகவும் சுமார் 1.50 இலட்சம் பேர் மறைமுகமாகவும் வேலை செய்கின்றனர்.
- சணல் உற்பத்தியில் மேற்கு வங்காளம் முதலிடமும் இரண்டாவது இடத்தை பீகாரும் மூன்றாவது இடத்தை அஸ்ஸாமும் நான்காவது இடத்தை ஆந்திர பிரதேசமும் வகிக்கின்றன.

**தோட்டப்பயிர்கள்**

**தேயிலை**

- தேயிலையின் பிறப்பிடம் சீனா ஆகும்
- வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் தேயிலை வணிக பயிராக பயிரிடப்பட்டது
- உலகிலேயே அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு இந்தியா

**அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடுகள்**

- இலங்கை, சீனா மற்றும் இந்தியா ஆகும். தேயிலை ஏற்றுமதி தற்போது குறைந்து கொண்டு வரப்படுகிறது
- ஆதிகமாக தேயிலையை பயன்படுத்தும் நாடு இந்தியா ஆகும்
- உலக உற்பத்தியில் 28 சதவீதமும் உலக ஏற்றுமதியில் 16 சதவீதமும் பங்கு வகிக்கின்றன
- இந்தியாவில் தேயிலை பயிரிடப்படும் பரப்பு 435 இலட்சம் ஹெக்டேர் ஆகும்
- 2000-01ல் இந்தியாவில் தேயிலை உற்பத்தி 8.05 இலட்சம் டன்கள் அகும்
- தேயிலை ஒரு பெருந்தோட்ட வேளாண்மை ஆகும்
- இது ஒரு வெப்ப மண்டல மழைக்காட்டு, வெப்பந்தாழ்ந்த ஈரக்கால நிலையுள்ள பிராந்திய பயிராகும். இதற்கு அதிக அளவு வெப்பம் தேவை

- இதற்கு 250 செமீ மழை தேவை. வேரில் நீர் தங்காமல் வழிந்து ஓடக் கூடிய 300 முதல் 1800 மீட்டர் வரை உயரமுள்ள மலை சரிவுகளில் பயிரிடப்படுகிறது. உதிரியான, தண்ணீர் தேங்காத மணற்பாங்கான வண்டல் மண் தேயிலை உற்பத்திக்கு சிறந்ததாகும். தேயிலை பயிரிடும் நாடுகள் அனைத்தும் வடக்கில் 35 டிகிரிக்கும் தெற்கில் 30 டிகிரிக்கும் இடைப்பட்ட அட்சங்களில் அமைந்துள்ளன
- Pruning முறை தேயிலை உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது

**இந்தியாவில் தேயிலை பயிரிடப்படும் பகுதிகளை 2 பிரிவுகளாக பிரிக்கலாம்**

1. வடகிழக்கு 2. தென்னிந்திய பகுதி

**வடகிழக்கு பகுதி**

- அஸ்ஸாமில் பிரம்மபுத்திரா சூர்மா ஆகிய ஆறுறுப்பள்ளத்தாக்குப் பகுதியிலும் பிரம்மபுத்திரா ஆற்றுக்கு வடக்கில் காமரூப், தாரங், லக்கிம்பூர், சாடியா ஆகிய மாவட்டங்களிலும், தெற்கில் சிப்சாகர், நவ்காங் ஆகிய மாவட்டங்களிலும் சூர்மா பள்ளத்தாக்கிலுள்ள காசர்க் குன்றுகளிலும் தேயிலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் தேயிலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் தேயிலை பயிரிடப்படும் நிலப்பரப்பில் 52% அஸ்ஸாமில் உள்ளது

**அசாமில் தேயிலை பயிரிடப்படும் இடங்கள்:**

- Darrang, Goalpara, Kamrup, Lakhimpur, Dibrugarh, Sibsagar, Nowgong, Cachar, Karbi Anlong, North Cachar
- மேற்கு வங்கத்தில் (Darjeeling, Teria, Dooars) டாராஜிலிங், ஜால்பாய்குரி மற்றும் கூச்பீகார் மாவட்டங்களில் தேயிலை பயிரிடப்படுகிறது
- Darjeeling Tea Research and Development Centre Kurseong

**தென்னிந்திய பகுதி**

- தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலைச் சரிவுகளில் தேயிலை பயிரிடப்படுகிறது. தென்னிந்திய தேயிலை உற்பத்தியில் பாதிக்கு மேல் தமிழகத்தில் இருந்து கிடைக்கிறது
- தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தேயிலை பயிரிடப்படுகிறது
- கேரளாவில் இடுக்கி, வயநாடு, கோட்டயம், திருவனந்தபுரம், திருச்சூர் கோழிக்கோடு, பாலக்காடு, கண்ணூர் மற்றும் கொய்லான் ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது
- கர்நாடகாவில் சிக்மங்களூர், ஹசன், கூர்க் மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது
- இந்தியாவில் சுமார் 980 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் 163656,000 கிலோக்கள் 2006ல் உற்பத்தி செய்யப்படுகிறது
- Tea Board of India : 1.1.1954
- தலைமையிடம்: மேற்கு வங்காளத்தில் கல்கத்தா, மண்டல அலுவலகங்கள்: குன்னூர், கௌஹாத்தி, புது தில்லி, சில்குரி, மும்பை, கொச்சின், சென்னை, சில்சார், கோட்டயம், அகர்தலா, ஜோரட், தேஸ்பூர்,

குரிசியாங் மற்றும் பளம்பூர்

**காபி**

- காபி வணிக நோக்கத்திற்காக 1820 முதல் இந்தியாவில் பயிரிடப்படுகிறது
- இந்தியாவில் பயிரிடப்படும் ரோபஸ்டா மற்றும் அரபிகா ரகங்கள் உலக தரம் வாய்ந்த காபி ஆகும்
- நீரில் அதிகம் தங்கக் கூடாது. 600 மீட்டர் முதல் 1200 மீட்டர் உயரமுள்ள மலைச் சரிவுகளில் பயிராகிறது. 20 டிகிரி செ. முதல் 25 டிகிரி செ. வரை வெப்பம் தேவை. தேயிலையைக் காட்டிலும் குறைவான வெப்பம் போதும். தென்னிந்தியாவில் மழை மிகுந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மேற்கு சரிவுகளில் தேயிலையும் கிழக்கு சரிவுகளில் காபியும் பயிராகிறது. இப் பயிர் ஒரு நிழல் விரும்பும் தாவரம் ஆகும். இந்தியாவில் உள்ள காபி தோட்டங்களில் பாதிக்கு மேல் கர்நாடகா மாநிலத்தில் உள்ளது. கடுர், சிமோகா, ஆசன், குடகு மலை ஆகிய இடங்களிலும் தமிழ்நாட்டில் சேர்வராயன் மலை, ஆணைமலை, நீலகிரி மலை முதலிய பகுதிகளிலும் காபி தோட்டங்கள் உள்ளன
- கேரளாவில் காப்பி இடுக்கி, கோட்டயம், பாலக்காடு ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது
- இந்தியாவில் சுமார் 354840 ஏக்கர் நிலப்பரப்பில் காப்பி பயிரிடப்படுகிறது. இந்தியாவில் காப்பி உற்பத்தியில் 70% கர்நாடகத்திலும் 23.6% கேரளாவிலும் காப்பி விளைகிறது.
- தமிழகத்தில் காப்பி 5.6 சதவீதம் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் காப்பி பழனி மலையில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது
- உலக காப்பி உற்பத்தியில் இந்தியாவின், பங்கு 4% ஆகும். 2008-2009 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் காப்பி உற்பத்தி 16,625 மெட்ரிக் டன் என எதிர்பார்ககப்படுகிறது. தமிழ்நாட்டில; Pulneys பகுதி அதிக காப்பி உற்பத்தி செய்யும் பகுதியாகும். இந்தியாவில் அதிக காப்பி உற்பத்தி செய்யும் பகுதி குடகு மலை ஆகும். இந்தியாவில் அதிகமாக பயிரிடப்படும் காப்பி இத்தாலி நாட்டிற்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது

**ரப்பர்**

- ரப்பர் தோட்டங்கள் கேரள மாநிலத்திலும் (85%) தமிழ்நாட்டிலும் 4% உள்ளன
- தமிழ்நாட்டில் நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ரப்பர் பயிரிடப்படுகிறது
- திருவனந்தபுரம் மற்றும் மலபார் பகுதியில் 1880 முதல் ரப்பர் பயிரிடப்படுகிறது. இருப்பினும் வணிக நோக்கமாக 1902 முதல் பயிரிடப்படுகிறது
- ரப்பர் மரங்கள் 300 செ. மீ அதிகமாக மழை பெய்யும் இடங்களில் பயிரிடப்படுகிறது. மேலும் இதற்கு 25 முதல் 35 டிகிரி செண்டி கிரேடு வெப்பம் இருக்க வேண்டும். மேலும் 300 முதல் 450 மீட்டர் கடல் மட்டத்தில் இருந்து உயரம் இருத்தல் வேண்டும். 700 மீட்டருக்கு மேல் உயரம் இருக்கக்முடாது
- உலக உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 8

சதவீதமாகும்

- 400,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் 630,000 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது

**மற்ற பயிர்கள்**

**கரும்பு**

- இது ஒரு வெப்ப மண்டலப் பயிர். 24 செ. மீ முதல் 30 செ. மீ வெப்பமும் தேவை. உத்திரப்பிரதேசம், பீஹார், பஞ்சாப் ஆகியன கரும்பு பயிரிடும் முக்கியமான இடங்கள்
- 2004-2005 ஆம் ஆண்டு கரும்பு உற்பத்தி 23.23 கோடி டன்கள்
- உலகத்தின் சர்க்கரை கிண்ணம் கியூபா
- இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் உத்திரப்பிரதேசம்
- கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் உலகத்தில் இந்தியா இரண்டாவது இடம் பெறுகிறது. முதலிடம் பிரேசில் ஆகும்
- சர்க்கரை பயன்படுத்துவதில் இந்தியா முதல் இடம் பெறுகிறது
- இது மூங்கில் குடும்பத்தை சார்ந்தது
- கரும்பின் விளைச்சல் காலம்: 12 மாதங்கள் ஆகும். நெல் விளையும் பகுதிகளில் விளையும் பயிர் கரும்பு ஆகும்
- வட இந்தியாவில் உள்ள கரும்பினைக் காட்டிலும் தென் இந்தியாவில் உள்ள கரும்பில் சர்க்கரை அதிகம் உள்ளது
- கரும்பின் சக்கை Bagasse எனப்படும்
- இது காகித தொழிற்சாலைக்கு பயன்படுகிறது. இவ்வகை காகிதங்கள் புகளுர் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது
- அதிகமாக பயிரிடும் மாநிலம்: 1. உத்திரப்பிரதேசம் (38.57%) 2. மகாராஷ்டிரா (17.76%) 3. கர்நாடகா (12.20%)
- 2008-2009ஆம் ஆண்டு கணக்கின்படி அதிகமாக சர்க்கரை தயாரிக்கும் மாநிலம்: 1. உத்திரப்பிரதேசம் 2. மகாராஷ்டிரா 3. கர்நாடகா 4. தமிழ்நாடு 5. ஆந்திரப்பிரதேசம் (முன்பு முதலிடம் மகாராஷ்டிரா)
- சர்க்கரை நீர் கழிவு மொலாசஸ் எனப்படும். இதில் இருந்து எரி சாராயம் தயாரிக்கப்படுகிறது
- இது சுற்றுப்புறச் சூழலை மாசுபட செய்வதால் இதனை இரும்பு தொட்டியில் தேக்கிவைக்க வேண்டும்
- இந்தியாவில் உற்பத்தியாகும் கரும்பில் பெரும்பகுதி கண்டசாரி சர்க்கரை செய்ய பயன்படுகிறது
- கர்நாடகத்தில் கரும்பு அதிகமாக விளையும் மாவட்டம் மாண்டியா ஆகும்

**புகையிலை**

- இது ஒரு வெப்ப மண்டலப் பயிர். குளிமண் அல்லது சுண்ணாம்பு கலந்த செம்மண் இதற்கு தேவை
- உலக உற்பத்தி மொத்தம் 6137 ஆயிரம் டன்கள் ஆகும். இதில் சீனா 2299 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்து உலகின் முதலிடம் வகிக்கின்றது. இரண்டாவது இடத்தை பிரேசில், இந்தியா 595.4 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்து உலக உற்பத்தியில் 8 விழுக்காடு பெற்று மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது
- ஆந்திரப்பிரதேசம் (0.16 மில்லியன் டன்), குஜராத் (0.15 மில்லியன் டன்), மற்றும்

கர்நாடகம் (0.03 மில்லியன் டன்) ஆகியவை புகையிலை ஆந்திரப்பிரதேசத்தில் விளைவிக்கப்படுகிறது

- புகையிலையை 1508ல் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் போர்ச்சுகீசியர்கள். புகையிலையில் நிகோடின் என்ற நச்சுப் பொருள் உள்ளது
- புகையிலை வாரியம் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள குண்டூரில் செயல்படுகிறது

**பழத்தோட்டங்கள்**

- இந்தியா 43 மில்லியன் டன் பழங்களையும் - 86 மில்லியன் டன் காய்கறிகளையும் உற்பத்தி செய்கிறது
- பழங்கள், காய்கறிகள் உற்பத்தியில் உலகில் இரண்டாவது இடம் வகிக்கின்றது
- உலக மாம்பழம் உற்பத்தியில் 65 சதவீதமும் வாழைப்பழம் உற்பத்தியில் 11 சதவீதமும் இந்தியாவில் விளைகின்றது
- மாம்பழம் மற்று வாழைப்பழம் உற்பத்தியில் உலகில் முதலிடம்
- ஏழைகளின் ஆப்பிள் - கொய்யாப்பழம்
- வாழைப்பழம் - விளையும் மாநிலங்கள் - தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், கேரளா, குஜராத்
- திராட்சை – விளையும் இடங்கள் - கர்நாடகத்தில் - கூர்க், கேரளாவில் வயநாடு தமிழகத்தில் - நீலகிரி மற்றும் இமாச்சல பிரதேசம் மற்றும் மேகாலயா ஆகிய இடங்கள்
- மாம்பழம் - உத்திரப்பிரதேசம் அதிக உற்பத்தி பீகார், ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்கம், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் விளைகிறது

**உணவுப் பயிர்கள்**

**உணவுப்பயிர்கள் அதிகம் விளையும் மாநிலங்கள்**

1. அரிசி — மேற்கு வங்காளம்
2. பார்லி — உத்திரப்பிரதேசம்
3. சோளம் — உத்திரப்பிரதேசம்
4. கடுகு — உத்திரப்பிரதேசம்
5. பட்டு — கர்நாடகா
6. குங்குமப்பூ — ஜம்மு மற்றும் காஷ்மீர்
7. முந்திரி — கேரளா
8. தேயிலை — அசாம்
9. கோதுமை — உத்திரப்பிரதேசம்
10. பருத்தி — மகாராஷ்டிரா
11. சந்தனம் — கர்நாடகம்
12. கரும்பு — உத்திரப்பிரதேசம்
13. ரப்பர் — கேரளா
14. ஏலம் — கேரளா
15. புகையிலை — ஆந்திரா
16. கிராம்பு — கேரளா
17. நிலக்கடலை — குஜராத்
18. காப்பி — கேரளா
19. மஞ்சள் — கேரளா
20. இஞ்சி — கர்நாடகம்
21. தேங்காய் — கேரளா
22. விளக்கெண்ணெய் - ஆந்திரப்பிரதேசம்

Shifting Cultivation

- காடுகளை அழித்து சில இடங்களில் விவசாயம் நடைபெறுகிறது. இதனை Shifting Cultivation என்று கூறுவர். இது பல்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது

ஜீம் — அசாம்

| | |
|---|---|
| போடு | ஆந்திரப்பிரதேசம் |
| போணம் | கேரளா |

**கால்நடைகள்**

- உலகிலேயே கால்நடைகள் அதிகம் உள்ள நாடு இந்தியா
- முதல் கால்நடைகளை கணக்கெடுப்பு 1919-1920 ஆம் ஆண்டு நடைபெற்றது
- 16வது கால்நடைகள் கணக்கெடுப்பு 1997 ஆம் ஆண்டு நடைபெற்றது
- 17வது கால்நடைகள் கணக்கெடுப்பு 2003 ஆம் ஆண்டு நடைபெற்றது

**17வது கால்நடைகள் கணக்கெடுப்பு 2003**

- பால் உற்பத்தி 88.81 மில்லியன் டன்கள்
- முட்டை உற்பத்தி 34 பில்லியன்
- கம்பளி உற்பத்தி 53 மில்லியன் கிலோ
- மொத்த கால்நடை 185181 (000)

| | |
|---|---|
| cattle | 38.2% |
| buffaloes | 20.2% |
| sheep | 12.7% |
| goats | 25.6% |
| pigs | 2.8% |

other animals are less than 0.50%

- உலகின் மொத்த மாடுகளில் 57 சதவீதமும் ஆடுகளில் 14 சதவீதமும் இந்தியாவில் உள்ளது
- உலகின் மொத்த கால்நடைகளில் 19 சதவீதம் இந்தியாவில் உள்ளது
- இந்தியாவின் வேளாண்மையில் கிடைக்கும் உற்பத்தியில் 37 சதவீதமும் (மொத்த DPயில் 5.30 சதவீதம்) கால்நடைகள் மூலம் கிடைக்கின்றது.
- பண்ணைத் தொழிலில் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் மாநிலம் ஆந்திரப்பிரதேசம்
- கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் Insurance Scheme 21.2.2006 முதல் துவக்கப்பட்டது
- கேரளாவில் அதிகமாக மீன்பிடித்தல் நடைபெறுகிறது
- மன்னார் வளைகுடா, காம்பே வளைகுடா ஆகிய இடங்களில் முத்து குளித்தல் நடைபெறுகிறது. கால்நடைகள் தாக்கும் நோய்

  எல்னா கால்நடைகள் - ஆந்த்ரக்ஸ் மாடுகள் கால் மற்றும் வாய் நோய்

  ஜான் நோய் கோழிகள் - மார்க நோய் ராணிகண்ட்

  ஆடு, மாடுகள் - ரிண்டன்பெஸ்ட்
- வெள்ளைப்புரட்சி – பால் உற்பத்தி
- வெள்ளிப்புரட்சி – முட்டை உற்பத்தி
- தஙகப் புரட்சி – பழங்கள் உற்பத்தி
- மஞ்சள் புரட்சி – எண்ணெய்வித்தக்கள் உற்பத்தி
- பிரவுன் புரட்சி – தோல் / Non Conventional உற்பத்தி
- பசுமைப் புரட்சி – வேளாண்மை உற்பத்தி
- கிரே புரட்சி – உரங்கள் உற்பத்தி
- பிங்க் புரட்சி – மருந்து உற்பத்தி
- சிவப்புப் புரட்சி – மாமிசம் மற்றும் தக்காளி உற்பத்தி
- வட்டப் புரட்சி – உருளைக்கிழங்கு உற்பத்தி
- இவை அனைத்தும் ஒருங்கிணைந்து

செயல்படுத்துவது வானவில் புரட்சி எனப்படும்.

வேண்மைப்புரட்சி - இந்தியாவில் வெண்மை புரட்சி ஏற்பட காரணமானவர் டாக்டர் வர்கீஸ் சூரியன். பால் பொருட்கள் உற்பத்தியே வெண்மை புரட்சி முதல் வெண்மைப் புரட்சி நடைபெற்ற ஆண்டு – 1970 – 81

- இரண்டாவது வெண்மைப் புரட்சி நடைபெற்ற ஆண்டு 1981-85
- பசுமைப் புரட்சி – முதல் பசுமைப் புரட்சி ஏற்பட்ட ஆண்டு 1967 – 68
- பயன் அடைந்த மாநிலங்கள் - பஞ்சாப், அரியானா மற்றும் உத்திரப்பிரதேசத்தின் மேற்கு பகுதி
- இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்பட்ட ஆண்டு – 1983 – 84
- பயன் அடைந்த மாநிலங்கள் - மேற்கு வங்காளம், ஓரிசா, பீகார், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம்
- பசுமைப் புரட்சி ஏற்பட காரணமானவர் - டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் மற்றும் சி. சுப்பிரமணியன்
- பிரவுன் புரட்சி – கோதுமை உற்பத்தியே **பிரவுன் புரட்சி** ஆகும். (பழைய புத்தகங்களில்)

**பால் பண்ணைத் தொழில்**

- இந்தியா 91 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து உலகின் முண்ணனி நாடாக திகழ்கின்றது.
- மகாராஷ்டிராவிலுள்ள ஆரோ பால் பண்ணையும், சென்னையிலுள்ள மாதவரம் பால் பண்ணையும், குஜராத்திலுள்ள, ஆனந்த் பால் பண்ணையும் முக்கியமாக பால் பண்ணைகளாகும்
- பால் உற்பத்தியில் இந்தியா முதல் இடம் வகிக்கிறது
- பால் பண்ணைத் தொழிலை பெருக்கம் செய்ய பெங்களுர், கா்னூல், குஜராத், மகராஷ்டிரம் முதலிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் உள்ளது
- பால் உற்பத்தியில் இந்திய அளவில் உத்திரப்பிரதேசம் முதல் இடம் வகிக்கிறது
- கம்பளி உற்பத்தியில் இந்திய அளவில் இராஜஸ்தான் முதல் இடம் வகிக்கிறது

**கோழிப்பண்ணை**

- முக்கிய இனங்கள் ஒயிட் லெஹான் பிளாக் மைனார்க்கா, ரோட் ஐலண்ட
- கோழி வளர்ப்பு பண்ணைகள் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், பீகார், அஸ்ஸாம், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிகமாக உள்ளன
- முட்டை உற்பத்தியில் 5வது இடத்தில் இந்தியா உள்ளது
- 45 மில்லியன் முட்டைகள் உற்பத்தி செய்து உலகின் 6 நாடுகளில் ஒன்றாக திகழ்கின்றது.

**முட்டை புரட்சி**

- உலக முட்டை உற்தப்தியில் இந்தியா தற்போது 3வது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் சீனா உள்ளது
- இரண்டாவது இடத்தில் அமெரிக்கா உள்ளது. இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் அதிக முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. அதிக முட்டை செலவு செய்வதில் மகாராஷ்டிரா

மாநிலம் முதலிடம் ஆகும்

**மாடுகள்**

- உலகில் மாடுகளின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் பெறுகிறது. காங்கேயம், ஓங்கோல், சிந்தி மேவாதி ஆகியன சில முக்கிய மாடுகளின் இனங்களாகும். ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், மகராஷ்டிரம், தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மாடுகளின் தரம் அதிகம் உள்ளது

**ஆடுகள்**

- இந்தியாவில் 61.47 மில்லியன் செம்மறியாடுகளும் 124.36 மில்லியன் ஆடுகளும் உள்ளன. இது உலகத்தில் 3வது நிலையாகும்.
- சுமார் 45 மில்லியன் கிலோ கம்பளி உற்பத்தி செய்யப்படுகிறது. இது உலக உற்பத்தியில் 3.1 சதவீதமாகும்
- இந்தியாவின் செம்மறியாடுகளின் எண்ணிக்கையில் சுமார் 40சதவீதம் ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளது. தக்காணத்தில் அதிகம் காணப்படுகிறது. தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத், ஜம்மு, காஷ்மீர், பீகார், பஞ்சாப் ஹரியானா ஆகிய மாநிலங்களில் செம்மறியாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஏழை மக்களின் பசு என ஆடுகள் கருதப்படுகின்றன

  16வது கணக்கெடுப்பின்படி இராஜஸ்தான்

  17வது கணக்கெடுப்பின்படி ஆந்திரப்பிரதேசம்

**குதிரைகள்**

- உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் குதிரைகள் வளர்க்கப்படுகின்றன

**ஒட்டகங்கள்**

- பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் ஒட்டகங்கள் பஞ்சாப், ஹரியானா, மேற்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன

**வாத்து**

- வாத்துக்கள் உலகின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 20 சதவீதம் இந்தியாவில் உள்ளது. தமிழ்நாடு ஆந்திரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் வாத்துக்கள் அதிகம்

**மீன் பிடிக்கும் தொழில்**

- உலக மீன் உற்பத்தியில் சீனா முதலிடத்தையும், ஜப்பான் இரண்டாவது இடத்தையும் இந்தியா மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது.
- உள்நாட்டு மீன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கின்றது
- உள்நாட்டு மீன் பிடிப்பதில் மேற்கு வங்காளம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. இரண்டாவது இடத்தை ஆந்திர பிரதேசமும் வகிக்கின்றது.

மீன் பிடிக்கும் இடத்தை

1. ஆழ்கடல் மீன்பிடிப்பு
2. கடலோர மீன்பிடிப்பு
3. உள்நாட்டு மீன்பிடிப்பு என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்

**1. ஆழ்கடல் மீன்பிடிப்பு**

- இந்த மீன்பிடிப்பு நடைபெறும் இடங்கள் கொங்கணக் கடற்கரை, கேரளக் கடற்கரை, சோழமண்டலக் கடற்கரை ஆகியவையாகும்

2. **கடலோர மீன்பிடிப்பு**

- குஜராத், கர்நாடகம், மலபார் கடற்கரை ஓரங்களிலும் மன்னார் வளைகுடாவிலும், தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய மாநிலங்களின், கடற்கரை ஓரங்களிலும், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலுள்ள உப்பங்கழிகளிலும் கடலோர மீன்பிடிப்பு நடைபெறுகிறது

3. **உள்நாட்டு மீன்பிடிப்பு**

- கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, கங்கை, பிரம்மபுத்திரா, மகாநதி முதலிய ஆறுகளிலும் அவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளிலும் கால்வாய்களிலும் நீர்வகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன

**ஆய்வு நிறுவனங்கள்**

- Central Institute of Brackishwater Aquaculture, Chennai, Tamilnadu
- Central Inland Fishereis Research Institute, Barrackpore, West Bengal
- Central Institute of Freshwater Aquaculture, Bhubaneshwar, Orissa
- Central Marine Fisheries Research Institute, Kochi, Kerala
- Central Institute of Fisheries Technology, Kochi, Kerala
- National Bureaue of Fish Genetic Resources, Lucknow, Uttar Pradesh
- National Research Centre on Coldwater Fisheries, Bhimtal, Uttaranchal

**தாதுப்பொருட்கள்**

- இந்தியாவில் அதிகமாக நிலக்கரி உள்ளது
- இந்தியாவில் அதிகமாக கிடைக்கும் கலவை தாதுக்கள்: மாங்கனீசு, குரோமைட், டைட்டானியம்
- இந்தியாவில் அதிகமாக கிடைக்கும் Flux தாதுக்கள் சுண்ணாம்பு, ஜிப்சம், டோலமைட்
- இந்தியாவில் அதிகமாக கிடைக்கும் Refractorses தாதுக்கள்: மாக்னைட், சிலிமனைட் மற்றும் கைனைட்
- இந்தியாவில் தேவைக்கும் குறைவாக உள்ள இரும்பற்ற (Non Ferrous) தாதுக்கள்: செம்பு, துத்தநாகம், டங்ஸ்டன், கிராபைட் மற்றும் பாதரசம்
- உரத் தயாரிப்பிற்கு தேவைப்படும் இந்தியாவில் கிடைக்காத தாதுக்கள்: காப்பர், பொட்டாஷ், மற்றும் பாஸ்பேட்
- இந்தியாவில் குறைவாக கிடைக்கும் கனிம வேதிப்பொருட்கள் சமையல் கரி மற்றும் பெட்ரோலியம்.
- தாதுப்பொருட்களை கண்டறியும் பணியில் உள்ள நிறுவனங்கள்

1. Geological Survey of India
2. Mineral Ex;oration Corporation Limited
3. Indian Bureau of Mines

- 2000-2001 ஆம் ஆண்டு 480.17 பில்லியன் மதிப்புள்ள தாதுப் பொருட்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. 1950-95ல் 892 மில்லியன் மதிப்புள்ள தாதுப்பொருட்களே எடுக்கப்பட்டது. இது தற்போது உள்ளது போல் 538 மடங்கு ஆகும்

**உற்பத்தி விகிதங்கள்: (2000-2001)**

எரிபொருள்: 88.87 சதவீதம்

உலோகங்கள்: 7.26 சதவீதம்

அலோகங்கள்: 3.86 சதவீதம்

- இந்தியாவில் வெட்டி எடுக்கப்படும் மொத்த தாதுப்பொருட்கள் சுமார் 68 ஆகும். அவற்றில் 1 சதவீதத்திற்கும் அதிகமானவை

| | |
|---|---|
| கரி: | 41.11 சதவீதம் |
| பெட்ரோலியம் | 30.69 சதவீதம் |
| இயற்கை எரிவாயு | 14.88 சதவீதம் |
| இரும்பு | 4 சதவீதம் |
| சுண்ணாம்பு | 2.60 சதவீதம் |
| லிக்னைட் | 2.19 சதவீதம் |

- கனிம வளம் தொடர்பாக இந்தியாவை 3 பெரும் பகுதியாக பிரிக்கலாம் அவை

1. **வடகிழக்குப் பகுதி:**

- இவற்றில் சோட்டாநாகபுரி, ஒரிசா மற்றும் கிழக்கு ஆந்திரா அடங்கும்
- இந்தியாவில் அதிகமாக கனிம வளம் கிடைக்கும் பகுதி இதுவே ஆகும்
- இரும்பு, மாங்கனீசு, மைக்கா, பாக்சைட், சுண்ணாம்பு, டோலமைட், தோரியம், யூரோனியம், குரோமியம், சிலமனைட், பாஸ்பேட் முதலியன தாதுக்கள் இப்பகுதியில் கிடைக்கின்றன
- தாமோதர் பள்ளத்தாக்கு மற்றும் சட்டீஸ்கர் பகுதியில் நிலக்கரி மிகுதியாக கிடைப்பதால் இப்பகுதியில் ஏராளமான இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள் உள்ளது
- பெட்ரோலியம், எரிவாயு போன்றவை இப்பகுதியில் கிடைக்கின்றது. மேலும் வெள்ளி, செம்பு, ஈயம் மற்றும் துத்தநாகம் போன்றவை இப்பகுதியில் கிடைக்கின்றது
- இதுதவிர பிரம்மபுத்திரா சமவெளியில் பெட்ரோலியமும் கேரளா கடற்கரையில் கன உலோகமான இல்மனைட் போன்றவையும் கிடைக்கின்றன
- தாதுப்பொருட்களும் அவை இந்தியாவில் அதிகமாக கிடைக்கும் இடங்களும்

1. ஆண்டிமணி – பஞ்சாப், ஒரிசா, தமிழ்நாடு
2. அலுமினியம் - பீகார், மத்தியப்பிரதேசம்
3. குரோமைட் - பீகார், ஒரிசா, மகாராஷ்டிரம்
4. அஸ்பெஸ்டாஸ் - ஆந்திரமாநிலம், கர்நாடகம், ராஜஸ்தான்
5. இருமபுத்தாது – பீகார், ஒரிசா, தமிழ்நாடு, மேற்குவங்காளம்
6. அபிரகம் (மைக்கா) – மேற்கு வங்காளம் (ஹசாரிபாப், கயா)
7. இம்மனைட் - கேரளா
8. ஈயம் - ராஜஸ்தான், ஆந்திரா, ஒரிசா
9. நிலக்கரி – மேற்கு வங்காளம், பீகார், ஆந்திரா, மத்தியப்பிரதேசம், அஸ்ஸாம், தமிழ்நாடு
10. கல்நார் - கர்நாடகம், ராஜஸ்தான், அஸ்ஸாம், மத்தியப்பிரதேசம்
11. கார்போரண்டம் - தமிழ்நாடு, காஷ்மீர்
12. கிராபைட் - ராஜஸ்தான், ஆந்திரா, மத்தியப்பிரதேசம்
13. குரோமைட் - பீகார், கர்நாடகம், ஒரிசா, மகாராஷ்டிரம்
14. சலவைக் கற்கள் - ராஜஸ்தான்
15. சிகப்புக்கல் - பீகார், தமிழ்நாடு, ஒரிசா
16. செம்பு – ஆந்திரா, கர்நாடகம்
17. டங்ஸ்டன் - பீகார்

18. தகரம் - பீகார்
19. துத்தநாகம் - ராஜஸ்தான், ஒரிசா
20. சுண்ணாம்பு – பீகார், தமிழ்நாடு
21. சைனாக்களிமண் - பீகார், ராஜஸ்தான்
22. தோரியம் - கேரளா, தமிழ்நாடு
23. பெட்ரோல் - அஸ்ஸாம், குஜராத்
24. பேரியம்சல்பேட் - தமிழ்நாடு, ஆந்திரா, கோவா
25. மைகா – பீகார், ஆந்திரா, ராஜஸ்தான்
26. யுரேனியம் - பீகார், கேரளா
27. வைரம் - மத்தியப்பிரதேசம்
28. வெள்ளி – கர்நாடகம், பீகார்
29. ஜிப்சம் - ராஜஸ்தான், தமிழ்நாடு, குஜராத்
30. பாக்சைட் - பீகார், மத்தியப்பிரதேசம்
31. மாங்கனீஸ் - மத்தியப்பிரதேசம், ஒரிசா, மகாராஷ்டிரா

**வெள்ளை சலவைக்கல்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| ராஜஸ்தான் | மரக்கானா |
| மத்தியப்பிரதேசம் | ஜபல்பூர் |

**கிரனைட்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| பீகார் | சிங்பூம், மயூர்பஞ்ச் |
| ஆந்திரா | நெல்லூர் |

**யுரேனியம்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| பீகார் | சடுகுடா |

**துத்தநாகம்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| ராஜஸ்தான் | ஜார்வார் குன்றுகள் |

**நிலக்கரி**

- இதனை கருப்பு தங்கம் என்பர்
- Mother of Industry என்றும் கூறுவர்
- பெரும்பாலான நிலக்கரி சுரங்கங்கள் படிவுப் பாறைகளில் உள்ளன
- இந்தியாவில் நிலக்கரி சுமார் 1200 மீட்டர் ஆழத்தில் கிடைக்கின்றது
- 2001ஆம் ஆண்டு Geological Survey of Indiaவின் கணக்குப்படி 2,13,905.51 மில்லியன் டன் நிலக்கரி உள்ளது
- இது உலக நிலக்கரி இருப்புகளில் 1 சதவீதம் ஆகும்
- இந்தியாவில் உள்ள நிலக்கரி பெரும்பாலும் பிட்டுமனாஸ் வகையைச் சார்ந்தவை. துரம் குறைந்த சாம்பலை அதிகம் தரக்கூடிய நிலக்கரி வயல்களே இந்தியாவில் உள்ளது
- இந்நிலக்கரி வயல்கள் நதிச் சமவெளி மட்டும் கிழக்கு தீபகற்பத்திலும் அமைந்துள்ளது.
- எனவே இந்தியாவில் உள்ள தொழிலகங்களில் நிலக்கரி பற்றாக்குறை உள்ளது
- இந்தியாவில் எரிசக்தி தயாரிக்க அதிக அளவு நிலக்கரி பயன்படுகிறது
- நிலக்கரியில் இருந்து கிடைக்கும் துணை பொருட்கள்

1. தார், 2. கோக், 3. சல்பியூரிக் அமிலம்

**நிலக்கரி கிடைக்குமிடங்கள்**

- இந்தியாவில் நிலக்கரி கிடைக்கும் இடங்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்

1. காண்டுவானா நிலக்கரி வயல்கள்
2. டெர்ஷியரி நிலக்கரி வயல்கள்

**காண்டுவானா நிலக்கரி வயல்கள்**

- இந்தியாவில் நிலக்கரி உற்பத்தியில் 97 சதவீதம் காண்டுவான நிலக்கரி

வயல்களிலிருந்து கிடைக்கின்றது

- இவை 200 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது
- காண்டுவான நிலக்கரி வயல்களை நான்கு பெரும் பிரிவாக பிரிக்கலாம்

1. தாமோதர் பள்ளத்தாக்கு : ஜகார்லாண்ட் மற்றும் மேற்கு வங்காளம் அடங்கியது.
2. சோன் பள்ளத்தாக்கு: மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர் மற்றும் உத்திரப்பிரதேசம் அடங்கியது
3. மகாநதி பள்ளத்தாக்கு: சட்டீஸ்கர் மற்றும் ஒரிசா அடங்கியது
4. வார்தா – கோதாவரி பள்ளத்தாக்கு: மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம்

**ஜார்கண்ட்:**

- இந்தியாவின் 32.34 சதவீத நிலக்கரியை இரும்பு கொண்டது இம் மாநிலம். இதில் ஜாரியா, பொக்காரோ, கிர்ஷ், கான்புரா, ராம்கார், டால்டன்கஞ்ச், அவுரங்காபாத், ஹாட்டர் மற்றும் ராணிகஞ்ச் வயலின் ஒரு பகுதி ஆகிய நிலக்கரி வயல்கள் இம் மாநிலத்தில் உள்ளது
- நிலக்கரி இரும்பு முதல் 4 மாநிலங்கள் ஜார்கண்ட், ஒரிசா மேற்கு வங்காளம் மற்றும் மத்தியப் பிரதேசம்

**மகாராஷ்டிரா**

சந்த – வந்தா, காம்டி மற்றும் பந்தர்

- உத்திரப்பிரதேசம்: சிங்கரேணியின் ஒரு பகுதி

**டெர்ஷியரி நிலக்கரி வயல்கள்**

- ஜெய்சாலமர், தமிழ்நாட்டில் நெய்வேலி போன்ற இடங்களில் கிடைக்கிறது
- இவை 50 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது
- மேகாலயா: தாரன்ஜிரி, சிரபுஞ்சி, Langrin, Laitryngew மற்றும் மாவ்லாங்
- அசாம்: மாகும், ஜெய்பூர் மற்றும் நசிரியா
- அருணாச்சலப்பிரதேசம்: நம்சிக் மற்றும் நம்புக்
- ஜம்மு மற்றும் காஷ்மீர்: கலாகாட்
- மத்தியப் பிரதேசம்: கொர்பா
- லிக்னைட் : அதிக ஈரப்பதமும் குறைந்த அளவு கார்பனும் உடையது
- தமிழ்நாடு : நெய்வேலி
- இந்தியாவில் முதல் மற்றும் முக்கிய நிலக்கரி சுரங்கம் - ராணிகஞ்ச்
- இந்தியரிவல் அதிகமாக நிலக்கரி காணப்படும் இடம் - தாமோதர் பள்ளத்தாக்கு

**இரும்புத்தாது**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| 1. ஜார்கண்ட் | ராஞ்சி மற்றும் Palamau |
| 2. குஜராத் | கெய்ரா, ஜாம்நகர், சூரத் மற்றும் சபர்காந்தா |

3. மத்தியப்பிரதேசம் - ஜபல்பூர், ரெய்கார், மைக்கால் மலைத்தொடர் மற்றும் அமர்கண்ட் பீடபூமி
4. கர்நாடகம் - பெல்காம்
5. தமிழ்நாடு – சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை
6. மகாராஷ்டிரா – கொலாபா மற்றும் ரத்தினகிரி
7. உத்திரப்பிரதேசம் - பாண்டா

**ஜிப்சம்**

- இந்தியாவின் ஜிப்சம் உற்பத்தியில் பதிக்கும் மேல் இராஜஸ்தானில் மேற்குப்

பகுதிகளிலிருந்து கிடைக்கிறது

| மாநிலம் | கிடைக்குமிடம் |
|---|---|
| 1. இராஜஸ்தான் | ஜோத்பூரி, ஜெய்சால்மர் |
| 2. தமிழ்நாடு | திருச்சி |
| 3. காஷ்மீர் | பிரமுல்லா, யூரி |
| 4. குஜராத் | பாவா நகர் |

**மோனசைட்டு இல்மனைட்டு**

1. கேரளா திருவனந்தபுரம் கடற்கரை மணல்
2. சோழமண்டலக் கடற்கரை பிரதேசம்

**ஜீர்கான்**

- மலபார் மற்றும் கோரமண்டல் கடற்கரையில் கிடைக்கின்றது

**பெட்ரோலியம்**

**மாநிலம்** **கிடைக்குமிடம்**

அஸ்ஸாம் - திக்காய், நாகர்காடியா, ஹீக்ரியன், மோரன்

குஜராத் - காலோஸ், அங்கலேஸ்வர், காம்பட்

மும்பாய் - பாம்பே ஹை

**தமிழ்நாடு – காவிரி டெல்டா பகுதி**

- பானிபட் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்
- இந்தியாவின் முதல் ISO 9002 மற்றும் ISO 14001 பெற்ற நிலையமாகும்

**இயற்கை எரிவாயு**

- அஸ்ஸாம் நாகர்காடியா, ஹீக்ரியன், ஸ்வாலமுகி ராஜஸ்தான் - ஜெய்சால்மார்
- 1270 கி. மீ நீளமுள்ள உலகத்தின் மிகப்பெரிய Pipeline – ஜாம் நகர் - லோணி LPG Pipeline ஆகும்.
- HBJ – Pipeline ஹசரியா – பிஜப்பூர் - ஜெகதீஸ்பூர் வழியே செல்கிறது
- இந்தியாவின் முதல் திரவ இயற்கை எரிவாயு கிடங்கு குஜராத் மாநிலம் Dahej என்ற இடத்தில் துவக்கப்பட்டது.

**செம்பு**

| மாநிலம் | கிடைக்குமிடம் |
|---|---|
| மத்தியப்பிரதேசம் | பாலகாட் |
| இராஜஸ்தான் | கேத்திரி, உதயபூர், பில்வாரா |
| ஜார்கண்ட் | சிங்க்பும், சாந்தல் |
| பீகார் | ஹசாரிபாக், கயா |
| உத்திரப்பிரதேசம் | கார்வால் |
| மேற்கு வங்காளம் | டார்ஜிலிங் |
| கர்நாடகா | சிட்டதுர்கா, ஹசான் |

- செம்பு அதிக பயன்பாடு இருப்பதால் இறக்குமதி செய்யப்படுகிறது

**வெள்ளி**

| மாநிலம் | கிடைக்குமிடம் |
|---|---|
| இராஜஸ்தான் | ஜவார் குன்றுகள் |
| பீகார் | மன்பூம் |
| கர்நாடகம் | கோடா குன்றுகள் |
| ஜார்கண்ட் | தான்பாத் |

- இந்தியாவில் வெள்ளி குறைந்த அளவில் கிடைக்கின்றது. வெள்ளி உற்பத்தி அதிகம் செய்யும் மாநிலம் இராஜஸ்தான்

**தங்கம்**

| மாநிலம் | கிடைக்குமிடம் |
|---|---|
| கர்நாடகம் | கோலார், ஹட்டி |
| ரெய்ச்சூர், தார்வார், ஹாசன் | |
| ஆந்திரா | சித்தூர், ராமகிரி |

Kolar Gold Fields (KGF):

- உலகத்தில் உள்ள ஆழமான சுரங்கங்களில் கொலார் சுரங்கமும் ஒன்று . இது 1871ல் துவங்கப்பட்டது. 2003ல் இச்சுரங்கம் மூடப்பட்டது. கோலார் லிட்டி இங்கிலாந்து என்று அழைக்கப்பட்டது

Hutti Gold Mines Limited (HGML):

- தற்போது இந்தியாவில் தங்கம் உற்பத்தி செய்யும் ஒரே சுரங்கம் இதுவே ஆகும். ஹட்டி மற்றும் சித்திரதுர்கா ஆகிய இரு இடங்களில் இந்த நிறுவனத்தால் தங்கம் உற்பத்தி செய்யப்படுகிறது. உலக தங்க கவுன்சில் முதல் இந்திய உறுப்பினர் இந்த நிறுவனம் ஆகும்.

Deccan Gold Mines:

- இந்தியாவின் முதல் தனியார் தங்கச் சுரங்கம் இதுவே ஆகும். கர்நாடக மாநிலம் தார்வாரில் இந்த நிறுவனம் தங்கம் இருப்பதை கண்டறிந்துள்ளது

தகரம்

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| மத்தியப்பிரதேசம் | ரேவா |

**தோரியம்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| கேரளா | கொய்லான் |

**வைரம்**

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| மத்தியப்பிரதேசம் | பன்னா, தியோபோக் |
| ஆந்திரப்பிரதேசம் | ராமகெல்லா |

**மைக்கா**

- உலகின் மைக்கா உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் இந்தியாவில் இருந்து கிடைக்கிறது
- இந்தியாவில் மைக்கா உற்பத்தியில் சுமார் 75 சதவீதம் பீகாரிலிருந்து கிடைக்கிறது
- இந்தியாவில் கிடைக்கும் மைக்கா (Muscovite Sheet Mica எனப்படும் Pottassium Mica) ரூபி மைக்கா ஆகும்

| **மாநிலம்** | **கிடைக்குமிடம்** |
|---|---|
| பீகார் | கயா, ஹசரிபாக், பகல்பூர் |
| ஜார்கண்ட் | கொடர்மா |
| ஆந்திரப்பிரதேசம் | குண்டூர், விசாகப்பட்டினம் |
| ராஜஸ்தான் | பில்வாரா, உதய்பூர் |

**மாங்கனிசு**

- மாங்கனீசு உற்பத்தியில் ஒரிசா முதலிடம் பெற்றது
- உலக உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடம் அகும்

**மாநிலம்** **கிடைக்குமிடம்**

ஒரிசா – கியோஞ்சார், சுந்தர்கார், கொரபுட், சாம்பலபூர்

மத்தியப்பிரதேசம் - பாலகாட் மற்றும் சிந்த்வரா

மகாராஷ்டிரா - இரத்தினகிரி, நாக்பூர்

ஜார்கண்ட - சிங்பூம் மாவட்டம்

கர்நாடகம் - பெல்லாரி, சித்தர துர்கா, ஷிமோகா

**ஆஸ்பெஸ்டாஸ்**

- இது ஒரு fibre mineral ஆகும்.

**எண்ணெய்**

- இதனை Liquid Gold என்பர்
- சர்மா பள்ளத்தாக்கில் கிடைக்கிறது
- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கொயாலி

Oil and Natural Gas Commission (ONGC)

- இதன் தலைமையகம் டேராடுன் ஆகும்

**மாநில கிடைக்குமிடம்**

அஸ்ஸாம் - திகொபாய், நன்மதி, மோரன், நகரயெட்பா, லாகிம்பூர், பொங்கைகான், சிப் சாகர்

குஜராத் - ருத்திரசாகர், அங்கலேஷ்வர்

பாம்பேஹை, காம்பே வளைகுடா (அல்லது) Lunej

Field

பஞ்சாப் ஜீவாலாமுகி

தமிழ்நாடு காவிரி டெல்டா, நரிமணம்

சோழமண்டல கடற்கரை

மகாராஷ்டிரா – பாம்பே ஹை, பாசின் அமைப்புகள்

- இந்தியாவின் மிகப் பழமையான எண்ணெய் கிணறு திகோபாய்
- எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் துறைமுகங்களை ஒட்டியே அமைகின்றன

| முக்கிய சுத்திகரிப்பு நிலையம் | மாநிலம் |
|---|---|
| ஹால்டியா | மேற்கு வங்கம் |
| சென்னை | தமிழ்நாடு |
| விசாகப்பட்டினம் | ஆந்திரப்பிரதேசம் |
| நிகோபாய், கௌகாத்தி | அசாம் |
| நுண்மதி | அசாம் |
| கொச்சின் | கேரளா |
| டிராம்பே | மகாராஷ்டிரம் |
| ப்ரௌனி | பீகார் |
| மதுரா | அசாம் |

இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (HPCL)

1. மும்பை 2. விசாகப்பட்டினம்

இந்தியன் பெட்ரோகெமிக்கல் கார்ப்பரேஷன் லிமிடெட் (PCL)

2. Vadodara 2. Nagothane (near Mumbai)

3. Dahej (Narmada estuary in bay Khambat)

Rabale, Navi Mumbai

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC)

1. கௌஹாத்தி, 2. ப்ரௌனி 3. கோயாலி 4. ஹால்டிய 5. மதுரா 6. நிகோபாய் 7. பானிபட் 8. சென்னை 9. நரிமணம் 10. பொங்கைகான் மங்களூர் ரிபைனரிஸ் மற்றும் பெட்ரோகெமிக்கல் லிமிடெட் (MRPL) மங்களூர்

சமீக காலத்தில் பெட்ரோலியத்தின் பயன்பாடுகள் அதிகமாக இருப்பதால் வாகனங்களில் எரிபொருளாக பெட்ரோலியத்திற்கு மாற்றும் பொருள் கண்டுபிடிக்க ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது

**முக்கிய தொழில்கள்**

- Indian Institute of Entreprenuer Development Ahmedabad
- அதிக தொழில் வளர்ச்சியுற்ற மாநிலம் - மகாராஷ்டிரா
- தாமோதர் நதி பள்ளத்தாக்கு – Rurh Basin of India
- புதிய தொழிற்கொள்கை – 24.7.1991
- அதிக அளவு வேளாண்மையை அடிப்படையாகத் தொழிற்சாலைகள் உள்ள மாநிலம் - உத்திரபிரதேசம்
- சோட்டா நாக்பூர் பகுதி – Heart of Industrial India எனப்படும்.

**இந்திய தொழில் மண்டலங்கள்**

1. ஹூக்ளி மண்டலம்
2. மும்பை – பூனா மண்டலம்
3. அகமதாபாத் - சூரத் மண்டலம்
4. சோடா – நாகபூரி மண்டலம்
5. மதுரை மண்டலம்

**நெசவுத் தொழில்**

- நெசவுத் தொழிற்சாலைகள் - மகாராஷ்டிரா, குஜராத், உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் உள்ளது
- இந்தியாவின் மான்செஸ்டர் என் மும்பை அழைக்கப்படுகிறது

- தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோயம்புத்தூர்
- அதிக அளவில் மக்கள் இடம் பெறும் தொழில் நெசவுத் தொழில்

**நெசவுத் தொழில் நடைபெறும் நான்கு முக்கிய பிரிவுகள்**

- நெசவுத் தொழிற்சாலைக்கு ஈரப்பதம் மிகுந்த காற்றுத் தேவை. வெப்பத்தில் இழைகள் முறுக்குத்தன்மை மற்றும் தொடர்ச்சியான நீளம் அடையாது

1. மகாராஷ்டிரா – குஜராத்
2. கோவை – சேலம் - மதுஜர
3. கான்பூர் - குவாலியர் - தில்லி
4. மேற்கு வங்காளத்தில் ஒரு சில பகுதிகள்

1. மகாராஷ்டிரா – மும்பை, சோலாப்பூர், பூனே, குஜராத் - அமகதாபாத் , வதோரா, ராஜ்காட், சூரத், பாவா நகர்

- அதிக அளவில் அகமதாபாத்தில் நெசவுத் தொழிற்சாலைகள் காணப்படுகிறது

**பட்டு உற்பத்தி**

- உலக உற்பத்தியில் இந்தியா 18 சதவீதத்தை உற்பத்தி செய்து உலகின் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் அதிக அளவு மல்பெரி, Eri, Tasar, and Muga பட்டு வகைகள் உற்பத்தி செய்யப்படுகிறது.
- அதிக அளவில் பட்டு தொழில் கர்நாடகத்தில் நடைபெறுகிறது
- மேற்கு வங்காளம், பீகார் ஆகியவை பட்டு உற்பத்தி செய்யும் மக்கிய மாநிலங்கள் ஆகும்

**கம்பளித் தொழில்**

- பஞ்சாப்பில் தாரிவால், லுதியானா, அமிர்தசரஸ் பெரோஸ்பூர், மகாராஷ்டிராவில் மும்பை, உத்திரப்பிரதேசத்தில் கான்பூர், ஆக்ரா, மிர்சாபூர் ஆகிய இடங்களில் கம்பளித் தொழில்கள் அதிகம் நடைபெறுகின்றது

**சணல் தொழில்**

- உலகத்தில் சணல் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று
- மேற்கு வங்காளத்தில் அதிகம் உள்ளது. ஆந்திரப்பிரதேசம், பீகார், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் ஆகியவை அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலங்கள் அகும்
- சுதந்திரம் அடைந்தபொழுது அதிகமாக பாதிக்கப்பட்ட தொழில்

**காகித தொழிற்சாலை**

- முதல் காகிததொழிற்சாலை மேற்கு வங்காளத்தில் சீரம்பூரில் துவங்கப்பட்டது. பின் 1870 மேற்கு வங்காளத்தில் பாலிகஞ்ச் என்ற இடத்தில் துவங்கப்பட்டது.
- மத்திய பிரதேசம் - நேபா நகர் பத்திரிக்கை காகிதம் - The National Newsprint and Paper Mills Ltd., இது இந்தியாவின் மிகப்பெரிய காகிதத் தொழிற்சாலை ஆகும்.
- கர்நாடகம் - Mysor Paper Mills
- ITC Bhadrachalam: Sarapaka, Andhra Pradesh
- Tamil Nadu Newsprint and Papers Limited: Kagithapuram in Karur District
- Pudumjee Pulp & Paper Mills: Pune –

Maharashtra

- The West Coast Paper Mills: Dandeli, Karnataka
- The Andhra Pradesh Paper Mills: Rajahmundry
- JK Paper : Jaykaypur, Rayagada, Orissa
- Star Paper: Saharanpur, Uttar Pradesh
- Titagarh Paper Mills: Titagarh and Kakinara
- Sirpur: Kaghaznagar, Andhra Pradesh
- Sir Krishna Paper Mills: Bahadurgarh, Delhi
- Vikarabad Pulp and Paper Mills: Vikarabad, Rangareddy, AP

**போட்டோ பிலிம் தொழிற்சாலை**

- இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை உதகமண்டலம் (தமிழ்நாடு)

**இரசாயன உர உற்பத்தி தொழில்**

- மைசூரில் பௌகுலாவில் அம்மோனியத் தொழிற்சாலை உள்ளது
- கேரளாவில் ஆல்வாயில் இரசாயன தொழிற்சாலை உள்ளது
- பிம்பரியில் பென்சீலின் தொழிற்சாலை உள்ளது
- பீகாரில் சிந்திரியில் அம்மோனியம் சல்பேட் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது
- தமிழகத்தில் நெய்வேலியில் யூரியா தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது
- National Fertilizers Limited: Vijaipur, Guna, Madhyra Pradesh, Panipat, Haryana, Bathinda, Punjab, Ropar. Punjab
- Fertilizers & Chemicals Travancore Ltd., (FACT) உத்தியோகமண்டல், கொச்சி, கேரளா
- Rashtriya Chemicals & Fertilizers Limited (RCF)
- Madras Fertilizers Limited: மணலி, சென்னை
- Paradeep Phosphates Limited (PPL) Jagatsinghpur
- Pyrites, Phosphates & Chemicals Lted.,
- Rohtas, Bihar Saladipura, Rajasthan
- Hindustan Fertilizer Corporation Limited (HFC) Durgapur – West Bengal Barauni – Bihar Haldia – West Bengal
- Brahmaputra Valley Fertilizer Corporation Limited Namrup – அசாம்
- The Fertilizer Corporation of India Limited (FCIL) Sindri – ஜார்க்கண்ட், Ramagundam – Andrapradesh. Talcher – ஒரிசா, Gorakhpur – உத்திரப்பிரதேசம்
- Hindustan Copper Limited (HCL) கேத்ரி, இராஜஸ்தான்
- FCI Aravli Gypum And Minerals India Limited Namrup – அசாம்
- Krishak Bharati Cooperative Limited (KRIBHCO) Hazira – குஜராத்
- Gujarat State Fertilizer and Chemical Limited Fertilizer nagar (Vadodara), Kosamba (Surat), Sikka (Jamnagar), Nandesari (Vadodara)

- Coromandel Fertilizers Limited Vishakhapatnam Ennore, Ranipet, Navi Mumbai
- Sriram Fertilizers and Chemicals, Kota, Rajasthan
- Zurai Industries Limited – Fertilizer Limited, Goa
- Southern Petrochemicals Inds. Corpn. Ltd., Tuticorin
- Duncans Industries Limited, Kanpur
- Mangaore Chemicals & Fertilizers Limited, Panambur, Mangalore
- Gujarat Narmada Valley Fertilizer Co. Ltd., Bharuch, Gujarat
- Deepak Fertilizers & Petrochemicals Ltd., Taloja – Maharashtra
- Indo – Gulf Fertilizers & Chemicals Corporation Limited – Jagdishpur – Uttar Pradesh
- Godavari Fertilizer & Chemicals Limited – Kaminda Nagarjuna Fertilizers & Cehmicals Limited – Kakinada Indian Farmers Fertilizer Cooperative Limited – IFFCO 1967ல் துவக்கப்பட்டது
- Kalol, Gujarat யூரியா
- Kandla, Gujarat NPK/DAP
- Phulpur, Aonal – Uttar Pradesh – அம்மோனியா மற்றும் யூரியா உற்பத்தி இரசாயன தொழிற்சாலை உள்ள இடங்கள்

| **மாநிலம்** | **தொழிற்சாலை** |
|---|---|
| மகாராஷ்டிரா | டிரம்பே |
| பஞ்சாப் | நங்கள் |
| தமிழ்நாடு | எண்ணூர், நெய்வேலி |
| கேரளா | ஆல்வாய், கொச்சி |
| ஓரிசா | ரூர்கேலா |
| மேற்கு வங்காளம் | துர்க்காபூர் |
| ஆந்திரப்பிரதேசம் | விசாகப்பட்டினம் |
| உத்திரப்பிரதேசம் | கான்பூர் (பான்கி), வாரனாசி, கொரக்பூர் |
| மத்தியப்பிரதேசம் | கொர்பா |
| அசாம் | நாம்ரூப் |
| குஜராத் | கண்ட்லா |

Central Fertilizar Quality Control at Training Institute - Faridabad

**சர்க்கரைத்தொழில்**

- கரும்பு உற்பத்தியில் உலகத்தில் இந்தியா முதலிடம் வகிக்கிறது
- சர்க்கரைத் தொழில் அதிகம் உள்ள மாநிலங்கள் உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் ஆகும்
- இப்பகுதிகளை இந்தியாவின் சர்க்கரை மண்டலம் என்று கூறுவர்
- இந்தியா சர்க்கரைத் தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கழகம் கான்பூரில் உள்ளது
- கரும்பு ஆரா்ய்ச்சி நிலையம் கோயம்புத்தூரில் உள்ளது
- சர்க்கரை அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் - மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான்

**அலுமினியம் உருக்குதல் தொழில்**

- அலுமினியம் கிடைக்குமிடம், போக்குவரத்து, மின்சாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அலுமினிய உருக்குதல் தொழிற்சாலைகள் அமைகிறது
- ஒரிசாவில் ஹராகுட், கொராபுட் உத்திரப்பிரதேசத்தில் ரேணுகுட், மத்தியப்பிரதேசத்தில் கொர்பா, மகாராஷ்டிராவில் அலுமினிய உருக்குதல் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றது

**தாமிர உருக்கு தொழில்**

- இராஜஸ்தான் மாநிலத்தில் கேத்திரி, ஆல்வார், ஜீன்ஜீகுனு, ஜார்கண்ட் மாநிலத்தில் சிங்பூம் ஆந்திரப்பிரதேசத்தில் அக்னிகுடலா ஆகிய இடங்களில் உள்ளது

**பாதுகாப்புத்துறைத் தொழில்**

- மகாராஷ்டிராவில் உள்ள அம்பர்நாத்தில் யுத்த தளவாடங்கள் செய்யப்படுகிறது
- நீலகிரியில் உள்ள அரவங்காட்டில் வெடிமருந்து தயாரிக்கப்படுகிறது
- திருச்சியில் சிறுவகை போர்க்கருவிகள் தயாரிக்கப்படுகிறது
- சென்னை ஆவடியில் டாங்கிகள் தயாரிக்கப்படுகிறது
- கல்கத்தாவில் கார்டன்ரீச் பணி மனையில் போர்க்கப்பல்கள் கட்டப்படுகிறது
- மும்பாய் மெசகான் கப்பல் தளம் உள்ளது
- பெங்களுரில் உள்ள இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் இந்திய விமானப்படைக்கு தேவையான சூப்சானிக் ஜெட் விமானங்களையும் வேம்பயர் ஜெபோர் விமானங்களையும் தயாரிக்கப்படுகின்றன
- புஷ்பக், கிருவுக் என்ற சிறிய விமானங்களும், இங்கிலாந்து நாட்டுத் துணையுடன் நாட்விமானங்களும், அலோயட் என்ற ஹெரிகாப்டர்களும் தயாரிக்கப்படுகின்றன

**கப்பல் கட்டும் தொழில்**

- இந்தியாவின் முதன் முதலில் விசாகப்பட்டினத்தில் சிந்தியா ஸ்டீம் நேசிகேஷன் கம்பெனியால் நிறுவப்பட்டது
- 1952ஆம் ஆண்டு அரசுத்துறை இதனை ஏற்றுக்கொண்டது

**இந்தியாவில் உள்ள கப்பல் கட்டும் துறைகள்**

அவை:

1. விசாகப்பட்டினம்
2. கல்கத்தா
3. பம்பாய்க்கு அருகிலுள்ள மசகான்
4. கொச்சியிலுள்ள கப்பல்கட்டும் துறை

**விசாகப்பட்டினம்**

- Hindustan Shipping Yard இங்குதான் உள்ளது
- இங்கு பயணிகள் மற்றும் வணிக கப்பல்கள் தயார் செய்யப்படுகிறது
- இந்தியாவின் மிகப்பெரிய கப்பல் கட்டும் தொழிலகம்
- இது ஆழ்கடல் பகுதியில் உள்ள இயற்கைத் துறைமுகம். இங்கு கட்டப்படும் கப்பல்களைக் கடலில் செலுத்த வசதி உள்ளது. டால்பின் முனை மற்றும் கரையின் அமைப்பு ஆகியவற்றால் இத்துறை பெரும்புயல்களில் இருந்து பாதுகாக்கப்படுகிறது
- கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கும் கல்கத்தாவிற்கும் இடையே இருப்பு பாதை

வழியில் அமைந்துள்ளது

- தாமோதர் நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் நிலக்கரியும், டாடா நகரின் எஃகுத் தகடுகளும், சோட்டா நாகபுரிக் காடுகளில் மரங்களும் இத்துறையில் கப்பல் கட்டப் பெரிதும் பயன்படுகிறது

**கல்கத்தா**

- கல்கத்தா டக்ஸ்-சரக்கை ஏற்றிச்செல்ல பார்ஜஸ் டிரெட்ஜெஸ் என்ற சிறு கப்பல்களையும், வாணிகக் கப்பல்களையும் உருவாக்குகிறது. Garden Reach Workshop இங்கு உள்ளது

**மஸ்கான் கப்பல் கட்டும் துறை – மும்பை**

- இந்திய கப்பற்படைக்கு தேவையான போர்க்கப்பல்கள் மற்றும் பயணிகள் பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்களை தயாரிக்கிறது

**கொச்சின்**

- கொச்சின் ஷிப்பிஸ் யார்டு இங்கு உள்ளது. பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையில் இருந்து இரும்பு, ஜோக் நீர்வீழ்ச்சியில் இருந்து நீர்மின் சக்தியும், பர்மாவில் இருந்து தேக்கும் கிடைப்பதால் இங்கு கப்பல் தொழில் நன்கு விளங்குகின்றது

**கோவா**

- கோவா ஷிப்பிங யார்டு இங்கு உள்ளது.

**இரும்பு எஃகுத் தொழில்**

- இந்தியாவில் முதல் இரும்பு எஃகு தொழிற்சாலை 1874ல் வங்காளத்தில் பராக்கர் என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. பிறகு பான்பூர் என்னுமிடத்தில் உள்ள மற்றொரு தொழிற்சாலையுடன் இணைந்து இந்திய இரும்பு எஃகு கழகம் 1889ல் தோன்றியது
- 1907ல் டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை ஜாம்ஷெட்பூரில் துவங்கப்பட்டது

**டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை - TISCO**

- தற்போது ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ளது.
- இந்தியாவின் முதல் இரும்பு எஃகு தொழிற்சாலை மூலப்பொருட்கள் கிடைக்குமிடங்கள்: சிங்பூர், ஒரிசாவில் மயூர்பஞ்ச் - இரும்புத்தாது
- பீகாரில் ஜாரியா, கிருதி – நிலக்கரி
- மால்டா – மாங்கனீசு
- சிங்பும் - சுண்ணாம்பு, டாலமைட்
- சுவர்ண ரேகா கார்கை – தண்ணீர்
- பீகார், வங்காளம், உத்திரப்பிரதேசம் - வேலைக்கு ஆட்கள்
- கல்கத்தா – துறைமுகம்

**ரூர்கேலா இரும்பு எஃகு தொழிற்சாலை**

- இது ஒரிசாவில் உள்ளது
- இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் துவக்கப்பட்டது
- மேற்கு ஜெர்மனி உதவியுடன் நிறுவப்பட்டது

**மூலப்பொருட்கள்**

- ஜாரியா, கோர்பா – நிலக்கரி
